மகாவித்துவான்

சிந்தாமணிச்செல்வர்

மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை

மணி விழா மலர்

1956

BALU BROS

38, திருப்பூக்குடல் தெரு,
பெரிய காஞ்சிபுரம்,
15. 12. '56

உயர்திருவாளர் கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு:

அன்புடையீர்,

வணக்கம் பல. மணி விழாவை மாண்புறச் செய்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்! மதிப்புக்குரிய மணி விழாக்குழுவினர் பல்லாற்றாலும் ஒல்லும் வகை முயன்று, கச்சியம்பதி இதற்குமுன் கண்டிராத வகையில் மணி விழாவை அணிபெற நடத்திச் செந்தமிழன்னையைச் சித்தங்களிக்கச் செய்தனர். தமிழ் நாட்டுத் தனிப்பெருந்தலைவர்கள் விழாவிற் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். கச்சியம்பதிப் பெருமக்களும், அன்னைமார்களும், அயலூர்களிலுள்ள அன்பர்களும், அறிஞர்களும் பெருந்திரளாய் எழுந்தருளிப் பெருமையளித்தார்கள். அனைவர்க்கும் எனது கனிவார்ந்த கைகூப்பு உரியதாகுக!

அன்பர்களின் அருள் கனிந்த வாழ்த்துச்செய்திகளையும் அறிஞர் பலர் அன்பு கூர்ந்து எழுதி வழங்கிய அரிய கட்டுரைகளையும் கொண்டு கண் கவர் வனப்புடன் திகழும் இம்மணி விழா மலரை ஏற்றருள வேண்டுகிறேன்!

வாழ்க தமிழ்! வளர்க அருளறம்!

அன்பன்,
மே. வீ. வே. பிள்ளை.

மகாவித்துவான்
உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
அவர்கள்

மணி விழா மலர்



வெளியிடுவோர் :
M. R. அப்பாதுரை, B.A.,
சென்னை—7.

PRINTED AT
THE PREMIER ART PRESS
PURASAWALKAM, MADRAS—7

மகாவித்துவான்

உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்

மணி விழாக் குழு :

விழாக்குழுத் தலைவர் :

V. N. பெருமாள் நாயுடு

(கச்சி நகராண்மைக் கழகத் தலைவர்)

துணைத் தலைவர்கள் :

K. வேங்கடசாமி நாயுடு, B.A., B.L., M.L.A.

M. இராதாகிருஷ்ணப் பிள்ளை, B.A., B.L., M.C.

M. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T.

M. R. அப்பாதுரைப் பிள்ளை, B.A., M.C.

C. V. திருவேங்கடம் பிள்ளை, M.C.

பேராசிரியர் மயிலை. சிவ. முத்து

செயலாளர்கள் :

S. காளப்ப முதலியார்

வித்துவான் C. அருணைவடிவேல் முதலியார்

பேராசிரியர் N. சஞ்சீவி, M.A.

பொருளாளர் :

C. V. கண்ணுசாமிப் பிள்ளை

செயற்குழு :

புலவர் S. S. அருணகிரிநாதர்

வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார், B.O.L.

புலவர் வீ. திருஞானசம்பந்த முதலியார்

வித்துவான் க. சம்பந்த முதலியார்

வித்துவான் ர. சீனிவாச முதலியார்

வித்துவான் ப. நா. இராமசந்திர ஐயர்
வித்துவான் K. A. பாலசுப்பிரமணியம்
M. கண்ணரங்கம் பிள்ளை
T. T. பொன்னம்பல முதலியார்
மு. ஆறுமுகம் பிள்ளை
வி. கண்ணப் பிள்ளை
டாக்டர் ப. சிற்சபை
வ. கி. ர. கோவிந்தராஜ முதலியார்
டாக்டர் C. V. S. ராஜப்பா
C. V. M. அண்ணமலை
அரங்கண்ணல்
N. செங்கல்வராய நாயுடு
அ. சுயம்பு நயினர்
வித்துவான் நீ. முனியம்மாள்
வித்துவான் ப. கிருஷ்ணவேணியம்மாள்

மணி விழா மலர்ப் பதிப்பாசிரியர் குழு:

ஆசிரியர்:

வித்துவான். சி. அருணைவடிவேல் முதலியார்

துணை ஆசிரியர்கள்:

புலவர் மாமணி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார்
வித்துவான் க. சம்பந்த முதலியார்

பதிப்புரை

மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர், உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களது மணி விழாவை முன்னிட்டு மலரும் இம்மலர் புலவர் பெருந் தகைக்குத் தமிழ் நாட்டு நல்லறிஞர் பலரும் உவகையுடன் உரிமையாக்கும் அன்புக் காணிக்கையாகும். பழுத்த தமிழ்ப் புலமையும் ஆங்கில அறிவும் இறையுணர்வும் சிறந்தவராய், முப்பது ஆண்டுகட்கு மேலாக அரிய தமிழ் நூல்களை ஆய்ந்து பதிப்பித்தும், மாணவர் பலர்க்குத் தமிழமுதத்தை ஊட்டி மேன்மையுறச் செய்தும் சீரிய தொண்டாற்றி வரும் மகாவித்துவான் அவர்கட்கு இத்தகைய சிறப்புச் சாலப் பொருந்துவதே.

புகழ் மணங்கமழும் பொன் மலராய் மலரும் இம்மலரினை மகாவித்துவான் அவர்களின் வாழ்க்கை நினைவுகள் அணி செய்வது மிக்க பயன் தருவதாகும். இத்தகையதொரு கட்டுரை இம்மலரின்கண் அமைதலை விரும்பிய எங்களது விருப்பத்திற்கு இசைந்த மகாவித்துவான் அவர்கட்கு எங்கள் நன்றி உரியது.

எங்கள் வேண்டுகோட்கு இணங்கித் தமிழ்ப்பெரு மக்கள் பரிவுடன் அனுப்பிய நூற்றுக்கு மேற்பட்ட வாழ்த்துச் செய்திகளும்; தமிழ் அறிஞர் பெருமக்கள் தமிழ் மொழி, கலை, வரலாறு, சமயம் பற்றித் தத்தம் ஆராய்ச்சியிற்கண்ட அரிய கருத்துக்கள் பொதிந்த கட்டுரைகளும் மலரில் இடம் பெற்றுள்ளன. இவ்வாழ்த்துச் செய்திகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் உதவிய அறிஞர் அனைவர்க்கும் விழாக் குழுவினரின் பெருநன்றி

உரியதாகின்றது. மகாவித்துவான் அவர்கள் வாழ்க்கைத் தொடர்புடைய படங்கள் பல இம்மலரை அணி செய்கின்றன.

இம்மணி விழா மலர் கவின் பெறு மலராய்க் காட்சி அளிப்பதற்கு உரியன அனைத்தும் தம் சொந்தச் செலவில் உளமுவந்து செய்து, இதனை மணி விழாவுடையார்க்கு உரிமைப்படுத்திய பேரன்பர் உயர்திரு. M. R. அப்பாதுரைப் பிள்ளை, B.A., M.C., அவர்களுடைய பண்புடைமையை மணி விழாக் குழுவினர் பெரிதும் பாராட்டுகின்றனர்.

மகாவித்துவான் அவர்கள் மணிவிழாவை அணியுறுத்தும் இம்மலர், என்றும் வாடா மலராய்த் திகழ்ந்து, தமிழ் மக்கள் அனைவர் உள்ளத்திலும் தமிழ் மணம் பரப்பத் திருவருள் சுரக்குமாறு தமிழன்னையை இறைஞ்சுகின்றோம்!

சி. அருணைவடிவேல் முதலியார்,
மணி விழா மலர்ப் பதிப்பாசிரியர்.

INTRODUCTION

The position of an Editor is a very honoured and responsible one though comparatively new to our country, and I deem it a great privilege to have been associated with Sri. Vidwan M. V. Venugopaula Pillai Avl., in the capacity of Editor for all my publications, during a period of more than 20 years. The messages and encomiums which follow speak for themselves about the unique services rendered by Sri. Pillai for the advancement of Tamil Literature in general, and Tamil Publications in particular. It is indeed clear that the debt which the Tamil country owes him is one that can never be repaid, which is why such a function as is being got up in connection with his Sixtieth Birthday is as necessary as it is universally welcome.

M. R. APPADURAI





வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

ஸ்ரீ:

மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர்

மே. வீ. வே. பிள்ளையவர்கள்

மணி விழா மலர்

என் வாழ்க்கை நினைவுகள்

"உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!"

—நம்மாழ்வார்

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,'
ஆதலின் அவர்தமக் களியேன்
மன்னிய வணக்கம் உரித்தென நுவலல்
மாபெருங் கடமையே எனினும்,
சொன்னநூல் அனைத்தும் துருவினும் அவர்க்குச்
சோர்விலா தடியனேன் இயற்றும்
நன்னயக் கைம்மா றுலகினர் உவக்கும்
நடையலால் நவிலமற் றிலதே!

கருத்தென்னும் புலமதனிற் கல்வியெனும்
வித்திட்டுக் கனிந்த அன்பாம்
பொருத்தமுறும் நீர்தேக்கிப் புன்மையெனும்
களைகட்டுப் புரையில் ஞானக்

குருத்தென்னுங் கதிர்கண்டு நனிமகிழ்ந்த
குருமணியாம் கோதில் தொல்சீர்
திருத்தமுறுங் கோவிந்த ராசன்ருள்
சிரக்கணியாக் கொள்வாய் நெஞ்சே !

திருவாருஞ் சேடா சலன்முதலோர் ஈந்த
உருவாருங் கல்விநலம் ஓர்ந்தே—ஒருவா
தவரருளே எண்ணி அகங்குழைதல் அன்றி
இவர்கைம்மா றென்றுண்டோ ஈங்கு ?

1. பிறந்தேன் :

உலகில் உயிர்கள் பிறப்பதும் வளர்வதும் இறப்பதும் இயற்கை. சில உயிர்கள் தாயின் கருவிலே நிறைவெய்தா மல் இறப்பதும், சில பிறந்ததும் இறப்பதும், சில சின்னாட் களோ, சில வாரங்களோ, சில திங்களோ வளர்ந்து மறை வதும், சில பல்லாண்டு பயன் பெற வாழ்ந்து மரிப்பதும் கண் கூடு.

இங்ஙனம் தோன்றி வளர்ந்து மறையும் உயிர்த் தொகுதியுள் மக்கள் உயிரே மாண்பு வாய்ந்தது என்னுங் கருத்தால், ' அரிதரிது ! மானிடராய்ப் பிறத்தல் அரிது !' என்று கூறினர் ஒளவையார். அவர் கூற்று உண்மையே என்பதை விந்தை வாய்ந்த மனிதப்பிறவி விளக்குகின்றது.

நானும் பிறந்தேன் ! ' பிறந்தேன் ' என்று சொல்லி விடுவது போதுமா ? கிடந்து, தவழ்ந்து, இருந்து, எழுந்து நின்று, தளர்நடை நடந்து, ஐந்தாம் ஆண்டு நிரம்பிப் பள்ளியிற்சேரும் பிள்ளை, ' உன் வயது எத்தனை ? நீ பிறந்த தேதி எது ?' என்னும் கேள்விக்கு விடை கூற வேண்டி நேர்வதுடன், ஒருவர் வாழ்க்கை முழுவது மல்லவா இந்தக் கேள்வி விடாப்பிடியாய்ப் பின் தொடர்

கிறது? நானும் ஒரு போது இக்கேள்விக்கு விடை கூற வேண்டியவன் ஆனேன்.

எங்கள் குடும்பத்திற் பிள்ளைகளுக்குச் சாதகம் எழுதி வைக்கும் பழக்கம் இல்லை. ஆதலால், இக்கேள்விக்கு விடை சொல்லும் திறம் எனக்கு இல்லாமையால், ஏதோ ஒரு தேதியைக் குறிப்பிட்டு, இக்கட்டிலிருந்து விடுபட்டேன். ஆனால், வாழ்க்கை முழுதும் தொடரும் வழக்கல்லவா இது? எனவே, இதைப்பற்றி என் பெற்றோரைக் கேட்டறிய முயன்றேன்.

'வருடம் எனக்கு நினைவில்லை. ஆயினும், ஒரு நிகழ்ச்சி மட்டும் என் நினைவிலிருக்கிறது: நீ பிறந்தது திங்கட்கிழமை. அன்று கிருஷ்ண ஜயந்தி: அன்று மாலை ஜயந்தி விழாவிற்குரிய அனைத்தும் செய்து வைத்துவிட்டேன்; அப்போது சிறிதும் வருத்தமின்றி உன்னைப் பெற்றேன். அதனால், உனக்கு 'வேணுகோபாலன்' என்னும் பெயர் இடப்பட்டது,' என்றார் என் நல்லன்னையார்.

வாழ்க்கை முழுதும் தொடர்ந்து வரும் கேள்விக்கு இது சிறந்த விடையாவது எப்படி? பகுத்தறிவின் துணையை நாடவேண்டுவது இன்றியமையாததாயிற்று. என் கல்வி சென்னைச் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி மாதிரிப் பள்ளியில் முதல் வகுப்பில் தொடங்கிற்று. அப்பள்ளியிற் சம்பளம் செலுத்தியதற்கு அளிக்கப்பட்ட பற்றுக்கடிதமொன்று என்னிடம் நெடுநாள் வரையில் இருந்தது. அதில் குறிக்கப்பட்ட ஆண்டு 1901. அப்பொழுது எனக்குச் சற்றேறக்குறைய ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் முடிவடைந்திருக்கலாம் என்னும் அனுமானத்தால், அறுபதாண்டு பஞ்சாங்கத்தைப் புரட்டி

னேன் ; துன்முகி ஆண்டு, ஆவணித் திங்கள், 17-ஆம் நாள் (31-8-1896) யான் பிறந்த நாள் என்பது தெளிவாயிற்று. அதற்கு முன் ஐந்தாண்டிலும் பின் ஐந்தாண்டிலும் திங்கட்கிழமையிற் கிருஷ்ணஜயந்தி அமையவில்லை. வாழ்க்கையில் ஒரு புதிருக்கு விடை கண்டேன் !

2. கல்வியும் கவலையும் :

'வளம்பட வேண்டாதார் யார்?யாரும் இல்லை ;
அளந்தன போகம் அவரவர் ஆற்றுன் ;
விளங்காய் திரட்டினுர் இல்லை ;—களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்.' —நாலடியார்

எனது குலம் யாதவகுலம் ; கொள்கை வைணவம். என் தந்தையார் உயர்திரு. மேட்டுப்பாளையம் வீராசாமிப் பிள்ளை ; தாயார் பாக்கியம் அம்மையார். என் தமையன்மார் நால்வர் ; தமக்கையார் இருவர் ; தங்கையார் ஒருவர். தமையன்மாருள் இருவரும் தமக்கைமார் இருவரும் மறைந்தனர். இருப்பவருள் மூத்த தமையனுர் உயர் திரு. மே. வீ. குப்புசாமிப்பிள்ளை ; இளைய தமையனுர் உயர்திரு. மே. வீ, பெருமாள் பிள்ளை ; தங்கையார் திரு. ஆண்டாள் அம்மையார்.

என் தந்தையார் பிறப்பிடம் சென்னையை அடுத்த சைதாப்பேட்டைக்கு மேற்கில் உள்ள மேட்டுப்பாளையம் என்னும் சிற்றூர். தம் மக்களின் கல்வியைக் கருதித் தந்தையார் சைதாப்பேட்டை பாலாஜி சிங்கு தெருவில் பெரியதோர் இல்லத்தை வாங்கி, அதிற்குடி புகுந்தார் ; மைந்தரைப் பள்ளியிற்சேர்த்து, ஒரளவு கற்கச்செய்தார். எனக்கு ஐந்தாம் ஆண்டு நிரம்பியதும் என்னை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சார்ந்த மாதிரிப் பள்ளியில் (Teachers' Gollege Model School) சேர்த்தனர்.

யான் ஓராண்டு அங்கு உளமகிழ்ந்து 'டங்கா, டமாரம்' முதலிய சொற்களை ஓதினேன்.

'கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;
போக்கும் அதுவிளிந் தற்று.'

என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாயிற்று எம் செல்வம். வறுமை கால் கொண்டது. திண்ணைப்பள்ளிக்கூடம் ஒன்றில் யான் சேர்க்கப்பட்டேன். குடும்பத்தில் இன்னல்கள் ஒன்றன் பின் ஒன்றாய்த் தொடர்ந்து குடி புகுந்தன. இந்நாளில் நாற்பதினாயிரம் ரூபா விலை மதிக்கத் தகுந்த தம் இல்லத்தைத் தந்தையார் இரண்டாயிரம் ரூபாவிற்கு விலைப்படுத்தினர். 'வாழ்ந்த ஊரில் தாழ்ந்து நிற்றல் தகாது,' எனத் தந்தையார் குடும்பத்தைப் பல்லவபுரத்திற்கு மேற்கில் ஆறு கல் தொலைவிலுள்ள எருமையூர் என்னும் சிற்றூருக்கு மாற்றினர்; தமது பொருளில் அவ்வூரில் தமக்குரியதாய் எஞ்சியிருந்த ஆறு காணி நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மை செய்தார். நிலமென்னும் நல்லாள் உதவியாற் சில்லாண்டு வரையிற் செழிப்புற வாழ்ந்தோம். வானம் வளங்குன்றியது காரணமாக விளைந்த பஞ்சம், எங்களை மீண்டும் குடியோட்டியது.

என் அம்மானார் உயர்திரு. ஐ. பெருமாள் பிள்ளையவர்கள் பெருஞ்செல்வர்; அரசியலார் மருத்துவ நிலையங்களின் குத்தகையாளர். அவர் சென்னைப் புரசைப்பாக்கத்தில் பேரும் புகழும் பெருக வாழ்ந்தார். அவரால் நலமடைந்தவர் பலர். அவரை அணுகி வாழ்ந்தால் அல்லல் நீங்கும் எனக் கருதினர் என் அன்னையார். ஆதலின், அவர் இல்லத்திற்கு எதிர் இல்லத்திற் குடி புகுந்தோம். ஆனால், அல்லல் நீங்கவில்லை. வினையின் விளைவை நீக்க வல்லார் யார்?

கல்வி கற்பதில் எனக்கு எல்லையில்லாத ஆர்வம் இருந்தது. ஆதரிப்பார் இல்லை. பள்ளியிற்சேர்ந்து பயிலும் பேறு பெறாத யான் கையிற்கிடைத்த தமிழ் நூல்களைக் கருத்தூன்றிப் படித்து வந்தேன்.

என் மூத்த தமையனார்க்கு முன்னரே மணமுடிந் திருந்ததால் மாமனார் இல்லமே அவருக்கு உறைவிட மாயிற்று. இளைய தமையனார்க்கு முதல் மணம் நிகழ்ந்தது. அன்பர் ஒருவர் உதவியால் அவர் சிறிய ஊதியத்திற்கு ஒரு வேலையில் அமர்ந்தார். யானும் மூன்று ரூபாய் ஊதியத் திற்குச் சென்னை வேப்பேரியிலுள்ள எஸ். பி. ஸி. கே. அச்சகத்தில்[1] அச்சுத் தேய்க்கும் வேலையில் அமர்த்தப்பட் டேன்; காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரையில் ஓயாது உழைத்தேன்.

அறிஞர் சிலர் சேர்ந்து நடத்திய இரவுப் பள்ளியிற் சேர்ந்து ஓய்வு நேரத்தையெல்லாம் கல்வி பயில்வதிலேயே கழித்து வரலானேன். இளமை விளையாட்டுகளில் யான் என்றும் ஈடுபட்டவனல்லேன். கருத்தூன்றிக் கற்று வந்ததால் கலைச்செல்வி என்னைக் கனிவுடன் கடைக்கணித் தாள்; சில பரிசுகளும் பெறும்படி செய்தாள்.

ஐந்தாம் படிவம் வரையிற்பயின்று தேர்ந்து, ஆறும் படிவத்திற் பயில்வதால் அரசியலார் நடத்தும் தேர்விற் குச் செல்ல அனுமதி கிட்டாதென அறிந்து, யானும் என்னுடன் பயின்ற பிறரும் வருந்தலானோம். எங்களுக்கு ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் பெருந்துணையாய் நின்று கல்வி பயிற்றிய அருங்கலை விநோதர்-பெருங்குணச் செல்

1. இஃது இப்பொழுது 'தையோசிசன் பிரஸ்' என வழங்கப்படுகிறது.

வர்-வழக்கறிஞர் உயர்திரு. T. N. சேஷாசலம் ஐயரவர்கள், B.A., B.L., எங்களுக்குத் தமிழிலிருந்த பேரார்வத்தை உணர்ந்து, தக்காரை நாடித் தனித்தமிழ் பயிலும்படி எங்களை ஏவினர்.

எனக்கு ஆங்கிலம் பயிற்றிய ஆசிரியருள் என் நினைவை விட்டு அகலாதிருக்கும் அறிஞர் சிலர். அவருள் ஒருவர் உயர்திருவாளர் V. R. அரங்கநாத முதலியாரவர்கள். அவர் சென்னைக் கல்வித்துறைத்துணை இயக்குநராயிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ள உத்தமர். மற்றவர்கள் உயர்திருவாளர்கள் K. மாசிலாமணி முதலியார் என்னும் அருங்கலை விநோதரும், C. நமச்சிவாய முதலியாரும், வழக்கறிஞர் M. தாமோதர நாயுடுவும், என் குலப்பெரியாரும் வளர்புகழ் பெற்று விளங்கும் வழக்கறிஞருமாகிய மோகனரங்கம் பிள்ளையவர்களுமாவார்கள். இப்பெரியார் பலர்க்கும் என் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கல்வி உயர உயர யான் மேற்கொண்ட அலுவல்களும் மாறி மாறி வந்தன ; சிறிது காலம் வேப்பேரியிலுள்ள அஞ்சலகத்தில் ஏவலனுய் அமர்ந்து பணி புரிந்தேன் ; சிறிது காலம் வழக்கறிஞர் ஒருவரிடம் தூக்குத்தூக்கியாய்த் தொண்டாற்றினேன் ; சிறிது காலம் மற்றொரு வழக்கறிஞரிடம் எழுத்தாளனுயிருந்து தொண்டாற்றினேன் ; சிறிது காலம் ஆயுள் ஒப்பந்த அலுவலகம் ஒன்றில் எழுத்தாளனுயிருந்து பணி புரிந்தேன். எனது ஆகூழ் காரணமாக ஏற்பட்ட நல்லொழுக்கத்தால், அலுவல் ஏற்ற இடங்களிலெல்லாம் அனைவர் மதிப்பிற்கும் அன்பிற்கும் ஆதரவிற்கும் உரியவனுய் இருந்து வந்ததை இன்றும் எண்ணி மகிழ்கின்றேன் !

3. தனித்தமிழ்ப் பயிற்சி :

'இருந்தமிழே! உன்னால் இருந்தேன்! இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்!'

—தமிழ் விடு தூது

'கைம்மாறு உகவாமல் தமிழ் பயிற்றும் தந்தையார் எங்கிருக்கின்றார்?' என்று யானும் என் நண்பரும் ஆராய்வதில் ஈடுபட்டோம்; அந்நாளிலே சென்னையம்பதியில் இலக்கிய இலக்கணங்களில் வல்லுநராய், காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல்லைக் கனவிலும் பேசியறியாதவராய், நன்மாணுக்கர் பலர்க்கு நல்லாசிரியராய்த் திகழ்ந்த பெரியார் தமிழ்ப் பேராசிரியர் கா. ர. கோவிந்தராச முதலியாரவர்களை அணுகினோம். அவ்வருளாளர், எங்களை மலர்முகங் காட்டி வரவேற்று, இலக்கிய இலக்கணங்களை முறைப்படி கற்பித்து, கற்றார் குழுமும் அவைகளில் இடம் பெறுதற்குரியவர்களாக்கினார். அவர் தம் புகழ் குன்றின்மேலிட்ட விளக்கெனக் கொழுந்து விட்டு ஒளி தருமாறு இன்று அவர்தம் மாணவர்களாகிய நாங்கள் ஒல்லும் வகையாற் பெரிதும் முயன்று வருகின்றோம்.

என்னுடன் தமிழ் பயின்ற நண்பர்கள் தமிழ்ப்பெரும் புலவரும் 'மங்கலங்கிழார்' எனத் தம் பெயர் நிறுவி மறைந்தவருமாகிய உயர்திரு. மங்கலம் குப்புசாமி முதலியாரவர்களும், தமிழ்ப் பேரறிஞர் உயர்திரு. கு. மதுரை முதலியாரவர்களும், தமிழ்ப்பெரும்புலவர் உயர்திரு. வே. த. அருச்சுன முதலியாரவர்களும் பிறரும் ஆவார்கள். அவர்கள் நட்பு இன்றும் எனக்கு இடையறு நட்பாகவே இருந்து வருகிறதை எண்ணி மகிழ்கிறேன்!

தமிழ்த் தாய்க்கும் ஆங்கில வாணிக்கும் நன்மகவாயும் நல்லன்பனுயும் திகழும் நோக்குடன் யான் இன்றும்



முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர்

மாணவனாகவே இருந்து, இரு மொழியிலும் ஏற்றம் பெற்று விளங்கும் நூல்களை ஓய்வு கிட்டும்போதெல்லாம் பயின்று வருகின்றேன். இப்பயிற்சியே எனக்கு இணையிலா இன்பம் பயப்பது!

'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி.'

என்பதன் உண்மை எனக்கு இனிது விளங்குவதாயிற்று.

4. ஆசிரியத் தொண்டு :

'இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.' —நாலடியார்

யான் தமிழாசிரியன் ஆதல் வேண்டும் என்பது என் நல்லாசிரியர் விருப்பம். ஆயினும், அதற்குத் தகுதியுடையேன் என்னும் மனவுறுதி எனக்கு அந்நாளில் இல்லை. எழுத்தாளனாய் இருந்து படிப்படியாக ஏற்றம் பெறுதற்குரிய முயற்சிகளிலேயே என் மனம் ஈடுபட்டிருந்தது.

'ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.'

என்னும் வள்ளுவர் வாய் மொழி பொய்க்குமா? என் நல்லாசிரியர் பெருமான் வற்புறுத்தலால் யானும் தமிழாசிரியனானேன்!

இப்பொழுது கச்சியம்பதியிற் பச்சையப்பர் கல்லூரித் தலைவராய்த் திகழும் என் மதிப்பிற்குரிய பேரறிஞர் M. சண்முக சுந்தர முதலியாரவர்கள், M.A., L.T. அந்நாளில் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் மாணவரும் மற்றவரும் போற்றும் நல்லாசிரியராய், தலைமையாசிரியர் உயர்திரு. V. சீதாபதி நாயுடு அவர்க

ளுக்கு நெருங்கிய நண்பராய்த் திகழ்ந்தவர். என் நல்லாசிரியர் சொல்லுக்குப் பெருமதிப்பீந்து, அவர் என்னை அப்பள்ளியின் தமிழாசிரியருள் ஒருவனுயிருந்து தொண்டாற்றும் வாய்ப்பைப் பெறச்செய்தார்.

உயர்திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் தலைமைத் தமிழாசிரியர்; உயர்திருவாளர்கள் தணிகாசலம் பிள்ளை, மயிலை, சிவ. முத்துக்குமாரசாமி முதலியார், பாலூர் வேலு தேசிகர், S. S. அருணகிரிநாதர், சதாசிவ நாயகர் ஆகிய அறிஞர்களும் யானும் உதவித் தமிழாசிரியர்கள். நாங்கள் தமிழுக்கு இழுக்கு நேரா வகையில் தமிழ்ப்பணி புரிந்து வந்தோம். வேலையேற்ற சில மாதங்களுள் யான் மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் விரும்பும் வகையிற்பணி புரிந்து, அனைவர் அன்புக்கும் உரியவனுனேன்.

1920–ஆம் ஆண்டு தொடங்கி, 1923–ஆம் ஆண்டு வரையில் யான் அப்பள்ளியில் மாணவர் மதிக்கத் தொண்டாற்றினேன். மற்ற ஆசிரியர்கள் என்னிடம் காட்டிய அன்பும் ஆதரவும் இன்றும் எண்ணுங்கால் எனக்கு இன்பம் பயப்பனவாயுள்ளன!

புரசைப்பாக்கத்திலிருந்து முத்தியாலுப்பேட்டைக்கு நாடோறுஞ்சென்று வரவேண்டி நேர்ந்ததால், கல்வியிற் கருத்தைச் செலுத்த ஒய்வு கிட்டுவது அரிதாயிற்று. அப்பொழுது புரசைப்பாக்கம் லுத்தரன் மிஷன் பெப்ரீஷியஸ் நடுத்தரப் பள்ளியில் தலைமையாசிரியராய் இருந்தவர் உயர் திருவாளர் M. A. வேதநாயகம் அவர்கள், B.A., L.T. அப்பெரியார், தூய ஒழுக்கம் வாய்ந்த கிறிஸ்தவர்; இன்மொழி பேசும் இயல்பினர்; கடமையிற்கருத்தூன்றித் தொண்டாற்றுபவர். அவர் தம் பள்ளியில் நடைபெற்ற

ஆண்டுத்தேர்வில் மூன்றும் படிவ மாணவர் எழுதிய விடைத்தாள்களை வெளியூர்களில் நடைபெறும் தம்

திரு. M. A. வேதநாயகம் அவர்கள், B.A., L.T.

மிஷனைச் சார்ந்த பள்ளிகளுள் ஒன்றற்கு அனுப்பியும், அப்பள்ளியின் விடைத்தாள்களைத் தம் பள்ளிக்குத் தருவித்தும் திருத்துவிப்பது வழக்கம். அங்ஙனமே அவ்வாண்டும் திருத்தப்பட்டு வந்த தமிழ் விடைத்தாள்கள் கவனித்துத் திருத்தப்படவில்லை என்பதை உணர்ந்து, அவற்றை மீண்டும் திருத்தத் தமிழாசிரியர் ஒருவர் உதவியை நாடி ஓர் அன்பரை அவர் என்னிடம் அனுப்பினர். அவ்வன்பர்

எனக்கு நிகழ்ந்ததை விளக்கி, உதவி செய்ய வேண்டும் என வேண்டினர். யான் அதற்கு உடன்பட்டேன்; விடைத்தாள்களைத் தருவித்துத் திருத்தினேன். அதனால், முன் திருத்தத்தின்படி தேர்வில் தவறிய சில மாணவர் வெற்றி பெற்றனர்; வெற்றி பெற்றவருள் சிலர் தோல்வி யுற்றனர். இத்தகைய வேறுபாட்டிற்குக் காரணம், விடைத்தாள்களைத் திருத்தி அனுப்பிய ஆசிரியரின் பொறுப் புணர்ச்சிக்குறைவே என்பது புலனாயிற்று. திருத்தத் தைப்பற்றிய எனது கருத்தைத் தெரிவிக்கும் கடிதத் துடன் திருத்திய விடைத்தாள்களையும் தலைமையாசிரிய ருக்கு அனுப்பி வைத்தேன். தலைமையாசிரியர் மூன்றும் படிவ மாணவர்களுடன் பழகி அவர்களுள் ஒவ்வொருவர் திறமையையும் நன்கு அறிந்தவர். ஆதலால், அவர் கருத் துக்கு எனது திருத்தம் முற்றும் பொருந்தியிருந்தது. அவர் மகிழ்ந்தார்; தம் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்து தொண்டு புரிய வேண்டுமென என்னை வேண்டினர். வீட்டிற்கு அண்மையில் வேலை கிடைப்பதை யானும் விரும்பினேன்; முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி யிலிருந்து மிகமுயன்று பிரியா விடைபெற்று, பெப்ரீஷியஸ் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியனானேன்; சில நாட் களுள் தலைமையாசிரியர் என் தொண்டினைப் பாராட்டிப் பேசி என்னை ஊக்கினர்.

யான் வேலையேற்று மூன்று மாதங்களுக்குப் பின் தலைமையாசிரியர் சீர்காழியிலுள்ள மிஷன் உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டார்; அப்பள்ளியின் தலைமையாசி ரியராகிய உயர்திரு. M. D. மாணிக்கம் அவர்கள், B.A., L.T. சென்னைப்பள்ளிக்குத் தலைமையாசிரியராய் மாற்றப்பட்டு வந்தார். அவர் நன்மனமும், நேர்மையும், அஞ்சாமையும், செயலாற்றுந்திறமும், ஆசிரியர்களின் தகுதியறியும் ஆற்ற

லும் உடையவர்; எவரும் தம் சொல்லுக்கு எதிர் சொல்லக் கூடாது என்னும் எண்ணம் வாய்ந்தவர். தொடக்

திரு. M. D. மாணிக்கம் அவர்கள், B.A., L.T.

கத்தில் அவர் மற்ற ஆசிரியர்களிடம் நடந்துகொண்டது போலவே என்னிடமும் கடுமையாகத்தான் நடந்து கொண்டார்; ஆயினும், பழகிய பின்னர் எனக்கு அரிய நண்பராய்த் திகழ்ந்தார்; குடும்ப நிகழ்ச்சிகளைப்பற்றியும் என்னுடன் கலந்து பேசி மகிழ்வாராயினர். அப்பெரியார் ஒய்வு பெற்ற பின்னரும் எனக்கு உற்ற நண்பராய் இருந்து வருகிறார்.

யான் வேலையேற்ற பின்னர் நடுத்தரப்பள்ளி உயர் நிலைப் பள்ளியாயிற்று. யானும் சென்னைப்பல்கலைக் கழகத்தார் நடத்தும் வித்துவான் பரீட்சையில் தேறிப் பட்டதாரியானேன். அப்பள்ளியின் மேற்பார்வையாளர்கள் ஜெர்மானியப் பாதிரிமார்கள்; தமிழிலே சிறந்தபுலமை பெற்றவர்கள். அவர்கள் கூட்டுறவால் பள்ளியில் எனக்கிருந்த மதிப்பும் செல்வாக்கும் பன்மடங்கு பெருகின. வேறெப்பள்ளியிலும் ஒரு தமிழாசிரியருக்கு அத்தகைய பெருமதிப்பும் செல்வாக்கும் கிடைத்திரா எனவே கருதுகிறேன்.

ஜெர்மனியிலிருந்து வந்த அந்நாட்டு அறிஞர் சிலரும் அவர்தம் மனைவியரும் என்னிடம் தமிழ் பயின்றனர்; எனக்கும் சில ஒழுகலாறுகளைப் பயிற்றினர். அங்ஙனம் தமிழ் பயின்றவருள் குறிப்பிடத்தக்கவர், டாக்டர் ஸ்டாலின், அவர்தம் மனைவியார், டாக்டர் W. கிராபே, குமாரி ஹில்டகார்டு எல்வின் அம்மையார் என்பவர். குமாரி ஹில்டகார்டு எல்வின் அம்மையார் கூரிய மதியும், சீரிய பண்பாடும் உடையவர். இவர் தந்தையார் டாக்டர் எல்வின் என்பவர், பெரிய புராணத்தை ஜெர்மன் மொழியில் செய்யுளாகவே மொழி பெயர்த்துள்ளார் என்பதை இவர் சொல்லக் கேட்டு மகிழ்ந்தேன். இவ்வம்மையார் தமிழ் நங்கையைப் போலப் புடைவையுடுத்துப் பிடித்த புகைப்படமொன்று என்னிடம் நெடுநாள் இருந்தது. இவ்வம்மையாரது தமிழ்க் கையெழுத்து, காண்பார் கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியது. இவர்



லுத்தரன் மிஷன் உயர்நிலைப்பள்ளி ஆரும்படிவ மாணவருடன் ஆசிரியர்

எழுதிய இன்பந்தரும் கடிதம் சில இன்றும் என்னிட முள்ளன. அந்தோ ! நற்பண்புகள் பலவற்றிற்கும் உறை யுளாய்த் திகழ்ந்த இவ்வம்மையார், இந்நாட்டு வெப்பம் பொறுது, சீதபேதி கண்டு இறந்தார் !

பெப்ரீஷியஸ் பள்ளியின் தொடர்புடைய பாதிரிமார் களால் சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் குருகுழுக் கல்லூரி (Gurukul College) ஒன்று நடைபெற்று வருகிறது, அதில் பீ. ஏ. வகுப்பில் தேர்ச்சியடைந்த கிறிஸ்தவ மாணவர் சிலர் சேர்ந்து மூன்றுண்டு வரையில் மதத் தொண்டில் பயிற்சி பெறுவது வழக்கம். அத்தேர்வில் வெற்றி பெறுபவர் மதபோதகராக அமர்த்தப்படுவர். அவர்களுக்குத் தமிழிலுள்ள சைவ வைணவ நூல்கள் சிலவற்றைப் பயிற்றும் தொண்டில் யான் ஈடுபடும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது.

அக்கல்லூரித் தலைவர், டாக்டர் புரோலிக்குச் சாஸ் திரியார் என்னும் ஜெர்மானிய அறிஞர். அவர் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்; அருங்குணச் செல்வர்; தமிழில் சில நூல்களை எழுதியவர் ; கல்லூரியில் நடைபெற்று வந்த என் சொற்பொழிவுகளைச் செவிமடுத்து என்னிடம் பேரன்பும் பெருமதிப்பும் காட்டியவர். அவரது மறைவு எனக்கு மிக்க வருத்தத்தை விளைத்தது.

உயர்நிலைப் பள்ளியிலும் குருகுழுக் கல்லூரியிலும் என்னிடம் தமிழ் பயின்ற மாணவருள் பலர், இன்று உயர் பதவிகளில் இருப்பதைக் கண்டு உளமகிழ்கிறேன் ! உடல் நலக்கேடு காரணமாக யான் 1938-ஆம் ஆண்டு ஆசிரியத் தொழிலை விட்டு நீங்க நேர்ந்தது.

என்னிடம் தனித்த முறையில் தமிழ் பயின்று பட்டம் பெற்று இன்று நற்றமிழாசிரியர்களாய்க் கல்லூரி

களிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் தொண்டாற்றி வரும் அன்பர் பலர். அவர்தம் அன்பும் பணிவும் பாராட்டும் எனக்கு அளப்பரிய மகிழ்ச்சியை விளைக்கின்றன! அவர்களைப்பற்றி விரிவாக எழுத என் மனம் என்னைத் தூண்டுகிறது. ஆயினும், விரிவஞ்சி இவ்வாழ்க்கை நினைவுகளில் அவர்களைப் பாராட்டுவதுடன் அமைகின்றேன்! ஆயினும், பின்னர் எனது விரிவான வாழ்க்கை வரலாற்றில் அவர்கள் இடம் பெறுவார்கள்.

5. எழுத்தும் பதிப்பும் :

யான் ஆசிரியத்தொழிலை விட்ட பின் என் எழுத்து வேலையும் பதிப்புத் தொழிலுமே என்னை உயர்த்தியவை. யான் எழுதிய நூல்கள் பல. அவை பெரும்பாலும் தொடக்கப் பள்ளியிலும் உயர்நிலைப்பள்ளியிலும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கெனவே எழுதப்பட்டவை. அவை பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்னை அறிமுகப்படுத்தியுள்ளன; பத்திரிகைகள் பலவற்றின் மதிப்புரைப் பேராசிரியர்களின் பாராட்டுக்கு உரியனவாயின. விரிவஞ்சி அத்தகைய மதிப்புரைகளுள் சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன் :

பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன் :

This short story is written in excellent Tamil with a view to be used as a text-book in our high schools. Proverbs and passages from literature are introduced here and there. The plot is nothing novel but it has the usual attractions of a puranic story and allows scope for the author to moralise without interfering with the development of the story. The book deserves to be placed in the hands of school children as an introduction

to elegant Tamil. The Tamil idiom is here found in its pristine form, unmarred by translations of the English language and idiom which characterise many modern Tamil books for the young. —*The Hindu*, 28-11-1928.

திருக்கண்ண பிரானர் :

This book deals with the complete life of Sri Krishna. . . . . The narrative is told in chaste and elegant Tamil and the author has, with a view to make the book useful for school boys and girls, avoided the use of sandhi and of rare words and also erotic descriptions. The prose text is interspersed with happy quotations from the Kural, the Divya Prabhandam, the Maha Bharata and the Bhagavata. We heartily recommend the book for use in our high schools.

—*The Hindu*, 2-1-1929.

குணசாகரர் அல்லது இன்சொல் இயல்பு :

This story book for school boys is an adaptation in simple and elegant Tamil of the well known novel, Les Miserables of Victor Hugo. Mr. Pillai has modified the story in some respects to suit Tamil conditions but the chief incidents of that soul stirring story are told with all the vigour of the original narrative. In fact, the pruning has added to the emphasis on the main theme—the conversion of an ordinary erring mortal by an act of unexpected kindness into a noble benefactor. We heartily recommend the book as extremely suitable for non-detailed study in the high schools in Tamil districts.

—*The Hindu*, 10-4-1929.

அற்புத விளக்கு :

The story of 'Alladin and the Wonderful Lamp' is narrated in simple and chaste Tamil by Pandit Venugopaula Pillai in this booklet. The author has kept the requirements of the school children in view and has not only adopted a simple diction but also an attractive method of presentation which is sure to appeal the book to the young children in whose hands it might be placed as a text-book for non-detailed study.

—*The Hindu*, 2-1-1929.

தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தாம் நடத்தி வந்த **'நவசக்தி'** என்னும் நற்றமிழ் வெளியீட்டில் 1938–ஆம் ஆண்டு, ஏப்பிரில் திங்கள், 8–ஆம் நாள் இதழில் வெளியிட்ட மதிப்புரையை ஈண்டுத் தருகின்றேன் :

அரிச்சந்திர புராணச்சுருக்கம்—விளக்கக் குறிப்புரை :

அரிச்சந்திரன் உண்மைக்கோர் இலக்கியன் என்பது நாடறிந்த ஒன்று. அரிச்சந்திர புராணம் நாட்டு மொழிகள் பலவற்றிலும் யாக்கப்பட்டுள்ளது. தமிழ் அரிச்சந்திர புராணத்தைப்பாடியவர் நல்லூர் வீர கவிராயர். கவிராயர் வெறும் நூற்புலமை மட்டும் வாய்ந்தவரல்லர். அவர்தம் பாக்களை நோக்குழி அவர் அகத்திணை வல்லார் என்பது நன்கு புலனாகிறது. இயற்கையுலகும், மக்களியல்புகளும், வாழ்வுக்கூறுபாடுகளும் தமிழ் அரிச்சந்திர புராணமாகப் பரிணமித்துள்ளன என்று கூறல் மிகையாகாது.

பண்டைத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் அரிச்சந்திர புராணம் அரியாசனத்தில் வீற்றிருந்தது. இந்நாளில் அப்புராணம் உற்றுள்ள நிலையை விரித்துக்கூற வேண்டுவதில்லை.

சில அரிச்சந்திர புராணப் பதிப்புக்களை நாம் பார்த்தல் நேர்ந்தது. அவைகளுள் இரண்டொன்றில் 'அரிச்சந்திரன்' அம்மைப் புண்ணுற்றுக் கிடத்தலும், இரண்டொன்றில் அவன் சவலையுற்றுக் கிடத்தலும் காட்சியளித்தன. இந்நிலையில் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்கள் அரிச்சந்திர புராணச்சுருக்கத்தைப் பதிப்பித்தது 'அரிச்சந்திர'னுக்கு மகிழ்ச்சியூட்டும்!

திரு. வேணுகோபாலப் பிள்ளை, விளம்பரமின்றி—ஆரவாரமின்றி—அமைதியில் நின்று தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்வோருள் ஒருவர். திரு. பிள்ளை, நூல்களைப்பிழையின்றிப் பதிப்பிப்பதில் பேர் பெற்றவர். திரு. வேணுகோபாலர், அரிச்சந்திர புராண ஆழியில் மூழ்கி, நன்மணிகளைக் குடைந்தெடுத்து, அவைகளைத் திறம்படக் கோவை செய்துள்ளார். நூலை முற்றிலும் பதிப்பிப்பதினும் அதைச் சுருங்கிய முறையில் கதைப் போக்கின் தொடர்ச்சி கேடுறா வண்ணம் பதிப்பிப்பது அரிது என்பது அத்துறையில் ஈடுபட்டுள்ளோர்க்குத் தெரியும்.

பதிப்பாசிரியரால் அரும்பதங்கட்கு நல்லுரை காணப்பட்டிருக்கிறது. ஆசிரியரின்றிப் புராணத்தைப் பயில்வோர்க்கு அவ்வுரை பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை.

புராணக்கதைச் சுருக்கம் பதிப்பாசிரியரால் உரை நடையில் வரையப்பட்டிருக்கிறது. உரை நடை பழைய இலக்கண வரம்பிற்கு அரண் செய்து நிற்றல் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. தீந்தமிழ்ச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்துள்ள உரை நடையைக் கொண்ட கதைச்சுருக்கம், ஒரு பூங்காவெனப் பொலிகிறது. அதனிடைத் தென்றற்காலும் வீசுகிறது. திரு. வேணுகோபாலர் தமிழில் தமிழூர்தல் வெள்ளிடை மலை. தமிழறிஞர்

வேணுகோபாலரின் பிழையற்ற உரை நடை, தற்போது கறைபட்டுள்ள தமிழுலகைத் தூய்மை செய்யும் பெற்றி வாய்ந்ததென்று சுருங்கக் கூறலாம்.

புராணமுற்றும் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் பார்வை பெற்று வெளிவரின் தமிழுலகம் நலம் பெறும்; 'அரிச்சந்திர'னும் நலம் பெறுவன். நமது வாழ்த்து வித்துவான் வேணுகோபாலர்க்கு உரியதாக!

* * *

யான் திருத்தம் செய்து பதிப்பித்த நூல்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, தஞ்சை வாணன் கோவை விளக்கக் குறிப்புரை, அட்டப் பிரபந்தம் விளக்கக் குறிப்புரை, சித்தர் ஞானக் கோவை (அருஞ்சொற்பொருளகராதி முதலிய பிற்சேர்க்கைகளுடன்) ஆகிய இவைகள். என் பதிப்புகள் தமிழ் நாட்டு நல்லறிஞர்களின் பாராட்டுக்குரியனவாய்த் திகழ்வது கண்டு மகிழ்கிறேன்!

சென்னைப் பவானந்தர் கழகச் சார்பில் ஆலோசனைக்கழக உறுப்பினருள் ஒருவனாயிருந்து அக்கழகவெளியீடாக யான் பெரிதும் உழைத்துப் பிழை களைந்து செவ்விய முறையில் அமைத்த விளக்கக் குறிப்புகளுடனும், அருஞ்சொல்லகராதி பொருட்குறிப்பகராதி மேற்கோளகராதி முதலிய பிற்சேர்க்கைகளுடனும் சற்றேறக்குறைய இரண்டாயிரம் பக்கங்களில் யாப்பருங்கல விருத்தியுரையைத் திருத்தப்பதிப்பாகச் சித்தஞ்செய்து தந்துள்ளேன். அது வெளி வந்து தமிழுலகை மகிழ்விக்கும் நாள் எந்நாளோ, அறியேன்! அக்கையெழுத்துப் பிரதி இன்று

சென்னை உயர்நீதி மன்றத்தின் ரிசீவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

யான் பார்வையிட்டுப் பதிப்பித்த சிறு நூல்களையும் பெருநூல்களையும் தமிழில் தனிப்பெரும்புலமை வாய்ந்த நாவலரும் பாவலரும் அறிஞரும் பலபடப் பாராட்டியுள் ளனர். அவர்தம் பாராட்டுக்குரியனாகுந் தகுதியை எனக் குத் தந்த தமிழ்த்தொண்டுக்கு யான் வணக்கம் செய் கிறேன் !

ஒரு சமுதாயத்தை ஆளும் பொறுப்புத் தமக்கு அளிக்கப்பட்டால் தாம் என்ன செய்வார் என்று வின வப்பட்டபோது கன்பியூஸியஸ் என்னும் சீன ஞானியார் பின்வருமாறு விடை பகர்ந்தனர் : ‘ நான் முதலில் மொழி யைத் திருத்துவேன். மொழி திருத்தமடையாவிட்டால், மக்கள் கருதியதைக் கருதியபடி உணர்த்தல் இயலாது. அங்ஙனமாயின், கருதிய செயலுங் கருதியாங்கு முடிவுறாது முட்டுறும் ; அங்ஙனமாயின், ஒழுக்கங்களும் கலையும் இழிவுறும் ; நீதி பிறழும் ; நீதி பிறழின், மக்கள் அல்ல லுற்று அலமந்து நிற்பார்கள். எனவே, பேசப்படுவதில் தான்றோன்றித்தனம் தலையிடுதல் அடாது. எல்லாவற் றையும்விட இஃது இன்றியமையாதது.’

தமிழ் நூல்கள்—சிறியவையாயினும் பெரியவையா யினும்—பிழையின்றித் திருத்தமான முறையிற் கண்கவர் வனப்புடன் வெளி வருதல் வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் குறிக்கோள். ஆதலின், பதிப்புத்துறை யில் என்னால் இயலும் வகையில் தொண்டாற்றும் நோக் கத்துடன், அத்துறையில் அறிவை வளர்க்கும் ஆங்கில நூல்கள் பலவற்றை யான் பெரிதும் பயின்று வந்துள் ளேன். அத்துறை நுட்பங்களை விளக்குவதாயின், என்

வாழ்க்கை நினைவாகிய இக்கட்டுரை பெருநூலாக விரியும் என அஞ்சுகிறேன்!

திரு. M. R. அப்பாதுரைப் பிள்ளையவர்கள், B.A.
Educational Publisher
Councillor, Corporation of Madras,
Member of the Senate and the Academic Council.

அத்துறையில் யான் பெற்றுள்ள பயிற்சியைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழ் நாட்டுப் பதிப்பாளர்

பலரும் முயன்று வருகின்றனர். அப்பதிப்பாளருள் தலை சிறந்தவராய் என் மதிப்புக்கும் அன்பிற்கும் உரியவராய் விளங்குபவர் உயர்திருவாளர் M. R. அப்பாதுரைப்பிள்ளையவர்கள், B. A. என்பது தமிழ் நாடு அறிந்தது. அவர் வெளியிட்டு வரும் பல துறை நூல்களும் அவருக்குப் பதிப்பாளர் உலகில் தனி மதிப்பைத் தந்துள்ளன. அவரது பதிப்புத் தொண்டு நாளுஞ்சிறந்து நாட்டுக்கு நலம் விளைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்! தமிழ் நாட்டில் என் பெயர் பரவுவதற்குக் காரணமாயிருப்பவர்களுள் உயர்திரு. M. R. அப்பாதுரைப் பிள்ளையவர்கள் தலை சிறந்தவர் என்பதை நான்குறிப்பிட விரும்புகிறேன்.

6. சொற்பொழிவுகள் :

ஆண்டவன் மக்களுக்கு அளித்த அரிய செல்வங்களுள் ஒன்றுய்த் திகழ்வது சொல்லாற்றல். அவ்வாற்றல் ஒரு சிறிது என்னிடத்திலும் அமைந்துள்ளதாகக் கருதுகிறேன். என் சொற்பொழிவுகளின் மூலம் எனக்கு அன்பரும் நண்பருமாய்த் திகழும் அறிஞர் பலர்.

எனது கன்னிச் சொற்பொழிவு சென்னைத் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியின் பெற்றோர் விழா ஒன்றில் கால் கொண்டது. அன்று அவ்விழாவிற்குத் தலைமை தாங்கியவர் என் மதிப்பிற்குரிய உயர்திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள். அன்று சொற்பொழிவாற்றற்கு இசைந்தவர் சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராயிருந்த உயர்திருவாளர் மோசூர் கந்தசாமி முதலியாரவர்கள், B. A. பல் வலி காரணமாக விழாவிற்கலந்து சொற்பொழிவாற்ற இயலாமையைக் கடித மூலம் அவர் அறி

வித்தார். பள்ளிக்கூடத்தின் சொற்பொழிவுக் கூடத்தில் மக்கள் திரளாய்க் குழுமியிருந்தார்கள். விழா அழைப்புப் பெற்றுச் சொற்பொழிவைக் கேட்டு மகிழும் ஆர்வத்துடன் யானும் சென்று சொற்பொழிவாளர் மேடையில் அமர்ந்திருந்தேன். பள்ளியின் செயலாளர் உயர்திரு. சரவண முதலியார் அவர்கள், B. A. சொற்பொழிவாளர் அனுப்பிய செய்தியை விழாத்தலைவரிடம் தெரிவித்தார். தலைவர் இருக்கை விட்டெழுந்தார்; சொற்பொழிவாளர் அனுப்பிய செய்தியைக் கூட்டத்தினருக்குத் தெரிவித்துப் பின்னர்ப் 'புலவர் வேணுகோபாலப் பிள்ளையவர்களைப் பேசுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்,' என்று கூறி, என்னைப்பற்றிய தம் கருத்துகளை விளக்கி அமர்ந்தார். யான் எழுந்து அவர் பக்கத்திற்சென்று நின்றேன். கால்கள் நடுங்கின. பேச ஆரம்பித்தேன். சில நிமிடங்கள் என்ன பேசினேன் என்பதே எனக்குத் தெரியாது. கேட்பவர்களின் முகத்தோற்றம் எனக்கு ஊக்கம் பிறக்கக் காரணமாயிற்று. ஒரு மணி நேரம் பேசினேன். இடையிடையே எழுந்த தலைவருடைய ஊக்கமொழிகள் எனக்கு உற்சாகமூட்டின. பேசி அமர்ந்தேன்! உடல் வியர்த்துவிட்டது! தலைவர் எழுந்தார்; கை தட்டல் வலுத்தது. என் சொற்பொழிவைத் தலைவர் பாராட்டிப் பேசினார். என் உள்ளம் மகிழ்ந்தது!

அடுத்த நாள் பள்ளியில் தலைவரைச் சந்தித்தேன். தலைவர் புன்னகை பூத்த முகத்துடன் என்னை வரவேற்றார். 'கூட்டத்தினர் எனது அவச்சொல்லைக் கேட்கும்படி முன்னறிக்கையின்றியே என்னைப் பேசச் செய்ததற்கு நான் உங்களுக்கு என்ன கொடுமை செய்தேன்?' என்று அவரை வினவினேன். தலைவர், 'அவச்சொல்லா! அப்படியா கருதுகிறீர்கள்? அது தவச்சொல்லாயல்லவா



லயோலா கல்லூரித் தமிழ்க்கழக ஆண்டு விழாவில் ஆசிரியர்

எங்களுக்கெல்லாம் இன்பமளித்தது! நீங்கள் நல்ல சொற்பொழிவாளராய்த் தமிழ் நாட்டில் திகழ்வீர்கள்!' என்று கூறி என்னை வாழ்த்தினுர்.

பின்னர்ச் சொற்பொழிவாளனும் ஆனேன். தமிழ் நாட்டில் பற்பல இடங்களிற் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. எண்ணற்ற அன்பர்கள் என் சொல்லைக் கேட்டு மகிழ்ந்தார்கள்—மகிழ்கிருர்கள்.

1931-ஆம் ஆண்டு—தேதி நினைவில்லை—சென்னை லயோலா கல்லூரியில் மாணவர் தமிழ்க்கழக ஆண்டு விழாவிற்குச் சென்றிருந்தேன். அவ்விழாவிற்குத் தமிழ்ப் பேரறிஞர் இராவ் சாகிபு. மு. இராகவையங்காரவர்கள் தலைமை வகித்தார்கள். அன்றும் உயர்திரு. மோசூர் கந்தசாமி முதலியாரவர்களே சொற்பொழிவாளர். பல ஆண்டுகளுக்கு முன் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்த நிகழ்ச்சியே அன்றும் நிகழ்ந்தது. என்னுடன் தமிழ் பயின்றவரும் நல்லறிஞருமாகிய உயர்திரு. கு. மதுரை முதலியார் அவர்கள் அப்பொழுது அக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தார். சுன்னுகம் குமாரசாமிப் புலவர் மகனுர் உயர்திரு. முத்துக்குமாரசாமிப் பிள்ளையவர்கள், B. A. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராயிருந்தார். தேநீர் விருந்து நடந்தது. சொற்பொழிவாளர் வரவில்லை. அன்றும், சொற்பொழிவாற்றும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. சொற்பொழிவாளருக்கு உரிய கம்பீரமான ரோஜா மலர் மாலை என் கழுத்தில் விழுந்தது. யான் புகைப்படத்திலும் இடம் பெற்றேன்.

அனைவரும் சொற்பொழிவுக் கூடத்தை அடைந்தோம். தலைவர் முன்னுரை கூறி முடித்து என்னை

மாணவருக்கும் மற்றவருக்கும் அறிமுகப்படுத்திப் பேசுமாறு வேண்டினர். மாணவர்கள் மேசைமேல் 'தபேலா' கொட்ட ஆரம்பித்தார்கள். சில நிமிடங்கள் வரை மாணவரை நோக்கியபடி மௌனமாய் நின்றேன். மாணவர் 'தபேலா' கொட்டுவதை நிறுத்தி வியப்புடன் என்னைக் கவனிக்கலாயினர். அமைதியாக ஒரு மணி நேரம் பேசினேன். பேச்சில் இடையிடையே ஆசியச் சுவையுங் கலந்து மாணவரை மகிழ்வித்தது. பேச்சை முடித்தேன். தலைவர் எனது பேச்சைப் பாராட்டித் தொகுப்புரை கூறினர். அது முதல் தலைவர் என்னிடம் மிகுந்த அன்புடையவராய்த் திகழ்கிறார். கூட்டம் முடிந்த பின்னர் அந்நாள் கல்லூரித் தலைவராயிருந்த தூய தந்தையார் பெர்ட்ராம் அவர்கள் கைகுலுக்கி என்னை ஆசீர்வதித்தார்.

25-1-48ல் மன்னார் குடியில் நடைபெற்ற தமிழ்த் திருநாளில் தமிழ் நாட்டுத் தனிப்பெருஞ்சொற்பொழிவாளராகிய அறிஞர் C. N. அண்ணாத்துரையவர்களும் யானும் சொற்பொழிவாற்றும் வாய்ப்பைப் பெற்றோம். 'அண்ணா' அவர்களின் பேச்சைக்கேட்க ஆவலுற்றிருந்த மக்கள், பல்வேறிடங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கில் திரண்டு வந்து குழுமியிருந்தார்கள். அக்கூட்டத்தை 'மக்கட்சமுத்திரம்' என்றே கூற வேண்டும். முதற்பேச்சாளன் நான். 'அண்ணா'வின் பேச்சைக் கேட்க ஆர்வமுற்றுக் குழுமியுள்ள மக்கள் மற்றொருவன் பேசக் கேட்கும் மனவமைதி பெறுவார்களோ என்று மயங்கினேன். 'அண்ணா'வையே முதலிற்பேசுமாறு வேண்டினேன். அவர், 'நீங்களே பேசலாம்; தீங்கொன்றும் நிகழாது,' என்று ஊக்கினர். அவரது தகவுடைமையைப் பாராட்டிப் பேச ஆரம்பித்தேன். கூட்டத்தில் அமைதி நிலவியது. ஒன்றரை மணி நேரம் தமிழர் பண்பாட்டைப்



ஆசிரியர் குடும்பம்

பற்றிப் பேசினேன். பின்னர் 'அண்ணு' எழுந்தார்; நெடுநேரம் தமக்கே உரிய தனி முறையிற் சொற்பொழி வாற்றினர். கூட்டம் இனிது முடிந்தது. யானும் நண்பர் வி. கண்ணப் பிள்ளையவர்களும் எம் உழுவலன்பர் திரு. S. கைலைகுருப் பிள்ளையவர்கள் விருந்தினராயிருந்து அன்பர் பலரோடு அளவளாவி ஊர் திரும்பினேம்.

7. எனது குடும்பம் :

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.'

என் தந்தையார் உடலுரமும் உள்ளத்திட்பமும் பெற்றவர்; மறந்தும் பிறர் கேடு சூழாதவர்; கள்ளங் கபடற்றவர்; இறைவனிடத்து இடையருது அன்பு பூண்டொழுகியவர்; நல்ல வைணவர்; ஈத்துவக்கும் இன்பம் அறிந்தவர்; செல்வம் ஊடாடிய காலத்தில் சுற்றத்தார் பலர்க்கும் உதவிகள் பல புரிந்தவர்; வறுமை அடைந்த காலத்தும் செம்மையை விடாமல் தம்மானம் போற்றி வாழ்ந்தவர்; மலையன்ன செல்வங்குவித்தவராயி னும், தம்மை மதியாதவராயின், அவர்தம் தலை வாயிலை மிதியாமல் வாழ்ந்தவர்; இரகசியம் என்பது அவர் வாழ்க் கையில் அறியாததொன்று; எடுத்த காரியத்தில் எண் ணற்ற இடையூறுகள் குறுக்கிட்டாலும், எள்ளி நகை யாடி, உள்ளங்குன்ருது உழைத்து வெற்றி கண்டவர்; நல்லவர் என்று தாம் கருதியவரிடம் நயமாகப் பழகியவர்; வீரவுணர்ச்சி வாய்ந்தவர்; அஞ்சாத நெஞ்சம் படைத் தவர்; ஆண்டவன் அடியார்களிடம் அன்பு பூண்டு ஒழுகுபவர்; கற்றவர் என்னும் பட்டம் பெருதவராயி னும், தமிழில் நல்ல நூல்களை ஓதியவர்; உலகானுபவம் மிகுந்தவர்; எனது அறிவுத்துறை முன்னேற்றங்கண்டு

அகம் மகிழ்ந்தவர் ; தொண்ணூற்றொன்பது ஆண்டு மண்ணில் வாழ்ந்து மகிழ்ச்சியுடன் மரித்தவர்.

என் தாயார் குணக்குன்று ; செல்வக்குடியிற் பிறந்தவராயினும், அல்லற்காலையும் அகக்கனிவோடு இல்லற வாழ்வை நல்லற வாழ்வாக இலங்கச்செய்த பெருமாட்டியார் ; அறச்செல்வியார் ; புறங்கூறி அறியாத புண்ணிய வதியார் ; நகைப்பைத்தியத்தில் நாட்டங்கொள்ளாதவர்.

'மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.'

என்னும் வள்ளுவர் மொழிக்கு நல்ல இலக்கியமாய்த் திகழ்ந்தவர் ; தாம் பயந்த செல்வர் செல்வியரிடம் தணியாக் காதலுடையவர் ; பாக்கியம்மாள் என்ற தம் பெயருக்கேற்ப, எங்கள் குடும்பத்தின் 'பாக்கியமாய்' விளங்கியவர் ; கல்விகல்லாதவராயினும், இயற்கையறிவும் ஏற்றமார் இயல்பும் உடையவர் ; சுற்றந்தழுவும் சுகிர்த குணமுடையவர் ; ஈன்று புறந்தருதலில் ஏற்றம் மிக்கவர் ; தொண்ணூறாண்டு நாங்கள் எண்ணும் வகை வாழ்ந்து, கணவர் பிரிவிற்காற்றாது ஐந்து திங்களுக்குப்பின் அமர வாழ்வு எய்தியவர்.

'ஈன்று வளர்த்த தாய்தந்தைக்
  கெவரே கைம்மா றியற்றிடுவார் ?
ஆன்ற மதலை நூறுவய
  தளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள்
  முற்றும் அளித்து முறைமுறையே
ஏன்ற வழிபா டியற்றிடினும்
  ஒருநாள் வளத்தற் கியையாதே.'

என்னும் வித்தகர் வாக்கை எண்ணியெண்ணி இதயங் குழைகின்றேன் !

என் அம்மானுர் தம் தமக்கையாராகிய என் அன்னை யாரிடம் அன்பும் அடக்கமும் உடையவர்; பின்னுளில் என்னலங் கண்டு, 'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினனே!' எனப் பெரிதும் கவன்றவர். என் அன்னையார்க்குப் பின்னுளில் அவர் வாங்கி அளித்த இல்லமே இன்று சில திருத்தங்கள் செய்யப்பெற்று எங்கள் குடும்பத்திற்கு நிழல் தந்து திகழ்கிறது. அவர் செய்த இந்த நன்றியை நான் இன்றும் பாராட்டி மகிழ்கிறேன்!

இன்று வாழும் என் தமையன்மார் இருவருள் மூத்தவர் மே. வீ. குப்புசாமிப் பிள்ளை என்பவர். இவர் கவலையற்ற வாழ்க்கையர். இவருக்குரிய மக்களுள் இன்று வாழ்பவர் மகளிர் இருவரும் புதல்வன் ஒருவனுமாவர். புதல்வன் உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புத்தேர்வுடன் அலுவலேற்று இனிது வாழ்கிருன். என் இளைய தமையனுர் மே. வீ. பெருமாள் பிள்ளை என்பவர். இவர், 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல் உற்றுழித் தீராத' உயர்பண்பினராய்க் குடி செய்து வாழ்பவர். இவர்க்குப் புதல்வர் ஐவர்; புதல்வி ஒரே செல்வி. புதல்வருள் மூத்தவர் இருவர், உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புடன் கல்வியை முடித்து, அலுவல்களேற்றுத் தொழிலாற்றி வருகின்றனர்; இளையவர் மூவர் முறையே M.A., B. SC., B. com.(Hons.)பட்டங்களைப் பெற்று, நல்ல பெயருடன் தொண்டாற்றி வருகின்றனர்.

1924-ஆம் ஆண்டு, செப்டெம்பர்த்திங்கள், 5-ஆம் நாள் எனக்குத் திருமணம் செய்வித்தனர். என் இளைய தமையனுர் இரண்டாம் மனைவியாரின் தங்கை திருமதி ஜானகியம்மாள் என் வாழ்க்கைத்துணைவியாய் அமைந்து மூன்று புதல்வர்க்கு அன்னையாய் விளங்கி, 1950-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 27-ஆம் நாள் மண்ணுலக

வாழ்வை நீத்தனள். வாழ்க்கைத் துணைவியின் பிரிவு மனத்தைப் பெரிதும் வருத்துகின்றது!

என் புதல்வர் மூவருள் முதல்வன் செல்வன் மே. வே. சீனிவாசன், லயோலா கல்லூரியில் முதலாண்டு கற்று, குடும்ப இடமாற்றம் காரணமாகக் கற்பதை விட்டு, அலுவலேற்றனன். என் மனைவியின் மறைவிற்குப் பின் ஐந்து திங்கள் கழித்துப் புதல்வனுக்கு என் ஒன்று விட்ட அம்மான் மகள் செல்வி சரோஜனி தேவி என்னும் நங்கையை மணமுடித்தேன். செல்வியின் சிறந்த பண்பினால் இல்லறம் இனிது நடைபெற்று வருகிறது. இளைய மைந்தன் செல்வன் மே. வே. சக்கரவர்த்தி, கல்லூரிப் படிப்பை முடித்து, B. A., (Hons.) பட்டம் பெற்று, ஆசிரியத் தொண்டேற்றுள்ளனன். மூன்றும் மைந்தன் மே. வே. கிருஷ்ணமூர்த்தி இரண்டாண்டு நிறைவதற்குள் இறையடி எய்தினன்.

என் தங்கை திருமதி ஆண்டாளம்மாள் மூன்று புதல்வியருடனும் இரு புதல்வருடனும் இனிது வாழ்கின்றது கண்டு மகிழ்கின்றேன்! தங்கையின் மூத்த புதல்வன் B.A. பட்டம் பெற்று அலுவலில் அமர்ந்து தொண்டாற்றி வருகிறான்; இளைய புதல்வன் உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் தேறியுள்ளனன். தங்கையின் இரு புதல்வியர் என் இளைய தமையனார் மைந்தருள் இருவருக்கு வாழ்க்கைத் துணைவியராய் அமைந்து, இனிது வாழ்ந்து வருகின்றனர்.

என் குடி தழைக்கத் தோன்றிய மாண்புடை மைந்தரும் மகளிரும் நீடு வாழ்ந்து நிறைபுகழ் எய்தத் திருவருள் சுரக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடிமலர்களை மனமொழிமெய்களாற் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேன்!



கச்சியம்பதியில் ஆசிரியரிடம் தமிழ் பயிலத் தொடங்கிய மாணவ மாணவியர்

8. **கச்சியம்பதி வாழ்க்கை :**

உலகப் பெரும்போரால் ஏற்பட்ட மகத்தான மாற்றங்கள் பல. அவற்றுள் எனக்கு நேர்ந்த பதி பெயர் மாற்றமும் ஒன்று. போர்க்குழப்பத்தை முட்னிட்டுக் குடி பெயர்ந்த என் குடும்பத்திற்குக் கச்சியம்பதி புகலிடமாயிற்று. எனது அன்புக்குரிய காவியப் பிரசங்க இரத்திநகரம் **தி. சு. கண்ணபிரான் பிள்ளையவர்கள்** அழைப்பிற்கிணங்கி என் தமையன்மார் தங்கையார் குடும்பத்துடன் கச்சியம்பதி அடைந்தேன். என் குலப் பெருமக்கள்—வி. கண்ணப்பிள்ளை உள்ளிட்ட அன்பர்கள்—அளவில்லாத மகிழ்ச்சியுடன் என்னை வரவேற்று, எனது இருப்பிற்கு அன்று போலவே இன்று வரையில் ஆவன செய்து வருகின்றார்கள். அவர்களது அன்புடைமையை யான் என்றும் மறவேன்.

கச்சியம்பதிப் பெருமக்கள் காட்டி வரும் கனிவும் அன்புமே என் குடும்பத்தை மட்டும் இங்கு நிலைபெறச் செய்துவிட்டன. என்னிடம் தமிழ் பயிலத் தொடங்கிய மாணவர் சிலர், கருத்துடன் பயின்று, வித்துவான் பட்டமும் பெற்று எனக்கு ஏற்றமளித்து வாழ்கின்றனர். அவருள் பெண்பாலாரும் சிலர். மாணவ மாணவியர் பலரும் என்னிடம் சீரிய அன்பும் பெருமதிப்புங்கொண்டு என்னை மகிழ்விக்கின்றனர். அவர்தம் கலை, நலங்கனிந்து ஓங்கி, எதிர் காலத்திலும் எனது பெயரை நிலை நிறுத்தும் என்பது உறுதி.

இந்தப் பண்டைப் பெரும்பதியில் வாழும் சமணப் பெருமக்களுள் சிலர், என் உழுவலன்பர் ஜீவபந்து ஸ்ரீ பாலர் அவர்களுடன் வந்து, என்னைக் கண்டு, சீவக சிந்தாமணி என்னும் தமிழ்ப்பெருங்காப்பியச் சொற்பொழிவாற்றித் தம்மை மகிழ்விக்க வேண்டு

மெனப் பணித்தனர். தன்னிகரில்லாத் தனிப்பெருங் காப்பியத்தின் பெருமையை என் அறிவின் சிறுமை மாசுறச் செய்யுமே என்று யான் அஞ்சினேன். ஆயி னும், அன்பரின் வற்புறுத்தலே அத்திருப்பணியை அஞ் சாது மேற்கொள்ளத் தூண்டியது. ஆதலின், கச்சியம் பதி ஜைனத் தமிழ்க் கழகச் சார்பில் ஞாயிறுதோறும் சொற்பொழிவாற்றி, மூன்று ஆண்டுகளில் அதனை ஒரு வாறு நிறைவேற்றி மகிழ்ந்தேன். எனது தொண்டினைத் தகுமுறையிற் பாராட்டக்கருதிய கழக அன்பர்களும் கழகச் செயலாளர் சுயம்பு நயினரவர்களும் சிந்தா மணிச் சொற்பொழிவு நினைவு மலர் ஒன்றைக் கண்கவர் வனப்புடனும் அறிஞர் பலர் எழுதி உதவிய கருதரும் பொருள் பொதிந்த கட்டுரைகளுடனும் வெளியிட்ட துடன் சிறந்த முறையிற் பாராட்டு விழாவும் நடப்பித்து, இவ்வாழ்க்கை நினைவுகளை எழுதக் கருவியாய் இலங்கும் விலை மிக்க 'பார்க்கர் பேனா'வையும் புத்தாடைகளையும் பரிசாக வழங்கி மகிழ்ந்தனர். அவர்கள் பாராட்டை என் மனம் இன்றும் பாராட்டுகின்றது! சமணப் பேரறிஞர் திருத்தக்க தேவர் புகழொளியால் எனது சிற் றறிவும் இப்பதிக்கண் ஒளிவிட்டுத் திகழலாயிற்று. வாழ்க அவர் தந்த வான்புகழ்த் தமிழ்ச்செல்வமென வாழ்த்து கிறேன்!

சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலருக்கு 'நன் மொழி' என்னும் பொன்மொழிக் கட்டுரை வழங்கிய தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் 'வகுப்பை நடாத் திய மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு எனது வாழ்த்து உரியதாக! அவரைச் 'சிந்தாமணிச்செல்வர் வேணுகோபாலப் பிள்ளை' எனத் தமிழ் நாடு இனி வழங்குவதாக!' என அக்கட்டுரையிற்



புரசைக் கம்பர் கழக ஆண்டு விழாவில் ஆசிரியர் ; குடையுடன் பேராசிரியர் கா. ர. கோ.

குறிப்பிட்டதைப் போற்றி அறிஞர் அங்ஙனமே அடை மொழி புணர்த்தி என் பெயரை வழங்கி வருகின்றனர்.

அப்பாராட்டுப் பெருவிழாவில் அங்குரித்ததே எனது மணி விழா முயற்சி. என் உழுவலன்பரும் முத்தமிழ் அச்சக உரிமையாளருமாகிய உயர்திரு. S. காளப்ப முதலி யாரவர்கள், அறிஞர்கள் குழுமியிருந்த அப்பெருவிழா வில், எனது மணி விழாக் காண விழையும் தம் கருத்தை வெளியிட்டார். அறிஞர் பண்பாட்டு உள்ளமும் அவர் கருத்திற் பங்கு கொண்டது. அதன் செவ்விய பயனே இன்று மணி விழாவாய் மலர்ந்து இன்பக் காட்சியை எய்துவிக்கின்றது! இச்சீரிய செயல்,

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.'

என்னும் திருவள்ளுவரது தெய்வத் திருமொழியை நினைந்து வியக்கச் செய்கின்றது!

கச்சியம்பதிப் பெருமக்களும் ஏனைய என் உழுவ லன்பர்களும் இம்மணி விழாவினைத் தங்கள் அணி விழா வெனவே கருதி, மனமொழி மெய்களாலும் பொருளா லும் இவ்விழாவினை மாண்புறு பெருவிழாவாகத் திகழச் செய்துவிட்டார்கள். அனைவர்க்கும் எனது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவிப்பதன்றி, யான் வேறு என் செய வல்லேன்!

'வான்செய்த நன்றிக்கு வையகமென்
செய்யும்? அதை மறந்தி டாதே!'

9. தொடர்பும் தொண்டும்:

சென்னையில் புரசைப்பாக்கத்தில் நடைபெற்று வந்த கம்பர் கழகத்தில் என் நல்லாசிரியரும் யானும் என் நண் பர் சிலரும் தொடர்பு கொண்டு தமிழ்த்தொண்டு புரிந்து

வந்தோம். அதன் தொடர்பு திரு. N. R. சடகோப முதலியார் உள்ளிட்ட பல அரிய மாணவர்களின் அன்பையும், காலஞ்சென்ற முன்னாள் மேயரும் ஷெரீப்புமாயிருந்த உயர்திரு. S. இராமசாமி நாயுடு அவர்களையுள்ளிட்ட பல நண்பரையும் நான் பெறச் செய்தது.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மகாங்கம் ஆண்டுதோறும் சமயப் பேரறிஞர் பலர் ஆற்றி வரும் சொற்பொழிவு நிரலில் எனது சொற்பொழிவும் அமையுமாறு செய்து, பல்லாண்டுகளாக என்னைச்சிறப்பித்து வருவதுடன், அறிஞர் பலர்க்கும் சால்வையளித்துப் பாராட்டிய போது எனக்கும் அப்பாராட்டைச் செய்து, ஓராண்டு மாநாட்டு விழாவிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பையும் எனக்கு அளித்தது. மகாசங்கத்தின் வளர்ப்பாளரும் துணைத்தலைவருமான நல்லறிஞர் உயர்திரு. K. வேங்கடசாமி நாயுடு அவர்களின் தகைசால் நட்பும் என்னை மகிழ்வித்து வருகிறது.

யான் கச்சியம்பதியை அடைந்த போது முதலில் என் மனத்தைக் கவர்ந்தது ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் கண் அமைந்துள்ள சிறந்த நூல் நிலையமே. உயர்திரு. D. S. பெருமாள் முதலியார் என்னும் பேரறிஞர் அருங்கலை விநோதராய்த் திகழ்ந்தவர் என்பதை அவரால் தொகுக்கப்பெற்று நூல் நிலையத்தை அலங்கரித்து வரும் பல்லாயிரக்கணக்கான ஆங்கில நூல்களும் நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களும் விளக்கும். அவ்வறிஞர் பெருமான்—அருள் கனிந்த வள்ளல்—இப்பொழுது மடமும் நூல் நிலையமும் அமைந்துள்ள சீரிய கட்டடத்தையும் நூல்நிலையத்தையும் ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக்கு உரிமையாக்கித் தம் புகழ் நிறுவிச் சென்றார்.



காஞ்சி வைகுண்ட பெருமாள் சன்னதியில் ஆசிரியரும் அன்பர்களும்

நூலாராய்ச்சியே வாழ்க்கைப் பயனாகக் கொண்டுள்ள யான், அந்நூல் நிலையத்திலுள்ள நூல்களைப் பெரிதும் பயன்படுத்தி வரலானேன். ஒரு நாள் இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த துறவியர் பெருமானும் தமிழ் மகள் தந்த தவப்பெரும்புதல்வருமாகிய பேராசிரியர் விபுலாநந்த அடிகளார் அம் மடத்திற்கு எழுந்தருளிச் சொற்பொழிவாற்றினார்கள். அச்சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த யான் அடிகளாருக்கு நன்றி நவிலும் நற்பேற்றைப் பெற்றேன்; அடிகளாரது தகவுடைமையையும் தமிழ்ப்பெரும்புலமையையும் அங்கில நூலாராய்ச்சியையும் அவையினருக்கு விளக்கி நன்றி கூறினேன்; அடிகளார் யான் இயற்றிய தஞ்சைவாணன் கோவை விளக்கக் குறிப்புரையைப் பெரிதும் பாராட்டி மதிப்புரை வழங்கிய புலவர் பெருமக்களுள் ஒருவராதலின், கூட்டம் முடிந்த பின்னர் அதை அடிகளாருக்கு நினைவுறுத்தி என்னை அறிமுகம் செய்துகொண்டேன். அடிகளார் என் உருவத்தைக் கண்டு வியந்திருக்க வேண்டுமென்பது அவரடைந்த மெய்ப்பாட்டால் எனக்குப் புலனாயிற்று. அடிகளார் என்னை மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். இருவரும் ஒரு மணி நேரம் நூலாராய்ச்சியில் ஈடுபட்டோம். 'உமது தமிழ் அறிவு நாட்டிற்குப் பெரிதும் பயன்படுவதாக!' என அடிகளார் ஆசி வழங்கி, அப்பொழுது மடத்தின் அதிபராயிருந்த விஸ்வாம்பரானந்த அடிகளாரை அருகழைத்து, 'சுவாமி, இவர் சிறந்த தமிழறிஞர்; இவரது தொடர்பு நமது மடத்திற்கு இன்றியமையாதது. இவரைத் தகுந்த முறையில் நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்,' எனக் குறிப்பிட்டு, யானும் அன்று உடனிருந்து உணவு கொள்ள வேண்டுமெனப் பணித்தார்கள். அன்று முதல் இன்று வரை எனது தொண்டு மடத்தின் சார்பில் நடை

பெற்று வருவதை எண்ணி மகிழ்கின்றேன் ! மடத்தின் துறவியர் பெருமக்கள் தொடர்பு என் உளத்தைத் தூய் மைப்படுத்தி வருகிறது.

கச்சியம்பதியில் மருத்துவத்துறையிலும் பிற வகை களிலும் தொண்டாற்றி வரும் ஸ்ரீ நாராயண சேவாச்சிர மம் அனைவர் பாராட்டிற்கும் உரியதாய்த் திகழ்கின்றது. அதன் தலைவர் தவத்திரு. ஆத்துமானந்த அடிகளார் வட மொழி வல்லுநர் ; கற்றாரிடம் மிகுந்த அன்புடையவர் ; குழந்தை உள்ளம் படைத்த குணசீலர் ; என்னிடம் பேரன்பு காட்டி என் மனத்தைக் கவர்ந்தவர் ; ஆச்சிர மத்தில் நடைபெறும் குரு பூசை முதலிய விழாக்களில் என்னை எவ்வகையிலேனும் தொடர்பு கொள்ளச் செய்து மகிழ்பவர். அத்தொடர்பு காரணமாகப் பேரறிஞர் பெருஞ் செல்வர் பலர் அரிய நட்பும் ஆதரவும் பாராட்டும் எனக்கு உரியவாயின ; கச்சியம்பதிப் பெருமக்கள் மதிப்பிற்கும் நான் உரியவனுயினேன் ; என் குடும்பத்தினர் பலர் அடி களாரது அருள் கனிந்த மருத்துவத்தால் தீரா நோய்கள் தீரப்பெற்று மகிழ்ந்தனர். அடிகளாரது அருளுருவம் என் றும் என் சிந்தை விட்டகலாது ; மடத்தின் தொடர் புடைய அனைவரும் என் சிந்தை விட்டகலார்.

கல்வியிற் சொல்லரும்புகழ் பெற்ற கச்சியம்பதி இன்றும் நல்லறிஞர் பலராற்சிறப்புற்று விளங்குகின்றது. அத்தகைய கலைச்செல்வர் பலரும் என்னிடத்து அளப் பரிய அன்புடையராயிருப்பதை இன்புடன் எண்ணி மகிழ் கின்றேன் !

முத்தமிழ் வளர்க்கும் சித்தம் வாய்ந்தவர் என் உழு வலன்பர் திரு. S. காளப்ப முதலியார். அது காரணமாக அவர் தாம் நடத்தி வந்த அச்சகப் பெயரை 'முத்தமிழ் அச்சகம்' என மாற்றி அமைத்துத் தமிழ்த் தொண்டிற்

பெரிதும் ஈடுபட்டு வருகின்றார். தமிழறிஞர் மாட்டு அவர் காட்டும் அன்பும் பணிவும் ஆதரவும் அளப்பரியன! அவரது நன்முயற்சியே கச்சித் தமிழ்க் கழகம் அனைவரும் மெச்சுதற்குரிய தமிழ்த் தொண்டாற்றி வருவதற்குக் காரணம். அவர் பலரும் விரும்பும் பண்புடையவர். அவரது தொடர்பால் யான் அடைந்த நலங்கள் பல. அவரது வாழ்வு சிறந்து நாட்டுக்கு நலம் விளைப்பதாகுக!

என் மாணவர்கள் மாணவியர்கள், ஈன்ற மக்களைக் காட்டிலும் ஆன்ற அன்புடையவர்களாய் என் மனத்தை மகிழ்விக்கின்றார்கள். அவருள் நிழல் போல என்னுடன் தொடர்ந்து பழகியவர் திரு. K. A. பாலசுப்பிரமணிய முதலியார். அவர் வித்துவான் பட்டம் பெற்ற பின் அலுவல் காரணமாக ஏற்பட்ட இடமாற்றத்தால் தொடர்ந்து என்னுடன் பழக இயலாதவராயினர். அன்பர் திரு. P. N. இராமசந்திர ஐயரவர்கள், வித்துவான் பட்டம் பெற்ற பின்னர்க் கச்சியம்பதிச் சோமசுந்தர கன்னியா வித்தியாலயத்தில் தமிழாசிரியப் பதவியேற்றுத் தொண்டாற்றி வருகின்றார். நாடோறும் இவர் சந்திப்பு எனக்கு மகிழ்ச்சியளித்து வருகின்றது.

என்னிடம் பள்ளிகளிலும் தனித்தும் தமிழ் பயின்ற மாணவர்கள் காட்டும் அன்பும் பணிவும் என்னைப் பெரிதும் மகிழ்வித்து வருகின்றன. அவர்கள் வாழ்வு செழிக்கத் திருவருள் புரியுமாறு இறைவனை வேண்டுகிறேன்!

10. கொள்கையும் வாழ்வும்:

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'

உண்மைதான் இக்கூற்று என்பதை எனது வாழ்க்கை எனக்கு அறிவுறுத்தி வருகின்றது.

'பயனெதிர் நோக்காது பணிசெயல் நின்கடன்.'

என்பது கீதையின் போதனை. யான் இந்நல்லுரையைப் பெரிதும் பின் பற்றி நடக்கவே முயன்று வருகின்றேன்.

திருவருளில் யான் பெரிதும் நம்பிக்கை உடையேன்; எச்செயலைச் செய்ய நேரினும், 'இது திருவருளியக்கம் போலும் !' எனக் கருதியே செய்து வருகின்றேன். ஆயினும், நற்செயல்களைச் செய்யத் தூண்டுவதே திருவருட் செயல் என்பதும் தீச்செயல் செய்யத்தூண்டுவது முன் செய்த தீவினைப்பயன் என்பதும் என் சிந்தை விட்டகலாத எண்ணங்கள். எனவே, பெரிதும் நற்செயல்கள் எனத் தோன்றுவனவற்றையே செய்ய முயன்று வருகின்றேன். பிறர் புகழ்ச்சியால் செருக்கோ, இகழ்ச்சியால் மனக்கவற்சியோ யான் அடைவதில்லை. ஏனெனில், இரு வினைப் பயனே புகழ்ச்சியும் இகழ்ச்சியும் என்பதை நான் நம்புகிறேன். எனவே, 'தீதொழிய நன்மை செயல்,' என்னும் திருவாக்கினைத் துணையாகக் கொண்டே எஞ்சிய வாழ்க்கையை இனிது கழிக்க முயல்வேன். திருவருள் துணை நின்று நடத்துவதாகுக !

'யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே ; முனிவின்
இன்னா தென்றலும் இலமே ; மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ; ஆகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.'

—கணியன் பூங்குன்றனார்

நான் கண்ட நல்லறிஞர்

திரு. K. சோமசுந்தரம் செட்டியாரவர்கள், B.A.

[Retd. Asst. Secretary to Government of Madras.]

திருமிகும் இன்றைய மணி விழாவிற்கு மாமணியாய் விளங்கும் புலவர் பெருமான் உயர்திரு. மே. வீ. வேணு

கோபாலப் பிள்ளை அவர்கள் இற்றைக்கு முப்பாண்டுகளுக்கு மேலாக எனக்கு நண்பராயுள்ளவர்: சென்னைப் புரசைப்பாக்கத்தில் எனது இல்லத்திற்கு ஆறேழு இல்லங்களுக்கப்பால் ஓரணிமிகுமில்லத்தில் வாழ்ந்து வந்தவர்; அப்போது மாணவர் நிலையில் இருந்தவர். தமிழ்த் துறையில் படியுமுன் இவர் திவான் பகதூர் T. ரங்காசாரியார் என்னும் பெயர் பெற்ற வழக்கறிஞரிடத்தில் குற்றேவலராய் இருந்தார். அந்தப் பழக்கத்திலேயே வளர்ந்து வழக்குத் தாள்களையெல்லாம் பார்த்துப் பார்த்துத் தம்மிடத்தில் அப்போது சிறிதளவாயிருந்த ஆங்கில அறிவைப் பெரிதும் பெருக்கிப் பேரறிவு அடைந்தார்; அச்செழுத்துப் பொறிக்கும் (Type-writing) பழக்கமும் அதிகம் கைவரப்பெற்றார். இவற்றினூடே தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தக்க சான்றோர்பால் பயின்றும் வந்தார்: தமிழ் வித்துவான் தேர்விலும் நலமுற வெற்றி பெற்றார். இவ்வளவோடு நில்லாமல் ஆங்கிலம் தமிழ்த் துறைகளில் மிகமிகப் பயின்று மேம்பாடுடையரானார். ஆங்கிலத் துறையில் கலாநிலைய ஆசிரியராயிருந்த காலஞ்சென்ற உயர்திரு. T. N. சேஷாசலம் ஐயர், B.A., B.L., அவர்களும், தமிழ்த் துறையில் இலக்கண சிகாமணியாகிய உயர்திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களும் நம் பிள்ளை அவர்

களுக்கு உற்ற ஆசிரியர்களாய் இருந்தார்கள். 'குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும்' என்னும் பழமொழிக்கேற்பப் பிள்ளையவர்கள் மேற்கூறிய மேம்பாடுள்ள ஆசிரியர்களிடம் பயின்றவர். அந்த ஆசிரியர்கள் வெறும்படிப்பாளிகள் மட்டுமன்றி, நல்ல குண சீலர்களுமாவார்கள்; எனவே, நம் பிள்ளையவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தது மாத்திரமல்லாது சிறந்த கருத்துக்களோடு நல்ல முறையில் உலகு ஒழுக்குத்திறனும் சிறப்புறச் சொல்லாமற்சொல்லிக் கற்பித்தவர்கள். இன்று அவற்றிற்கு ஏற்பவே நந்தம் பிள்ளையவர்களும் தக்க பேராசிரியராயும் தகை சான்ற குணசீலராயும் இருக்கக் காண்கின்றோம்.

பிள்ளையவர்களுடைய இளமைப்பருவ வாழ்க்கை எளிய வாழ்க்கையே; ஆயினும், தகை சான்ற வாழ்க்கையே. இவர்களுடைய இருமுது குரவரும் நல்ல பண்பாடுடையவர். அவர்களைப் போன்றவர்களே பிள்ளையவர்களுடைய ஆண் பெண் உடன் பிறப்பாளர்களும். இத்தகைய குடும்பத்தில் நடுநாயக மணியாய் விளங்குகிறார் நந்தம் புலவர் பெருமான் வேணுகோபாலப் பிள்ளையவர்கள். அறிவுடையொருவனை அரசனும் விரும்பும் என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க, எல்லாரும் இவரை விரும்புகின்றனர். இவர் தம் சுற்றத்தாரும் ஏனையோரும் ஒரு மிக்கப் போற்றும் பெற்றியராயினர்.

"பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்."

என்பது புறநானூறு.

இலக்கியத்துறையில் மட்டும் அல்லாது சமயத்துறையிலும் நன்கு பயின்றவர்கள் நம் பிள்ளையவர்கள்; எம்பிரான் பத்தியில் ஈடுபட்டவர்கள்; பல வைணவ மாநாடுகளில் மிகச் சிறக்கச் சொற்பொழிவுகள் ஆற்றியவர்கள்.

பிள்ளையவர்களுக்குத் தமிழ்க்கல்வி நிரம்புங்காலத்து உற்ற நண்பர்களாய் இருந்த மூவரைக் குறிப்பிடாமற் போதலாகாது. அவர்கள் புலவர் வே. த. அருச்சுன முதலியார்,[1] புலவர் கு. மதுரை முதலியார்,[2] காலஞ்சென்ற மங்கலங்கிழார் குப்புசாமி முதலியார்[3] என்பவர்கள். இந்நால்வரும் விடுமுறை நாட்களில் கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள் வீட்டிற்கு இலக்கணம் பயில விரைவார்கள். இவர்கள் விரைவதைக் காண எனக்குப் பெருநகைப்பு உண்டாகும். இவர்கள் எல்லோரும் எனக்கு நண்பர்களே. ஆனல், இவர்களோடு யானும் ஓடாமற் போய்விட்டேன்! அதன் விளைவுதான் யான் வித்துவான் படிப்புப் படிக்க வாய்ப்புப்பெறுமற்போய்விட்டது!

பிள்ளையவர்கள் ஆசிரியத் துறையில் அமர்ந்து மிகு விரைவில் ஆசிரிய உலகத்தில் மேம்பட்டு விளங்கினர்கள். தமிழ் உலகத்தில் இவர் பேர் காட்டுத்தீப்போல எங்கனும் பரவியது. சொற்பொழிவாற்ற நானா பக்கங்களினின்றும் அழைப்புக்கள் வரலாயின. ஆகவே, இவரது பேச்சுத் தமிழ் மணம் எங்கும் கமழ்ந்தது; கேட்பவர்க்கெல்லாம் இன்பமளித்தது; எல்லோரையும் தமிழ்த்துறையில் ஈடுபடச் செய்தது. மாணவரும் மற்றவரும் இவரிடம் தமிழ் கற்க முந்தினர். இவரது பள்ளி ஆசிரியர் வாழ்க்கையிலேயே, தமிழ்ப் புத்தகப் பதிப்பாளர்கள்

---

1. பெரம்பூர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர். 2. சென்னைக் கலைக்களஞ்சியத்தில் பணியாற்றுபவர். 3. பிரம்பூர்ப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்தவர்.

இவரது இலக்கணத்திறந்தெரிந்து, தங்கள் நூல்களின் அச்சுத்தாள்களை இவருடைய பார்வைக்கு அனுப்ப லானார்கள். இந்த அச்சுத்தாள்களைத் திருத்துவது நாளடைவில் பெரிய வேலையாய்ப் போய்விட்டது. எழுத்தெண்ணி, நுணுகிப்பார்த்து, பிழைகளைத் திருத்தல் இவர் ஒருவருக்கே சாலும் போலும்! இந்தத் திறம் தனிப் பெருஞ்சிறப்பை உண்டாக்கியது. அச்சுத்தாள்கள் இவரது இல்லத்தில் போர்போராய்க் குவிய ஆரம்பித்தன. அவைகளையெல்லாம் பார்வையிட முடியாது, ஒரு சில வற்றை ஒதுக்கவும் நேர்ந்தது. 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்,' என்னும் பழமொழிக்கு இணங்க, இவர் வீட்டுச் சிறுர்களும் பிழை திருத்துவதில் நிபுணர் களாகிவிட்டார்கள். ஒவ்வொரு பிள்ளையும் தமிழ் இலக்கணத் தேறலை மாந்தியவர். நாளடைவில் இவர்தம் இளைய புதல்வர் திரு. மே. வே. சக்கரவர்த்தி, பி. ஏ. (ஹானர்ஸ்), தந்தையாரின் அடிச்சுவடு பற்றித் தமிழா சிரியராய் இருக்கின்றூர். இவர் அடையாற்றிலிருக்கும் பெஸன்டு மெமோரியல் உயர்நிலைப்பள்ளியில் இருக்கின் றூர். இந்தப் புதல்வருக்கு முன்னுல் பிள்ளையவர் களுடைய தமையனூர் திரு. பெருமாள் பிள்ளை அவர்கள் புத்திரர்களுள் மூவர், M.A., B. SC., B. com. (HONS.) பட்டம் பெற்றூர்கள். அவர்கள் முறையே மே. பெ. கண் ணப்பர், M.A., (Superintendent, Accountant General's Office), மே. பெ. தருமன், B. SC., B.T., (Assistant, Sir M. C. T. Muthiah Chettiar's High School, Madras), மே. பெ. வாசுதேவன், B. com. (HONS.) (Auditor, Accountant General's Office) இவரைப் போன்றே நல்ல கல்வி பயின்று மேம் பட்டிருக்கின்றூர்கள். இவ்வாறு இப்பிள்ளைகளெல்

லோரும் படிக்க நேர்ந்தது நம்மணி விழாப் பிள்ளையவர்க ளாலேதான். பிள்ளையவர்கள் தாமும் உயர்ந்து, தம் குடியையும் உயர்த்தியவர். 'தான் வாழ, தன் குடி வாழ' என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாய் நம் பிள்ளையவர் கள் விளங்குகின்றார்கள். உழைப்பினால் உயர்ந்த பெரி யார் என்பது இவர்களுக்குத் தகும்.

'மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.'

'ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.'

என்னும் குறட்பா இலக்கணங்களுக்கு இலக்கியமாய் விளங்குகின்றார் நம் பிள்ளையவர்கள்.

ஆனால், இவர் இவ்வளவு ஏற்றம் பெற்றும் இன்றும் குடும்ப வாழ்க்கையிலே தம் மூத்த உடன் பிறப்பாளர் களுக்கு அடங்கியே நடப்பர். இவ்வளவு ஒற்றுமைப்பாடு ஒரு குடும்பத்தில் இருப்பின், அக்குடும்பம் ஒக்கம் அடை யுமேயொழிய, தாக்கமடையாது; செழித்து வளரும். இந்த உண்மையை இவர்தம் குடும்பத்தில் காணலாம்.

இவர்தம் இல்லக்கிழத்தியாரும் இவருக்கு ஏற்ற மாண்புடைய வாழ்க்கைத் துணைவியராய் இருந்தார். அவர் இப்போது இல்லாமை பெரிதும் வருந்தற்குரியது!

"அன்பின் வழிய துயிர்நிலை," என்பது அவ்வம்மை யார் மாட்டுக் காட்சியளித்தது. மனைத்தக்க மாண்புடை யவராய் இருந்ததனால் பிள்ளையவர்கள் இல்லத்தில் இல்லா தது ஒன்றும் இல்லை; எல்லாம் நிறைந்திருந்தன. அம் மையார் விருந்தோம்பலில் தலை சிறந்தவர். எனவே, அவர் இல்லத்தில் அகனமர்ந்து செய்யாள் உறைந்தாள். ஒரு காலத்து யான் காஞ்சிபுரத்தில் அவர் இல்லத்தில் தங்க நேர்ந்தது. இரவு சாப்பாட்டுக்கு அமர்ந்த பொழுது அவர்

விருந்தோம்பும் இயல்பினைக் காண நேர்ந்தது. அவர் இட்ட கறியும் சோறும் 'போதும், போதும்' என்று பல முறை இடையிடையே சொல்லச் செய்தன. அன்பு கலந்த உணவு, அமிர்தமயமாய் இருந்தது. அப்போது அவர்களை என்னுள்ளே மனமார வாழ்த்தினேன். அன்றிரவு என் மனைவியும் பெரிய மகளுங்கூட அம்மையாருடைய சிறந்த குணநலன்களைக் கண்டு பெரிதும் உவந்தார்கள். விடியற்காலையில் சென்னைக்குத் திரும்ப வேண்டியிருந்தது. பிள்ளையவர்களுடைய மனைவியாரும் மக்களுங்கூட அப்பொழுது சென்னைக்கு வர நேர்ந்தது. காலை ஆறு மணிக்கு வண்டி புறப்பாடு. வண்டி நிலையத்திற்கு வரச் சிறிது நேரம் ஆகும். ஆகையால், அவசரப்பட வேண்டியிருந்தது. யாங்கள் சிற்றுண்டி கொள்ளாமலும் போகக்கூடாது என்பது அவர்தம் நினைவு. சிற்றுணக்கொண்டு நேரத்திற்குப் புறப்பட்டுவிட வேண்டுமே என்கிற எண்ணத்தினால் பிள்ளையவர்கள் அம்மையாரை 'ஆயிற்றா? ஆயிற்றா?' என்று துரிதப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அக்குரல் இப்பொழுதுதான் கேட்பது போன்றிருக்கின்றது. அம்மையாரோ, வாய்திறவாமல், கருமமே கண்ணராய், எல்லாவற்றையும் நன்கு நிறைவேற்றி, எங்களுடன் வந்தார்கள். அப்பொழுதுதான் கண்டேன், அம்மையாருடைய புவிப்பொறை போன்ற பொறுமையை. அத்தகைய மாண்புடையாரை எவர்தாம் நினையாமல் இருப்பர்? அவர் சிறிது காலத்திற்கு முன் காலமானார். அவருடைய இறுதிக்கடன் நாளன்று இரவு பலரும் அம்மையார் குணநலத்தினைப் பாராட்டிப் பேசினர். அன்றுதான் பிள்ளையவர்கள் தம் மனைவியார்மாட்டு வைத்திருந்த மாறிலா அன்பின் திறத்தை யான் காண நேர்ந்தது! பதில் கூறுமுகத்தான் பிள்ளையவர்கள் அழுத

கண்ணீரோடு நாத்தழுதழுக்கப் பேசினார்கள். பெரிதும் பாவம் அம்மையாருடைய பிரிவு !

புண்ணியசீலராகிய நம் நண்பர், 1942-ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது காரணமாக, சென்னையை விட்டு நீங்கிக் காஞ்சீபுரத்தையடைந்தார் ;

“ மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும் ; — மலிதேரான்
கச்சி படுவ கடல்படா ; கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.''

என்று சிறக்கக் கூறப்பட்ட காஞ்சீபுரத்தவர் ஆனார், நம் புரசைப்பாக்கத்தினராகிய பிள்ளையவர்கள். அங்கு இலக்கிய இலக்கணக் கடல்களும், சைவ, வைணவ, சமண, பௌத்த சமயக் கடல்களும் இவருக்கு ஏற்ற பெற்றி அறிமுகமாயின. அக்கடல்களிடையே சிறந்த மணியென இவரும் திகழ்கிறார். இவர்தம் சேர்க்கையாலே ஆண்டுத் தமிழ் வகுப்புக்கள் நடப்பதற்கு வாய்ப்பு உண்டாயிற்று ; சென்னையில் தாம் தந்த தமிழ் விருந்தினைக் கச்சியிலுள்ளாரும் துய்க்க நேர்ந்தது. ‘ யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ’ என்னும் இலக்கியத்திற்கு இலக்கானார் பிள்ளையவர்கள்.

ஐம்பெருங்காப்பியங்களுள் மணி போன்றது சிந்தாமணி. அதனை விளக்கிச் சொற்பொழிவாற்றிச் ‘ சிந்தாமணிச் செல்வர் ’ எனப் பெயரும் படைத்தார் ; சிறந்த முறையில் பாராட்டவும் பெற்றார்.

பிள்ளையவர்கள் உடல் நல வாய்ப்பைக்காட்டிலும் உடை நலம் மிக வாய்ந்தவர். இவர் இளம்பருவத்திலேயே சரிகைத் தலைப்பாகை அணிவார் ; தமிழ் நல்லாசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்களின் உடைநல அழகினைப் பின்பற்றினார். ஆயினும், அடக்கமே இவரது அணிகலம்.

" தன்னைத்தன் நெஞ்சங் கரியாகத் தானடங்கிற்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை."

எனக் கூறும் நாலடி. இதிற்காணும் பண்பு இவரிடத்தில் மாணக்காணலாம்.

காஞ்சீபுரத்திலும் ஓர் இல்லம் அமைக்கும் அவசியம் ஏற்பட்டு, வீடு ஒன்றை வாங்கினார். இந்த ஈரேழு ஆண்டுகளுக்குள் பற்பல நூல்களைப் பதிப்பித்தார். இவர் நூல்கள் இலக்கண வரம்பு பிறழாதவை. இவர் நூல்களைப் படிப்பார்க்கு இலக்கண அறிவு தானாகவே அமையும். இவர் வித்துவான் வகுப்பிற்கு உரிய மாணவர்களுக்கு நேரும் இடர்ப்பாடுகளை அனுபவம்வாயிலாகத் தாமே நன்ருகக் கண்டவர். அவ்விடர்களைக் களைந்து, மாணவர்களுக்கு எளியவாம் வண்ணம் உரைகள் பல இலக்கியங்களுக்குத் தந்துள்ளார். மாணவர் உலகத்திற்கு நன்மை பயக்கும் இவரது நல்லெண்ணத்தையும் சீரிய மனப்பான்மையையும் அவ்வுரைகள் எடுத்துக்காட்டும். சிறப்பாகச் சொல்லுமிடத்துத் தஞ்சைவாணன் கோவை, அஷ்டப்பிரபந்தம் ஆகிய இவைகளுக்கு இவர் கண்டுள்ள உரைகளே இவரது கல்விக்குப் போதிய சான்று ஆகும் என்னலாம்.

நல்ல இலக்கண ஞானம் வாய்ந்தவர் ஆகையால், இவர்தம் வெறும்பேச்சுக்கூடப் புத்தகம் படிப்பது போல இருக்கும். பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும் என்பது போல, இவருடைய உறவினலே நண்பர்களுக்கும் பேச்சழகு வாய்க்கும். இவர்தம் சொற்பொழிவுகள் இலக்கிய இலக்கண வகையிலே மிகைதீர்ந்தனவாயும், சமயத்துறையில்—அதிலும் வைஷ்ணவ சமயத்துறையில்—அருமை பெருமையுடையனவாயும் நிலவுகின்றன. இவர் பெயருக்கு முதலில் இடும் எழுத்துக்கள் மே. வீ. என்பன குறிப்பது போன்று, இவர் மேலான மலர் ஆவார். இவர் ஒரு

தமிழ்ப்பூ. அது தமிழ் மணம் கமழும் ; தமிழ் ஒளி தரும் ; தமிழ்த்தேன் ஊறும்; தமிழ்ச்சுவை ததும்பும்; தமிழின்பமே தரும். இவர்தம் இனியவை கூறும் பண்பாடும் அடக்கமும் பொறையும் ஒப்புரவும் செவ்வி எளிமையும் மிகமிகப் பாராட்டத்தக்கன ! இத்தகைய பெரியார் நம் உள்ளத்தில் இன்றுபோலென்றும் இனிது உறைவாராக ! இவர் நீடூழி வாழ்க ! இவர் இல்லம் வளர்க ! இன்பத் தமிழ் ஓங்குக !

எங்கள் தந்தையார்

திரு. மே. பெ. கண்ணப்பர் அவர்கள், M.A.,

[Superintendent, A.G.'s Office Madras.]

'தோன்றிற் புகழொடு தோன்றுக : அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.'

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாகத் தமிழகத்தில் பிறந்து தமிழன்னையின் தவப்புதல்வர்களுள் ஒருவராய்த் திகழ்பவர்கள் மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள். இவர் இன்று தாம் தோன்றின ஆயர் குலத்திற்கேயன்றித் தமிழகம் முழுமைக்கும் ஒரு சிறப்பணிகலமாய்த் திகழ்கின்றார். இவர் எனக்கு உறவின் முறையால் சிறிய தந்தையாராயினும், தம் ஆதரவால் தாய்தந்தையரினும் மேம்பட்டவர். என்னுடைய கல்வி வளர்ச்சிக்கும் இன்றுள்ள நிலைக்கும் ஆதி கர்த்தாவாகிய இவருக்கு நான் என்றும் கடமைப் பட்டவன். இன்று வெளியாகும் மணி விழா மலரின் மூலமாக இவரைப் பற்றிய என் கருத்துகளையும் இவருக்கு நானும் எங்கள் குடும்பமும் எவ்வாறு கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் தெரிவிப்பதே இம்மகிழ்ச்சியுரையினை யான் எழுதுவதன் நோக்கம்.

இளமையில் செல்வவளம் நிரம்பப் பெருமையால் உயர்தரப் படிப்பைப் பெறத் தந்தையாரால் முடியவில்லை. ஆயினும், இவர் இளமையிலிருந்தே எதைச் செய்யினும் செம்மையுறச் செய்யும் திறன் படைத்துக் கல்வியில் பெரிதும் ஊக்கம் காண்பித்தார் என்று எங்கள் பாட்டனுர் அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறோம். பிறருடைய உதவி யின்றித் தம் உழைப்பு ஒன்றனையே பற்றுக்கோடாகக் கொண்டு முன்னுக்கு வந்தவர் ஒருவர் உளராஞல், அவர் எம் தந்தையார் அவர்களே. இவர் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்துகொண்டிருந்த காலத்திலும் தம் காலத்தை வீணுக்காது தம் கல்வியறிவைப் பெரிதும் வளர்த்து வந்தார். நாளடைவில் பேராசிரியர் கா. ர. கோ. என்னும் நல்லாசிரியரையடைந்து, அவர்பால் முறையாகத் தமிழ் கற்று, அவருடைய உதவியால் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்தார். சில ஆண்டுகளுக்குப் பின்பு சென்னைப் புரசை லூத்தரன் மிஷன் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்து தலைமைத் தமிழாசிரியராய்ச் சுமார் 18 ஆண்டுகள் பணியாற்றினுர். அது போழ்து அக்கலாசாலையைச் சார்ந்த பாதிரிமார் களால் நடத்தப் பெற்று வந்த குரு குழு மதக் கல்லூரியில் (Lutheran Theological College, Gurukul, Madras) இந்துமத சித்தாந்தப் பேராசிரியராயும் இருந்து பணியாற்றி வந்தார். பின்னர்த் தம் உடல் நலக் குறைவு காரணமாக 1938-ஆம் ஆண்டில் ஆசிரியர் வேலையை விட்டு விலகி, தமிழார்வம் உள்ளவர்க்குத் தம் வீட்டிலேயே தமிழ் கற்பித்தும், சிறந்த இலக்கிய இலக்கண நூல்களையும் பல் வேறு பாட புத்தகங்களையும் பதிப்பித்தும், அறிஞர் கூட்டங்களில் தமிழைப்பற்றியும் தமிழர் பெருமைகளைப் பற்றியும் பேசியும் தமிழன்னைக்குத் தொண்டு புரிந்து

வருவாராயினர். அன்று முதல் இன்று வரை தாம் மேற் கொண்டுள்ள தமிழ்த் தொண்டினைத் தளரா முயற்சியுட னும் சலியாத உழைப்புடனும் சிறந்த வெற்றியுடனும் புரிந்துகொண்டு வருகின்றார். இவர் இத்தகைய சீரிய பணியில் மேலும் மேலும் வெற்றி காணத் தமிழன்னை அருள் புரிய அவள் திருவடிகளைப் போற்றுகின்றேன்! நான் இவர்பால் கண்டுள்ள அருங்குணங்கள் சிலவற்றை இங்குக் குறிப்பிட விழைகின்றேன் :

எங்கள் தந்தையார் சிறந்த தெய்வபத்தி உடையவர். நாள்தோறும் காலையில் நீராடி, நெற்றியில் திருமண் அணிந்து, இறைவனைத் தியானம் செய்த பிறகுதான் தம் முடைய பிற வேலைகளைக் கவனிப்பார். இவர் தூய வைணவர்; ஆனால், பிற மதத்துவேஷம் இல்லாதவர். சென்னை லுத்தரன் மதக்கல்லூரியில் இந்து மத சித்தாந்தப் பேராசிரியராய் இருந்த காலத்தில் இவர் இந்து மத சித்தாந் தத்தையும் கிறிஸ்தவ மத சித்தாந்தத்தையும் ஒப்பிட்டுப் பல அரிய சொற்பொழிவுகளை அங்குள்ள ஜெர்மன் பேரறி வாளர் பலர் வியக்க ஆற்றியுள்ளார். இவர் சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கத்தின் நிரந்தர உறுப்பினராய்ப் பல வருஷங்களாய் இருந்து வருகிறார். சில ஆண்டு களுக்கு முன்பு இவருக்குச் சால்வை போர்த்தியும், வருடாந்தர மகாநாட்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தும் மகாசங்கம் இவரைக் கவுரவித்தது.

எம் தந்தையாரின் சீரிய குணங்களுள் ஒன்று குரு பத்தியாகும். தம் உயர்விற்குக் காரணகர்த்தர்களாய் இருந்த உயர்திரு. சேஷாசலம் ஐயர், B.A., B.L., பேரா சிரியர் கா. ர. கோ. முதலியார் என்னும் இரு பெரியார் களைப் பற்றியும் இவர் நினையாத நாளே இல்லை. இவர் தாம் தமிழ்த்துறையில் வல்லுநராதற்கு வழி காட்டிய

பேராசிரியர் முதலியாரவர்கள்பால் தூய அன்பு பூண்டவர்; தாம் சென்னையிலிருக்குமளவும் தம்மாசிரியரைச் சந்திக்காத நாளேயில்லை. பேராசிரியர் இன்றி எங்கள் வீட்டில் எவ்வித நற்காரியமும் நடந்ததில்லை. இன்று எங்கள் குடும்பக் கவுரவத்திற்குக் காரணகர்த்தரான எம் தந்தையாரின் ஆசிரியரை நாங்கள் மனித உருவத்தில் எங்கள் முன் நடமாடும் தெய்வமாகவே கருதி வந்தோம். சில ஆண்டுகளுக்கு முன் அவர் இறையடி எய்தினர். அன்னாரின் சவம் மயானத்திற்கு அவர்தம் மாணவர் புடை சூழ எடுத்துச் செல்லப்பட்டது. மயானத்தில் தீயிடுதற்கு முன்னால் அவருடைய நண்பர்களும் மாணவர்களும் அவரைப்பற்றிப் பேசினார்கள். அவ்வமயம் அவர்தம் பிரதம மாணவர்களுள் ஒருவரும் அவர்பால் என்றும் மாறாத அன்பினை உடையவரும் அவருடைய பெருநம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான எம் தந்தையாரும் பேச வேண்டுமென அங்குள்ளார் விரும்பினர். தந்தையாரும் பேச முன் வந்தார். ஆனால், இவரால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. நா எழவில்லை. ஒரே நாள் பேதியில் தம் குழவியை இழந்த காலத்திலும், முறையே 95 வருடமும் 90 வருடமும் வாழ்ந்த தம் தந்தையாரும் தாயாரும் தம்மை விட்டுப் பிரிந்த காலத்திலும், ஆருயிர் மனைவியார் எதிர்பாராத வண்ணமாகத் திடீரென்று ஆவி துறந்த காலத்திலும் உள்ளத்து உணர்ச்சியை வெளிக்குக் காட்டுமளவிற்குக் கண் கலங்காத எம் தந்தையார், அன்று தம் ஆசிரியர் பூதவுடலைப் பார்த்துப் பேச முயன்றவர், வாய்விட்டுக் கதறினர். அக்காட்சி இன்றும் என் மனத்தை விட்டு அகலவில்லை; கண்டார் மனத்தையும் கலங்கச் செய்தது. இது ஒன்றே தம்மாசிரியர்பால் இவருக்கிருந்த

பேரன்பினைக் காட்டுகிறது. ஆசிரியர் மறைந்த பின்பும் அவருடைய குடும்பத்தினருக்குத் தம்மாலான உதவிகளை அவ்வப்போது இவர் புரிந்து வருகிறார்.

எம் தந்தையார்க்குப் பெற்றோர்பால் மிகுந்த அன்பு உண்டு. பெற்றோரும் இவரிடம் தம் மற்றப் பிள்ளைகளைக்காட்டிலும் ஒருசிறிது அதிகமாகவே அன்புகாட்டி வந்தார்கள். எங்கள் பாட்டனார் இறப்பதற்கு முன்னாள் பிற்பகல் 4 மணியிலிருந்து தம் பிரஞ்ஞை இழந்த நிலையில் இருந்தார். சுமார் 8 மணிக்கு வீடு திரும்பிய நான் விஷயமறிந்து காஞ்சியிலுள்ள தந்தையார்க்குத் தந்தி அனுப்பினேன். தந்தையாரும் மறு நாள் காலை சென்னை வந்து சேர்ந்தார். பொழுது விடிந்தும் நிலைமையில் மாறுதல் இல்லாதிருந்தும், தம் பிள்ளையின் வரவை உணர்ந்ததும் மரணப்படுக்கையில் கிடந்த எங்கள் பாட்டனார் இழந்த பிரஞ்ஞையைச் சிறிது சிறிதாக மீண்டும் பெற்றார். தம் கடைசிக் குமாரராகிய திரு. பிள்ளையவர்களிடம் சுமார் ஒரு மணி நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்; அவர் கையால் கொடுத்த ஒரு குவளைக் கஞ்சியை அருந்தினார்; சாத்துக்குடிப்பழம் வேண்டுமெனப் பிள்ளையிடம் கேட்டார். பிள்ளையும் தந்தையாரை அமைதியாகப் படுத்துக்கொண்டிருக்கும்படி கூறிவிட்டுப் பழம் வாங்கி வரச் சென்றார். சிறிது நேரத்திற்குள் பழத்துடன் வீடு திரும்பியவர், தந்தையார் மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டதை அறிந்தார். இவர் வரவை எதிர்பார்த்தே உடலில் ஒட்டிக் கொண்டிருந்த உயிர் இவர் வந்து அளவளாவிவிட்டுச் சென்ற மறு கணமே உடலை விட்டுப் பிரிந்தது. இது ஒன்றே தந்தையாருக்கும் மைந்தருக்குமிருந்த பரஸ்பர அன்பினைப் பிறருக்கு விளக்கப் போதிய சான்றாகும்.

எம் தந்தையார் இல்லறமாம் நல்லறத்தை நன்கு பேணி நலங்காண்பதிலும் திறம் படைத்தவர். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. மூன்றுவது குழந்தை—கிருஷ்ணமூர்த்தி என்னும் பெயருடையது—1½ வயதில் திடீரென இறந்துவிட்டது. மூத்த மகன் சீனிவாசன் இண்டர் வகுப்பு வரை படித்துக் காஞ்சிபுரத்தில் தந்தையாருடன் இருந்து வருகிறுன். இரண்டாம் புதல்வன்—சக்கரவர்த்தி—எம் தந்தையார் பேரன்புக்கு மிகவும் பாத்திரமானவன்—தமிழில் B.A. (Hons) பட்டம் பெற்று இப்போது அடையாற்று பெசன்டு தியஸாபிகல் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியனுய்ப் பணியாற்றி வருகின்றுன். தந்தையாரின் தூய தமிழ்த் தொண்டினை அவருக்குப் பின்னுல் தொடர்ந்து செய்தற்குக் குடும்பத்தில் ஒருவரும் இல்லை என்ற குறையைக் களைந்த பெருமை இவனுக்குரியது. எம் தந்தையார் எக்காலத்திலும்—எவ்வளவு வேலையிலும்—தம் குடும்ப காரியங்களைக் கவனிப்பதில் தவறினதில்லை. 1950-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 27-ஆம் நாள் எங்கள் சிறிய தாயார் ஸ்ரீமதி ஜானகியம்மாள் திடீரெனத் தம் கணவரையும் புதல்வரையும் விட்டுவிட்டு இறையடி எய்தினுர்கள். குடும்பத்துக் காரியங்களைக் கவனிப்பார் யாருமின்றித் தவித்த அக்காலத்தில் ஏற்பட்ட பல இன்னல்களையும் பொருட்படுத்தாது தம் பிள்ளைகளுக்கு அன்னையின் மறைவால் ஏற்பட்ட துன்ப உணர்ச்சி மேலிடாமல் மறுமணம் என்கிற பந்தத்திற்குட்படாது குடும்பத்தைச் செவ்வனே நடத்திய எம் தந்தையார்க்கு ஏக பத்தினி விரதனுகிய ஸ்ரீராம மூர்த்தியையன்றி வேறு யாரையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. அன்று முதல் இன்று வரை இவர் தம் சுகதுக்கங்களை மறந்து, தமிழ்த் தொண்டு

ஒன்றினுக்கே தம்மை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்.

எங்கள் தந்தையாராகிய பிள்ளையவர்கள் சிறந்த கல்வியாளர் ; தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கசடறக் கற்றவர். ஆங்கிலத்திலும் இவருக்குச் சிறந்த புலமை உண்டு. இவருடன் பழகிய எவரும் இவர் கையில் ஏறக்குறைய எல்லாக் காலத்திலும் ஏதாவதோர் ஆங்கிலப் புத்தகம் வைத்திருப்பதையும், கூட்டங்களில் பேசும் பொழுது தால்ஸ்தாய், எமர்ஸன், கார்லைல் போன்ற மேனாட்டு அறிஞர்களின் கருத்துகளையும் மேற்கோள்களையும் தகுந்த இடங்களில் எடுத்துச் சொல்வதையும் கவனியாமல் இருக்க முடியாது. தாம் கற்றதோடு அமையாமல், தாம் கற்றவற்றைப் பிறருக்குப் போதிப்பதிலும் ஆற்றல் மிகப் படைத்தவர் எம் தந்தையார். இவரிடம் கல்வி கற்றுக் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர் பொறுப்பேற்றுத் தத்தம் வேலையை அழகுறச் செய்து தம் ஆசிரியர்க்குப் பெருமையளிப்பவர் இன்று பலர் உளர். அவர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் என் தமிழாசிரியரும், சென்னை இராயப்பேட்டைப் புதுக் கல்லூரி (New College) தமிழ்த்துறைத்தலைவருமான வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார் B.O.L. அவர்கள். இவர் தம் ஆசிரியரைப் போன்று வித்துவான் பட்டம் பெற்றதோடமையாது, அவரைப் போலவே சிறந்த நூல்களை எழுதியும், பெருஞ்சொற்பொழிவுகளாற்றியும், பலருக்கும் போதித்தும் விளங்குகிறார். இவரைப்பற்றி எம் தந்தையார் மிகவும் புகழ்ச்சியுடன் மற்றவர்களிடம் பேசுவதை நான் பல முறை கேள்வியுற்றிருக்கிறேன். வித்துவான் முதலிய பெரிய பரீட்சைகளுக்கேயன்றிக் கீழ் வகுப்பில் படிப்பவர்களுக்

கும் அவர்கள் விரும்புமாறு கல்வி கற்பிப்பதில் எம் தந்தையார் தலை சிறந்தவர். எட்டாம் வகுப்பிலிருந்து S. S. L. C. வகுப்பு வரை என் தந்தையாரே எனக்குத் தமிழாசிரியராய் இருந்தார். கடினமான இலக்கண நுட்பங்களைச் செய்யுள் வசனபாடங்களை நடத்தும் பொழுதே சிறந்த உதாரணங்களுடன் விளக்குவார். எங்கள் பள்ளிக் கூடத் தலைமை ஆசிரியர் திரு. M. D. மாணிக்கம் பிள்ளை B.A., L.T., அவர்களுக்கு இவரிடத்தில் தனி மதிப்பும் மரியாதையும் உண்டு. ரெவரெண்டு ஸ்டாலின், கிராபே போன்ற ஜெர்மானியப் பேரறிவாளர்கள் இவர்பால் தமிழ் கற்று அம்மொழியில் ஓரளவிற்குப் புலமையும் பெற்றூர்கள்.

எம் தந்தையார் சிறந்த போதகாசிரியர் மட்டுமல்லர்; பெரிய எழுத்தாளரும் பதிப்பாசிரியரும் ஆவர். இன்று வெளியாகும் பள்ளிக்கூடப் புத்தகங்களில் பெரும்பகுதி எம் தந்தையாரால் பார்வையிடப்பட்டவை. பதிப்பாசிரியர் தொழிலுக்கே பெருமதிப்பைத் தேடிய பெருமை இவர்க்குண்டு. இவர் குடும்பத்திலுள்ள எங்கள் அனைவர்க்கும் கல்வியளித்ததோடு, எங்களையும் தம் அன்றூட வேலையில் பழக்கி வந்திருக்கிறூர். இவரது இம்முயற்சியில் முற்றிலும் வெற்றியடைந்தவர், என் தமையன்மாருள் ஒருவராகிய மே. பெ. அரங்கசாமி என்பவர். அவர் தந்தையாரிடமிருந்து புத்தகம் அச்சாகுங்கால் திருத்தம் முதலிய செய்யும் விதிகளைக் கற்றதோடமையாது, சிறுவர்களுக்கு வேண்டிய புத்தகம் எழுதும் ஆற்றலையும் பெற்றிருக்கிறூர். இவ்வாற்றலே இன்று அவருக்குப் பிழைப்புக்குரிய ஊதியத்தையும் உதவுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக எம் தத்தையார் தாம் பிறந்த குடும்பத்திற்கேயன்றிக் குலத்திற்கும் அழியாப்புக

மைத் தேடித்தந்தவர்; அப்புகழ்நின்று நிலவ இன்று வரை தொடர்ந்து பாடு பட்டு வருபவர். எங்கள் குடும்பத்தில் முதன்முதல் சர்வகலாசாலைப்பட்டம் பெற்ற பெருமை எங்கள் தந்தையாருக்குரியது. அதற்குப்பிறகு தொடர்ந்து நான்கு பேர் கல்லூரிப்படிப்பை முடித்துச் சர்வகலா சாலைப் பட்டம் பெற்றதற்கும் காரணகர்த்தர் இவரே. நான் M.A. வரையிலும் படித்து இன்று சென்னை அக்கவுண் டென்டு ஜெனரல் ஆபீஸில் சூப்பரின்டென்டென்டாய் இருந்து வருகிறேன்; என் தம்பி ஒருவன் B. Com. (Hons.) பட்டம் பெற்று அதே அலுவலகத்தில் ஆடிட் டராய் வேலை பார்த்து வருகிறான். மற்றுமொரு தம்பி B. Sc. B. T. பட்டம் பெற்றுப் புரசையிலுள்ள சர். M. C. T. முத்தைய செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராய் வேலை பார்க்கிறான். மற்றுமிருவர், கன்னி மாரா நூல்நிலையத்திலும், கைத்தறிநெசவாளர் சங்க ஆபீ ஸிலும் வேலை பார்த்து வருகின்றனர். இவ்வுயர்விற்கெல் லாம் அடி கோலியவர் பிள்ளையவர்களே. தம் குடும்பத் தில் பிறந்த பிள்ளைகள் யாவர்க்கும் ஆவன செய்து, அவர் தம் உடல் வளர்ச்சியில் மட்டுமல்லாமல் கல்வி வளர்ச்சி யிலும் கவனத்தைச் செலுத்தி, அவர்தம் ஆக்கத்திற்கு வழி கோலிய பெருமை இவரைச் சாரும். இவ்விஷயத் தில் இவருக்கு ஈடு இவரே.

சுருங்கக் கூறுமிடத்து எம் தந்தையாரும் ஆசிரியரு மாகிய திரு. பிள்ளையவர்களைப்போல எங்கள் குடும்பத்தில் வேறு யாரும் இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. இவர் தம் உழைப்பால் உயர்ந்த தனியர்; கற்பவை கசடறக் கற்று அதற்குத் தக நின்று வாழ்வாங்கு வாழ் பவர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; நன்றியுள்ள நல்லார். இத்தகையாரது மணி விழா இவ்வாண்டு நம்

நாட்டுப் புண்ணிய க்ஷேத்திரங்களுள் ஒன்ருகிய காஞ்சீ புரத்தில் கொண்டாடப்படுகிறது. இந்நல்விழாவில் அனே வர்க்கும் ஏற்படும் மகிழ்ச்சியில் நானும் கலந்துகொள்கி றேன். இவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து உற வினர்க்கும், நண்பர்களுக்கும், தமிழகத்திற்கும் உற்ற துணைவராய் விளங்க எல்லா வகையிலும் உதவத் திரு வேங்கடமுடையானைத் தியானிக்கின்றேன் !

எம் தமிழ்த் தந்தையார்

திரு. மே. பெ. அரங்கசாமியவர்கள்

[உமாதேவன் கம்பெனி, சென்னே.]

பண்டைக்காலம் முதற்கொண்டு நந்தமிழ் நாடு என்றுங் குன்ருப் புகழ் படைத்த புலவர் பல்லோரைத் தோற்றுவித்து ஒப்புயர்வற்று விளங்கும் பொன்னுடு. அப் புலவர்கள் செயற்கருஞ்செயல் புரிந்து அழியாப் புகழ் பெற் ருர்கள். அன்னுருள் சிலர் மொழி ஆக்கங்கருதி, உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தனர்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்குங் காணேம் !'

என்று நந்தமிழ் நாட்டில் ஆங்காங்கு இன்று தமிழ் முழக் கம் முழங்குகின்றது. மக்கள் தாய் மொழியாகிய தமி ழிடத்து ஆர்வம் மிகக்கொண்டு, மொழியில் பேருக்கங் காட்டி வருகின்ருர்கள். இந்நிலைமையில் அரசியலும் தமிழ் மொழியினிடத்து ஆர்வம் மிகக் கொண்டு, மாண வர்களைத் தனித் தமிழில் உலேயா ஊக்கம் உற்றுத் தேர்ச்சி யடைய மிக இன்றியமையாத் துணே புரிந்து வருகிறது. தமிழ் அன்னையின் தனிப்பெரும்புலவர் பெருமக்களுள் 'பேராசிரியர்' என மகுடம் புனைந்து சீர்மையுற்றவர்

சிலர். அன்னார் தமிழ்த்தொண்டையே தமது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வருகின்றனர். இத்தகைய பேராசிரியருள் எம் சிறிய தந்தையாரும் ஒருவர்.

'செயற்கரிய செய்வர் பெரியர்.' பிள்ளையவர்கள் தந் நலங் கருதாத் தகைமையாளராய்த் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் திகழ்பவர்; தாய் மொழி வளர்ச்சிக் கெனத் தொண்டு செய்யும் பேரறிஞர் கூட்டத்தைச் சார்ந்தவர். இவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட நாள் முதற்கொண்டு இற்றைநாள் வரையில் இவரிடம் தமிழ் பயின்று, முன்னணியில் நிற்கும் மாணவர் பலர். இத்தகைய பேராசிரியரின் தமிழ்ச் சேவையைச் சிறப்பிக்கத் தோன்றியது இம்மணி விழா.

குலப்பெருமை: தமிழகத்துச் சான்றோர் ஆய்ந்து வகுத்த நிலங்களைந்தனுள் முல்லை நிலம் ஒன்று. சீர்பெறு முல்லை நிலமாந்தரே ஆயர் என்றும், இடையர் என்றும் பழந்தமிழ் நூல்களாற் குறிப்பிடப்படு கின்றனர். நெடுமாலே இவர்களுக்குக் குல தெய்வம். இப்பெருமக்கள் வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற்பெரும் பசுக்களை உடையவர்கள். பொருள்நனி போதிந்த பகவத் கீதை உபதேசித்த அண்ணலும்,

'கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து
கட்டிநன் குடுத்த பீதக வாடை
அருங்கல வுருவி னாயர் பெருமான்'

என்று பெரியாழ்வாரால் போற்றப்படுபவரும் குழலூதி உலகிருள் நீக்கிய உத்தமருமான திருக்கண்ணபிரானார் அவதரித்த குலம் ஆயர் குலம்.

நல்லாசிரியர்: எம் சிறிய தந்தையார் கலை பயில் தெளிவு, கட்டுரை வன்மை, உலகியலறிவு, கலங்கா

நெஞ்சம் முதலிய நல்லாசிரியர்க்குரிய நற்பண்புகள் அனைத்தும் வாய்க்கப் பெற்றவர்; மாணுக்கர் கருத்தைக் கவர்ந்து தம்பால் இழுக்கும் பேராற்றல் உடையவர். 'உயர் தந்தை தன்னின் ஏயநற் குருவும் இல்லை,' என்னும் அதிவீரராம பாண்டியரது அரும்பாட்டிற்கியைய, பிள்ளையவர்கள் எம் தந்தையார் மட்டுமன்றி எமக்குச் சீரிய குருவாயும் விளங்குகிருர்.

கல்வி நலம் உணர்ந்த கடமையாளர்: இவர் 'என் கடன் பணி செய்து கிடப்பதே,' என்னும் வாக்கியத்தை முற்றும் உணர்ந்த மூதறிவாளர்; மாணவர் முன்னேற்றத்திற்கு உழைப்பதையே தமது முதற்பணியாகக் கொண்டவர். கடமையில் இவருக்கிருந்த கவலையே இப்பொழுது மணிவிழாவிற்கு ஏதுவாயிருக்கிறது என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

தமிழ் வளர்க்கும் தகைமையாளர்: தமிழ்ப் பணியைத் தம் முதற்பணியாகக் கொண்டுள்ள பிள்ளையவர்கள், தம் முயற்சியினுல் தமிழ்க் கழகம் தோற்றுவித்து, அதன் மூலமாகத் தனித்தமிழ் வித்துவான் வகுப்புகளை நடத்தி, பல்வேறு துறை வல்லார்களைத் தம்பாலிழுத்து, அவர்களுக்குக் கன்னித் தமிழ்ச்சுவையூட்டி, தமிழ்ப் பேரறிஞர்களாகத் திகழும்படி செய்து வருகின்ருர். இவர் தமிழ் மொழியைக் கற்க வேண்டிய முறைப்படி மாணவர்கள் கற்குமாறு செய்து, பசுமரத்தாணிபோல அவர்கள் மனத்தில் பதிய வைப்பதில் தனிச்சிறப்புடையவர்; தமிழ்ச் சொற்களின் பொருள்களை எளிதில் தெரிந்துகொள்வதற்குப் பெருங்கருவியாயிருக்கும் என்பது அறிந்து, தகுந்த முறையில் 'இளைஞர் தமிழ்க் கையகராதி' ஒன்று தொகுத்து வெளியிட்டார். தமிழுக்கும், தமிழுலகிற்கும்

சிறந்த தொண்டாற்றும் முறையில் பிள்ளையவர்கள் சிறந்த நுண்ணறிவுள்ள நூலாசிரியராயும், சிறந்த பண்பும் பரந்த நோக்குமுடைய பதிப்பாசிரியராயும் விளங்கி வருகின்றார். இறையனாரகப்பொருள், தஞ்சைவாணன் கோவை விளக்கக் குறிப்புரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, அரிச்சந்திர புராணச் சுருக்க விளக்கவுரை, சித்தர் ஞானக்கோவை முதலிய நூல்களைப் பதிப்பித்து, பண்டைத் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் தனிப் பேராற்றலுக்குச் சான்றாய் விளங்குகின்றார்.

> 'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்.'

என்னும் மூதுரைக்குச் சான்றாய் விளங்குபவர் எம் சிறிய தந்தையார் ; தாம் உடல் நலிவுற்ற போதும் உடல் நலங் கருதாமல் இரவில் நெடுநேரம் கண் விழித்திருந்து தளரா மனத்துடன் உரைநடை நூல்களை ஆராய்ந்து ஒவ்வோர் எழுத்தையும் கூர்ந்து கவனித்து, பல நூல்களைப் பிழையற்றனவாய் விளக்கமுறச் செய்த பெருமைக்கு உரிமையுடையவர். இவர் இரு மொழி வல்லுநர் ; மொழி பெயர்ப்பாளர்.

அருங்குண சீலர்: இவர் நன்றியறிதல், பொறையுடைமை, எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புரவாற்ற அறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரோடு இன்சொல் கூறி நட்டல் ஆகிய குணங்கள் ஒருங்கே அமைந்த அண்ணல்; நந்தமிழ் மொழி வளர்ச்சிக்காகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்பதைச் சொல்லளவில் மட்டும் கூறாது செயலிலும் காட்டி நிற்கும் செம்மல்.

இவர்தம் புகழும் செல்வமும் பெருகுவனவாகுக! உடல், திண்மையும் நலமும் உறுவதாகுக! இவர் மணி விழாவானது, கண்ட கண்கள் புனல் பெருக்கவும், களிப்பால் உள்ளம் கரையழியவும், மேனி மயிர் பொடிப்பவும், பண்டை வசம் போய்ப் பரவசமாகவும் செய்கின்றது!

வாழ்க நற்றமிழ் வல்ல நாவலர்! வளர்க வண்டமிழுக்காக இவர் செய்யும் தொண்டு! ஓங்குக ஒண்டமிழ்ப் புரவலரின் உன்னதக் குறிக்கோள்!

வாழ்த்துரை

வாழ்த்துரை

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்

[திருஞான சம்பந்த ஸ்வாமிகள் ஆதீனம், மதுரை.]

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் திருவடி வெல்க!

திக்கெல்லாம் புகழும் திருக்காஞ்சி மக்கள் ஒருங்கு திரண்டு மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களது தமிழ்த் தொண்டைப் பாராட்டு முகத்தான் 'மணி விழா' எடுக்கக் கருதியதை அறிந்து மிக மகிழ்கின்றோம்!

கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்று, பெற்ற கல்விச் செல்வத்தைப் பிறருக்கு ஈத்துவக்கும் இன்பங் கண்ட நல்லார் பிள்ளையவர்கள்; பிள்ளையவர்களது தமிழார்வமும் தொண்டுள்ளமும் எங்கும் பரவுவனவாக!

அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பணிகள் பல செய்யத் திருவருள் துணை புரிவதாக!

மணி விழாக் கொண்டாட முன் வந்திருக்கும் தமிழ் ஆர்வலர் அனைவரையும் மிகவும் பாராட்டுகின்றோம்!

இம்மாதிரி விழாக்கள் பிறரையும் நற்பணிகளில் ஈடுபடும்படியாகத் தூண்டுவனவாகும்.

பிள்ளையவர்களிடம் பயின்ற மாணவர்கள் பிள்ளையவர்களைப் பின்பற்றித் தொண்டு பல செய்து திகழ்வார்களாக!

'ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே!'

*   *

சுவாமி ஆத்துமானந்தா அவர்கள்,

[ஸ்ரீ நாராயண சேவாச்சிரமம், காஞ்சீபுரம்.]

மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள், சென்னையினின்றும் இக்கச்சியம்பதிப் போந்து வாழத் தொடங்கிய தொடக்க முதலாகவே நமது ஆச்சிரமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நிரம்பிய நுண்மாண் நுழைபுலம் படைத்ததனோடு, ஆங்கில அறிவும் வாய்ந்து விளங்கும் அவர்கள், உயரிய நூல்களை மாணுக்கர் உளங்கொள்ளுமாறு கற்பிக்கும் பேராசிரியராயும், சிறந்த சொற்பெருக்காளராயும் திகழ்கின்றார்கள். அடக்கம், அன்பு, இன்முகத்தோடு கூடிய இன்சொல் முதலிய அருங்குணங்கள் பலவும் அவர்களுடைய இயற்கைப் பண்பாய் அமைந்து இலங்குதல், அவர்களுடன் சிறிது பொழுது அளவளாவினோரும் அவர்கள் பால் பிணிப்புண்டற்குக் காரணமாகின்றது. உயர்திரு. பிள்ளையவர்களது அரும்பெருந்தொண்டினுல் சென்னையிலும், இக்கச்சியம்பதியிலும் தமிழ் கற்று, வித்துவான் பட்டம் பெற்று விளங்குபவர் பலர். நூல்களைச் செம்மையான முறையில் பதிப்பித்து வெளியிடுவதில் திரு. பிள்ளையவர்கட்கு உள்ள ஆற்றல் ஒரு தனிச்சிறப்புப் பெற்றதாகும். அவ்வகையில் அவர்களால் இஞ்ஞான்று வெளிவந்துலவும் பழந்தமிழ் நூல்களும், மாணவர் பாட நூல்களும் மிகப் பல. இத்தகைய பெருந்தகுதி வாய்ந்த திரு. பிள்ளையவர்களது மணிவிழாவை அறிஞர் பலரும் ஆர்வத்துடன் குழுமிக் கொண்டாட வேண்டுதல் இன்றியமையாததே. அவர்கள் தமது அறிவினுலும் அன்பினுலும் நமது ஆச்சிரமத்திற்குச் செய்து வரும் தொண்டுகள் பல. அவர்களது மணிவிழா இக்கச்சியம்பதியில் நிகழ்வது கச்சி

யம்பதி வாழ்நர்க்குத் தனித்ததோரு மகிழ்ச்சியைத் தருவ தாகும். இம்மகிழ்ச்சி வாய்ந்த மணிவிழாவிற்குரிய திரு. பிள்ளையவர்கள் நல்லுடலும் நலங்கள் பலவும் பெற்றுத் தமது தொண்டினை மேலும் மேலும் சிறக்கச் செய்து, மேலும் பல்லாண்டு பல்லாண்டு இந்நிலவுலகில் நீடுவாழ் வார்களாக என எம் குரு தேவர் திருவருளை மனமாரச் சிந்தித்து வாழ்த்துகின்றனம்!

* * *

பேராசிரியர்

M. சண்முகசுந்தர முதலியாரவர்கள், M.A., L.T.

[தலைவர், பச்சையப்பர் கல்லூரி, கச்சியம்பதி.]

இற்றைக்கு நாற்பதாண்டுகட்குமுன் எனக்குத் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் நட்புக் கிடைத்தது. அப்போது இருவரும் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தொண்டாற்றி வந்தோம். இரண்டாவது உலகப்போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்த சமயம் அவர் காஞ்சியை நாடி வந்து இங்குக் குடி புகுந்தார். அப்போது அவர்க்குப் புக லிடமாய காஞ்சி ஒரு சிறந்த பேற்றினைப் பெற்றது. பன் னெடுங்காலமாகவே காஞ்சி மாநகரம் கற்றுவல்ல வித்தகர் களுக்கு இருப்பிடமாயிருந்து சரித்திரத்திலும் இலக்கியத்தி லும் சமய குரவர்களின் பாசுரங்களிலும் பாராட்டப் பட்டு வந்துள்ளது. சரித்திரப் புகழ் வாய்ந்த சீனயாத்திரி கர் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே இதைக் குறிப்பிட்டார். அப்பர் சுவாமிகளும் கற்றவர் நிறைந்தது கச்சியம்பதியெனக் கூறியுள்ளார். நாளந்தாப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் சிலர் காஞ்சியிலிருந்து சென்றவர் களே. மணிமேகலை கூறும் அறிஞர் அறவணவடிகளும்

காஞ்சியில் தங்கி இந்நகர்க்குப் புகழூட்டினர். திருக்குறளுக்குச் சீரிய உரை கண்ட பரிமேலழகர் காஞ்சியில் பட்டாசாரியர் பரம்பரையில் வந்தவரே. இவ்விதம் உதாரணங்களாகப் பெருக்கிக்கொண்டே போகலாம். வளர்ந்துவரும் நூற்றுண்டுகளின் போக்கில் காஞ்சியில் தோன்றிப் புகழ் நாட்டிவந்த புலவர்களும் அறிஞர்களும் கணக்கிலர். அவர்களது சிறப்புமிக்க குழுவில் வித்துவான் திருவாளர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களையும் நாம் வைத்து எண்ணவேண்டும். அவரையறியாத மேன் மக்கள் காஞ்சியில் எவருமிலர். அடிக்கடி இங்கு நடக்கும் கலைக் கூட்டங்களில் அவர் பேச்சுக்கு இடமில்லாத கூட்டமே இல்லை. அவர் அக்கூட்டங்களுக்கு இன்றியமையாத உயிர் நாடியாயிருந்துகொண்டு வருகிறுர். கூட்டங்களுக்கு அவர் வந்தனுபசாரம் சொல்ல முனைந்தாலும் அது ஒரு மாபெருஞ்சொற்பொழிவாக அமைகிறது. ஆழ்ந்த ஆராய்ச்சியறிவும், நுட்பமான கருத்துச் செறிவும், தெளிவும், தீர்மையும் நிறைந்த அவர் பேச்சு, பண்டிதர்க்கும் பாமரர்க்கும் என்றும் தெவிட்டாத ஒரு நல்விருந்து. இலக்கியத் துறையிலாகட்டும், இலக்கணத் துறையிலாகட்டும், சமயத்துறையிலாகட்டும், உலகானுபவத் துறையிலாகட்டும் அவர் குன்றின்மேலிட்ட ஜோதி போல விளங்குகிறுர். அவர் எத்தனையோ நூல்களைச் செப்பனிட்டுத் தந்திருக்கிறுர். எத்தனையோ உண்மைத் தமிழர்களை ஊதியம் விழையாது வித்துவமணிகளாக்கியிருக்கிறுர். தமிழின் தூய்மைக்கும் தமிழ்ப் பண்பாட்டின் செழுமைக்கும் அவர் ஆற்றியுள்ள தன்னலமற்ற பணி மதிக்குந்தரமற்றது. கலை வாழ்வின் சிகரத்தில் அவர் என்றும் நிலைத்திருப்பவர். அறுபது ஆண்டுகள் இத்தகைய சீரிய வாழ்க்கையினை வாழ்ந்து உச்சநிலையடைந்

துள்ள பிள்ளை அவர்கள் மேலும் பல்லாண்டுகள் இருந்து தமிழ்க்கும் தமிழ் மக்களுக்கும் வாழ்வளிக்க வேண்டு மென்பது என்னுடைய பேரவா. திரு. 'மே. வீ. வே.' வாழ்க ! பல்லாண்டு பல்லாண்டு வாழ்க ! தமிழ்ப் புனித ராய் வாழ்க !

* * *

பேராசிரியர் திரு. M. K. சண்முகம் அவர்கள், M.A., L.T.

[தலைவர், சர். தியாகராயர் கல்லூரி, சென்னை.]

சிறந்த கருத்துக்களை அறிதலும், அவற்றை விரித் துரை வகுத்தலும், கற்றோர்க்குரிய இலக்கணமென்பர் பெரியோர். இவ்வகையில் ஒல்லும் வகையான் தமிழகத் திற்குத் தொண்டு புரிந்தவர்களுள் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் குறிப்பிடத் தக்கவரா வர். என்றுமுள தென்றமிழில் உரை நூலியற்றியும், நூல்கள் பல இயற்றியும் அவற்றினைத் தமிழகத்திற்கு வழங்கி இசை கொண்டார் பிள்ளையவர்கள். தெவிட்டாத தேன் சுவை பயக்குந் தீந்தமிழில் சொற்பொழிவாற்றுந் திறமிக்கவர் இவர். இலக்கியத்துறையில் அரிய முயற்சி யினை உடையவர்களும், உண்மையான தொண்டினைச் செய்பவர்களுமாகியவர்கள் தொகை அருகிவருகின்ற இந் நாளில் நல்லியல்பு மிக்க பிள்ளையவர்கள், உண்மையான பணியையும், இலக்கிய நுண்ணறிவினையும் கண்டோரும் கேட்டோரும் போற்றுமலிருப்பரோ ! பிள்ளையவர்கள் 'அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமும்' உடையார் என்பதும் ஈண்டு நினைவுபடுத் துதற்குரியதாகும்.

நாமும் நம் மொழியும் சிறக்க இவர் செய்த சிறந்த செயல்களைத் தமிழ் நாட்டிற்பிறந்த ஒவ்வொருவரும் பாராட்டக் கடமைப்பட்டவராவர். நீங்காப்புகழ் கொண்ட

இப்புலவரை ஞாபகப்படுத்தும் வகையில் அமைந்த இம் மணி விழா, வெள்ளுடை வேந்தர் (P. T. தியாகராய செட்டியார்) உளம் போல நன்கு சிறப்பதாக! தமிழர்கள் இத்தகைய செய்ந்நன்றி மறவாச் செயலினைத் தொடர்ந்து செய்வாராக! பிள்ளையவர்கள் நீண்ட ஆயுளும், நலமும் பெற்றுத் தொடர்ந்து தமிழ்ப்பணி புரியுமாறு திருவருள் சுரக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்!

வாழ்க மே. வீ. வேணுகோபாலர்!

* * *

டாக்டர் பா. நடராசனாரவர்கள், M.A., D. Litt.

[தலைவர், தென்திருவாங்கூர் இந்து கல்லூரி, நாகர்கோயில்.]

புலவரையும் கலைஞரையும் போற்ற நாடு அண்மையில் முற்பட்டுள்ளது. இது நல்லதோர் அறிகுறி. வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களோடு சற்றுப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதை ஒரு பெருவாய்ப்பாகக் கருதுகிறேன். அவர்கள் பண்பு பெரிதா, புலமை பெரிதா என்று நான் பலகாலும் ஐயுற்றதுண்டு. 'புலவர் மணியாம் பிள்ளை அவர்கள், பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!' என்று வாயார வாழ்த்துகின்றேன்! புலவரைப் போற்றுதும்! புலவரைப் போற்றுதும்!

* * *

திரு. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

திருச்சி

உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் மணி விழாக்கொண்டாடும் அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. விழா, சீரும் சிறப்புமாய் இனிது நடைபெற விழைகிறேன்.

* * *

திரு. நெ. து. சுந்தரவடிவேலு, M.A., L.T.

[பொதுக் கல்வித்துறை இயக்குநர், சென்னை.]

திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் மணி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருப்பதையறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்! பல பெரியார்கள் சேர்ந்து நடத்த முன்வந்துள்ள இவ்விழா இனிது நடைபெறுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

திரு. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் தமிழின்பத்தைத் தாம் துய்த்ததோடு நில்லாமல், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்ற உயர்ந்த நோக்கங் கொண்டு, தமிழின் இனிமையைப் பிறரும் நுகர உதவி வருகிறார்கள். அவர்கள் உடல் நலனுடன் பல்லாண்டு வாழ்ந்து, தொடர்ந்து இப்பணியை ஆற்றுவார்களாக!

* * *

திரு. கருமுத்து. தியாகராசனவர்கள்,

மதுரை

தமிழ் மொழியில் பற்றும் தமிழிலக்கியத்தில் பயிற்சியும் உடையார்க்கு உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களை அறிமுகம் செய்ய வேண்டுவதில்லை.

தமிழாசிரியராகவும் நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் உயர்திரு. பிள்ளையவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டுகள் தமிழ் மக்கள் அனைவராலும் பாராட்டத் தக்கன. தமிழ் இலக்கிய இலக்கணங்களில் சிறந்த தேர்ச்சியுடைய இவர் பல இலக்கிய நூல்களையும், இறையனார் களவியல் போன்ற இலக்கண நூல்களையும் செவ்விய முறையில் பதிப்பித்துள்ளது தமிழ் மாணவர்கட்கு மிகவும் பயன்படத் தக்கதொன்று.

சமய ஒழுக்கமும் பண்பும் நிறைந்த வைணவக் குடியில் தோன்றிய உயர்திரு. பிள்ளையவர்கள், சமயக் கல்வி

யிலும் தலை சான்றவர்கள். இவர்களுடைய மணி விழா வைத் தமிழன்பர்கள் கொண்டாட முன் வந்துள்ளது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

உயர்திரு. பிள்ளையவர்கள் நோயற்ற வாழ்வும் நிறைந்த செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து, கன்னித் தமிழிற்கும் சமயத்திற்கும் மேலும் பல தொண்டுகள் ஆற்றிப் புகழ் பல எய்தி இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறையருளை வழுத்துகின்றேன்!

* * *

திரு. ப. ஹெர்பர்ட்டு சுந்தரம் அவர்கள், B.A., B.L.

[சேலம் மாவட்ட நடுவர், (Dt. Judge)]

பல்லாண்டுகளாக முறையாகப் பாடங் கேட்டுப் பயின்று பலருக்குப் பாடஞ்சொல்லித் தமிழுலகை வளர்த்து வரும் பண்பு மிக்க பெரியார் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள், மணி விழாப் பாராட்டிற்கு மிகச் சிறந்த மாண்புடையவர்கள். தஞ்சை வாணன் கோவை, அட்டப் பிரபந்தம், தொல்காப்பியம் முதலிய இலக்கிய இலக்கண நூல்களைச் செம்மையாகப் பதிப்பித்தும், உரை வளங் கண்டும், புது நூல்கள் பல யாத்தும் வருகின்றார்கள்.

ஆழமான ஆற்றொழுக்குப் போலவும், செம்பாக மாகவும் செய்யுளியற்றுந் திறன், கருத்திலேயே சீர்பட அமைத்துத் திருத்தி அடிக்காமல் எழுதும் முறை, கண்களில் ஒற்றிக்கொள்ளும்படி கவின் பெறு விருப்பந்தரும் பத்தி பத்தியான முத்துப் போன்ற எழுத்துக்கள், பேராசிரியரின் புலமைக்கும், மன நிலைமைக்கும் பீடு தருவன வாகும்.

பிள்ளையவர்கள் பாடஞ்சொல்லும் முறை பாராட்டத் தக்கது. எடுத்த பொருளை ஐயம், திரிபு, மயக்கத்திற்கு இடனில்லாமல், அமைதியாக அன்புகனிந்த சொற்களால் விளக்கும் வகை நினைந்து மகிழ்தற்குரியது.

திருமாலின்பால் பற்று மிகக் கொண்டவரெனினும், பிற மதங்கள்பால் திரிபு மனப்பான்மையில்லாத தன்மையோடன்றி, நலங்கண்ட இடத்தெல்லாம் நயந்தெரிந்து போற்றும் பெருந்தகையர் நம் பிள்ளையவர்கள்.

உடல் குலுங்காத நடையும், உருக்குலையாத பாகையணிந்த உடையும், மிடுக்கில்லாத அருள் பொழியும் கண்புடைப்பும், தருக்கில்லாத மலர்ந்த மொழியடைவும் எம் நெஞ்சத்தினின்று என்றும் நீங்கா. பயில்தொறும் நூல் நயம் போலும் பிள்ளையவர்களின் நட்பு, பண்பும் பயனுமாய் வளருந் தகைமைத்து. ஒரு முறை அப்புலவர் பெருமானைக் கண்டோரும், உடன் பேசி மகிழ்ந்தோரும், பாடங்கேட்டுய்ந்தோரும் என்றும் அவரை மறக்க முடியாது! அவரும் யாரையும் மறந்ததில்லை.

சென்னைப் புரசை லுத்தரன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய காலை, புரசைக் கம்பர் கழகத்தின் சார்பில் தம் ஆசிரியர் மகாவித்துவான் கா. ர. கோவிந்தராச முதலியாருடன் வித்துவான் தேர்வு முதலியவற்றிற்கு முறையாகப் பாடஞ்சொல்லி வகுப்பு நடத்தி வந்தாரென்றும், பயன் பெற்ற பல்லோர் நாட்டின் பல இடங்களில் அவர் புகழைப் பரப்பி வருகின்றனரென்றும் அறிந்து மகிழ்கின்றேன்.

அவர்தம் வாழ்க்கையால் ஒழுக்கம் விழுப்பமடைகின்றது. புலவர் பெருந்தகை கல்வி மணங்கமழ்ந்து ஒளி திகழுங் காலையிலேயே அவர்தம் புகழ் பரப்பிப் பொருள்

வழங்கிப் பொன்னுடை போர்த்திப் பாராட்டும் விழாக் குழுவினர் நற்றெண்டு எதிர் காலத்தின் ஏற்றத்தில் நம்பிக்கையூட்டுகின்றது. தமிழன்னேயின் தேருக்கு அச்சாணியன்ன அவர்தம் உருவம், 'மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது,' என்னும் பழமொழிக்கு ஓர் எடுத்துக் காட்டாம். அத்துணைச் சிறிய உடலிலிருந்துகொண்டு இப்பெரும்பணிகளைத் தமிழகத்திற்கும் அறிவுலகினிற்கும் ஒய்வு ஒழிவின்றி ஆற்றி வரும் அப்புலவர் பெருந்தகை, நலமுடனும் வளமுடனும் புகழுடனும் வாழ்க பல்லாண்டு !

* * *

மகாவித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள், சென்னை

வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களை இருபத்தைந்தாண்டுகளாக அறிவேன். அவர்கள் மஹாவித்துவான், கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களிடம் தமிழிலக்கியவிலக்கணங்களை முறையே கற்றுத் தெளிவடைந்தவர்கள். பிள்ளையவர்கள் பிறப்பிலேயே ஆசிரியத்தன்மை வாய்ந்தவர்கள். அவர்களிடம் பாடங் கேட்டுப்புலமை பெற்றவர் பலர்; வித்துவான் பரீக்ஷையில் தேர்ந்தவர் பலர். அவர்கள் மூலம் பிள்ளையவர்களின் போதனுசத்தியை அறிந்துள்ளேன்.

திரு. பிள்ளையவர்கள் இக்காலத்து மாணுக்கர்க்கேற்ற நூல்களை எழுதுதலிலும் திறமை மிக்கவர்கள். அவர்களால் திருத்தம் அடைந்த பாடபுஸ்தகங்கள் மிகப்பல. இதனைத் தமிழறிஞர் பலரும் அறிவர்.

பிள்ளையவர்கள் உடல் நலன் காரணமாகச் சென்னபட்டணத்தினிங்கிக் காஞ்சியில் குடிபுக்க பின், அங்கும் தமிழ் கற்க விரும்புபவர் பலருக்கும் வித்துவான் பரீக்ஷைக்

குரிய பாடங்களைக் கற்பித்து வருகிறுர்கள்; அறிஞர் பலர் வேண்டுகோட்கிணங்கி, 'சீவகசிந்தாமணி'யை முறையே உபந்யஸித்து முற்றுவித்தார்கள். அவர்கள் புலமையை உணர்ந்த அறிஞர்கள் அவர்கட்குச் சிந்தா மணிச் செல்வர் என்னும் பட்டம் நல்கிச் சிறப்பித்தனர்.

புலவர் பிள்ளையவர்கள் பெருநூல்களைப் பதிப்பித் தலிலும் திறமை வாய்ந்தவர்கள் என்பதைப் பவானந்தர் கழகத்தின் மூலமாக அவர்கள் பதிப்பித்து வெளியிட் டுள்ள 'வீர சோழியம்,' 'தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினுர்க்கினியருரை,' 'இறையனுர் களவியல்' முதலிய நூல்களால் நன்கு அறியலாகும்.

திரு, பிள்ளையவர்கள் குருபத்தி மிக்கவர்கள்; நட் பிற்கு உகந்தவர்கள்; எல்லாரோடும் இனிது பேசிப் பழகு பவர்கள். அவர்கள் இதுவரை செய்துள்ள தமிழ்ப் பணியை அறிந்து அவர்களது அறுபதாம்யாண்டு நிறைவு விழாவில் அவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்குஞ் செய்தி தமிழபிமானிகள் எல்லோருக்கும் இன்பம் பயப்பது.

நண்பர், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் இவ்வாறே தமிழுக்கும் வைஷ்ணவ சமயத்துக்கும் சிறந்த பணி ஆற்றி, இன்னும் ஒரு நூற்றுண்டு இனிது வாழத் திருவருள் புரியுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

* * *

பேராசியர் திரு. A. கார்மேகக் கோனுரவர்கள்,

மதுரை.

என் ஆருயிர் நண்பர் புலவரேறு திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்குத் தொண்டை நாட்டுத் தலைநகரும், கல்வித்திருநகருமான காஞ்சியம்பதி யில் பொன்னுடை போர்த்திப் போற்றி, பொற்கிழி அளிக் கும் விழா நிகழ்வதை அறிந்து அளப்பருமகிழ்ச்சியுற்றேன்!

திரு பிள்ளையவர்கள் எல்லா வகையாலும் இத்தகைய பாராட்டுக்கு நிரம்பத் தகுதி வாய்ந்தவர்கள். பிள்ளையவர்கள் பண்டைப் பனுவல்களின் பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், பேராசிரியராகவும் திகழ்ந்து, தமிழ் மொழிக்கு அருந்தொண்டு ஆற்றிக்கொண்டிருப்பவர்கள்.

ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பி, ஆரவாரமின்றி, அடக்கத்தை அணிகலனுகப் பூண்டு, தமிழ்த்தாயின் அருமந்த சேயாய் விளங்கும் இவ்வாசிரியப் பெருந்தகைக்குக் காஞ்சிப் பெருமக்களும், சென்னைப் பெரியார்களும் கூடி இப் பாராட்டினை ஆற்றுவதற்கு முன் வந்தது சாலப் போற்றிப் புகழத்தக்க அரும்பெருஞ்செயலாகும்.

நம் பிள்ளையவர்கள் இதுபோலும் இன்னும் பல பாராட்டுக்கு இலக்காகத் திகழ்ந்து தமிழ்த்தாய்க்கு அரும் பணி புரிந்து, நீடு வாழத் திருவருளை வழுத்துகின்றேன் !

* * *

மகாவித்துவான்
வல்லம் வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்

மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் எமக்குப் பல்லாண்டுகளாகத் தெரிந்தவராவர் ; கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமும் வாய்ந்தவர் ; யாவர் மாட்டும் அன்புடையவர் ; அடக்கத்தின் மிக்கவர் ; ஆடம்பரத்தை வெறுப்பவர் ; சங்க இலக்கியங்கள், பிற்காலத்துப் பெருநூல்கள், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கள் ஆகியவற்றை நல்லாசிரியரிடத்து நன்கு கற்றுத் தேர்ந்து புலமைப் பெருக்கம் பெற்றவர் ; சமய நூற்றுறையினும் வல்லுநர் ; தாம் பயின்ற நூல்களினிடத்துப் பொதிந்து கிடக்கும் பொருள் நயங்களையெல்லாம் ஆய்ந்தாய்ந்து கூறிக் கற்றோர்களையும் களிக்கச் செய்பவர் ; யாவருள்

ளங்களேயும் கவரத்தக்க விரிவுரையாற்றும் வித்தகர்; தம்மை அடுத்த மாணவர்களே அன்புடன் வரவேற்றுப் பண்புணர்ந்து பயில்வித்துப் பட்டம் பெற்ற பண்டிதர் கள் ஆக்குவித்தவர். இவ்வாறு தம் வாழ்நாட்களே யெல்லாம் தமிழ்த் தொண்டுக்கே பயன்படுத்தி வந்தவர்—வருகின்றவர். இவரைச் **சிந்தாமணிச் செல்வர்** என்பது மாத்திரமோ, கன்னித் தமிழ்க்கலைக் களஞ்சியம் எனவும் கூறலாம் அன்றோ? இத்தகைய சான்றோரைப் பாராட்டு தல் நற்றமிழ் மக்களின் கடமையேயாகும். இனியும் இவர் தமிழ்ப் பணிகள் பலவும் ஆற்றுதற்குரிய யாக்கை நலம், பொருள் வளம், வாழ்நாட்பெருக்கம் ஆகியவற் றைப் பெற அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனே வணங்கி வேண்டிக்கொள்ளாநின்றனம்!

* * *

திரு. S. கிருஷ்ணவேணியம்மையாரவர்கள்,

[ஓய்வு பெற்ற தமிழாசிரியை,
லேடி வில்லிங்டன் உயர்நிலைப்பள்ளி, சென்னை.]

நம் நாட்டுச் செல்வங்களாகிய இளைஞர் நலத் திற்கென இடையறாதுழைக்கும் வித்துவான், மே. வீ. வேணுகோபா லப் பிள்ளையவர்கட்கு அறுபது ஆண்டுகள் நிறைவுற்றதை முன் னிட்டு, திருக்கச்சி நம்பிகளுக்கு வேண்டியதை வேண்டியாங்கீந்து வாழ்வித்த வரதராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் திருக்கச்சி அறி ஞர்கள் மணிவிழாக் கொண்டாட முன்வந்துள்ளது பாராட்டத் தக்க தாகும்.

இக்கச்சியம்பதி, பிள்ளையவர்கள் புதிதாகக் குடியேறிய நகரமேயாகிலும், இவணுள்ள கற்றோரும் மற்றோரும் இவரிடம் காட்டும் அன்பும், ஆதரவும், மதிப்பும் அளவிடற்பாலனவல்ல. கடலிற்றோன்றிய முத்துக் கரையணுகி மதிப்புறுதல் போன்று, சென்னையில் வாழ்ந்த பிள்ளையவர்கள் கச்சிபோந்து கண்ணியம் பெறுதல் மகிழ்விற்கிடமானதே ! இவர்கட்கு நம் நன்றி உரித்தாகுக.

'மிக்க பயன் நிரம்பிய கல்வி கற்றார்க்கு, எந்நாட்டிலும் எவ்வூரிலும் சிறப்பும் பூசனையும் சேரும்' என்று செந்நாப்போதாரும், 'வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்' என்று சடகோபரும் இயம்பிய பொய்யில் பாடல்கள் பொய்க்குமா ?

தம் இளமையிலிருந்தே கல்வியில் மிக்க ஆர்வங்கொண்டு கற்று முன்னேறிய இச்சீரியருடைய வாழ்க்கை வரலாறு, எத்தகைய இயல்பு வாய்ந்த இளைஞரையும் ஊக்கி முன்னேற்றுதற்கு வழி காட்டியாகும் என்பது திண்ணம்.

இப்பெரியார், கல்வியில் தாம் துய்த்த இன்பம் மற்றவரும் துய்க்கவேண்டுமெனக் கருதியே, இளைஞர் முதல் பெரியோர் இறுதியாக யாவரும் நலமடையும் வழியில் சொல்லாலும் எழுத்தாலும் இரவும் பகலும் தொண்டாற்றி வருகின்றார். இத்தொண்டு மேன்மேலும் ஓங்கி வளர்வதாக !

இத்தூயோர் இத்துணை நலங்களைப் பெறுதற்கேற்ற தவமியற்றிய இவர் இல்லக்கிழத்தியார், இவ்விழாவில் கலந்திருந்து நமக்குவகையூட்டும் பேற்றை நாம் பெறாதது வருந்தத்தக்கதே ! ஆயினும், கற்பிற்கணியாய்த் திகழ்ந்த அவ்வம்மையாரின் ஆன்மா இச்சிறப்புக்களைக்

கண்டு ஆனந்திக்கும் என்னும் நம் சாத்திரக் கோட்பாடு நமக்குச் சிறிது ஆறுதலையளிக்கிறது.

இவரிடம் அமைந்துள்ள சகோதர அன்பும், அச் சகோதரர் புதல்வர்களைக் கல்வியில் வல்லுநராக்கி உயரிய நிலைக்குக் கொணர்ந்த பெருந்தகைமையும் பலரும் பின்பற்ற வேண்டுவனவே.

இந்நல்லாருடைய நேரிய பண்புகளைப்பற்றி இவரை அறிந்த ஒவ்வொருவரும் நன்குணர்வாராதலின், அவற்றுள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கூறுதல் மிகையேயாகும்.

பலர் புகழ்தற்கேற்ற பண்புகள் அமைந்த சான்றோரையும் சிலர் இகழ்ந்துரைத்தல் உலக இயல்பு. ஆனால், அவ்வுலகியல்பு பிள்ளையவர்களிடம் இடங்கொள்ளாதென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். இதற்கு இவருடைய ஆடம்பரமற்ற அமைதி நிலையும், ஒருவரையும் குறை கூறாப் பெருந்தகைமையும், அளவறிந்து பேசும் அறிவுடைமையுமே காரணங்களாகும்; இங்ஙனமே இவர் நல்லியல்புகள் சொல்லிச் செல்லின் நீளும்.

இச்சான்றோர் இன்று போன்றே இன்னும் பல்லாண்டுகள் உடலுரத்தையும், மன ஊக்கத்தையும், உயரிய ஞானத்தையும் வளர்த்து, மக்கட்குக் கல்வியறிவையும் இறைஞானத்தையும் ஊட்டி இன்புற்று வாழத்திருவருள் சுரக்குமாறு எம்பெருமானை வழுத்துகின்றேன்!

* * *

திரு. கு. கோதண்டபாணி பிள்ளையவர்கள், B.A.,

[முன்னாள் அயல்நாடு செல்வோர்க்கதிபர்;
இந்நாள் இரயில்வே அலுவலர் தேர்தரு குழுவின் உறுப்பினர்]

மகாவித்துவான் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அறிவிற்சிறந்தவர்; ஒழுக்கத்திற் சிறந்தவர்: தூய வெள்ளாடையர்; தூய மேனியும், தூய சிந்தையும்,

தூய வாழ்க்கையும் கொண்டு ஐம்புல ஒழுக்கத்திற் சிறந்த பெரியார். அறிவும் ஒழுக்கமும் அவிர்தரும் அவர் முகம்; முற்றிய அறிவினர்; வற்றிய உடலர். வற்றிய உடலா ? சமண நோன்பியோ இவர் ? நடுங்க நோற்று உடலும் சுருங்கியதாகுமோ ? இவர்தம் சிந்தாமணிச் சொற்பொழிவுகளை இவர் கூறிய உரைகளைக் கேட்டோர் இவர் சமணரே என்பர் ; அன்று அன்று திருமால் செந் நெறியில் செழித்திடும் செம்மலார் இவர். இத்திருநெறியே தந்ததுபோலும் கண்ணனை ஒப்பதொரு கார்முகில் வண்ணமும், வேணுகோபாலன் எனும் விழுமிய பெயரும் !

வற்றிய உடலே முத்திய அறிவின் அறிகுறி என்பர். ‘ஊன் சுருங்கச் சுருங்க உள்ளொளி பெருகும்,’ என்பர். இவரை அணுகி அளாவளாவிக் காண்க. இவர்தம் ஒவ்வொரு சொல்லிலும் உள்ளொளி தோன்றும். இவரது எழுத்திலும் பேச்சிலும் பழைமையும் புதுமையும் ஒளி விடக் காணலாம். எழுத்தெண்ணிப்படித்து முறைப்படி பயின்று பழுத்த அறிவினர் ஆதலின், இவரது பேச்சும் எழுத்தும் திட்பமும் நுட்பமும் வாய்ந்து திகழ்கின்றன; இவர் பதிப்பிக்கும் நூல்களும் ஒப்பற்றனவாய் அமைகின்றன.

இவரோடு பழகியோர் அறிவர் இவர்தம் பண்பு கொள் ஒழுக்கமும் இன்பமர் பேச்சும். இவர் பிறந்தது, வளர்ந்தது, பயின்றது, பணியாற்றியது எல்லாம் சென்னையில். இவரை முன் அறியாத காஞ்சி மாநகர், இவரை எவ்வாறு போற்றுகின்றது! இவர்தம் மேதகு புலமையும் ஒழுக்கமும் காஞ்சிமா நகருளார்கள் உளமெலாம் புக்கன. அங்கு இவர் அரசு வீற்றிருப்பதை இம்மணிவிழாக் காட்டும்.

இவ்வாறு ஒருவர் எல்லோருக்கும் நல்லோர் ஆதலை இப்புது உலகம் விரும்புவதில்லை. நல்லார்தமக்

கும் பொல்லார்தமக்கும் நல்லோர் ஆகுதல் வளமிலார் செய்கை என்பர். இவ்வாறு கருதத்தக்கவர் அல்லர் இப் புலவர். வேண்டுழித் தோன்றும் இவர் புலமையின் வீர மும், ஆண்மையின் தகுதியும். இவர் புலமையின் வீரத் தைக் காட்டும் ஒரு நிகழ்ச்சி இங்குக் குறிப்பிடத்தகும். இந்திய அரசியல் உலகில் உயர்பதவி வகித்த ஒருவர் இயற்றிய தமிழ் நூல் ஒன்றைப்பற்றி வானெலி ஒலி பரப்பியில் இப்புலவர் மதிப்புரை கூறல் நேர்ந்தது. அந் நூலுள் பற்பல வழுக்கள் காணப்பட்டன. அவற்றைக் கண்ணியமான முறையில் எடுத்துக்காட்டாமலிருக்க இவர் புலமை இடந்தரவில்லை. வானெலி நிலையத்தார் அவற்றை எடுத்துக்காட்டாது விட்டுவிடும்படி வேண்டி யும் அவற்றை விட்டாரிலர்; எடுத்தே காட்டினர் இப்புல வர். அன்று முதல் வானெலி நிலையத்தார்க்கு நூல்மதிப் பிடும் பணியை இவர் இழந்தார்; அதனல் வரும் ஊதியத் தையும் இழந்தார். 'பீடின் மன்னர் புகழ்ச்சி வேண்டிச் செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்றெஞ் சிறுசெந் நாவே,' என்ற புலவரின் வழி வந்த புலமையைக் காண்க! 'முற்றும் நீர் கண்ணுனுலும் குற்றம் குற்றமே!' என்ற நக்கீரன் வழி வந்த புலமையின் வீரத்தைக் காண்க! என்னே புலமை வீரம்! தமிழ் நாட்டுப்புலவர்களிடையே இத்தகு வீரம் தழைக்கின், போலித்தமிழும் நடையாடுதல் இயலுமோ?

'தமிழ் மொழி செழிக்க, தமிழ் நாடு உயர, இம் மேதகு புலவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! நலமெ லாம் பெறுக!' என வழுத்துவோம் நீலமேனி நிமலன் தாளினை!

* * *

திரு. கி. வா. ஜகந்நாதனவர்கள், M.A.

[ஆசிரியர், கலைமகள்.]

அழுத்தமான படிப்பு, ஆழமான ஆராய்ச்சி, விரிவான உள்ளம், அமைதியான இயல்பு, இனிமையான பேச்சு—இவை அன்பர் பெரும்புலவர் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் இயல்புகள். பிறரைக் குறை கூறத் தெரியாதவர்; சோம்பலே அறியாதவர்; புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் தம் கடமையை ஆற்றிவருபவர். எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறந்த நண்பர். அவர் நீடு வாழ்க!

* * *

திரு. பெ. தூரனவர்கள், B.A., L.T.

[தலைவர், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.]

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பதையறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்! அவர்கள் தமிழுக்குச் செய்யும் சேவையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

* * *

திரு. பு. ஆலாலசுந்தரஞ் செட்டியாரவர்கள், M.A.

[மணிவிழாத் தலைவர் மாணவர்,
தமிழ்ப் பேராசிரியர், கிறித்தவக் கல்லூரி, சென்னை.]

மகாவித்துவான் ஆசிரியர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கிய 'இலக்கணங்களை எழுத்தெண்ணிப் படித்த பெரும்பேராசிரியர் குழுவைச் சார்ந்தவராவர். கடந்த 30 ஆண்டுகளுக்குமேல் யான் இவரது அன்பினையும் ஆசியினையும் பெற்றுள்ளேன். 1917-1927ல் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது இவர் எங்களுக்குத் தமிழாசிரி

யராய் விளங்கிச் சிறந்த தொண்டு ஆற்றினர். பின்னர் இவர் புரசைப்பாக்கத்திலுள்ள பெப்ரீஷியஸ் உயர்நிலைப் பள்ளியின் தமிழ் ஆசிரியராய் விளங்கிப் பல பாதிரிமார் களின் அன்பினைப் பெற்றார். பல உரை நடை நூல்களும், செய்யுள் நூல்களும், இலக்கண நூல்களும் இவரால் பிழையின்றிப் பதிப்பிக்கப்பட்டன. இத்துறையில் இவர் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்கின்றார் எனக் கூறுவேனாகில், அது புனைந்துரையாகாது. இவர் அன்பு, அடக்கம், ஆள்வினையுடைமை, அஞ்சாமை, பத்தி முதலிய அரிய பண்புகள் நிரம்பப்பெற்றவர். இத்தகைய பண்புகள் நிரம்பப் பெற்ற என் ஆசிரியப் பெருந்தகையின் மணி விழா ஸ்ரீ ஏகாம்பரநாதரின் திருவருளால் சிறக்க நடை பெறுவதாக! ஆசிரியர் நீடூழி சிறக்க வாழ்க! இம் மணி விழாவினை நடத்தும் அன்பர்களை யான் மிகவும் பாராட்டுகின்றேன்! 'தொண்டை நாடு சான்றோர் உடைத்து,' என்பதற்கு எடுத்துக்காட்டாய் எம் ஆசிரியர் விளங்குகின்றார். தொண்டை நாட்டின் தலை நகரமாகிய காஞ்சியம்பதியில் இம்மணி விழா நடை பெறுதல் சாலவும் பொருத்தமுடைத்து! தமிழ் மொழி வாழ்க! தமிழர் வாழ்க! உலகம் வாழ்க!

* * *

திரு. தி. வீ. இராமசந்திரனாரவர்கள், M.A., B.L.

[செயலாளர், பச்சையப்பர் அறநிலையக்குழு, சென்னை.]

தமிழ்த் தாயின் தவப்புதல்வருள் ஒருவராகிய வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் மணி விழாவையொட்டி, அவர்தம் சீரிய சேவையினைப் பாராட்டி வாழ்த்து மடலொன்று வழங்கக் குழுவொன்று கூட்டப்பட்டிருப்பதைச் செவியுற்று மட்டிலா மகிழ்ச்சி அடைந்தேன்.

நல்லாரைக் குறித்துப் பேசுதலே நன்மை பயக்கு மென்பர். இத்தகையதோர் உணர்ச்சியால் உந்தப்பட்டே, நான் பிள்ளையவர்களுடன் கொண்டிருந்த தொடர்பின் போது என்னைக் கவர்ந்த அவரது சீரிய குணங்களிற் சில வற்றை எடுத்துக் கூறுகின்றேன்.

1928-ஆம் வருடத்திலே தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்கத்தின் சமூக சேவைப் பகுதிச் செயலாளராகப் பணி யாற்றும் பேற்றை யான் பெற்றிருந்தபோதுதான் எனக் கும் பிள்ளையவர்களுக்கும் முதன்முதலாகத் தொடர்பேற் பட்டது. அவ்வமயம் மேடைப் பேச்சிலும் எழுத்துக் கலையிலும் இளைஞர்களை ஊக்குவித்து வந்த அச்சங்கத் தின் துணைத் தலைவருள் ஒருவராக அவர் பொறுப்பேற் றிருந்தார். தலை சிறந்த தமிழன்பராகவும், சங்ககாலம் பற்றிச் சொன்மாரி பொழிவதில் வல்லுநராகவும் பெரும் புகழ் ஈட்டிய பிள்ளையவர்கள், தமிழ்ச்சங்கத் தேர்வு, வித்துவான் தேர்வு முதலியன எழுத விரும்பும் தமிழிளை ஞர்களுக்கெனத் தனிப்பட வகுப்புக்கள் நடத்தி வந்தார். திரு.வேணுகோபாலப் பிள்ளையவர்கள் தமது எளியவாழ்க் கைக்கும் நேரிய எண்ணங்களுக்கும் பெயர் பெற்றவர். அவர்தம் சலியா உழைப்பும் அனைவரும் அறிந்ததே. பள்ளிச் சிறுவர்க்கென, வருங்காலத்தை வளம் நிறைந்த தாக்கும் பொறுப்புள்ள குழந்தைச் செல்வங்களுக்கென, உயர்ந்த புத்தகங்கள் ஊக்கத்துடன் ஆக்கித் தருவது வாயிலாகத் தமிழுக்குத் தளராது சேவை செய்யும் தகைமையோராவர், பிள்ளையவர்கள்.

சிலவாண்டுகட்குமுன் உடல் தளர்ந்து உழைப்பை அவர் ஒரு சிறிது குறைத்துக்கொள்ள வேண்டி வந்த போது, பொருளாசை மிகுந்து தமது உடலை அளவுக்கு மீறி வருத்திக்கொண்டார் என ஒரு சிலர் காரணங்காட்டி

னும், உழைத்துப் பழகிவிட்ட அவர் உழைப்பின்றி உயிர் வாழ முடியா நிலைக்கு வந்துவிட்டார் என்றே நான் கூறுவேன்.

கச்சி நகரில் பச்சையப்பர் கல்லூரி அமைப்புக்குழு வில் அங்கம் வகித்த திரு. வேணுகோபாலப் பிள்ளையவர் கள் ஏனைய அங்கத்தினர்களுடன் ஊக்கத்துடன் ஒத்து ழைத்து, அயராது நிதி சேர்த்துக் கல்லூரி கடிதே உருப் பெறப் பாடு பட்டார்.

தமிழிலக்கியம் தரங்குன்றுது தலை தூக்கும்பொருட்டு, அன்னர் உழைப்பை நல்குமாறு நீண்ட ஆயுளையும், நலங் குன்று உடற்கூற்றையும் நல்குமாறு இறையருளை இறைஞ்சுகின்றேன்.

* * *

திரு. வே. கண்ணபிரான்

[மேட்டுப்பாளையம்.]

அருந்தமிழ்த் தொண்டாற்றும் அன்பு செறிந்த பெரி யீர், உங்கள் மணி விழாவைக் கண்டு தமிழன்னை பூரிப் படைகிருள்! தமிழகம் மகிழ்கிறது! யாதவ குலத்தின் புகழ் மேலும் உயருகிறது! பாரெல்லாம் பெருமை பெற்று வரும் தமிழுக்குப் புதுமைச் சுவையுடன் புத் துணர்ச்சி ஊட்டி வரும் நீவிர் மேன்மேலும் மேதினியில் நற்பணி ஆற்றி வருவீரென்பது திண்ணம். உங்களுக்குப் போர்த்தப்படும் பொன்னுடை தமிழன்னைக்குத் தக வுடைப் போர்வையாகத் திகழட்டும். வாழ்க நும் புகழ்! வணக்கம்!

* * *

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A., L.T.
[ஓய்வுபெற்றுள்ள மாவட்டக் கல்வித்துறைத் தலைவர்,
சென்னை.]

மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கட்கு இம்மாதம் மணிவிழாக் கொண்டாடப் பெருமக்கள் முன் வந்திருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்! நாட்டின் நலத்தையும் புகழையும் தம் தொண்டினால் வளர்க்கும் சான்றோர்களைப் பொதுமக்கள் உள்ளன்புடன் பாராட்டிப் போற்றுதல் இன்றியமையாததோர் இனிய கடமையாம். கற்கு நூல்களைக் கசடறக் கற்கும் பண்டை வழக்கம் இக்காலத்தில் அருகி வருகின்றது. இந்நாளில், புலமை சான்ற உயர்திரு. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் காஞ்சிமா நகரில் தங்கிச் சிறந்த முறையில் தமிழ்ப் பெருநூல்களைப் பலர்க்குக் கற்பித்துத் தமிழகப் பண்பினையும் புலமையையும் காத்து வருகின்றார்கள். அன்றியும், உயர்ந்த பண்டை இலக்கிய இலக்கண நூல்கள் பலவற்றை மிகச் சீரிய முறையில் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்துள்ளார்கள். கற்றோர் வாழ் காஞ்சிக்கு வந்து தமது தமிழ்த்தொண்டைத் தொடங்கு முன்னமே, சென்னைமா நகரில் இருபதாண்டுகட்கு மேலாக உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராயிருந்து பல்லாயிர இளமாணவர்கட்குத் தமிழ்ச் சுவையை ஊட்டி வந்தார்கள். இவர்கள் சிறந்த எழுத்தாளராயிருப்பதோடு சிறந்த பேச்சாளராயும் விளங்குகின்றார்கள். மேலும், இப்பெரும் புலவர் கற்றவழி நிற்கும் பெருஞ்சிறப்பும் உடையவர்கள். நீர் தளும்பலில்லா நிறைகுடம் போன்ற அறிவார்ந்த அடக்கமும், அன்பும், பத்தியும், சமய சமரச நோக்கும், தொண்டிலார்வமும் இவர்கள்பால் திகழ்வது கண்டு, நல்

லோர் பலரும் மகிழ்ந்து இவர்கள்பால் பெருமதிப்பும் நன்றியுணர்வும் கொண்டுள்ளனர்.

இத்தகைய புலவர் பெருமானுக்குத் தமிழ் மக்கள் தங்கள் நன்றியை மணிவிழாச் சமயத்தில் தக்கவாறு தெரிவிக்க வேண்டித் தொடங்கியுள்ள முயற்சி இனிது நிறைவேறவும், அவர் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு தமிழ்த் தொண்டாற்றி மகிழ்வுடன் புவிக்கணியாய் வாழவும், ஏகம்பத்துறை எந்தை இன்னருள் புரிவானாக !

* * *

தொல்காப்பியர் நிலையத்தார்,

[அரக்கோணம்.]

செந்தமிழ்க் கடலின் எல்லையைக் கண்டு
தெளிவுறும் உள்ளமே கொண்டு
பைந்துழாய் மௌலிப் பரமவை குந்தன்
பதமலர் பதித்தநன் னெஞ்சும்
நந்தமி ழன்னைக் கேவல்செய் கரமும்
நாவுந்தன் மாணவர்க் காக
உந்திடு மார்வ வுழைப்பையுங் கொண்டோர்
உயர்திரு வேணுகோ பாலர். 1

தமிழ்க்கரு வூல மாம்பல நூல்கள்
தகுநெறிப் பதிப்பினிற் கொணர்ந்தோர் ;
அமிழ்தினு மினிக்கும் சீவக சிந்தா
மணியின தாழ்புலம் கண்டோர் ;
இமிழ்திரை வைய முள்ளள வுந்தம்
இயற்பெயர் நிலைத்திடப் பலரைத்
தமிழ்ப்பெரும் புலவ ராக்கிய தக்கோர்
சமணர்தம் மதமிகக் கற்றோர் : 2

ஒப்பிலாத் தொல்காப் பியப்பதிப் பொன்றே
உணர்த்துநல் லிலக்கண மேதை ;

செப்பிடும் பாடம் ஒருமுறை கேட்பின்
தெளிவுற அமைந்திடும் என்பர் ;
இப்புவி யிற்சொற் செல்வரா மிவரே
இன்றமிழ்க் குறள்வழி நிற்போர் ;
விற்பனர் மே.வீ. வேணுகோ பாலர்
மேவுபல் லாண்டிவண் வாழி ! 3

திருக்குறள் தொல்காப் பியத்திரு நாள்யாம்
நிகழ்த்திய நாளினிற் பலவாம்
கருத்துகள் செறிந்த சொற்பொழி வளித்தார் ;
கற்கநல் லார்வமுற் றோருக்
கொருதுணை யாமச் சான்றவ ரீங்கே
உற்றபல் வளங்களு மெய்தித்
திருநிறை வாழ்வி லிலகியே வாழ்க
வாழ்கவென் றேத்துதும் சீரே ! 4

உரைபல நூலுக் கெழுதியும் பதித்தும்
ஒண்டமிழ் தழைத்திட வுழைப்போர்
சிரமிசைப் புலவர் கொளத்தகு நல்லோர்
சீரெலாம் பெற்றிவண் வாழ்ந்து
முருகுறை தமிழ்த்தாய்க் கணிபல வழங்கி
முத்தமிழ் முழக்கிடப் பரமன்
அருள்செய நாமும் அவனடி போற்றி
அன்புடன் வாழ்த்துது மினிதே ! 5

* * *

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ மகாசங்கம்

நிலைமண்டிலவாசிரியப்பா

திருவளர் கோதை சிந்தையில் உவகை
பெருகிடத் தன்னைப் பேணிய யாதவ
குலத்தினில் வீரா சாமியுங் கற்பின்
நலம்பெறு பாக்கிய நங்கையும் புரிந்த
5. தவத்தால் தமிழ்த்தாய் சதிர்பெற் றோங்க

அவனியிற் கண்ணன் அவதரித் திட்ட
ஆவணித் திங்கள் ரோகிணி யந்நாள்
யாவருங் களிக்க மேவரும் பேறாய்
உதித்தே உயர்வும் உத்தமப் பண்பும்
மதிப்பிற் கிடமா மாண்புறு செயலும்
ஆற்றலுங் கல்வி அமைதியுஞ் சான்றோர்
போற்றிடுந் தமிழின் புலமையும் மற்றோர்
குற்றம தோராக் கோதறு குணமும்
பற்றறு நிலையிற் பணிபுரி நலனும்
விளங்குறு மே. வீ. வேணுகோ பால !
உளங்கவர் நண்ப ! உரைப்பன கேண்மோ :
இல்லறப் பயனை எய்துதற் பொருட்டு
வல்லநற் சானகி மங்கையை மணந்தே
அறச்செயல் பலவும் ஆற்றி மகிழ்ந்தனை ;
திறமுறும் இரண்டு சேய்களுங் கல்விச்
செல்வம் பெற்றுச் செயல்புரிந் தோங்கி
நல்லியல் போடு நடக்கவும் செய்தனை ;
தமையனார் புதல்வர் தகைசால் கல்வி
அமைவுற் றோங்க ஆவன புரிந்தனை ;
இருமொழிப் புலமை எய்தியுந் தமிழில்
பெருவிருப் புற்றுப் பீடுசால் வகையில்
வித்துவான் பட்டமும் மேவிப் பன்னாள்
புத்தக அறிவுடன் பொதுவிய லறிவும்
பெற்றிட இளைஞர் பெரியவர் தமக்கும்
உற்றநல் லன்புடன் ஊட்டிச் சிறந்தனை ;
மாணவர்க் கானூல் மாண்புற வியற்றியும்
பேணிய நூல்களைப் பிழையறப் பதித்தும்
பொற்புறு பொருள்பொதி சொற்பொழி வாற்றிப்

பற்பல அவைகளிற் பாராட் டெய்தியும்
கச்சியம் பதியினில் மெச்சுறு வகையில்
விச்சையைப் பரப்பி மேன்மை யுற்றனை ;
நூற்பதிப் பிற்கா நுண்ணறி வுனக்குப்
பாற்பட அமைந்தமை பலருநன் கறிவர் ;
உன்னுடை உழைப்பால் உயர்வடைந் தவர்பலர் ;
பன்னரு முறையிற் பயனடைந் தவர்பலர் ;
அடக்கமும் பொறையும் ஆண்மையும் சீலமும்
நடக்கையிற் காட்டு நலமுறப் பெற்றனை ;
சென்னை ஸ்ரீவை ணவமகா சங்கம்
மன்னிய அன்பால் மகிழ்வுடன் நின்னை
மணிவிழா நாளில் வாழ்த்த விழைந்தே
அணிசெயும் பாராட் டளிப்பதை ஏற்று
வாழி வாழி வாழிபல் லாண்டுநீ
ஆழியங் கரத்தன் அருளினுற் சிறந்தே !

* * *

திரு. வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியாரவர்கள்,
[தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணாமலை ஆதீன
விரிவுரையரசு, சித்தாந்தப் புலவர்மாமணி,
பாலகவி, 'செட்டிநாடு' இதழாசிரியர்.]

வாழ்த்து

செந்தமிழ்த்தாய் பெற்றபுலச் செல்வருக்குள் மிக்குயர்ந்தான்
சந்ததமுந் தாய்மொழிச்சீர் தாரணியில்—முந்துநிலை
தொண்டு புரிந்துவக்குந் தூயோன்சிந் தாமணியின்
மண்டுசுவை கண்டுமகிழ் வான். 1

சிந்தா மணிச்செல்வன் செப்புமகா வித்துவான்
நந்தாத் தமிழ்விளக்கா நம்மிடையே—வந்தார்ந்த
வேணுகோ பாலப்பேர் விற்பன்னன் பொற்புடனிங்
காணியாய் வாழ்க அமர்ந்து. 2

நலம் பெருகுக.

பேராசிரியர் கு. மதுரை முதலியார் அவர்கள்,
[சென்னை லயோலா கல்லூரி முன்னாள் தமிழ் விரிவுரையாளர்]

நிலைமண்டில ஆசிரியப்பா

திருமகள் கலைமகள் திருநடம் புரியும்
உருவமை சென்னையில் உயர்ந்தோர் உறையும்
புரசை யென்னும் புண்ணியப் பதியில்
மாதவன் வளர்ந்த மாபெருங் குலத்தில்
வந்து தோன்றிய வேணுகோ பால!
பல்லாண் டென்றெடு பழகிய நண்ப!
கற்பன வற்றைக் கசடறக் கற்று
மாணவர் உளத்தை மாண்புறச் செய்வோய்!
ஆள்வினை யானும் அகலறி வானும்
உனதுநற் குடியை உயர்த்திடு நல்லோய்!
கல்வி யென்னும் கற்புசால் மகளையும்
நன்னூல்க ளென்னும் நன்மக்கள் தமையும்
சொல்வளம் என்னும் துகளிலாப் பொருளையும்
மாணவை அணிசெயும் மாண்பொருள் தனையும்
தவத்தால் பெற்றுத் தனிச்சிறப் புற்றோய்!
மேலும் பலப்பல மேன்மைகள் பெற்று
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணன் அருளால்
பல்லாண்டு பல்லாண்டு வாழிபல் லாண்டே!

*   *   *

வித்துவான், பண்டித, ரா. நடேச நாயகர் அவர்கள்
[சென்னைப் பச்சையப்பர் கல்லூரித்
துணைத் தமிழ்ப் பேராசிரியர்]

இயன்மொழி வாழ்த்து

திருவுடன் கலைகள் சேர்ந்து
திகழ்ந்தொளிர்ந் தோங்குஞ் சென்னை
மருவுநன் புரசை தன்னில்
மாண்புடன் தோன்றிச் சீர்த்த

பெருமையின் வேணு கோபால்
பிள்ளையென் நாமம் பெற்றே
அருமையின் வாழும் நம்பி !
ஆண்டுகள் பலவும் வாழி ! 1

செந்தமிழ்க் கடலின் மூழ்கிச்
செழித்தஜம் பொருளாம் இன்ப
அந்தரத் தமிழ்த மென்னும்
அரும்பயன் முற்றும் ஆர்ந்து
நந்தலில் குணக்குன் றேறி
நல்லொளி எங்கும் வீசிச்
சுந்தரத் துடனே தோன்றும்
தோன்றலே ! என்றும் வாழி ! 2

கற்பன யாவும் முற்றுங் கசடறக் கற்ற பின்றைக்
கற்றதற் கேற்பக் கற்றோர் காமுறும் ஒழுக்கந் தன்னைப்
பொற்புடை உயிரின் ஓம்பிப் பொலியுநல்
லடக்கம் பூண்டு
சிற்பரன் தாளை ஏத்துஞ் சீலனே! சிறந்து வாழி! 3

தரையிடைத் தமிழ்நூல் கற்றோர்
தரித்தநல் லன்பின் யாக்கும்
உரைநடை நூல்கள் தம்மில்
உறுபிழை ஆய்ந்து நோக்கி,
வரையிடை வாய்ப்பக் கொண்ட
மணிகளை மண்ணி யன்ன
உரைநடை சிறக்க யாக்கும்
உண்மைநட் பாள! வாழி !4

'நலமுறு கல்விக் கேற்ற நற்பயன் என்னே?' என்னின்;
பலமுறு பத்தி யோடு பண்ணவன் பதங்கள் போற்றும்
நிலையெனப் பன்மாண் கோயில் நிலையுறத் தோன்றுங்
காஞ்சித்
தலமிசை யின்று வாழ்ந்து தமிழ்மழை பொழிவோய் !
வாழி ! 5

வித்துவான். பூசை. ஆ. நமச்சிவாய முதலியாரவர்கள்
[தலைமைத் தமிழாசிரியர்,
செயின்ட் ஜோஸப்பு உயர்நிலைப்பள்ளி, செங்கற்பட்டு]

தேனென வினிக்கும் மேலாம் செந்தமி ழமுதந் தன்னை
ஊனமே யின்றி யுண்டுன் னுளத்தினில் தெளிந்தி யார்க்கும்
தானமாம் வகையில் நாளும் தயையுடன் ஈத்து வக்கும்
ஞானியே! வேணு கோபால் நம்பியே! வாழ்க வாழ்க! 1

தன்னயங் கருதா திந்தத் தலத்தினில் தமிழைக் கற்க
என்னவர் வருவ ரேனும் இயம்பியே யறிவை யாக்கும்
பின்னமில் புலவ ரேறே! பெருங்குணக் குன்றே! நல்ல
பொன்னென மிளிர்ந்து நன்மை பொற்புறப் பெற்று வாழ்க!

பற்பல தமிழ்நூல் தந்தாய்; பற்பல பதிப்புத் தந்தாய்;
பற்பல புலவர் தந்தாய்; பற்பல்சொற் பொழிவைத் தந்தாய்;
பற்பல ஞானந் தந்தாய்; பற்பனூ லுரைகள் தந்தாய்;
பற்பலர் புகழ விந்தப் பாரிற்பல் லாண்டு வாழ்க! 3

அணிவளர் காஞ்சி தன்னில் ஆர்வமோ டிருந்து மேலாம்
பணிபல தமிழுக் காகப் பரிவுட னுற்றி யிந்தத்
திணிவள ருலகில் ஓங்கத் திவ்வியத் தமிழைக் காக்கும்
மணிவிழாத் தலைவ! வாழி! மால்பதம் மறவாய் வாழி! 4

இன்னமும் அளவில் காலம் இருங்கட லுலகில் வாழ்ந்து
பொன்னவன் எனவே யார்க்கும் புண்ணிய வுரைகள் தந்து
மன்னிய ஒளிகொள் முத்து மாவிழா முதல கொண்டு
சென்னியாப் புலவர் யார்க்கும் திருவுற வாழ்க மாதோ! 5

* * *

சித்தாந்த ஞானபானு
திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்கள் B.A. L.T.,
[பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சீபுரம்]

ஓதுசீர்ச் சிந்தா மணிச்செல்வன் ஒண்டமிழ்சொல்
கோதில்மே. வீ.வேணு கோபாலன்—தீதில்லா
வண்கச்சிக் கச்சு மணிவிழாச் சீர்கொண்டு
பண்புயர வாழ்கவிப் பார்!

வித்துவான் J. P. இராசசேகரனரவர்கள்,

[தமிழாசிரியர், கெல்லட்டு உயர்நிலைப்பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை.]

நிலைமண்டிலவாசிரியப்பா

நீரார் கடலுடு நிலமகள் தனக்குச்
சீரார் திலக மேஎனத் திகழும்
சென்னையம் பதியினிற் சிறப்புடன் வாழ்ந்த
புலவர் திலக மாமெனப் பொலிவுறு
கோவிந்த ராசக் கோமான் தன்னிடம்
அமிழ்தினும் இனிய அழகுறு தமிழின்
அரும்பொருள் ஐந்தும் ஐயம் திரிபறக்
கற்றுத்துறை போகிய குற்றமில் காட்சி
வித்தகக் கவிஞ வேணுகோ பால!
சீர்சால் சேடா சலப்பெரி யோன்பால்
உலக மொழியென உரவோர் போற்றும்
அங்கில மொழிதனை அமைவுறக் கற்றோய்!
விச்சை பயிலும் விழுமியோர் பலரே
நச்சி உறைதரு நலமார் நகராம்
கச்சிப் பதியெனும் கவினுறு புரியினில்
அறிஞர் அனைவரும் அன்புடன் நிகழ்த்துநின்
மணிவிழா மாண்பினை மகிழ்வொடு பெற்றே
ஊழி முதல்வன் உயர் அருள் தன்னால்
ஆழிசூழ் வையத் தான்றசெல் வத்தொடு
வாழி வாழி வாழியர் இனிதே!

திரு. ப. சி. சகந்நாத பிள்ளையவர்கள்,

[கணக்காயர், கழக உயர்நிலைப்பள்ளி, திருத்தருப்பூண்டி.]

மேலவர் முயங்கு மேன்மைசால் இன்பமாம்
சீலமார் முத்தி சேர்நக ரேழனுள்
காசினி யேத்தும் காசிப் பதியின்
மாசறக் கற்றோர் மாண்புறப் போற்றும்
காஞ்சியே வோரிஞ் சுயர்ந்தன்று ; அதுவே
கடல்சூ ழுலகெலாம் காத்த பெருமான்
காடவர் கோன்கழற் சிங்க னாதியோர்
நாவலந் தண்பொழில் பாவலர் போற்றக்
காவல் கொண்டன்று ; கவினிய சைவம்
மறுவறு வைணவம் பொறையொடு வளர்த்தன்று ;
செறுவகல் நெறியில் செந்தமிழ் ஆரியம்
ஒருங்கோம் பின்றே ; ஓதரு மிப்பதி
செய்தவப் பயனாய்ச் சிவணிச் சீர்சால்
மெய்தவழ் தக்கார் மேதகு மெச்சமாய்ப்
புகழொடு தோன்றிப் புகரறு தாய்மொழி
நிகரில் புலமை நேரிதி னாற்றும்
வேற்றுப் புலமொழி வேத்தியல் அங்கிலம்
தேற்றம் பெறுவான் செவ்விதி னெய்தியும்,
அமிழ்துறழ் தமிழ்மொழி இமிழ்திரை வரைப்பில்
கமழ்பெரும் புலமை யமைகுநர் குழாத்துள்
பாயிருள் பருகும் ஞாயி றென்ன
மேவிய சிறப்பமர் மேதை, மே.வீ.
வேணுகோ பால வித்தக ! நீயே,
பன்னருஞ் சிறப்பார் தொன்னூல் பலப்பல
உன்னரு முரையொடு தந்தனை உவந்தே :

கச்சிப் பதியில் கழகம் கண்டே
மெச்சும் புலமை மிகப்பலர்க் குய்த்தனை ;
பொன்மலர் நாற்றம் பொதிந்தாற் போன்றே
சொன்மழை மேடைப் பொழிகுவை நன்றே :
தமிழர் வாழ்வும் தமிழக வரசும்
தமிழ்மொழி யுயர்வான் தழைக்குமென் றுரைப்போய்!
நுண்மாண் நுழைபுலச் சொல்லே ருழவ!நீ
ஐயீ ராறு யாண்டினை இனிதே
எய்தினை நன்றே : இன்றுபோல் என்றும்
மொய்புகழ் உறீஇ முன்னவ னருளால்
மன்னிய ஆயுளும் மல்லலார் திருவும்
வாட்டமில் மெய்யும் ஊட்டமார் உரனொடு
நாட்டமார் சுற்றம் நட்பொடு தழீஇ
வாழ்க!பல் யாண்டு வாழ்க
ஏழ்புவி ஏத்துசெந் தமிழெனப் பொலிந்தே!

*　　　*　　　"

வித்துவான் N. K. சுப்பிரமணியனவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவர், கழக உயர்நிலைப்பள்ளி,
அச்சிறுபாக்கம், செங்கற்பட்டு மாவட்டம்.]

திருமிகு வளமுடைத் தீந்தமிழ் நாட்டில்
சான்றோர் போற்றும் சால்புடைத் தான
மதிவளம் பழுநி மாண்புறப் பொலிந்த
எதிரிலாத் தொண்டை நாட்டகத் தெய்தி
நடுநா யகமாய் நிலவிடும் காஞ்சி ;
அழகின் மிக்க அப்பதி தன்னில்
நன்னெறி மக்களின் நற்றவப் பயனால்
தோன்றிற் புகழொடு தோன்றுக என்னும்
பொய்யா மொழியை மெய்யாக் காட்ட

உலகிற் றேன்றி ஓங்குசீர் நிறுவி
மன்பதைக் குற்ற மயக்கம் தீர்த்தும்
ஆங்கில அறிவும் அமையப் பெற்றும்
முத்தமிழ்ச் சீரினை முறையுடன் ஓர்ந்தும்
இன்முகத் தோடுநல் எழிலுடல் உற்றும்
நன்னூல் பயின்று பன்னூல் தோற்றித்
தன்னலங் கருதாத் தகைமை யாளராய்
இந்நிலந் தன்னில் எழில்மிகு புலவர்
பலரைத் தந்தவர் பராவுதல் செய்யப்
பெற்றிடும் பெரியீர் ! நற்றவப் பேற்றல்
உற்றவர் பலருள் ஒருவன் ஆவேன்
கற்றவர் நற்றவர் மற்றவர் யாவரும்
ஒப்பிலி யெனஉரை உயர்வேணு கோபால்
எனுநற் பெயரை இனிதுறக் கொண்டு
செல்வம் பெற்று நல்வள முற்று
வாழ்க ! வாழ்க ! வான்மணங் கமழ
அரும்பெறல் யாக்கையும் இரும்பே ரொக்கலும்
மாநிலம் போற்ற மக்கள் தம்முடன்
கங்கை நதிபெறு நுண்ணறல் தன்னினும்
பன்னாள் வாழ்ந்திட முன்னி யிறைவனை
எந்நா ளும்மினி திறைஞ்சுவன் யானே !

* * *

கல்விக் கழகம்

புதுவை

நிலைமண்டில ஆசிரியப்பா

தமிழ்தமிழ் என்னும் அமிழ்தத் தண்குரல்
இமிழ்கடல் உடுத்த தமிழக மருங்கினில்
எங்கணும் ஒலிக்க நன்கனம் கேட்குதும்.
தமிழ்ப்புகழ் பேசத் தயங்கிய பல்லோர்

தமிழின் பெயராற் றகுதிபெற் றுயர்ந்தனர்.
தமிழ ரெனச்சொலத் தாம்விரும் பாதோர்
தமிழருட் டமிழராய்த் தழுவின ரின்றே.
இங்கிலை எங்ஙனம் இயைந்த திந்நாள் ?
நன்னர்த் தமிழ்மொழி மன்னிப் பொலிதலான்.
தமிழ்ப்புல வோரும் தமிழ்ப்புர வலரும்
தமிழகத் தில்லெனின் தமிழ்மொழி எங்கே ?
தமிழ்ப்புல வோர்தம் தளரா அணைப்பினால்
தமிழ்மொழி நாட்டினிற் றலைநிமிர்ந் துளதால்.
பள்ளி தன்னிற் பல்வகை யிடர்க்கிடை
அள்ளித் தமிழினை அளித்தனர் புலவோர் ;
வீட்டினும் பாடம் விரும்பிப் புகட்டினர் ;
நாட்டினிற் கழகம் நலமுறக் கண்டனர் ;
பணம்பணம் என்று பதறு துழைத்துப்
புலவர் பலரைப் புகழுடன் ஈன்றனர் ;
செந்தமிழ்க் கொண்டலா யெங்கணும் பரந்து
மன்பதை மகிழ்தமிழ் மழைதனைப் பொழிந்தனர் ;
இறவாப் புகழ்சால் இனிய நூல்களும்
மறவா உரைகளும் வரையா துதவினர் ;
தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து
தமிழிலே உண்டு தமிழிலே உயிர்த்துத்
தமிழிலே நினைந்து தமிழிலே கிடந்து
தமிழே தமிழெனத் தம்முடல் பொருளுயிர்
அனைத்து மதற்கே அளித்தன ரவரே !
அவர்தமை எண்ணின் அகமது மகிழும் !
அவர்புகழ் கேட்கின் அஞ்செவி குளிரும் !
அவர்புகழ் உரைக்கின் அண்ணிக்கும் நாவே !
அவர்தமைக் காணின் அருங்கண் ஒளிரும் !
அவர்தமுள் ஒருவரை அறிமுகம் செய்குவம் :

அவர்தாம் காஞ்சி அமர்பெரும் புலவர்
வேணுகோ பாலராம் வியத்தகு பெரியார் !
தமிழ்ப்புல வரெனும் தகைசால் பெயர்க்கு
விளக்கம் யாதெனின் வேணுகோ பாலரே !
தமிழகம் வாழத் தமிழ்மொழி வாழத்
தமிழ்ப்பெரும் புலவர் தழைத்து வாழ்கவே !

* * *

திரு. A. S. கைலைகுரு அவர்கள்.

[பொன் அழகர் குடில், மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

செந்தமிழ் வளர்த்துத் திறல்மிகு பாவலர்
வந்தணை காஞ்சியின் சிந்தனை விரிக்கும்
பைந்தமிழ் நூல்தெரி பண்பமை ஆசான்
நாவலர் போற்றும் நயனுடை மேலோன்
மே. வீ. வேணு கோபாலன் என்னும்
சிறந்தநற் செம்மல் அறந்திகழ் அண்ணல்
மணிவிழாக் கண்டு மகிழ்ந்தனம் ! வாழ்வில்
பணிபல புரிந்தும் பன்னூல் உரைத்தும்
நூல்பல பதித்தும் நுண்ணுரை வகுத்தும்
வாழ்ந்தவன், மேலும் வாழ்ந்துநம் நாடும்
மொழியும் மாண்புற முகிழ்க்குநல் தொண்டுடன்
செல்வமும் வாழ்வும் செழுமையும் வலிமையும்
நன்கனம் பெற்றுநாள் நாளும் வாழிய !
கண்ணன் திருவடி எண்ணிநன் கேத்தி
வாழ்த்துதும் மகிழ்ந்தே ! வாழி ஊழியே !

வித்துவான் க. ஆ. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள்,
[மணிவிழாவுடையார் மாணவர், தலைமைத்தமிழாசிரியர்,
இந்து உயர்நிலைப்பள்ளி, அரக்கோணம்.]

தேனேந்து மலர்க்கொன்றைச் சடைமுடியும்
நுதல்விழியும் சினந்து வந்த
மானேந்து கரதலமும் மழுவேந்து
மலர்க்கரமும் மாதோர் கூறும்
ஊனேந்து சூற்படையும் அரவணியும்
கரந்தருளி உலகங் காண
வானேந்து புகழ்படைத்த சற்குருவாய்
வருபர!நின் மலர்த்தாள் போற்றி! 1

இப்பிறவி தனிலென்பால் அன்புடையார்
உளரொருவர் என்ன வேண்டின்
செப்பமுற யான்வாழ்தல் வேண்டுவார்
உண்டென்னச் செப்ப வேண்டின்
இப்புவியில் வாழ்வதற்கு வழிகாட்டி
ருரிவரென் றியம்ப வேண்டின்
ஒப்புயர்வில் லாதொளிரெங் குலதெய்வம்
நினையன்றி ஒருவ ருண்டோ! 2

பிழைத்தற்கோர் வழிகாணும் பெற்றிமையில்
நின்றவெனைப் பெருகும் அன்பால்
அழைத்தருகி லிருத்தியருந் தமிழ்நூல்கள்
நினதுரையாம் அமுதந் தன்னில்
குழைத்தளித்துக் கொளக்கண்டு மகிழ்பூத்த
குருமணியே! குறைஒன் றின்றித்
தழைத்தடியேன் இருப்பதற்குக் காரணம்நின்
தண்ணருளின் சார்பே அன்றோ? 3

திருமணியே! தமிழன்னை தவமணியே!
தேசமெல்லாம் சிறக்குங் காஞ்சி

வருமணியே ! மாகடல்சூழ் உலகமெலாம்
உந்திவழி மலர வைகும்
கருமணியின் பெயர்மகிழ்சிந் தாமணியே !
கவிமணியே ! கருதுமெங்கள்
குருமணியே ! நீடூழி வாழ்வாங்கு
வாழ்கவிந்தக் குவல யத்தே ! 4

எழுத்தொடுசொற் பொருள்முதலாம் இலக்கணமும்
இலக்கியமும் இனிது காட்டிப்
பழுத்தபெருந் தமிழ்ப்புலமை பாலித்த
பெருந்தேவே ! பாரோர் போற்றும்
விழுத்தகுசீ ருடைய பிரான் ! வித்தகமெய்ஞ்
ஞானவொளி வீசும் மேலோய் !
செழித்திலங்கு வையகத்துப் பன்னெடுநாள்
இறையருளால் சிறந்து வாழி ! 5

* * *

வித்துவான். G. இராமசாமி முதலியாரவர்கள்,

[தமிழாசிரியர் முனிசிபல் உயர்நிலைப்பள்ளி,
திருப்பத்தூர் வ. ஆர்க்காடு.]

தெள்ளுதமிழ் இன்பத்தில் திளைத்திங் கென்றும்
தெவிட்டாத தமிழ்த்தேனைச் சிறந்த வாக்கால்
அள்ளியள்ளி அனைவர்க்கும் அளித்து மற்றும்
அருந்தமிழில் பெருநூல்கள் ஆக்கித் தந்து
வள்ளுவனுர் குறள்கற்று வளமும் பெற்று
மங்காத புகழ்பெற்று மறதி யற்றுக்
கள்ளமிலாச் செந்தமிழர் நலனை எண்ணிக்
கனிதமிழை நனிபரப்பும் கலைஞர் வாழி ! 1

மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்து போற்ற
மாசில்லாக் கவிவாணர் வாழ்த்துக் கூறச்

சண்முகனூர் தந்தகனித் தமிழே போன்றும்
கருமணலைச் செம்பொன்னைக் கரையில் தேக்கித்

தண்மலரைத் திரைக்கையால் தாங்கிச் சென்று
தமிழகத்தின் வளம்பெருக்கித் தளரா தோடும்
பண்புடைய நல்லாறு பொன்னி போன்றும்
பகர்வேணு கோபாலர் பாரில் வாழ்க ! 2

* * *

வித்துவான் க. சம்பந்த முதலியார் அவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவர், தமிழாசிரியர்,
பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.]

சிந்தா மணிச்செல்வ ! செம்மைசால் நற்பண்ப !
எந்தாய் எழில்வேணு கோபால !—நந்தா
மணிவிளக்கே ! நாயகமே ! மாநிலத்தில் நின்போற்
பணிபுரிந்தார் யாரே? பகர். 1

மன்னுந் தமிழமுதம் மாந்த எனக்கூட்டிப்
பன்னும் புலவனெனப் பண்ணியவா—நின்னை
நினையேனென் றுமல் நினைப்பேனென் பேனேல்
எனையா ரிகழாதா ரீண்டு ? 2

சிந்தை யிருள்கடிந்து சீர்கதியை நல்கினனல்
எந்தைவேணு கோபாலன் ஈரடிகள்—சந்ததமும்
மாறுமல் என்றன் மனத்தகத்தே வைத்தேனல்
பேறே இனியும் பெற. 3

என்னை யாண்டுகொண் டின்றமிழ் நல்கிய
மன்னு சீர்பெறு மாசறு நற்குரு
துன்னும் வேணுகோ பாலனுந் தூயன்றன்
பன்னும் நல்விழாப் பாரிற்சி றக்கவே ! 4

வாழி எங்குரு வையத்தி டைஎன் றும் !
வாழி அன்னுன் வளர்த்திடு செந்தமிழ் !
வாழி தண்டமிழ் தன்னை வளர்ப்பவர் !
வாழி யிவ்விழா வாழ்வுறச் செய்குநர் ! 5

* * *

M. D. மாணிக்கம் அவர்கள், B.A., L.T.

[Retd. Head master & Correspondent,
E. L. M. Fabricius High School.]

என் 75-ஆம் வயதில் நான் பிள்ளையவர்களைப் பற்றி எண்ணுவது இதுவே. 'நல்லவர் !—நலம் மிக்க நல்லார் !' என்பதே எனது கருத்து. நான் கடந்த 30 ஆண்டுகளாகப் பிள்ளையவர்களோடு இணங்கி இருந்துள்ளேன்.

உயர்திரு. பிள்ளையவர்கள் வரம் பெற்ற வித்துவான். அவர் வாலிபராய் இருந்த போது E. L. M. பெப்ரீஷியஸ் உயர்நிலைப் பள்ளியில் 1924-ஆம் ஆண்டு—அப்பொழுது பள்ளித் தலைமை ஆசிரியராய் இருந்த உயர் திருவாளர் M. A. வேதநாயகம் அவர்கள், B. A., L. T., வேண்டுகோளினுல்—தமிழ் ஆசிரியர் பதவி ஏற்ருர். அவர் பதவி ஏற்ற மூன்ரும் திங்களில் தலைமை ஆசிரியர் மாற்றம் பெற்றுச் சீர்காழிக்குச் செல்ல, யான் அவண் இருந்து சென்னைக்கு வந்தேன். பிள்ளையவர்கள் என்னிடம் வந்தார் ; என்னைப் பார்த்தார்; என்னைக் கவர்ந்தார். ("He came ; He saw ; He conquered.") அப்புதுமைக்குக் காரணம் பிள்ளையவர்களின் திறமையோ, எனது ஞானதிருஷ்டியோ, பள்ளியின் அதிருஷ்டமோ, அல்லது இம்மூன்றுமோ என்பதை இதை வாசிப்போரே முடிவு கட்ட வேண்டும். நாளடைவில் பள்ளியை நடத்துவோரும் ஆசிரியர்களும்—மாணவர்களுங்கூட—பிள்ளை

யவர்கள் ஒரு சிறந்த வரம் பெற்ற வித்துவான் என்பதைக் கண்டறிந்தார்கள். அவர் முதல் ஆண்டு தமிழ் கற்பித்த S.S.L.C. மாணவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வீதம் தேர்ச்சி பெற்றனர்.

பிள்ளையவர்கள் வரம் பெற்ற பேராசிரியராய் விளங்கியதுமன்றி, நட்பு, நன்றி, நேர்மை, மிகுந்த சாந்தம் முதலிய நற்குணங்கள் பொருந்தியவர் எனப் பள்ளியின் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் கொண்டாடப்பட்டார். அவர் பள்ளியில் எல்லோருக்கும் சிறந்த நண்பராய் நடந்து வந்ததை நான் கண்டு களித்துள்ளேன். அவர் நன்றி செய்வதிலும், நன்றி உரைப்பதிலும் மிகச் சிறந்தவர். அவருடைய நேர்மையைக் கண்டு மாணவர்கள் தங்கள் குறைகளைச் சொல்லி நல்வழி கண்டு அடைவார்கள். அவரிடத்தில் கோபம் என்பது இல்லை என்று சொல்லலாம். மாணவருள் சில துஷ்டரும் முரடரும் அவரைக் கோப மூட்டி வேடிக்கை பார்க்க விரும்பியும், அவருடைய சாந்தமான பதிலுக்கும் புத்திமதிக்கும் எதிர் பேச முடியாமல் அவருடன் இணங்கி இருப்பார்கள். அவர் ஒரு முறை கூட மாணவர்மேல் புகார் சீட்டு எழுதி அனுப்பியதில்லை. மாணவர்கள் அவர் மிகுந்த சாந்தம் உள்ளவர் என்பதைக் கண்டு அவரைப் பெரிதும் மதித்து வந்தார்கள்; தலைமை ஆசிரியருக்கு அடுத்தபடியாகப் பாவித்து வந்தார்கள். (அடுத்த மேற்படியா அல்லது அடுத்த கீழ்ப்படியா என்று நான் அறிய விரும்பியதில்லை. இதை வாசிப்போரே முடிவு கட்ட வேண்டும்.)

அவர் சாந்தத்தினால் மாணவர்களை நல்வழியில் நடத்தி வந்ததால் பள்ளி முன்னேற்றம் அடைந்தது. அதற்காக இச்சமயத்தில் நான் அவருக்கு நன்றி கூறுவது அவசியம்

ஆகும். இன்றும் அவரோடு இணங்கி இருக்க எனக்கு ஆசை உண்டு.

இன்று என் நண்பர்—தமிழ்ப் பேராசிரியர்—மணி விழாக் கொண்டாடப்படுகிறது. என் உடல் நலக்குறைவு பெருவிழாவை உடனிருந்து காண இடந்தரவில்லை. எனினும், நான் மானசீகமாக அவருடன் இருக்கிறேன்! அவர் மணி விழாக் கண்டு களிப்புறுகிறேன்!

தமிழ் நாடு போற்றும் உத்தமர், நாட்டின் வழி காட்டியாய் இன்னும் பல்லாண்டு விளங்கத் திருவருள் சுரக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை மன மொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேன்.

"Blessed are the meek, for they shall inherit the earth"
—Mathew 5-5

* * *

திரு. T. தொப்பையப்ப முதலியாரவர்கள், B.A., L.T.,

[தலைமையாசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி,
திருத்துறைப்பூண்டி]

முதுபெரும்புலவர் உயர்திரு. மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை அவர்களின் மணி விழாச் சிறப்புற நடக்கவிருக்கின்ற செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சியடை கின்றேன்! புலவர் அவர்கள் உயர்ந்த பண்பும், மிகுந்த அறிவும், ஆற்றலும் பொருந்தியவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவர்களது எளிய வாழ்க்கையும், அடக்க முடைமையும் யாவரையும் அவர்கள்பால் வசியப்படுத்து வனவாகும். அவர்கள் தமிழ் மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும் மிக்கவர்கள்; தமிழ் இலக்கியத்தையும், இலக் கணத்தையும் பலருக்கும் பயிற்றுவித்தும், அரிய தமிழ் நூல்கள் பல எழுதியும், சொற்பெருக்காற்றியும் தமிழுக்

கும் நாட்டுக்கும் அரும்பெருந்தொண்டாற்றி வருகின்ருர்கள்.

அவர்கள் நல்லுடலுடன் நெடிது வாழ்ந்து தாம் மேற்கொண்ட நற்பணிகளைத் தொடர்ந்து ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுகின்றேன்!

* * *

வித்துவான்

பாலூர் து. கண்ணப்ப முதலியாரவர்கள், B.O.L.,

[மணிவிழாவுடையார் மாணவர், தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.]

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்பது வள்ளுவரது திருவாக்காகும். இப்பண்புக்குரிய ஒரு சிலரே அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடப் பெறும் பேறு பெறுதற்குரியவர் ஆகின்றனர். இத்தகைய பேற்றிற்குரியவராய் இன்று அமைந்த பெரியார் என் இயற்றமிழ் ஆசிரியர் உயர்திரு. மகா வித்துவான் சிந்தாமணிச்செல்வர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்கள் ஆவார்கள்.

திரு. பிள்ளையவர்களின் அணுக்கமாணவனும் அமையும் பேற்றினை அடியேன் பல்லாண்டுகள் பெற்றவன். இப்பெருந்தகையாருடன் பழகுங்காலங்களில் இவரது அறிவின் ஆழத்தையும், அமைதியின் நிலையினையும், சிந்தனையின் செம்மையினையும் கூர்ந்து காணும் வாய்ப்பினைப் பெற்றேன். திரு. பிள்ளை அவர்கள் எழுத்திலும் பேச்சிலும் திறம் படைத்தவர்கள்; ஆங்கில அறிவும் அமையப் பெற்றவர்கள். திரு. பிள்ளை அவர்களின் நுண்மாண்

அறிவினைக் காண விழைபவர், அவர்கள் பதிப்பித்துள்ள நூல்கள் வாயிலாகத் தெள்ளத்தெளிய அறியலாம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் நச்சினுர்க்கினியர் உரையையும் இறையனுர் களவியல் உரையையும் இவர்கள் பார்வையிட்டுப் பதிப்பித்த காரணத்தால் அவை செம்மையுற்றன எனல் மிகையன்று. ஏடெழுதுவோரால் நேர்ந்த சிக்கல்கள் பலவற்றை இவரது பதிப்பு நீக்கியது என்பது இப்பதிப்பையும் ஏனைய பதிப்பையும் உடன் வைத்து ஒத்திட்டுப்பார்க்குங்கால் நன்கு புலனுகும். இது உண்மை; வெறும்புகழ்ச்சியன்று.

உரை நடை நூல்களை எழுதுவதிலும் திரு. பிள்ளையவர்கள் உயர்ந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திருக்கண்ணபிரானுர் துருவன் போன்ற நூல்களை இயம்பலாம். நவீனம் எழுதுவதிலும் நன்கு தேர்ந்தவர் இப்பெரியார் என்பது இவர் எழுதியுள்ள அம்பலவாணன், இளங்கோவன் என்னும் அரிய நூல்களைக் கொண்டு அறியலாம். செய்யுள் செய்வதில் செம்மை சான்ற பேரறிவு படைத்த பெருமையும் இப்பெரியார்க்கு உண்டு.

இன்னேரன்ன அறிவும் பண்பும் அமைந்த திரு. பிள்ளை அவர்கட்கு மணிவிழா நடைபெறுவதைக் கேட்டு யான் பெருமகிழ்வு கொண்டனன்! இவ்விழாவின் போது அறிஞர் பலர் ஆசி வழங்குங்காலத்து அடியேனுக்கும் என் இயற்றமிழ் ஆசிரியருக்கு ஆசி வழங்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக யான் பெரிதும் களிக்கின்றனன்! யான் வாழவே என் ஆசிரியர்க்கு ஆசி வழங்குகின்றனன். பெரியோர்களைச் சிறியோர்கள் வாழ்த்துவதும் வணங்குவதும் தாம் வாழவே ஆகும் என்பது மணிமொழியாருடைய கருத்தாகும். திருவாதவூரடிகள்,

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெலாம் தொழவேண்டிச்
சூழ்த்தமது கரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

என்று பாடியருளியதைக் காண்க. ஆகவே, யானும் என் இயற்றமிழ் ஆசிரியராம் திரு. பிள்ளையவர்களை, திருமால் மரபுக்கேற்ப 'மணவாள மாமுனியே, இன்னம் ஒரு நூற்றுண்டிரும்!' என்று வாழ்த்தி, என் ஆசிரியப் பெருந்தகையார் பல்லாண்டு பல்லாண்டு இப்பாரினில் பொலிந்து நல்லுடலும் நல்வாழ்வும் பெற்றுத் திகழ அருள் புரிய யான் வழிபடும் முழுமுதற்பரம்பொருளாம் அம்மையப்பன் அணியார் திருவடிகளை,

மிண்டு மனத்தவர் போமின்கள்
    மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி யீசற்
    காட்செய்மின் குழாம்புகுந்து
அண்டம் கடந்த பொருளள வில்லதோர்
    ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்றும் என்றும்உள்ள பொருளென்றே
    பல்லாண்டு கூறுதுமே.

என்று பல்லாண்டு பாடிப் போற்றிப் பணிகின்றனன்.

* * *

திரு. ச. கணேசனார் அவர்கள்,

[செயலாளர், கம்பன் கழகம், காரைக்குடி]

பொன்னி நதிக்கரையில் புகழ் மணக்க வந்துதித்த தமிழ்க்கோர் கவிச்சக்கரவர்த்தியாம் கம்பனுக்குப் பெயர் தந்த பெருமான் திருக்கோவில் கொண்டருளும் காஞ்சி புரம் எத்தனையோ காரணங்களால் சிறப்புற்று விளங்குவ தாகும்.

மொழிக்கும், கலைக்கும், சமயத்திற்கும், சாத்திர தத்துவ ஆராய்ச்சிக்கும் அரும்பணியாற்றி அடி நாளி லேயே பெரும்புகழ் படைத்தொளிருவது கச்சியம்பதி. இன்றும் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களைப் படைத்திருப்பதாலே தனது பழம் பெருமையைக் காத்துக்கொண்டுமிருக்கிறது.

சிந்தாமணிச் செல்வர் பதிப்பித்த பல நூல்களை நோக்கிய போது அவர்களின் முறையான கல்விப் பயிற்சி யும், ஆழ்ந்த புலமையும், நேரிய நோக்கும், கூரிய மதிநல மும், சீரிய பண்பாடும் நன்கு புலப்பட, 'ஆண்டாலும் முதியவராய் இருத்தல் வேண்டும் இவர்,' என்று எண்ணி னேன். ஆனால், நேரில் கண்டதும், 'இந்த இளைஞரையா முதியவர் என்று கருதினோம்!' என்று வியந்தேன்.

காட்சிக்கு இளைஞராய்க் கருத்திற்கு முதியராய் விளங்கும் இவர்கள், இன்றுபோல என்றும் இருக்க அருள் புரிக என்று நல்லன்பர் பல்லோருடன் நானும் கலந்து நின்று ஆண்டவன் திருவருளை வேண்டுகின்றேன்!

வாழ்க மே. வீ. வே! வளர்க அவர் பணி!

* * *

திரு. க. அன்பழகனார் அவர்கள், M.A.,

[பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.]

பெரும்புலவர் உயர்திரு. மே. வீ. வேணுகோபால ரின் 'மணி விழா'வை அறிந்து மகிழ்கிறேன்! அவர் களது புலமைத்திறனும், செந்நா வன்மையும், ஆய்வுத் தெளிவும் புலவர் பெருமக்களாலேயே போற்றப்படுவன வாகும். அவர்களின் தமிழ்ப்பற்றும், தொண்டுள்ளமும், உயர்நோக்கமும் இளம்புலவர்கட்கெல்லாம் ஓர் எடுத் துக்காட்டு. பெரும்புலவராகிய அவர்களைச் 'சிந்தா

மணிச் செல்வர்' என்று குறிப்பதினும், இற்றைத் தமிழ்ப் புலவர்கள் 'உச்சி மேற்கொள்ளும் சிந்தாமணி' என்பது பொருந்துவதாகும்.

நல்லியல்புகள் நிறைந்த அப்பெரியாரிடம், பல ஆண்டுகளாகவே அறிந்து பழகும் வாய்ப்புப் பெற்றமையை எண்ணி இறும்பூது எய்துகிறேன்! அவர்தம் நல்லியல்புகளை நாட்டு மக்கள் பின் பற்றி உயர்வடைய விரும்புகிறேன்.

புலவர் பெருந்தகை, பேரும் புகழும் சிறக்கத் தொண்டும் நோக்கமும் வெற்றியுறப் பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றேன்!

* * *

திரு. K. பாண்டுரங்கம் அவர்கள், B.A., B.L.,

[திருத்துறைப்பூண்டிக் கூற்றம் - சில்லா முனிசீப்பு]

பெரியீர்,

"தமிழே எமது உயிர்; தமிழ்த் தொண்டே எமது உயிர்ப்பு; தமிழ் முன்னேற்றமே எமது அரும்பணி; தமிழக வாழ்வே எமது இலட்சியம்," என்ற குறிக்கோளால் பிணைப்புண்டு சென்ற முப்பது யாண்டுகட்கு மேலாகச் சென்னைக் கல்வி நிலையங்களில் தமிழ் பயிற்றும் பேராசிரியராகவும், பின்னுளில் காஞ்சிக் கழகம் கண்டு தமிழ்ப் புலமையைப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டார்க்கும் உய்த்து, அல்லும் பகலும் அயராதுழைத்து, தமிழ் மொழி வளர்த்த புலவர் பெருந்தகையாய நீவிர் அறுபதாவது யாண்டுற்றது மகிழ்ச்சிக்குரித்தே! நீவிர் இன்னும் பலப்பல யாண்டு நோயற்ற வாழ்வுடன் இனிது வாழ்ந்து தமிழ்ப்பணியும் தமிழக வாழ்வும் செம்மையுறச் சிறந்து திருவெய்தி வாழத் திருவருள் சுரக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இனிது இறைஞ்சுகின்றனன்!

* * *

திரு. ச. சிவகுமாரனுரவர்கள், M.A.,

[பின்னி கம்பெனி, சென்னை.]

தமிழ் மொழிப் பயிற்சிக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஒல்லும் வகையெல்லாம் அல்லும் பகலும் தொண்டாற்றிவரும் முதுபெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் பெருவாழ்வு வாழ்வார்களாக !

* * *

திரு. S. N. சொக்கலிங்கம் அவர்கள், M.A.

[தமிழ்த்துறைத்தலைவர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை]

திரு. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் பண்புசால் பெரியார் ; அஃகி அகன்ற அறிவும், நுண்மாண் நுழை புலமும் சான்ற நூல் வலார் ; தமிழ்த் தாய்க்கு நல்லணி பல புனைந்த நற்றமிழ்த் தொண்டர். அவர் பல்லாண்டு பாரினில் சிறந்து வாழ, வாலறிவனை வழுத்துகின்றேன் !

* * *

நான் கண்ட நல்லாண்மைத் தமிழ் மகனுர் !

திரு. கு. மு. அண்ணல்தங்கோ அவர்கள்,

[உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவை அமைப்பாளர், வேலூர்.]

தமிழ்ப் பெரியார், உயர்திரு. மே. வீ. குழற்கோமான் அவர்கள், ஆண்டுதோறும் தைத்திங்களில் உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவையின் சார்பில் வேலூரில் யான் நடத்தி வரும் தமிழ்த்திருநாட்பேரவைக்கு இரண்டு முறை தலைமை தாங்கித் தமிழ் மழை பொழிந்தார்கள் ! அத்தமிழ் மழையின் இனிய ஒலியைக் கேட்டு அதன்

சுவையை உண்டு மகிழ்ந்தனன். மற்றும், அப்பெருந் தகையாரை என்று கண்டேனே, அன்று முதல் அவர்களை என் அருமைத் தந்தையார் போலவும், அன்புத் தமையனார் போலவும், தனித்தமிழ்க்காக்கம் அளித்துக் காக்கும் பேரரண் போலவும் நினைத்துப் பெருமகிழ்ச்சிப் பெருமிதம் அடைந்து வருகின்றேன்!

வேலூரில் அண்மையில் வேங்கடேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் ஆண்டு 2512 புரட்டாசி 15ல் (30-9-56) இத்தமிழ்க்காவலர் தலைமையில் நடந்த வடாறுகாட்டு மாவட்டத் தமிழ்ப் புலவர் மாநாட்டுப் பேரவையில் இவரது தலைமையுரை என்னை மகிழ்வித்தது.

அது வரை யான் சொல்லாண்மை மிக்கவர் நம் புலவர்தங்கோ மே. வீ. குழற்கோமான் என்று எண்ணியிருந்தேன்! ஆனால், இவர் சொல்லாண்மை-இல்லாண்மையிற் சிறந்த நல்லாண்மைத் தமிழ் மகனார் என்று அன்று வேலூரில் கண்டேன்; ஆறுதல் கொண்டேன்! எனவே, என்னருந்தமிழ்த்தாயே! நீ உலகில் தலை நிமிர்ந்து தனித் தமிழரசு நடத்துவாயாக! நீ இனிது வாழ்வாயாக! உலகினைத் திருக்குறள் அறம் கொண்டு ஆள்வாயாக! உனது நல்லாண்மைத் தமிழ் மகனார் உயர்திரு. மே. வீ. குழற்கோமான் நீடூழி வாழ்வாராக! வாழ வழி செய்வாயாக! உனது தமிழ்க்கொடி உலகெங்கும் ஓங்கிப் பறப்பதாக! வணக்கம்! வாழ்க தமிழ் நிலம்! வளர்க திருக்குறள் அறம்! எழுக தமிழ் நிலப் பேரரண்! முயற்சி திருவினை ஆக்கும்.

* * *

திரு. டாக்டர் சேலம் முத்து நமசிவாயம் அவர்கள், L.I.M.

சென்னையில் நான் மருத்துவப் பள்ளி மாணவனாயிருந்த ஞான்று புலவர் பெருமான்பால் அறிவமுதை

அள்ளியள்ளிப் பருகிப் பயன் பெற்றேன்! சென்னைப் புரசைக் கம்பர் கழகத்தில் அவர் மாட்டும், அவருடைய ஆசிரியர் பெருமான் மகாவித்துவான் கா. ர. கோவிந்தராச முதலியார், கு. மதுரை முதலியார், அருணசல தேசிகர் முதலியவர்கள் மாட்டும் முறையாகப் பாடங்கேட்கும் வாய்ப்பைப் பெற்றேன்; பல பேரறிஞர்களின் நட்பையும் பெற்றேன். பிள்ளையவர்களுடைய ஆசிரியத் தொடர்பை ஏற்படுத்திய சென்னைப் புரசைக் கம்பர் கழகத் தலைவர் கெழுதகை நண்பர் இ. சடகோப முதலியார் முதலியவர்களுடைய பண்பு மறக்க முடியாதது.

பிள்ளையவர்கள் அன்போடும், அமைதியோடும், ஆதரவோடும், தெளிவுபடும்படி பாடஞ்சொல்லும் முறையை நினைந்து நினைந்து மகிழ்கின்றேன்! மகிழுங்கால் ஆசிரியருடைய இனிய பேச்சும், எளிய உருவும், ஆன்றமைந்தடங்கிய பண்புசால் வாழ்க்கையும் என் நெஞ்சத்தினின்று என்றும் நீங்காது முன்னின்று வழி காட்டும். பிள்ளையவர்களின் திறமை ஆராய்ச்சித் துறையிலும், உரை எழுதும் வகையிலும், பதிப்பிக்கும் முறையிலும், இன்னும் பல நிலையிலும் தலை சிறந்தது.

பிள்ளையவர்கள் எனக்கும், தமிழினத்திற்கும் வழி காட்டியாய் ஆண்டுகள் பல ஒளியுடன் திகழ்ந்து, புகழோங்கி வாழ வேண்டுமென்று இறைவனை நினைந்து வழுத்துகின்றேன்!

* * *

திரு. K. S. சீனிவாசாசாரியாரவர்கள், B.A., L.T.

[தலைவர், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை]

உயர்திரு. மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். ஆழ்ந்த தமிழறிவும், சிறந்த நூற்பயிற்சியும், உயர்ந்த பதிப்பிக்கும்

ஆற்றலும் கொண்ட திருவாளர் பிள்ளை அவர்களுக்கு அண்மையில் மணிவிழாக் கொண்டாடுவது பொருத்தமே. தமிழுலகம் நலம் பெற, அவர்க்கு இன்னும் நீண்ட ஆயுளும், திடகாத்திரமும், பல நலனும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை ஏத்துகின்றேன்!

* * *

A. T N. நாகலிங்கம் கம்பெனியார்,

[பதிப்பாளர், புதுமண்டபம், மதுரை.]

மகாவித்துவான் பிள்ளை அவர்களுடைய தமிழ்த் திறனைத் தமிழ் நாடு நன்கறியும். அவர்கள் சென்னையில் பிறந்து, தமிழையும் ஆங்கிலத்தையும் ஒரு சேரக் கற்று, சென்னையில் பல ஆண்டுகள் தமிழ்த்தொண்டு செய்து, இப்பொழுது காஞ்சியில் சிறந்த தமிழ்த்தொண்டு புரிந்து வருகிறார்கள். இப்பொழுது வெளி வரும் பல தமிழ் நூல்களில் நிறையப் பிழைகள் திகழ்வதைக் கண்டு அவர்கள் அடிக்கடி வருந்துவதுண்டு. ஒருவாறு இப்பொழுது வெளிவரும் பல பாட புத்தகங்களையும், பொது நூல்களையும் அவர்கள் பிழையறச் செய்து கொடுத்துத் தொண்டாற்றுகிறார்கள். அவர்கள் பேச்சிலும் அவர்கள் தொனி ஒரு தனிச் சிறப்பை உடையது. நம் பிள்ளையவர்கள் இனிய பண்பினர்; எளிய தோற்றமுடையவர்கள்.

நிறைந்த புலமையும், சிறந்த ஆராய்ச்சியும் உடைய நம் பிள்ளையவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் சிறந்த தொண்டு புரிய இறைவனை இறைஞ்சுகின்றோம்!

* * *

திரு. H. இராமசந்திரனார் அவர்கள், M.A.

[உதவிப் பதிப்பாசிரியர், 'கரண்ட் ஸயன்ஸ்'
(Current Science) சென்னை-25.]

தமிழ் நூல்களை வளம்படத் திருத்தி, பொலிவுடன் பதிப்பிக்கும் துறையில் பிள்ளையவர்கள் ஆற்றி வந்திருக்கும் பணி ஈடற்றது. இதை உள்ளபடி உணர்ந்து, பிரசுர கர்த்தர்களும் பொதுமக்களும் அவரது 60-ஆம் ஆண்டு நிறைவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட முன் வந்திருப்பது நாட்டுக்கே இனிய செய்தியாகும்.

ஏனெனில், பதிப்பாசிரியருக்கு அமைய வேண்டிய பண்புகள் ஒன்றிரண்டல்ல; பொறுப்புக்களும் எல்லையற்றவை. மொழியில் நல்ல தேர்ச்சி, கல்வி இலாக்காச் சட்ட திட்டங்களைப்பற்றித் தேர்ந்த அறிவு, நூலாசிரியர்களிடம் மனமார்ந்த உள்ளன்பு, பிரசுரகர்த்தர்களுடன் ஒத்துழைக்கும் மனப்பான்மை, அச்சுக்கூடங்களில் பணியாற்றுபவரிடம் ஆழ்ந்த இரக்கம்—இவை அனைத்தும் பிள்ளையவர்களிடம் மிளிர்வதை அவருடன் நெருங்கிப் பழகிய ஒவ்வொருவரும் உணர்ந்தவராவர்.

இத்தகைய பதிப்பாசிரியர் ஒருவர் தக்க சமயத்தில் தமிழகத்துக்கு வாய்த்தது மிக அரிய வாய்ப்பாகும்! எனவே, அவர்தம் ஆற்றல்களை மேன்மேலும் பயன்படுத்திக்கொண்டு முன்னேற்றமடைய வேண்டுவது தமிழ் மக்களது பொறுப்பாகும். இது செய்தற்கு வேண்டிய ஆர்வத்தையும் நல்லெண்ணத்தையும் ஆண்டவர் நமக்கு அருள் புரிவாராக!

* * *

திரு. ராம. மு. சோம. முத்தப்ப செட்டியாரவர்கள்,
[பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி P.O.]

தமிழன்னைக்குத் தளராது தொண்டாற்றி வரும் மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் மணி விழாக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது பற்றி அளவிலா மகிழ்வெய்துகிறேன் ! தமிழ் ஆர்வம் கொண்டு தம்மை வந்தடைந்த மாணவர்கட்குக் கன்னித் தமிழின் சுவை காட்டிய பெருமை மகாவித்துவானையே சாரும். மகாவித்துவான் அவர்கள் பன்னெடுங்காலம் நலமே வாழ்ந்து தமிழன்னைக்குத் தொண்டாற்ற நீண்ட ஆயுளையும் செல்வத்தையும் அருளுமாறு இறைவனை இறைஞ்சுகிறேன் !

* * *

திரு. வி. கண்ணப்பிள்ளை அவர்கள்,
[அறுவை வாணிகம், காஞ்சிபுரம்.]

நான் கண்ட புலவர் மகாவித்துவான் மே. வீ. வே. அவர்கள் ஆங்கில அறிவும் அழகிய தமிழறிவும் ஒருங்கே நிறைந்து அன்பே உருவான தோற்றமும் அமைதியே குடிகொண்ட பரிசுத்தமான உள்ளமும் அமைந்து ஒழுக்க நெறியில் சிறிதும் தவறுமல் தாம் கண்ட உண்மைகளையும் தமிழறிவையும் பிறருக்குத் தெள்ளத்தெளிய எடுத்துக் கூறி அதனுல் அவர்களடைந்த இன்பத்தைத் தாமடைந்ததாகக் கருதிப் பெருமகிழ்வெய்துபவர். தமக்குப் பிறர் இடையூறு செய்வதையும் பொருட்செய்யாமல் மீண்டும் அவர்களுக்கு நன்மை செய்வதில் அவருக்குச் சமானமானவர்யாரும் இல்லையென்று சொல்லக்கூடிய ஒப்புயர்வுற்ற உயர்ந்த பண்புள்ளவர் அவர். அவர்களை யான் ஒப்பற்ற ஒரு பிறவியென்றே கருதுகின்றேன்.

* * *

வித்துவான் ச. சீ. அனந்தசயனனுர் அவர்கள்

[மணிவிழாவுடையார் மாணவர், காஞ்சி]

கல்வியைப்பற்றி விளக்க வந்த அரசர் பெருமான் பாண்டியன் நெடுஞ்செழியன், ஆசிரியரிடம் மாணவன் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப்பற்றி,

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே."

என்று விளக்கியுள்ளார்.

ஆசிரியருக்கு வேண்டுமிடத்துக் குறிப்புணர்ந்து உதவி செய்தல் மாணவன் கடமை என்பதை விளக்க விரும்பிய அரசர், "உற்றுழியுதவியும்," என்று சுருங்கக் கூறினர்.

ஆனல், எங்கள் ஆசிரியர் பெருமான் தமக்கென்று எதையும் மாணவர்பால் எதிர் பாராத தகைமைசால் உள்ளம் படைத்தவர். மாணவர் வருந்துவதைக் காண விரும்பாது அவர்தம் கருணையுள்ளம். நாள்தொறும் அவர் சுமந்து செல்லும் பையையும் குடையையும் சிறிது நேரமாவது வைத்திருக்கும் வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்கிய மாணவர் உள்ளம் பலவாகும். ஆனல், அவ்வாறு இச்சிறு செயலையும் மாணவர்கள் செய்ய ஒரு நாளும் ஒருப்படார் எம் ஆசிரியர்.

ஆசிரியருக்கு வேண்டுங்காலத்து மனமுவந்து தேவைக்கு அதிகமான பொருளைச் செலுத்துதல் வேண்டும் என்பதனைத் தெரிவிக்க வந்த மன்னர் பிரான், "உறுபொருள் கொடுத்தும்," என்று அழகாக எடுத்துரைத்தார். நம் பெரியாரோ, மாணவனுக்கு வேண்டிய நூல்களை முன்னர்த் தம் செலவில் வாங்கிக்கொடுத்துவிட்டு, பின்னர் நிதானமாகப் பெற்றுக்கொள்ளும் இயல்புடை

யவர். நம் ஆசிரியர் மனநிறைவுக்கு அவர் பொருள் நிலையை ஒப்பிட்டு நோக்குங்கால், நமக்குத்தான் அது குறைவாகத் தோன்றுகிறது! ஆனல், அவருக்கு அப் படியா? 'போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து,' என்பது அவர்தம் சீரிய கொள்கை. உறுபொருள் என் பதைச் சற்று மாற்றிச் 'சிறு பொருள்' கொடுத்தாலும் அதை வாங்க விரும்பார்.

அடுத்துப் 'பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே,' என்ருர் புவியாண்ட கவி மன்னர். ஆனல், எங்கள் ஆசிரியரோ, எங்களில் எவரையும் தம்மைப் பின் தொட ரும்படி எப்பொழுதும் கூறியதுமில்லை; நினைத்ததுமில்லை.

'அவ்வாருனல், உங்கள் ஆசிரியர் உங்களிடம் எதனை யும் எதிர் பார்க்கவில்லை போலும்!' என்று நினைத்துவிட வேண்டா; மிகப்பெரிய காணிக்கையொன்றை எதிர் பார்க்கிருர்.

"வித்துவான் பட்டம் பெற்றீர்கள்; அதனைக் காற்றில் பறக்கவிடும் பட்டமாக்காதீர்கள்: மேலும் மேலும் பயின்று தக்க அறிவைப் பெருக்கிக்கொள்ளுங்கள்: பிறருக்கும் வழங் குங்கள். வழியில் கேட்ட ஐயத்திற்கு 'வீட்டில் விடை' என்னுதீர்கள். தக்கவாறு பொருளுணர்ந்து கேட்பார் ஐயமற வெளியிடுங்கள்."

என்பது அவர்கள் எங்கட்கு இட்டுள்ள கட்டளை.

இக்காணிக்கையை யாங்கள் சிறப்புறச் செலுத்த வும், அன்னுர் நெடுங்காலம் இருந்து எங்கட்கு வாழ்த்துக் கூறும் வாய்ப்பை நாங்கள் பெறவும் அன்பர்களும் பெரி யார்களும் வாழ்த்தியருளுமாறு வேண்டி, இறைவனையும் இறைஞ்சுகின்றேன்!

* * *

வித்துவான் அ. கி. இரத்தினவேல் முதலியாரவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவர், தமிழாசிரியர்,

மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளி, உத்தரமேரூர்.]

செல்வம் கொழிக்கும் சென்னையம்பதியிலிருந்து இவண் போந்து எம்மனோரை உய்வித்த ஆசிரியர் பெருமான் மணி விழாச் செய்தியறிந்து மகிழ்கின்றேன்! ஆசிரியர் கற்றோர் குழுமிய கச்சியம்பதிக்குச் சுமார் பதினைந்து யாண்டுகளுக்கு முன்னர் வந்து இங்குள்ளாருக்குத் தமிழார்வம் எழச்செய்தார். அவரது வருகையால் எங்களூரில் இன்று தமிழ் மணம் கமழ்கின்றது. அவர் பலருக்குப் பாடம் சொல்லித் தமிழில் ஊக்கமும் ஆர்வமும் அடையச் செய்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்படும் வித்துவான் தேர்வுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்தி, மாணவர் பலரைத் திறம் பெறச் செய்து, தேர்விலும் வெற்றி பெறுமாறு செய்துள்ளார்.

ஆசிரியரவர்கள் பாடம் சொல்லும் முறையே தனியானதொரு சிறந்த முறையாகும். அவர் மாணவர் உள்ளம் அறிந்து, உணரும் வகை ஆராய்ந்து, பாடம் சொல்லும் திறன் எம்மால் செப்புந்தரத்ததன்று. ஒருவமையை விளக்குங்கால் ஆசிரியர் தம் அனுபவத்திற்கண்ட நிகழ்ச்சியைக் கூறி விளக்கி, அது என்ஞான்றும் மாணவர் மனத்தில் பதியுமாறு செய்யும் அருந்திறல் கொண்டவர் என்பது மிகைபடக்கூறல் ஆகாது. இதுகாறும் யான் யாரிடத்தும் காணாத பொறையுடைமை ஆசிரியர்பால் அமைந்துள்ளது.

ஆசிரியர் பாடங்கற்பிக்கும் தொண்டோடு பதிப்புத் தொழிலிலும் புகுந்து, மாணவர்களுக்குரிய தமிழ்ப்பாடபுத்தகங்களைப் பதிப்பித்தும், பல அரிய குறிப்புகளை

எழுதியும், புத்தகங்களைச் சீரிய முறையில் வெளியிட்டு வருகின்றார்.

தமிழ் நாட்டில் ஆசிரியர் இமயத்தின் உச்சியிலிட்ட விளக்கெனத் தமிழர்க்கும் தமிழுக்கும் பணி பல புரிந்து விளங்குகின்றார். "தமிழ் நாடு வேண்டும்; தமிழ் ஆட்சி ஆக வேண்டும்," என்றெல்லாம் பேசப்படும் இந்நாளில் ஆசிரியரைப் போன்ற இரு மொழி அறிஞர் தொண்டு பெரிதும் வேண்டப்படுவதொன்று. ஆசிரியர்தம் ஊக்கமும் ஆர்வமும் மேன்மேலும் வளரவும், உடலுறுதியுடன் பிணியின்றிப் பாலாற்று எக்கர் மணலினும் அவர் பல்லாண்டு வாழவும் திருவருள் புரிய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்!

* * *

திரு. மே. பெ. கோதண்டபாணி

[கன்னிமாரா நூல் நிலையம், சென்னை]

எம் குல விளக்கே! வாழ்க!

நிலைமண்டில ஆசிரியப்பா

தமிழ்ப்பெரும் புலவீர்! மணிவிழாத் தலைவீர்!
எம்குல விளக்கே! ஏத்துவோம் இன்றே!
எம்மருங் குடியில் இணையிலா ஏறே!
வாழ்த்துவம் நும்மைநும் மணிவிழாத் தனிலே!
யாதவ குலஞ்செய் மாதவப் பயனாய்
வேணுகோ பாலன் எனும்பெயர் விளங்க
எம்முறு தந்தையார்க் கிளவலாய்த் தோன்றிப்
பெற்றவர் மகிழவும் மற்றவர் போற்றவும்
எளிய வாழ்விலும் ஏற்றமார் குறிக்கோள்
பாங்குடன் பெற்றுப் பளகறு முறையில்

‘ அந்தணர் என்போர் அறவோர் ’ என்னும்
வள்ளுவர் வாய்மொழி வழியினில் நின்ற
சேடா சலம்எனும் செம்மலே முதலாம்
நல்லார் பலரை நாடி நலம்பெற
ஆங்கிலம் அருந்தமிழ் அமைவுறக் கற்றீர் ;
கோவிந்த ராசராங் கோதறு புலவர்
தண்டமிழ் நெறியைத் தகவுறக் காட்ட
இலக்கிய இலக்கணம் எழிலுறக் கற்றீர் ;
வித்துவான் பட்டமும் விளங்கப் பெற்றீர் ;
தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளராய்த்
தந்தைதாய்ப் பேணித் தாரணி யிதனில்
சோதரர் மக்கள் தோமற விளங்கக்
கல்விகற் பித்துக் கனிவுடன் வளர்த்து
வாழ்வாங்கு வாழ வழிதனைக் கோலினீர் ;
கல்வியும் முடித்தேன் காலமும் வந்தது ;
உம்மடி பற்றி உயர்தமிழ் பயின்றேன் ;
பள்ளியில் உம்முடன் பழகி மகிழ்ந்தேன் ;
வாழ்வில் உம்முடன் வகையுட னிருந்து
‘ தந்தையார் இவர்’ எனத் தக்கோர் புகலப்
பழகும் பேற்றினைப் பண்புறப் பெற்றேன் ;
புத்தகம் போற்றவும் புலத்துறை பயிலவும்
செய்யும் கருமம் திருந்தச் செய்யவும்
பயன்கரு தாதுநற் பணிகள் ஆற்றவும்
உம்மிடங் கற்றேன் ; உயர்வுறப் பெற்றேன் ;
அறிவினை விளக்கும் அருங்கலை நூல்கள்

தன்னகங் கொண்ட கன்னிமா ராவெனும்
நூனிலை யந்தனில் யானிலை பெற்றேன் ;
'புலவர் சிகாமணி இவர்'எனப் போற்றச்
சிந்தா மணியுரை சிறப்புடன் உரைத்தீர் ;
பேரும் பெருமையும் பிறங்கிடப் பெற்றீர் ;
'நான்பெற்ற செல்வம் நலமான செல்வம்'
என்றே உம்மை இந்நாள் விழைவுடன்
கோதண்ட பாணி குறைவற வாழ்த்தும்
மணிவிழா வாழ்த்தை மகிழ்வுட னேற்றீர் ;
இந்நாள் போலப் பன்னாள் இருந்தெம்
அறிவினை விளக்கி ஆற்றல் அளிப்பீர் !
வாழ்க நுங்கலை ! வாழ்க நுந்தமிழ் !
எங்குல விளக்கே ! எழில்பெறு மணியே !
வாழ்கபல் லாண்டு வழிவழி சிறந்தே !

வித்துவான் A. G. இராமசாமி அவர்கள்,
[நகராண்மைக் கழகப்பள்ளி, சைதாப்பேட்டை]

தமிழ்ப்பணியே தவப்பணியாக் கொண்டு நாளும்
தமிழ்ப்பாடங் கற்பித்துந் தமிழ்நூல் யாத்தும்
அமிழ்தினுநல் லறவுரைக ளாங்காங் கீந்தும்
அரிதிருமா லடியேத்தி யறுபா னாண்டும்
அமைதியுட னரும்பணிகள் பலவுஞ் செய்திங்
கரியசட்டி பூர்த்திவிழா வதனை யேற்கும்
விமலனே வேணுகோ பாலக் கோவே !
வியன்புவியில் பல்லாண்டு வாழ்க நன்றே !

* * *

திரு. அரங்க. சீனிவாச முதலியாரவர்கள்,
[மணிவிழாவுடையார் மாணவர், நகராண்மைக்கழகம், கச்சியம்பதி].

ஒருவரை அறிவுக்காக மதிப்பதைவிட, அவரது ஒழுக்கத்துக்காக மதிப்பது சிறப்பு என்பது என் கருத்து. ஆசிரியர் அவர்களிடம் தமிழ் கற்றுப் பட்டம் பெற்ற மாணவர்களுள் யானும் ஒருவன். யான் அவரிடம் பெற்ற அறிவுக்காக அவரை ஆசிரியராகப் போற்றுவதைவிட அவரிடம் கண்ட அரிய பண்புகளுக்காக அவரை ஆசிரியராகப் போற்றுகிறேன். வகுப்புக்குப் பல நாட்கள் நான் நேரம் கழித்துச் சென்றிருப்பேன். ஆனால், அவர் ஒரு நாளாவது நேரம் கழித்து வந்தாரில்லை. கடமையை உணர்ந்து எளிமைத் தன்மையோடு மாணவர்களுடன் பழகும் சிறப்புத் தன்மை அவரிடம் விளங்கியது. நான் பல மாதங்கள் ஆசிரியர்க்குரிய கட்டணமே கொடாமல் படித்தேன். அப்போதும் அவர் அதைப் பற்றிக் கேட்டாரில்லை. ஆனால், கட்டணமே கொடாமல் தொடர்ந்து படிப்பதற்கு நானே வெட்கப்பட்டுச் சில மாதங்கள் வகுப்புக்கே போகாமல் இருந்தேன். வாராமைக்குக் காரணம் கேட்ட போது 'அலுவலகத்தில் வேலை அதிகம்,' என்று சாக்குச் சொன்னேன். பணம் கொடாததைப் பற்றி அவர் கவலைப்பட்டாரில்லை. நான் சொல்லுவது உண்மை எனக் கருதி, நான் வகுப்புக்கு வர முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். அவரது உள்ளத்தின் கலங்கா நிலையை அவர்தம் மனைவியார் மறைவின் போது நேரிற்கண்டு வியந்தேன். இத்தகைய பல நற்பண்புகளை அவரிடம் பார்க்கும்போது புறநானூற்றில் கூறியவாறு 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' என்னும் சிறப்புக்குரிய பெரியார்கள் எக்காலத்தும் இருப்ப

தாலேதான் உலகம் நிலைபெற்றிருக்கிறது என்பது தெளிவாகிறது.

* * *

திரு. கீ. இராமலிங்க முதலியாரவர்கள், M.A.

[முன்னுள் திருச்சி நகராட்சி ஆணையாளர், தருமைக் கீழைக் கலைக் கல்லூரி முதல்வர்]

மகாவித்துவான் மிகுதிரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் நடமாடும் ஒரு நற்றமிழ்க் கல்லூரி. அவர்கள் எங்கு இருந்தாலும் அங்கெல்லாம், தேன்குடத்தை மொய்க்கும் ஈக்கள் போல, தமிழ் நலம் விழையும் மாணவர் அவர்களைச் சூழ்ந்துகொண்டு தமிழ்ப் பாடங் கேட்டபடியிருப்பர். அவர்கள்பால் தமிழ் பயின்று, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்று, தங்கள் தங்கள் வாழ்க்கையை வளம்படுத்திக்கொண்ட ஆண்பாலாரும் பெண்பாலாரும் பலர் ஆவர்.

ஆரவாரமின்றி எளிய முறையில், எத்தகையருக்கும், விருப்பத்தோடு விழுமிய வகையில் பாடஞ்சொல்லும் சிறப்பு அவர்களுக்கே உரிய பெருஞ்சிறப்பாகும். அவர்கள் தண்ணளி சுரந்து பாடஞ்சொல்லியிராவிட்டால், வாழ்வே இருண்டுவிட்டிருக்க வேண்டிய பலர், அவர்களால் வித்துவான் பட்டம் பெற்று உலகவர் பாராட்டச் செம்மையான வாழ்வை நடத்தும் வாய்ப்பு அடைந்துள்ளமை கண்கூடு. 'எங்கள் ஆசிரியப் பெருந்தகையே எங்களுக்குக் கண்கண்ட கடவுள்,' என்று அந்த வித்துவான்கள் போற்றுவதில் என்ன வியப்பு !

தேர்வுகளில் தேறிவிடுவதற்காக மட்டும் பாடம் சொல்லும் பல ஆசிரியர்களைப் போல அல்லாமல் நம் மகா வித்துவான் அவர்கள், பாடங்கேட்பவர்கள் அறிஞர் வியக்கும் புலமை பூணும் தன்மையிலே, உளங்கொளப்

பயில்விக்கும் பெருமை சிறந்தவர்கள். அவர்களிடம் தொல்காப்பியமும், சில சங்க இலக்கியங்களும் முறையாகப் பாடங்கேட்க வேண்டும் என்று நான் பல தடவை அவாவினேன்; அவாவுகிறேன். அந்த அவா என்று நிறைவேறுமோ, அறியேன்!

என்னிடம் அவர்களுக்குத் தனிப்பட்டதோர் அன்பு உண்டு. அவர்களோடு தொடர்புகொள்ளும் எவரிடமுமே அவர்களது அன்பு, திறந்த மடை நீர் போலத் திகழ்ந்து பாயும். எனினும், எனக்கென்னவோ, என்பால் அவர்கள் கொள்ளும் அன்பினைப்போலப் பிறர் எவர்பாலும் கொள்வதில்லை என்ற ஓர் எண்ணம் நிலவிவருகிறது. பிறரைப்பற்றி, அவர் குறை கூறுவதை நான் கேட்டதேயில்லை. தமிழாசிரியர்களுக்கிடையே பொறாமைப் புகைச்சல் உண்டென்பது சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், நம் மகாவித்துவான் அவர்கள் எந்தத் தமிழாசிரியரது குறையையும், உள்ளதை உள்ளவாறு கூட, எடுத்துக்கூற முற்பட்டதே இல்லை. எங்கும் நல்லனவே காணும் அவர்களது திருவுள்ளத்தின் பெருமை அது!

அவர்களுடைய சொற்பொழிவுகள் இன்னோசை மிக்க எழில் ஓவியங்கள். வீணை வேணுவின் இனிய ஒலியை அவர்கள் பேசும் போது நுகரலாம். இனிய தமிழ்ச்சொற்களே விரவி வரத் தேனொழுக்குப்போல அவர்கள் விரிவுரைகள் அமையும்; பொருள் பொதுளி மிளிரும். அவர்கள் உரைநடையும் அங்ஙனமே இனிமை பயக்கும் பான்மையினதாம். கடுமையான நூல்களுக்கு உரை எழுதும் அவர்களது எளிமை போற்றற்பாலது. ஆழக்குளித்து அருமுத்து மேற்கொணரும் முத்துக்குளிப்பு முழு வலவன் போல, அவர்கள், சொல்லினுள்ளும் எழுத்தினுள்ளும் நுணுகி நுழைந்து அரிய கருத்துக்களை

அழகு பெற எடுத்து விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள்.

அத்தமிழ்ப்பெருஞ்செல்வர் மணிவிழாக் கொள்ளும் அணி நாளிலே அவர்கள் அருமை பெருமைகளை அகங் குளிர நினைப்பது இன்பமளிக்கின்றது! அப்பெருந் தகையை 'இன்னுமொரு நூற்றாண்டு இரும்!' என்று ஆன்றோர் மொழிகொண்டு வாழ்த்தி, உவகை பூக்கின்றேன்!

* * *

காவிய பிரசங்க ரத்திநகரம்

திரு. தி. சு. கண்ணபிரான் பிள்ளையவர்கள்

நேரிசை ஆசிரியப்பா

நந்தா விளக்காய் நங்குலத் துதித்தோய்!
சிந்தா மணியின் செம்பொருட் பகர்ந்தோய்!
வேணுகோ பால வித்தக! நின்புகழ்
ஒளியென யாண்டும் தெளிவுற விளங்கும்.
தமிழின் இனிமை சாரும் நின்சொலில்;
தமிழன் ஒழுக்கம் தங்கும்நின் நடையில்;
தமிழன் கருணை தவழும்நின் கரத்தில்;
தமிழன் மானம் தழைக்கும்நின் வாழ்வில்;
அதனால்,
தமிழன் நீஎனச் சாற்றுவர் அறிஞர்.
தினகரன் நீயே மனவிருள் அகற்றலின்.
தண்மதி நீயே தண்மொழி வழங்கலின்.
மென்மலர் நீயே இன்முகங் காட்டலின்.
மாமலை நீயே யாவரும் அறிதலின்.
நுண்மாண் நுழைபுலத் தெண்ணரு நூற்களின்
கோட்டம் நீக்கிக் குறைநிறை வாய்ந்தே
புத்தகப் பதிப்பின் புதுமுறை கண்டோய்!
நூல்நடை வேறு சொல்நடை வேறென்

றிங்நாள் இயம்பும் இருநடை யகற்றி
நூலும் சொல்லும் நுவல்வழி அமையப்
பயின்று பயில்வார் பயிலப் பயிற்றும்
நல்லா சிரிய!நின் நல்லருள் வாழ்க !
வாழ்க நின்புகழ் ! வாழ்கநின் ஆற்றல் !
ஆழி அண்ணல் அருளால்
ஊழி ஊழி ஒளிநனி சிறந்தே !

* * *

இறையிசைத் தென்றல்

தி. சு. இராமசந்திரப் பிள்ளையவர்கள்

கட்டளைக் கலித்துறை

தேவாதி தேவன் திகழ்கின்ற கச்சித் திருப்பதியில்
ஓவாது வாழ்பவர் நற்றமிழ் ஞானம் உயர்ந்துபெரும்
பாவாண ராகிப் பயன்பெறச் செய்த பழந்தமிழா !
மாவாழு மார்பன் திருவரு ளால்என்றும் வாழியவே! 1

அச்சுப் பிழைஎனும் பொல்லாத பேயை அடித்தொழித்தே
மெச்சத் தகுநூல்கள் நற்பதிப் பாய்தந்த வித்தகனே !
பச்சைப் புயல்பரந் தாமன் பிறந்த பரம்பரைசீர்
உச்சத் தடைந்தது நின்பிறப் பாலென ஓதுவனே. 2

* * *

திரு. K. N. இராசப்பா அவர்கள்,

[பாரதப் பிரசங்கியார், வீரனூர்.]

கட்டளைக் கலித்துறை

சிந்தா மணியெனும் செல்வக் கடலினிற் சீரியதாம்
நந்தா அமுதை முகந்தே ரசிகர் நலம்பெறவே
இந்தா எனவே பெயுமுகில் வேணுகோ பாலன்எனும்
எந்தாய் ! நினது நற்புகழ் வாழ்கென ஏத்துவனே !

* * *

வித்துவான் ப. கிருட்டிணவேணியம்மையாரவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவியார், தமிழாசிரியை, நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.]

நேரிசை வெண்பா

பொன்னே! மணியே! புகழ்வேணு கோபால
மன்னே! தமிழின் மணிவிளக்கே!—நன்னீர்மை
என்னுவா லோத வெளிதாமோ? ஆசானீ
பன்னுனல் வாழ்வு படை.

நேரிசை ஆசிரியப்பா

மலர்தலை யுலகின் மதிமுக மென்ன
இலகிடுங் காஞ்சி யெழின்மா நகரம்
செய்தவப் பேற்றால் சென்னையை நீங்கி
எய்திய வேணுகோ பாலனென் இனியாய்!
உன்னருந் தொண்டினை உயர்நடைப் புலவர்
பன்னுவர் பலவாய்ப் பகலினு மிரவினும்;
யானு மவர்போ லேத்த லறிவெனோ?
பானுமுன் மதிய மொளிதரற் பாலதோ?
ஆசை தூண்டிட அறிவிலாச் சிறியேன்
பூசை பாற்கடல் நக்குபு புக்கென
அறிஞர்முன் உரைசில அறைகுவன்; கிள்ளையின்
சிறியசொல் லாயினுஞ் செவிகொளா ருண்டோ?
அத்தக வென்மொழி யாதரித் திடுவார்
வித்தக ரெல்லாம்; வேண்டினேன்; வேண்டினேன்.
அன்பும் ஆர்வமும் அளப்பரு நண்பும்
என்பினுங் கொண்ட வெழிலார் எந்தாய்!
நாவிலாப் பெண்ணை ஞானசம் பந்தன்
மேவி அருளால் மிழற்றவைத் ததுபோல்
என்னைநீ அவையில் ஏறவும் வைத்தாய்!
நன்னூற் பலவும் நாடவுஞ் செய்தாய்!

விரைவும் வெகுளியும் விடுத்து மாணவிக்
குரைசெயும் பெருமை உன்னதே யாகும் ;
கைம்மா றுகவாக் கார்முகி லனையாய் !
செம்மாந் துனது செயிர றுசீர்த்தியை
நனவினுங் கனவினும் நாடொறும் போற்றுவேன் ;
மனவிரு ளிரிய மயக்கந் தீர்த்தோய் !
நாமகள் பூமகள் நல்லருள் புரியப்
பூமனுய் வாழ்க ! பொலிவுடன் வாழ்க !
அண்ணலே வாழ்க ! அவனியில்
எண்ணறுங் காலம் இசையுடன் வாழ்கவே !

* * *

காஞ்சி ஹிந்துஸ்தானி சங்கம்,

[காஞ்சீபுரம்.]

செந்தமிழ்ப் புலவர் பெருமான் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலனுர் அவர்களின் சீரிய தொண்டு சிறப்புற்று என்றும் ஓங்கும் வண்ணம் இறைவனை வேண்டுகிறோம் !

* * *

வித்துவான் P. N. இராமசந்திர ஐயரவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவர், தமிழாசிரியர்,
சோமசுந்தர கன்னியா வித்தியாலயம், காஞ்சீபுரம்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

நீரார் பைந்திரை நெடுங்கட லாடைசூழ்
ஏரார் சென்னையில் எழில்மிகு புரசையில்
பேரார் பொதுவர் பெருங்குடி தன்னில்
காரேய் நிறத்தன் கண்ணன் பிறந்த
நன்னுள் நீயும் நலமுடன் தோன்றிப்
பன்னுள் பைந்தமிழ் பரிவுடன் கற்றே
கற்றதற் கேற்பக் கவின்பெறு தமிழை

மற்றவர்க் கோதி மாண்புற வாழ்ந்து
வளமார் காஞ்சியை வண்டமிழ் பரப்ப
உளமார்ந் தினிதுறை உறையுளாக் கொண்டே
நற்பொருள் நயமுடன் நாளும் நின்றன்
பொற்புறு சொற்பெருக் கமுதம் அளித்தே
என்போன் றோர்க்கும் ஏமுறத் தமிழைப்
பொன்போல் மனத்துள் பொதிய வைத்தோய் !
அன்பும் அடக்கமும் அத்தகைப் பலவாம்
இனகுணங் கட்குமோர் இருப்பிட மானோய் !
நின்பெருங் கருணையை நினைத்தல் அல்லதிங்
கென்செய இயலும் என்னால் ? அதனால்
வேணுகோ பால வித்தக ! விமல !
மாணுறு நின்புகழ் மாநிலத் தோங்க
இச்சகத் தின்னும் இனிதுபல் லாண்டுநீ
மெச்சுறு வாழ்வுற அருளுக வென்றே
பண்ணவ னடியிணை பரவுவன் யானே !

*　　　*　　　*

வித்துவான் M. S. துரைசாமிப் பிள்ளையவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவர்,
தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, உத்தரமேரூர்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

திருமலிந் திலங்கும் திறனுறு பதியாம்
சென்னையம் பதியிற் சிறந்தமா சைதையில்
பண்புமிக் குடைய பழங்குடி யதனில்
'தோன்றிற் புகழொடு தோன்றுக,' என்னும்
பொய்யா மொழிக்குப் பொருத்தம தாக
அவனியில் தோன்றி அன்புடன் வளர்ந்து,
கற்பவை தம்மைக் கசடறக் கற்றபின்
இன்றமிழ் வடிவாய் இலங்குறு மிறையே !

கச்சியம் பதியில் கருத்துடன் சேர்ந்து
பலரைச் சேர்த்துப் பகரருங் கல்வியால்,
புலவராக் குவித்த புகழ்மிகு மேதையைப்
பாராட் டாதவர் பதியினில் இல்லை ;
கற்ருேர் நிறைந்த களங்கறு சபையில்
வீரஞ் செறிந்த வில்லுழ வரைப்போல்
கண்ணிய மிகுந்து கருதிய முடிக்கும்
சொல்லுழ வுத்திறன் சொல்லவும் படுமோ !
காட்சிக் கெளிமையும் கடுஞ்சொற் கிளவும்,
அரும்பொரு ளாயும் அமைந்தபே றறிவும்,
இன்ன பிறவாம் எழிலுறு பண்புகள்
ஒருங்குற வமைந்த உத்தமப் பெரியோய் !
மணிவிழாப் போன்ற மாண்புமிக் குடைய
பலவிழா வேற்றுப் பாரினி லிருந்து,
பல்வளஞ் செறிந்து, பற்பல வாண்டு
நன்னெறி வாழ நாயக னுனை
இறைவனை அடியேன் இறைஞ்சுகின் றேனே !

* * *

திரு. சொ. அமிர்தகணேச முதலியாரவர்கள்

[பொருளாளர், தமிழ்க்கலை மன்றம், சென்னை.]

தமிழ்நாடு தமிழ்நாடாகவே இயங்க நிற்கும் இந்நாளில் தமிழ் மரபையும் தமிழ்ப்பண்பையும் வழுவாமல் பாது காக்கும் அரிய தொண்டில் ஈடுபட்டுவரும் ஆசிரியர் உயர் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களைப் பாராட்டுவதற்காகத் தமிழர்கள் ஒன்று கூடி அன்னரது அறுபதாண்டு நிறைவு விழாக்கொண்டாடுவதை மிகவும் போற்றுகிறேன் ! திரு. பிள்ளையவர்கள் இன்னும் பல் லாண்டு எல்லா நலன்களுடனும் வாழ்ந்து செந்தமிழ்த்

தொண்டைத் தொடர்ந்து ஆற்றிவர அருள் புரியவேண்டு
மென்று தமிழறியும் பெருமாளை இறைஞ்சுகிறேன் !

* * *

வித்துவான் சு. கே. வாசுதேவப் பிள்ளையவர்கள்

[மணி விழாவுடையார் மாணவர்,

கர்ணம், பூநெய்த்தாங்கல்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

சீர்பெறும் உலகில் செப்பிடும் பொருளாம்
கல்வியும் செல்வமும் எனுங்கருந் தனத்தால்
முதலிடை கடையென மூவகை வள்ளல்கள்
பொற்புறும் ஈகையின் புகழது நிறுவினர் ;
கல்வியை வழங்கிய கண்ணியர் தம்முள்
பசிப்பிணி மருந்து பாத்திரங் கொண்டுநல்
அறஞ்செய் மணிமே கலையரி வையைப்போல்
கல்வி வறுமையாம் கழிபெருந் துன்ப
ஆழ்கடல் பட்டோர் அரும்பசி தீர
இலக்கிய இலக்கண எழிலார் கல்வியை
வேட்கை தீர விருப்புடன் உரைத்து
மாணவர் பலரை மாண்புடை யோராய்
வித்துவான் பட்டம் விழைந்தாங் கடையக்
கல்வித் தானம் கருத்துடன் செய்யும்
வேணுகோ பால வித்தக வாழி !
புத்தகப் பதிப்பிற் புகுதரும் பிழைகளைத்
திருத்தம் செய்யும் சிற்பியே வாழி !
மாநிலம் வாழ்தமிழ் மக்களுக் குற்ற
மடமைதீர் மருந்தே ! மகிழ்ந்துவா ழியவே !

* * *

காஞ்சீபுரம் திருமாலடியார் மன்றத்தினர்

அருள் சான்ற அன்புடையீர்,

நீவிர் பிறந்தார் பெறும் பயனாகிய இறையருளும், நல்லறமும், சீரிய வாழ்க்கையும், அறிவறிந்த மக்கட்பேறும் பெற்று மணிவிழாக் கொள்ளும் மாட்சிமையுற்றீர். அது கண்டு எங்கள் மனம் உவகையுறுகின்றது! வாழ்க நும் வாழ்க்கை!

ஆண்டவன் அருள் வேட்கும் சீரியீர்,

நீவிர், 'ஊரும் நாடும் உலகமும் தம்மைப்போலக் கல்விப் பொருளைப்பெற வேண்டுமென்று தொண்டாற்றுபவரே உண்மை ஆசிரியர்,' என்று பணித்த இலக்கணத்திற்கு இலக்கியமாய் இலங்குகின்றீர்! கலாசாலைத் துறையில் அலுவலாற்றி ஓய்வு பெற்றும், சிறிதும் ஓய்வின்றி எல்லோரும் வித்துவான் பட்டம் பெறுவதற்கான சிறந்த தொண்டு புரிகின்றீர். சமய வேற்றுமை பல பேசி அல்லலுறும் இந்நாளில், வேற்றுமையில் ஒற்றுமை காணுமாறு, பல சபைகளுக்குத் தலைமை தாங்கி, 'எம்மதமும் சம்மதமே' என்கிற முறையில், முரண்பட்ட சபைகளை ஒற்றுமையாக்குகின்றீர். அதனால், உங்களைக் 'காஞ்சிமாநகரத்தில் வாழ்கின்ற உண்மையான ஒரு மகாவித்துவான்' என்று உலகம் உவந்து கூறி வாழ்த்துகின்றது. நாங்களும் அவ்வாறே அன்பு கசிந்து வாழ்த்துகிறோம்!

புலவர் புகழும் புண்ணியரே,

உமது இன்முகமும், மென்மொழியும், மக்களிடத்துக் குறிப்பறிந்தொழுகும் இங்கிதமும் மற்றோர் போற்றிப் பயிலுதற்குரியனவாகும்.

அன்பு சான்ற நண்பீர்,

நீவிர் இல்லறமென்னும் ஆழியுள் அன்பென்னும் நன்மணியைக் கண்டடைந்தீர்! அதனைக் கொண்டாடு

வதே மணி விழா. இவ்விழாவில் நீங்களும், உங்கள் செல்வப் புதல்வர்களும், சுற்றத்தினரும் நலம் பல எய்தி நீடூழி வாழத் திருவருள் சுரக்குமாறு திருமாலருளைச் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றோம்!

* * *

திரு. V. V. துரைசாமி ஐயரவர்கள், B.A., L.T.

[பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சீபுரம்.]

தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கும், ஒழுக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக நம்முடைய வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் வாழ்க்கை அமையப் பெற்றிருக்கிறது. அவர் தமிழ் மொழியிலுள்ள பெருங் காவியங்களையெல்லாம் கற்றுணர்ந்து அவைகளிற்காட்டிய அறநெறியில் வழுவாது நடப்பவர்.

தன்னடக்கம், நிதானம், பரோபகாரம், எல்லா உயிரிடத்தும் அன்பு, சாந்தம் என்னும் அருங்குணங்கள் அவரிடத்தில் நிறைந்து மக்களுக்கு அன்பும் மதிப்பும் காட்டச் செய்கின்றன. அப்பெருந்தகையாரைக் கவுரவிக்க ஒரு சந்தர்ப்பம் வாய்த்தமைக்குக் காஞ்சி நகர வாசிகளெல்லாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றார்கள். பலருக்கு நற்பயனளிக்கும் அப்பெரியார் நீண்ட ஆயுளுடன் எல்லா நலன்களையும் பெற்று வாழ ஆண்டவர் அருள் புரிவாராக!

* * *

காஞ்சி மெய்கண்டார் கழகத்தினர்

மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர், உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களது வாழ்க்கைப் பேற்றினை, இக்கச்சியம்பதி பல ஆண்டுகளாகப் பெற்றுள்ளது. திரு. பிள்ளையவர்கள் ஆழ்ந்த தமிழறிவுடன் ஆங்கில அறிவுமுடையவர்கள். அன்பின் வழித்தோன்

றும் இன்முகமும் இன்சொல்லும் அவர்களிடத்தில் எஞ்ஞான்றும் காணப்பெறுவன. எளிய தூய வாழ்க்கை உடைய அவர்கள், பலருக்குத் தமிழை நன்கு கற்பிப்பதிலும் தமிழ்ப் புத்தகங்களைச் செம்மையான முறையில் பதிப்பித்தலிலுமே தங்கள் வாழ்நாளைக் கழித்து வருகின்றார்கள். யாவர் மனத்தையும் கவரும் அவர்களது இனிய பண்பினால் எல்லாத் திறத்தினரது நன்மதிப்பையும் அவர்கள் பெற்றுள்ளார்கள். அவர்களது மணிவிழா இக்கச்சியம்பதியில் கொண்டாடப் பெறுவது இங்குள்ளார்க்குப் பெருமகிழ்வைத் தருவதாகும்!

மணிவிழாத் தலைவராகிய உயர்திரு. பிள்ளையவர்கள் நல்லுடலும் நல்வாழ்வும் பெற்றுத் தமது அரும்பெருந் தொண்டினைப் பலர்க்கும் பயன்படச் செய்து, இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக!

செயலாளர்கள் :

புலவர்மணி வீ. திருஞானசம்பந்த முதலியார்

சி. காளப்ப முதலியார்

* * *

வித்துவான் நீ. முனியம்மாளவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவியார், தமிழாசிரியை, அரசியலார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சின்னக் காஞ்சீபுரம்.]

ஆசிரியப் பெருந்தகையீர், வாழ்க!

சீர் பெறும் கச்சியின் நற்றவப் பயனால் உமது வரவு என்னனையார்க்கு நல்வரவாயிற்று! நீண்ட காலம் மழை காணாது வாடும் பயிர்களுக்குப் பெய்த மழை போலாயிற்று உமது வருகை! என் போன்ற ஏழைகட்குச் சிந்தாமணியாய்த் தோன்றியது நும் நல்வரவு. தமிழைக்

கற்கப் பேரார்வம் கொண்ட நான், ஒரு நல்லாசிரியர் கிடைக்கப் பெறுமல் கடலில் கப்பலுடைந்த மாலுமி போலத் தவித்த சமயத்தில், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்னும் மணிமொழிக்கு இலக்காய் விளங்கும் நீவிர் தோன்றி என்னை உம் முதன்மாணவியாக்கிக் கொண்டீர்.

பேராசிரியப் பெருமானீர், வாழ்க!

உமது அன்பிற்கும், அருளுக்கும் பாத்திரமாகிய யான், உமக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! யான் பணியாற்றும் பள்ளிக்கும் எங்கள் எளிய அழைப்புக்கு இணங்கி, நீவிர் பன்முறை எழுந்தருளி, என்னையும் எங்கள் தலைமை ஆசிரியையாரவர்களையும், என் ஆசிரியத் தோழியர்களையும், என் மாணவிகளையும், உம் அரிய சொற்பொழிவுகளாலும், நல்லுரைகளாலும், அறிவுரைகளாலும் மகிழச் செய்திருக்கிறீர்.

கைம்மாறு கருதாக் கார்முகிலனைய நீவிர், இக்கச்சி யம்பதியில் பல அரிய சொற்பொழிவுகளையும், தமிழ்த் தொண்டையும் ஆற்றியிருக்கிறீர்; பல வகுப்புகளை நடாத்திப் பல மாணவர்களைப் பயிற்றி, வெற்றியுடன் வெளியேற்றியிருக்கிறீர்.

இப்பொழுது எங்களிடையில் அறுபதாமாண்டு நிறைவுற்று, மணிவிழாத் தலைவராய் விளங்குகிறீர். கல்விக் களஞ்சியமாய், கருணை வடிவமாய், அன்புருவமாய் அமைவுடன் எங்களைக் கை தூக்கி விட்ட காருணிய மூர்த்தியாகிய உம் கலியாண குணங்களைப் புகழ்வதோ, உம்மை வாழ்த்துவதோ என் போன்றவர்களுக்கு எளிதன்று.

பைந்தமிழ்ப் பாவலீர், வாழ்க!

அறிவாற்றல்களில் சிறந்த பல பெரியார்களும்,

பேராசிரியர்களும் வாழ்த்தும் பாமாலைகளுக்கும், புகழ் மாலைக்கும் தலைவராய் விளங்கும் என் சிந்தாமணிச் செல்வரே, வாழ்க! வாழ்க உமது திருநாமம்! வாழ்க தமிழ் மொழி! வாழ்க பாரத மணித்திருநாடு!

* * *

அரசியலார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள்

[சின்னக் காஞ்சீபுரம்.]

தமிழகத்தின் தனிப்பெருஞ்செல்வமே, வாழி!

தாய் மொழியாகிய தமிழினைக் கற்று, ஒப்பற்ற திறமையுடன் விளங்கும் உத்தமரே, உறுதி கொண்ட உண்மையாளரே, 'நான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்,' என்ற தமிழ் நெஞ்சத்திற்கு ஒப்ப, நீவிர் பெற்ற கல்வியை அனைவருக்கும் கற்றுக்கொடுத்தீர்; கற்றுக்கொடுக்கிறீர்; இனியும் கற்றுக்கொடுப்பீர்.

சிந்தாமணிச் செல்வரே,

மூன்று வருடகாலம் திருத்தக்கதேவர் தந்த ஒப்பற்ற செல்வமாம் சிந்தாமணியை எளியவருக்கும் வலியவருக்கும், ஏழையருக்கும் பணக்காரருக்கும், இனிக்க இனிக்க எடுத்து விளக்கிய அருமைச் செம்மலீர், வாழி!

தமிழில் ஒப்பற்ற புலமை பெற்றிருப்பதோடு அமையாமல் ஆங்கில மொழியிலும் அறிவு பெற்ற அறிவின் சிகரமே, வாழி!

குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரையில் அனைவருக்கும் நீவிர் அருந்தோழராய் இருக்கிறீர்.

ஆசிரிய இலக்கணம் முற்றும் அமையப் பெற்ற அருந் தவச்செல்வரே,

நீவிர் நும் மாணவருடன் மாணவரைப் போல இருந்து, அவர்கட்கு எளிய முறையில்—ஆனால் திறமை

யுடன்—தண்டமிழைத் திறம்பட விளக்கினீர் ; விளக்கு கிறீர். ஒப்பற்ற ஆசிரியரே, வாழி ! வாழி !

தமிழகத்தின் ஒளியே. சுடர்விளக்கே, நீவிர் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் நாட்டின் தனிப்பெருந்தகைமையைத் தளிர்க்கச் செய்வீராக !

மாணவர் பலரைத் தமிழில் வித்துவான்களாக்கி அவர்களது கரையிலாக் காதலை அடைந்த நும் கல்வித் திறனைக் கேட்கக் காது இன்பமடைகிறது !

நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து எங்கட்குத் துணையாயிருந்து எங்களை மகிழ்விக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம் !

பணிவின் பிறப்பிடமே, அடக்கத்தின் ஆகரமே, அமர குணம் படைத்த அருந்தவச் செல்வரே, 'பிறந்திடின் புகழ் பெற வேண்டும்,' என்பது நும் வாழ்வால் விளக்கிக் காட்டுகிறீர். நீவிர் எம் பள்ளியில் கடந்த 8 ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து, எங்களை உமது அன்பு கனிந்த உள்ளத்தால் ஆசீர்வதித்துள்ளீர். இனியும் எங்களுக்கு இந்நல்வாய்ப்புக் கிடைக்கச் செய்ய இறைவனை வேண்டுகிறோம் !

நகரில் நடைபெறும் எத்தனையோ கூட்டங்களுக்குத் தலைமை வகித்து யாவரையும் மகிழச் செய்தீர். இனியும் செய்வீராக ! உங்களைக் கண்டு, தமிழ்த்தாய் பெருமை அடைகிறாள் ! உங்கள் தமிழ்ப்பணியைக் கண்டு, ஒவ்வொரு தமிழரும் மகிழ்ச்சி அடைகின்றனர் ! பெருமை அடைகின்றனர் ! வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் இனம் ! வாழ்க தமிழ் நாடு !

*　　　*　　　*

திரு. பொன்னு ஆ. சத்தியசாட்சியவர்கள், B.O. L.
திரு. ஜார்ஜ் சாமுவேல் அவர்கள்
[மணிவிழாவுடையார் மாணவர்,
ஆண்டர்ஸன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.]

விருத்தம்

பொதியிலின் மீதிருந்தான் போற்றினுன் என்ப முன்னே
கதிபெறுந் தீந்தமிழ்ப்பெண்! கண்டதார் விண்டதார்சொல்!
மதிபெறுங் கச்சி தன்னில் மங்கையே யுனேவ ளர்த்த
துதிபெறு முனிவ னைத்தான் தோமறக் கண்டு வந்தோம்.

நிலைமண்டில ஆசிரியப்பா

பொலிந்த நுதலின் மலிந்த குறியும்
செந்தமிழ்ச் செவியில் சேர்ந்த அணியும்
காற்றிற் கசைந்து களிநடஞ் செய்யும்
மென்மையும் தூய்மையும் மேவிய வுடையும்
கையக லாத கறுப்புக் குடையும்
பைந்தமிழ் நூல்கள் பதுங்கிய பையும்
அளக்க லாகா அறிவுச் சுமையைச்
சுமந்து சுமந்து சுருங்கிய வுடலும்
எழுந்த புகழின் இயன்ற நடையும்
எண்ணுந் தோறும் எண்ணுந் தோறும்,
மே.வீ. வே.என மேவிய பெரியோய்!
உடலும் உயிரும் ஓயா துவக்கும்!
கருமை மலர்ந்த அருமைத் திருவுடல்
அசைந்து செல்லும் அழகினைக் கண்டால்,
பசியைப் போக்கும் வசியைத் தாங்கிச்
செல்லும் கொண்டல் சிந்தையில் தோன்றும்!
குன்றிய முனிவன் அன்றொரு நாளில்
கடலைக் குடித்த கதையொன் றுண்டு:
பரந்த கடலின் பரந்த பெருநூற்

கடலைக் குடித்துங் களைப்பு நீங்கா
அற்புத முனிவனே, அருந்தமிழ்ச் செல்வனே,
காஞ்சியில் கண்டோம் ; கதையன் றீது !
தெள்ளிய சுவையின் தென்றமிழ் தன்னை
அள்ளி யெமக்கும் அளித்திடு வள்ளால் !
நாடு வியக்க ஏடு புரட்டிப்
பாடஞ் சொல்லும் பான்மைக்(கு) ஐயா !
உவமை தேடினேம் ; ஒன்றையுங் காணேம் !
மல்லிகைப் பூவில் மலையை மறைக்கும்
ஆற்ற லுமக்குள் ஏற்றிய தாரோ !
அழகும் அருளும் அறமும் உங்கள்
கன்னிச் சொல்லில் பின்னிய மாட்சி
எவர்க்கு மெட்டா தியன்ற சூழ்ச்சி !
இலக்கணஞ் சொல்ல இறங்கிய போதும்
சிரிப்புச் சுவைக்குச் சிறிதோர் பஞ்சம்
கண்டதும் இல்லை ; கலங்கிய தில்லை !
கரும்புச் சொல்லால் விரும்பிப் பேசி
எவரையும் கட்டும் எழிலுக் கிணையிலை !
சூரியன் தனது காரியந் தன்னில்
நேரந் தவிர்தல் நேரிடு மாயினும்
குறித்த நேரக் குறிதவ றாத
பண்பிற் கும்மைப் பாடுதல் வேண்டும் !
ஒல்காப் புகழ்சால் தொல்காப் பியத்தைப்
பயில்வார் எவரும் பழுதறக் காண,
அச்சுக் கோத்தே யவனிக் களித்த
பெருந்தகை யாள ! பேரரு ளாள !
வாழ்த்து கின்றோம் ! வணங்கு கின்றோம் !
சிலுவையின் மீது செந்நீர் சிந்தி
அவனிக் கென்றே ஆருயிர் விடுத்து

மீண்டு மெழுந்த ஆண்டகை யருளால்
யாண்டு பலவும் யாவரும் மகிழ
வாழ்ந்திட வேண்டும் ! வாழ்ந்திட வேண்டும் !
அனைத்தும் செய்யும் ஆண்டவர் அருளென் !
வாழ்க தமிழ் ! வாழ்க மணிவிழாத் தலைவர் !

* * *

வித்துவான் சு. பலராம நாயகரவர்கள்,

[மணிவிழாவுடையார் மாணவர், தமிழாசிரியர்,
நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்.]

எம் ஆசிரியப் பெருந்தகை மகா. வித்துவான் பிள்ளையவர்கள் தமிழ்த்தொண்டே தெய்வத் தொண்டெனப் போற்றி இடையறாமல் உழைத்துவரும் உத்தமராவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பிக்கும் தனிப்பெருந்திறமையும், எழுத்தாற்றலும், நூல்களைப் பிழையின்றிப் பதிப்பிக்கும் வன்மையும் பெற்றுத் தமிழ் வித்துவான்கள் பலரைத் தோற்றுவித்துப் புதுநூல்கள் பல வெளிக்கொணர்ந்த பேரறிஞராவர். இன்சொலன்றி வன்சொல் அறியாராய், யாவர்க்கும் இனியவே புரிந்து, மனத்தூய்மையுடன் வாழ்க்கை நடாத்தும் பண்பாளராய மணிவிழாப் பெருமகனார் இறைவனருளால் பன்னலமும் பெற்று நீடூழி வாழ்க !

மணிவிழா ஆற்றும் அரிய பேற்றினைப் பெற்ற திருக்கச்சிப்பெருமக்கள் என்றும் பெருமக்களாகவே விளங்குக!

* * *

திரு. ஆ. த. சச்சிதானந்த முதலியாரவர்கள்

[தக்கோலம்.]

கச்சியம் பதியில் மெச்சுறு புலவராய்
எச்சம யத்தரும் நச்சுநல் லன்பராய்
மணிவிழாக் கொள்ளும் மாண்புசால் பெரியார்

அணிதிகழ் நூல்பல அழகுடன் இயற்றியும்,
முன்னோர் நூலினைப் பின்னோர் பற்பலர்
பின்னமார் முறையிற் பிழையுறப் பதித்துக்
கற்றவர் தம்மையும் கலங்கச் செய்யும்
குற்ற மகற்றிக் கோதறு முறையில்
தொல்காப் பியமுதல் துகளறு நூல்பல
பல்காற் பயிலப் பயன்படு வகையில்
சிறுத்தக் குறிமுதல் நேர்மையார் முறைபல
பொறுத்துப் பொருளினைப் பொற்புறக் காட்டப்
பண்பார் பதிப்புப் பலப்பல தந்தும்,
பெண்ணா ணென்னும் பேதம தகற்றி
எப்பா லவர்க்கும் எழில்பெறு தமிழைச்
செப்பி அவர்தமைச் செவ்விய ராக்கியும்,
சொற்பொழி வதனாற் பற்பலர் அறிவுறப்
பொற்புறு முறையிற் பொதிபொருள் விளக்கியும்
வேண்டுவ நல்கும் வேணுகோ பாலர்
ஆண்டுபல் லாண்டிவ் வவனியில் வாழத்
தண்ணருள் சுரக்கெனப் புண்ணிய முதலை
எண்ணி வாழ்த்தி இறைஞ்சுவல் ! அவர்தம்
மணிவிழாத் தன்னை மாண்புட னாற்றும்
அணிதிகழ் காஞ்சி அறிஞர் தமையும்
வாழ்கபல் லாண்டென வாழ்த்துவல் !
வாழ்க நற்றமிழ் வழிவழிச் சிறந்தே !

* * *

கச்சித் தமிழ்க் கழகத்தினர்
பெருமங்கல வாழ்த்து :

தேனார் சுவைகொள் செந்தமிழ்க்குச்
செறியும் வரம்பாய்த் திகழ்வதெனும்
வானார் புகழிற் கச்சிநகர்
மாறா தொளிர வவண்வாழ்வோன்

மீனர் கடல்சூழ் சென்னைவரு
    மே.வீ. வேணு கோபால
ஞான கரன்றன் புகழ்முழுதும்
    நவிலப் போமோ நமக்கம்மா ! 1

கல்வி யாளன் ! நெறியாளன் !
    கற்றோர்க் கினிய கனிவாளன் !
செல்வர்ப் பயந்து பல்வளனுஞ்
    செழியில் லறத்தின் சீராளன் !
பல்வண் செயலாற் பகர்சொல்லாற்
    பல்லோர்க் குதவும் பரிவாளன் !
நல்வண் முகத்து நகையினொடு
    நயமார் தரச்சொன் னுவாளன் ! 2

நல்லா சிரியர்க் குரியவென
    நாடிப் புலவர் வகுத்தவியல்
பெல்லா மமையக் கொண்டிங்ஙன்
    எளிதி னியைந்து மாணுக்கர்
பல்லார் தம்மை நெறிமுறையாற்
    பயிற்றித் தூய பைந்தமிழின்
வல்லா ராகச் செய்தினிது
    வாழ்வித் திடுநன் மதிவள்ளல். 3

பண்டை நூல்கள் புதுநூல்கள்
    பற்பன் னூல்கள் பழுதகலக்
கொண்டு பதிப்பித் தினிதுலவக்
    கொடுத்து நந்தங் கொழிதமிழ்க்குத்
தொண்டு புரியுந் திறலோன்!அத்
    தூயோற் கறுப தாம்யாண்டு
கண்ட பெருமங் கலஞ்சிறப்பக்
    கச்சி நகரிற் கவினியதால். 4

பொன்னி னுடை போர்த்தோரும்
புகழ்பொற் கிழிதாம் வழங்கினரும்
நன்னர் வெள்ளிப் பட்டயந்தாம்
நல்கி னோரு நல்வாழ்த்துப்
பன்னி னோரு மாய்க்களித்தார்
பலரும் ; இனியாங் கவனினிதின்
மன்னி நிலத்தி னீடூழி
வாழி ! வாழி ! வாழியவே ! 5

* * *

ஸ்ரீ ஏகாம்பரபுரம் உயர்தர ஆரம்பப் பள்ளி வளர்ப்பாளர்கள்

பொறுமை பூண்டனை
அறுப தாட்டையை
சிறுமை தீர்ந்தனை
பெறுவ பெற்றனை.
கற்கும் கல்வி கற்றபின்
நிற்க என்ற நீண்மொழி
நிற்க மைந்த நேர்மைபல்
சொற்க ளாலும் தோற்றுமோ ?
கலைமகள் கிடந்தநல் தவத்தின் காரியம்
விலைமதிப் பரியநின் வீறு தோற்றமே
உலைவிலா தெவர்க்குநீ ஓங்கு கல்வியை
மலைவிலா தளித்ததம் மாதின் லீலையே.
பொதுவர் நற்குலம் தோன்றலின் பொதுளன நின்னை
இதரர் வந்தடைந் தேத்துபு கல்வியில் தேர்ந்தார் ;
இதுவ ரற்குறு காலமிஃ தின்றென வரையா(து)
உதவு நிற்குவ மானநீ ஒருவனே உணரின்.
தொண்ணூற்றா றுமாண்டு தூயதிரு
வாகட்டின் இறுதி நன்னாள்

மண்ணேற்ற நற்பயனும் மாமாயன்
வந்துதித்த மலரோன் நாளில்
விண்ணுற்று மீன்தலைவன் வெண்டிங்கள்
நற்கிழமை மாலை ஓரை
எண்ணூற்ற மிகுகும்பத் தினிதுதித்தாய்
எனில்கும்ப முனிநீ யன்றோ ?
மதுவிண்ட நூல்கள் மறையாதி உள்ளம்
மகிழ்கொள்ளக் கற்ற அதனுல்
பதிகொண்ட தாழ்மை உறவாடு பண்பு
பணிவார்ந்த நற்சொல் பொறுமை
மதிகொண்ட தூய்மை மறவாமை நன்றி
மலையாத நெஞ்சம் இன்ன
நிதிகொண்ட வேணு கோபால னென்னும்
நிறையார்ந்த செல்வ மணியே !
கண்ணன் அளந்த கடல்சூழ் உலகமெலாம்
நண்ணுகநின் சீர்த்தி; உடல் நன்கமைக;-அண்ணலே!
நீடியநல் ஆயுளும் நிமலை திருநோக்கும்
கூடுகவே நின்னைக் குறித்து.
வந்து வரந்தருக மாமலரோன் தேவியும்
சிந்தை மகிழ்ந்திடவே செஞ்சடைநா—கந்தரித்த
வெண்ணீற்றோன் மின்னிடையும் மாயோன் திருமா
கண்ணீறு காட்டிக் கனிந்து. [தும்
வேணுகோ பால விமலன் நலமனைத்தும்
காணுமா கண்ணன் அருள் க !

* * *

பேராசிரியர் மயிலை. சிவ. முத்து அவர்கள்,

[தலைவர், சென்னைத் தமிழாசிரியர் கழகம்.]

என் கெழுதகை நண்பர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களை நான் முப்பத்தாறு ஆண்டுகளாக நன்கு அறிவேன்.

நானும், பெரும்புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்களும், நம் பிள்ளை அவர்களும் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழ்த்தொண்டு ஆற்றி வந்த போது இணைபிரியாத தோழர்களாய் இருந்து வந்தோம். அந்த நட்பு மேன் மேலும் வளர்ந்து செழித்து எங்கள் உள்ளத்தே வேரூன்றிவிட்டது. இதற்கு முக்கியமாக நம் பிள்ளை அவர்களின் அருங்குணமே காரணமாகும். பிள்ளை அவர்களின் ஆழ்ந்த படிப்பு, அந்தக் காலத்தே அவர்தம் ஆசிரியர்களையே மலைக்கச் செய்தது. மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயர், பேராசிரியர் சற்குணர், பி. ஏ., மறைமலையடிகளார் முதலிய பேரறிஞர்களே நம் பிள்ளை அவர்களைப் பாராட்டியிருக்கின்றார்கள். மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் புலவர்களுக்குள்ளே பெருந் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றார். அமைதியான தன்மையில் சிறிதும் ஊக்கங்குன்றாமல் பாடஞ்சொல்லுவதிலும், பழந்தமிழ் நூல்களை அழகுறப் பதிப்பதிலும், இக்காலம் வெளி வரும் நூல்களிலுள்ள குற்றங்களைக் களைவதிலும், கேட்போர் உள்ளத்தில் நன்கு பதியும்படி ஆணித்தரமாகச் சொற்பொழி வாற்றுவதிலும் நம் பிள்ளையவர்கள் பேராற்றல் வாய்ந்

தவர்கள். அவருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது. அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்பதே என் எண்ணம். செல்வர்கள் வாழும் சென்னையைவிடக் கற்றோர் வாழும் காஞ்சிமாநகரம் அவரைப் பாராட்டுவதில் முனைந்து நிற்பது குறித்து நான் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றேன்! பிள்ளையவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து, மேலும் தமிழுக்குப் புரிய வேண்டிய தொண்டுகளையெல்லாம் குறைவறப் புரிய வேண்டுமென்பது என் பேராவல். ஆதலால், அவரை நான் என் உளமார வாழ்த்துகின்றேன்! அவர்தம் அரிய தொண்டுகளைப் பாராட்டுகின்றேன்! அவரைப் பாராட்டும் விழாக் குழுவினரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்!

* * *

திரு. க. கதிர்வேல் முதலியாரவர்கள், B.A., B.L.,

[Regional Inspector of Local Boards, Chingleput.]

வேணுகோபாலப் பிள்ளை அவர்களின் மணிவிழா 4—11—1956ல் காஞ்சிமா நகரில் நடைபெறுமென்று தெரிவித்திருக்கும் அறிக்கை கிடைக்கப் பெற்றேன்: மெத்த மகிழ்ச்சியுற்றேன்! நான் காஞ்சீபுரத்தில் சுமார் நான்கு ஆண்டுகள் நகராட்சி ஆணையாளனுப் பணியாற்றிய போது மகாவித்துவான் அவர்களைப் பன்முறை சந்தித்துள்ளேன். அவர் சொற்பொழிவுகளையும், விரிவுரைகளையும் விழாக்களில் கேட்டுள்ளேன். அவர் அங்குள்ள அலுவலர்களுக்கும் மற்றவர்களுக்கும் நடத்திவந்த வித்துவான் வகுப்பிலும் ஒரு நாள் உட்கார்ந்து சிறிது நேரம் என் நண்பர்களுடன் பாடம் கேட்டேன். ஆயினும், என் தாய் மொழி தமிழாயிருப்பினும், பள்ளியில் தெலுங்கு படித்து ஒரு சிறிதேனும் தமிழ் முறையே கற்காமல்

தமிழ் அறிஞரின் கூட்டுறவால் சற்றுத் தமிழ் உணர்ச்சி மட்டும் பெற்றுள்ள யான், அத்தகைய மாபெருந்தமிழ் அறிஞரைப்பற்றி ஒரு சிறிதும் எடுத்துச் சொல்லத் தகுதி யற்றவன்.

அன்றுதொட்டு இன்றுவரை அன்னவரை அடிக்கடி காஞ்சியில் சந்தித்து வருவதுண்டு. அவர் பெருமையைத் தமிழ் அறிஞர்கள் வாயார வாழ்த்தி, மனமார மகிழ்ந்து புகழ்வதை ஆங்காங்குக் கேட்டிருக்கிறேன். தணிகைக்கு ஒரு நாள் அவர் சொற்பொழிவுக்கு வந்த போது தமிழ் நாட்டு வட வெல்லைப்பாதுகாப்புக்குழுவின் முன்னைய தலை வர் காலஞ்சென்ற மங்கலங்கிழார் அவர்கள், மகா வித்துவான் அவர்களையும் அவர்களது மாபெருந்தமிழ் அறிவையும் மிகப் போற்றிப் புகழ்ந்தார். 'புலவர்கள் எழுதும் புத்தகங்களையுங்கூடப் பார்வையிட்டுப் பிழை களைத்திருத்திக்கொடுப்பார்,' என்று கூறினர். திரு. மே. வீ. வே. அவர்கள் எளிய தோற்றமும், இனிய சொற் களும், ஆழ்ந்த கருத்துக்களும், உயர்ந்த எண்ணங்களும், நிரம்பிய தமிழ்த்தாயின் தவப் புதல்வர்; ஆசிரியர்களின் ஆசி ரியர்; தூய தமிழை மக்களிடையே பரப்புவதற்குப் பலரும் தமிழைக் கற்றுத் தலை சிறந்தோங்க வேண்டுமென்று வகுப்புக்களை நடத்தியும், நூல்களை எழுதியும், சொற் பொழிவுகளாற்றியும் தமிழ் மொழிக்குச் சாலச்சிறந்த பணியாற்றி வருகிறார். அன்னவர் நீடூழி வாழ வேண்டு மென்றும், அவர் தமிழ்த்தொண்டு மேலும் மேலும் சிறப் புற வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன் !

வாழ்க உயர்திரு மகாவித்துவான் மே. வீ. வே !

வாழ்க தமிழும் தமிழ் நாடும் !!

* * *

பேராசிரியர் எஸ். எஸ். அருணகிரிநாதரவர்கள்,

[பல்வேறு நூல்களின் ஆசிரியர்]

இன்னும் ஓர் அறுபதாண்டிருங்கள் !

என் இன்னுயிர் நண்பர், தமிழ்ப்பெரும்புலவர், தமிழ்ப்பேராசிரியர், பன்னூலாசிரியர், பன்னூற்பதிப்பாசிரியர், நல்லியல்பினர் உயர்திருவாளர். மே. வீ. வே. பிள்ளை அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, பொன்னே போலப் போற்றத்தக்கது ; பொன்னுடை போர்த்திப் போற்றத் தக்கது. அவர் யாதவகுல நன்மணி ; தமிழர்களின் நற்செல்வம். அவ்ரால் பல தமிழ் நூல்கள் சீர் பெற்றன ; தமிழரசி—தமிழ்த் தாய்—நல்லுருப் பெற்ருள். அவர்தம் ஆயுளும், உடல் நலமும் மேலும் சிறந்து விளங்கட்டும்! "பிள்ளை அவர்களே, இன்னும் ஓர் அறுபதாண்டிருங்கள்!" என்று வடபழநி ஆண்டவனை நினைத்து வாழ்த்துகின்றேன் !

* * *

திரு. ஓ. க. சுப்பராயனுரவர்கள்,

[மாணவர், செந்தமிழ்க் கல்லூரி. காஞ்சீபுரம்.]

நிலைமண்டில ஆசிரியப்பா

வேணுகோ பாலன் வியனருள் பெற்ற
வேணுகோ பாலனென் வித்துவ மணியே !
கற்றவர் புகழும் காஞ்சியம் பதியில்
தீந்தமிழ் தன்னைத் திறமுடன் வளர்த்தும்
அண்டினர் தம்மைப் பண்டித ராக்கியும்
என்போன் ருர்க்கெலா மின்னருள் புரிந்தும்
தமிழ்த்தாய் தனக்குத் தகுதொண் டாற்றும்
பேரா சிரிய ! பேசருங் குணத்த !
பொறைமிகு நின்னைப் பூமகள் என்கோ !
அருங்கலை நிறைவால் அகத்திய னென்கோ !

எங்க ளுளத்தில் இடங்கொளு நின்னை
என்னெனச் சொல்லி ஏத்துவன் ஐய !
வாழ்கநின் சீர்த்தி வளனுறப் பெற்றே !

* * *

திரு. க. மரகத வேலரவர்கள்,

[மாணவர், செந்தமிழ்க் கல்லூரி, காஞ்சீபுரம்.]

நாமகள் உவப்ப நற்றமிழ் வளரப்
பூமகள் சிறக்கப் புலவோர் போற்ற
நற்றெண் டாற்றும் நயத்தகு மெந்தாய் !
நின்பால் சேர்ந்தோர் நின்போ லாகக்
கைம்மா றெண்ணுக் கடமை பூண்டு
வளமார் தமிழினை வழங்கும் வள்ளால் !
பரவுதும் உனைநற் பண்பினிற் சிறந்தோய் !
பாரினில் தமிழ்த்தாய் பாங்குறச் சிறக்க
உன்றன் ஆயுள் ஓங்குக என்றே
மாலவன் தாண்மலர் வணங்குவன் யானே !

* * *

திரு. வி. ஜி. இராமசுவாமி ஐயரவர்கள்,

[ஸ்ரீ ராமா 'கேப்,' காஞ்சீபுரம்]

தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை அவர்களின் மணிவிழாச் செய்தி கேட்டுப் பெருமகிழ்வு எய்துகிறேன் ! இனிய பண்புகள் அனைத்திற்கும் உறைவிடமாய் விளங்கும் மகாவித்து வானுடைய அறிவிற்கு விருந்தாம் தீந்தமிழ்ச் சொற்பொழிவுகள் பலவும் கச்சிப் பெருமக்களின் செவியில் என்றும் அமரநாதமாய் ஒலித்துக்கொண்டிருக்கும் என்பதில் அணுவேனும் ஐயமுண்டோ ?

பேராசிரியர் பிள்ளையவர்கள் இன்னும் பல்லாண்டு கள் நம்மிடை வாழ்ந்து, நம்மை அறிவுப்பாதையில் அழைத்துச் செல்ல எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக!

* * *

ஸ்ரீ சோமசுந்தர கன்னியா வித்தியாலயம்

[பெரிய காஞ்சீபுரம்]

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் கச்சியம்பதியை அடைந்த நாள் தொடங்கி வித்தியாலயத்தின் நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு வித்தியாலயத்தைச் சிறப்பித்து வருகின்றனர். அவரது வருகையால் கச்சியம்பதி பல வித்துவான்களைப் பெற்று மகிழும் வாய்ப்புக்குரியதாயிற்று. சிறந்த பண்புகளுக்கு ஆகரமாய் விளங்கும் பிள்ளையவர்கள் அறுபதாண்டு நிறைவுறப் பெற்று மணி விழாக் கொள்வதைக் கண்டு வித்தியாலயத்தின் மாணவிகளும் ஆசிரியைகளும் ஆசிரியர்களும் இயக்குநர் குழுவும் பெரிதும் மகிழ்கின்றனர்கள். திரு. பிள்ளையவர்கள் பின்னும் பல்லாண்டு சிறக்க வாழ்ந்து விழாப் பல கண்டு மகிழக் கஞ்சி காமாட்சி திருவருள் சுரக்க வேண்டுமென அவரை மனமொழி மெய்களாற் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றனம்!

* * *

திரு. சி. காளப்ப முதலியாரவர்கள்

[உரிமையாளர், முத்தமிழ் அச்சகம், காஞ்சீபுரம்]

"தொண்டை நாடு சான்றோர் உடைத்து" என்னும் முதுமொழிக்கு இலக்காகக் கச்சியம்பதி முதுபெரும்புலவர்களைத் தன்னகத்தே கொண்டு பெரும்புகழைப் பெற்று வருகிறது. அத்தகையருள் தலை சிறந்தவரும் அருள் மிக்கவரும் அறிஞர் பெருமானும் சிந்தாமணிச் செல்வர் மகா

வித்துவான் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை யவர்களாவார்கள்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் புலவர் பெருமானின் அன்புக்கும் நட்புக்கும் பாத்திரமானவர்களுள் அடியேனும் ஒருவன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புலவர் பெருமானின் நட்புக் கிடைத்த நாள் முதல் என்னுடைய அறிவும் அச்சகமும் வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்றன. 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே,' என்னும் ஔவையார் மொழிக் கேற்ற நல்லாராக இப்புலவர் பெருமான் விளங்குகின்றார்கள் எனல் மிகையாகாது. இவருடன் தினமும் நெருங்கிப்பழகவும் உரையாடவும் வாய்ப்புக்கொடுத்த இறையருளை என்றும் மறவேன். இவர் கச்சியம்பதியில் உள்ள போது நாள்தோறும் முத்தமிழ் அச்சகத்திற்கு நிச்சயமாக வந்து போவார். இவரது வருகை எனக்கு மிகவும் மகிழ்ச்சியையும் தொழிலில் ஊக்கத்தையும் உண்டுபண்ணும். இவர், தமது எளிய தோற்றம், அருள் நிறைந்த கண்ணோட்டம், நல்லுரை ஆகியவற்றால் என்னை ஆண்டு கொண்டருளிய அமுதமானார்கள். முத்தமிழ் அச்சகத்துக்கு ஒரு தனிப்பெருமை உண்டென்றால் அது இப்புலவர் பெருமானாலேதான் கிடைத்தது என்பதைப் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

இன்னபிற தகுதி வாய்ந்த இப்புலவர் பெருமானுக்கு நல்ல முறையில் மணிவிழா நடாத்திப் பெருநிதி திரட்டித் தர என்னுள்ளம் பன்னெடு நாளாக எண்ணிவந்தது. அவ்வெண்ணம் செயலாக நிகழ்வது குறித்து இறைவன் திருவருளை வழுத்துகிறேன்! மணிவிழாத் தலைவர் பல்வளனும் உற்றுப் பல்லாண்டு வாழ்ந்து, முத்துவிழா முதலியனவும்

பெறத்தக்கபடி திருவருள் புரியுமாறு ஒரு திருமுருகன் திருவடி பரவுகிறேன்.

* * *

சென்னை ஸ்ரீ யதுகுல மகாசங்கத்தாரும்

காஞ்சி யாதவ சத்திர பரிபாலன சபையாரும்

செந்தமிழ்ச் செல்வீர்,

செந்தமிழ்ச் செல்வியை நம் நாட்டில் சீரிய சிங்காதனத்தில் வீற்றிருக்கச் செய்த மாபெரும்புலவர் திருக்கூட்டத்தின் வழி வந்த உமது தமிழ்த்தொண்டு நம் செந்தமிழ் நாடு நன்கறிந்ததே! இன்றைய புலவர் உலகிலே நீவிர் அருந்தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பயிற்சி பெற்றதோடல்லாமல், ஆங்கிலப் புலவர்களுடைய உள்ளக்கருத்தையும் ஊன்றிப் படித்து வருகின்றீர். உம்முடைய சொற்பொழிவுகளிலும் நூல்களிலும் ஆங்கிலப்பண்பாடும் காணப்படுவது உமக்கொரு தனிப்பெருமையாகும்.

நீவிர் ஆசிரியராய் இருந்து ஆற்றி வரும் அரிய தொண்டை இன்றைய மாணவ உலகம் நன்கறியும். உமது தொண்டு கல்வி வளர்ச்சி, மொழி முன்னேற்றம் இவற்றுடன் நில்லாமல், சமய வளர்ச்சியிலும் ஈடுபட்டிருக்கின்றது. "பிறர் துன்பம் கண்டு துயரப்பட்டு அதைத் துடைக்க எவன் முற்படுகிறானே, அவனே உண்மை வைணவன்," என்ற உயரிய தத்துவத்தை விளக்கும் வைணவத்தின் கோட்பாடுகளை விளக்கி நீவிர் ஆற்றி வரும் சொற்பொழிவுகள் ஆஸ்திக வளர்ச்சிக்குப் பேருதவியாய் இருக்கின்றன. குறிப்பாக வைணவம், சைவம், ஜைனம், பௌத்தம் ஆகிய சமயக்கருத்துக்களையும் விளக்கிச் சொல்லும் உமது சமரச பாவனை நம் சமயங்களின் ஐக்கியத்தை எடுத்துக் காட்டும் தனிச்சிறப்பினை உமது சொல் வன்மையில் காண்கிறோம். நீவிர் காஞ்சி

யின் சம்பந்தத்தால் தனிப்பெருமைகளைப் பெற்றீர். உமது சீவகசிந்தாமணிச் சொற்பொழிவுகள் ஜைனத் தமிழ் இலக்கிய மன்றத்திற்குத் தனிப்பெருமையளித்தன.

இத்தகைய பெருமை சான்ற நீவிர் எம்மிடையே பல்லாண்டு வாழ்ந்திருந்து, மொழி வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் சீரிய தொண்டாற்றத் திருவருள் சுரக்குமாறு பரமன் திருவருளை வேண்டுவதோடு, செந்தமிழ் நாட்டு ஆயர்குலப் பெருங்குடிமக்களின் நல்லாசியையும் சென்னை ஸ்ரீ யதுகுல மகாசங்கத்தார், காஞ்சி யாதவ சத்திர பரிபாலன சபையார் ஆகியோரின் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நும் நலங்கருதும்,
C. V. திருவேங்கடம் பிள்ளை, M. C.
காரியதரிசி, சென்னை ஸ்ரீயதுகுல மகா சங்கம்.
C. V. கண்ணுசாமிப் பிள்ளை, காரியதரிசி,
காஞ்சி யாதவ சத்திர பரிபாலன சபை.

SWAMI SUKHANANDAJI MAHARAJ,

President, Sri Ramakrishna Math, Kanchi.

Maha Vidwan M. V. Venugopaula Pillai is known to me from the year 1943 when I took charge of the Ashrama. He was introduced to me by my predecessor Swami Viswambaranandaji as a learned Tamil Scholar and an ardent devotee of the Math. Besides his learning he is a good speaker. Whenever he speaks in the Math his lectures attract a good gathering of learned men and women. It is very rare to see any meeting in the city in which he does not take part either as one of the lecturers, president or the proposer of vote of thanks. He is taking part in all the functions of the Math. He used to get calls very often from mofussils to address meetings. In spite of his heavy work he never fails to attend the religious discourses held every Sunday evening in the Math. His behaviour towards others is very gentlemanly. He never utters any word which may wound the feelings of others. He is always calm and dignified. In discourses on controversial subjects with anyone he never gets agitated. Politely and calmly he argues with his opponent and convinces him at last and never loses his temper. He is very kind and sympathetic towards everyone.

His public services are always free. He is such a noble gentleman. His way of dressing too is befitting to a gentleman. His clothes are always very neat and clean.

He is a good writer too. His handwriting will be mistaken for printed letters.

It is very gratifying to find that some of his friends recognising his greatness and selfless service have formed themselves into a committee to celebrate his *Shashtiabdapoorthy* in a befitting manner on the 4th of November 1956.

May Sri Guru Maharaj bestow on him His choicest blessings for a long, healthy and happy life radiating love and wisdom to one and all !

* * *

SWAMI SMARAHARANANDAJI MAHARAJ

Sri Ramakrishna Math, Kancheepuram.

I am glad to say that, I had the good fortune to come in close contact with Vidwan M. V. Venugopaula Pillai, for the last six years. He is an ideal teacher and friend to one and all, irrespective of caste, creed or position. He is a staunch Vaishnavite by birth, yet, Vaishnavites, Saivites, Smarthas, Madhwas, Jains and Buddists like him very much, because of his catholicity of outlook.

He is an asset to the Tamil Literature, especially to Grammar. He is the author and editor of innumerable books in Tamil for Schools and Colleges.

He is one of the best speakers. He is so clear and convincing in the exposition of any subject, that many people, as a matter of fact, are hunting after him to hear him.

Many a student had the rare good fortune to be trained by him for the Vidwan Title of the Madras University. It is a pleasure to hear his teachings, because of its simple and clear exposition.

As Swami Vivekananda says, Mr. Pillai has become an example of the gospel Truth, " Character is the Test of Religion." He is humble and unassuming and yet dignified.

After coming into contact with the life and teachings of Sri Ramakrishna and Vivekananda, he has become an ardent devotee, and he is all in all in the entire activities of the Ramakrishna Math, Kancheepuram.

May Bhagawan Sri Ramakrishna shower, on the occasion of his 60th birthday, His choisest blessings on him, for unflinching faith and devotion and make him an instrument for His services, is the constant prayer of Swami Smaraharananda!

* * *

Rao Bahadur

V. R. RANGANATHA MUDALIAR, M.A.

Retd. Depnty Director of Public Instruction, Madras.

I am happy to learn that my friend and old student Maha Vidwan M. V. Venugopaula Pillai, Teacher and scholar, will be honoured by the public. His success in life and his achievements in the field of letters are an outstanding example of what determination and perseverance could achieve even in this world of unequal opportunities. He had not the advantage of wealth or formal

education, still he turned out to be a successful teacher and author of several books.

I remember his early days, how after a hard day's work he attended evening classes and spent long hours pouring over books. It was no pleasure at that time-pleasure from books must have come later. I recall how along with a few other young men Venugopaula Pillai came under the influence of two great teachers, T. N. Seshachalam, a lawyer by profession but a scholar of choice, and C. R. Govindaraja Mudaliar, a teacher of great repute, who spent his spare time and energy guiding and helping many a young man to take university diploma in Tamil. There were no institutions in Madras to teach Tamil and no libraries worth the name. It meant hard work, but Govindaraja Mudaliar inspired them with zeal for study.

I cannot help recalling to my mind two others who worked and studied with Venugopaula Pillai and who also became teachers and scholars—K. Madurai Mudaliar who rose to the position of a lecturer in a college and who is still engaged in literary work and M. Kuppuswami Mudaliar who passed away two years ago and who spent his last years working to revive Tamil among the people of the Chittoor District. These three young men in a spirit of adventure educated themselves and raised their position and status.

I know Venugopaula Pillai is the author of several school and college books but I am not competent to speak of their merit. He wrote them at a time when

there was little encouragement to authors and publishers; but conditions are different now.

I wish Venugopaula Pillai many more years of health and happiness and I wish the function the success it deserves.

* * *

Sri. K. VENKATASWAMI NAIDU, B.A., B.L., M.L.A.

Vidwan Venugopaula Pillai is a great scholar, poet and devotee. We worked together for over three decades in the Vaishnava Maha Sabha. He had mastered knowledge of Divya Prabhandam and Commentaries. His lectures on Vaishnavism are very lucid, informative and appealing. He has placed the Vaishnava world under great debt of gratitude by his lectures and writings. He has all the great qualities of a true Vaishnava—purity, humility, service, helpfulness and industry. Though he left Madras some years ago to Kancheepuram to spend a quiet life, he was althrough busy with special classes for training Vidwans, writing books, correcting proofs, lecturing etc., We are very glad that we are privileged to celebrate his Sashti Abhda Poorthi. May he live long and continue to do his great service for our religion and humanity!

* * *

Sri K. R. VISVANATHA AIYAR Avl., B.A.,

Government Pleader, Kancheepuram.

To

Sri Vidwan M. V. VENUGOPAULA PILLAI Avl.,

Sir,

May I on this happy and auspicious occasion of your life, your Sastiapthapurthi, offer my prayers to God

Almighty to give you sufficient strength and health to pursue your unquenching thirst for further study and spread of our ancient Tamil Literature. By your ripe scholarship, your unassuming simplicity and exemplary character, you have already endeared yourself to one and all, not only in this vast and hoary city but to almost every one in the Tamil Nad. Your name has become a house-hold word and many are the students you have taught and sent out to spread the Tamil Language. You are really a Vidwan in every sense of the word. I wish you many more years of useful life and service.

* * *

Sri. N. GANAPATHY IYER, M.A., L.T.,

[*Asst. Master (Retd.) Hindu High School, Triplicane.*]

Dear Sir,

I am grateful to you for remembering me on the happy occasion of felicitating Sri M. V. Venugopaula Pillai, A very old friend of mine, urbane in manners, a gentleman to the tip of his fingers, a deep and quiet scholar withal, how can any one who once knew him forget him? A born teacher, with lovable personality he could inspire even the most backward of his pupils with the zeal to work. May he live long and enjoy perfect peace and prosperity!

Yours faithfully,

N. GANAPATHY IYER.

* * *

Sri. A. MAHADEVAN, M.A., L.T.,
[*Retired Headmaster.*]

Dear Mr. Venugopala Pillai,

Kindly accept my sincere felicitation on your completion of the full cycle of Indian years. May by the grace of God each year of the second cycle bring you in greater measure, peace, prosperity and bliss through selfless service in the cause of Indian culture and civilisation as embodied in our sacred lore! India needs such saint-scholars of services reasonableness and gentle persuasion like you to spread the ancient and eternal principles of truth and non-violence. May God spare you long long years to serve His cause!

Yours Sincerely,
A. MAHADEVAN.

* * *

C. Mairh

பிற்சேர்க்கை :

டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, M.A., Ph. D.,

[பல்கலைக்கழகம், சென்னை]

மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர் உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் மணி விழா அழைப்பிதழ் பெற்றுப் பெருமகிழ்வுற்றேன்! விழாவில் கலந்துகொள்ளும் பேறு முயன்றும் கிடைக்கவில்லை. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தமிழ்த்தொண்டு ஆற்றி வரும் நண்பர் திரு. மே. வீ. வே. பிள்ளையவர்கள் மற்றுமோர் அறுபதாண்டு வாழ்நாள் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்பது என் பேரவா. அதற்கு ஏற்ப நல்லுடலும், பொருள்வளமும், குன்றாத ஊக்கமும், பிற நலன்களும் அவர்கள் பெறுமாறு அருள வேண்டும் என எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளில் வீழ்ந்து வணங்கி வேண்டிக்கொள்ளுகிறேன். மணிவிழாக்கொண்டாட உறு துணையாய் இருந்து வரும் குழுவினர் அனை வரும் வாழ்க!

*　　　*　　　*

டாக்டர்

அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள், M.A., Ph. D.,

[அண்ணுமலைப் பல்கலைக்கழகம்]

சிந்தாமணிச்செல்வர் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் மணிவிழா இப்பல்கலைக்கழகத்துத் துணை வேந்தர் அவர்கள் தலைமையில் நடைபெறுவது அறிந்து மகிழ்கின்றேன்!

திரு. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியத்திற்குச் செய்துள்ள தொண்டுகள் பல. அவற்றைப் பாராட்டு வேண்டுவது கடமையாகும்.

விழா வெற்றியோடு நடைபெறவேண்டுமென இறைவனை வழுத்துகிறேன்.

*　　*　　*

தவத்திரு. சித்பவானந்த அடிகளாரவர்கள்

[ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருபராய்த்துறை]

தமிழறிஞர்களை இத்தகைய விழாக்களின் மூலம் போற்றிப் பெருமைப்படுத்துவது தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் உயர்வு தருவதாகும். திருவாளர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் நிறைந்த ஆயுளைப் பெற்றுச் சிறப்புறத் தமிழ்த்தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவர் அருள் புரிவாராக!

*　　*　　*

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், B.A., B.L.

[தமிழ்த்துறைத் தலைவர், பல்கலைக் கழகம், சென்னை.]

கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் இனிதமைந்த நண்பர், திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் இடையறுத் தமிழ்த்தொண்டைப் பாராட்டும் பேறு கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்க்குக் கிடைத்தது. தமிழ்ப் புலவர்களும் புரவலர்களும் பிள்ளையவர்களுக்குப் பல்லாண்டு கூறும் மணி விழாவில் நான் கலந்து மகிழும் பேறு பெற்றேனில்லை. 'பல்லாற்றானும் விழுமிய பணியாற்றும் வேணுகோபால வித்தகர் நீடு வாழ்க! அவர்தம் குறிக்கோள் ஒல்லையில் நிறைவேறுக!' என இம் மணி விழாவில் வாழ்த்துகின்றேன்.

*　　*　　*

டாக்டர் T. M. P. மகாதேவன் அவர்கள், M.A., Ph.D.

[தத்துவப் பேராசிரியர், பல்கலைக் கழகம், சென்னை.]

பேராசிரியர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களது மணி விழாக் கொண்டாடுவதுபற்றி மிக்கமகிழ்ச்சி!

பல ஆண்டுகளாகத் தமிழ் ஆக்கம் கருதி உழைத்துவரும் ஆசிரியர் அவர்கள் தமிழ்ப்புலவர் உலகத்தின் முன் அணியில் நிற்பவர். அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து மேலும் தமிழ்த்தொண்டும் சமயத்தொண்டும் செய்து வரவேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

* * *

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

பிள்ளையவர்கள் தன்னேரில்லாத நம் தமிழ் மொழி வளர்ச்சி ஒன்றையே கருத்தாகக் கொண்டு தொண்டாற்றி வருபவர்கள் ; தம் வாழ் நாளை வீழ் நாளாக்காது, தாழாது தமிழுக்கே கழித்த பெரியாரும் ஆவார்கள்.

அவர்கட்கு மணி விழா அண்மையில் நிகழ்வது குறித்துப் பெருமகிழ்ச்சி கொள்ளுகின்றோம்! அவர்கள் செந்தமிழ் வளத்தைப் பெற்றதோடன்றி, ஆங்கில அருமொழி இலக்கியச் செல்வத்தையும் பெற்று, ஏக்கழுத்தத்தோடு "இருந்தமிழே உன்னால் இருந்தேன்!" என்பதற்கேற்பத் தமிழுக்கே தமைவுள்ளத்தில் தனியிடந்தந்து, விருப்பத்துடன் திகழ்பவர்களாவார்கள்.

புலனழுக்கற்று அந்தண்மையொழுக்கம் பூண்டொழுகும் பிள்ளையவர்கள் வாயிலாக இறையனுர் அகப்பொருள் உரை, தஞ்சைவாணன் கோவைப் புத்துரை, தொல்காப்பியச் சொல்லதிகார நச்சினர்க்கினியர் உரை, அட்டப்பிரபந்த விளக்கவுரை, அரிச்சந்திர புராண விளக்கக் குறிப்புரை, சித்தர் ஞானக்கோவை முதலிய நூல்கள் திருத்தத்துடன் பிழையின்றி வெளி வந்திருப்பது, கைம்மாறு பேணு அவர்களின் கடப்பாட்டுணர்ச்சியைக் கலங்கரை விளக்கம் போலக் காட்டுவதாகும்.

நூல்கள் பதிப்பது அருஞ்செயலாகும்; அதினும்,

பிழையின்றி, வழுக்கள் நூற்கண் நுழையாவாறு, நன் முறையில் பதிப்பது அரிதினும் அரியதாம். அதில் எடுத் துக்காட்டுக்கு முதலிடம் பெறுவது, பிள்ளையவர்கள் பதிப்பித்துள்ள நூற்செல்வமேயாகும்.

சிலர் விரிவுரையில் தேர்ச்சி பெற்றிருப்பர்; அவர்க்கு எழுத வாராது. சிலர் எழுதுவர்; அவையில் பேச இய லாது நடுக்குற்று நிற்பர். சிலர் எழுதுவர்: அவர்தம் எழுத்து எத்தகையோர்க்கும் படிக்க இயலாது. பிள்ளை யவர்கள் இவ்வெவற்றினும் திறமை சான்றவர்கள் ஆவார் கள். அவர்கள் கையெழுத்து முத்துக் கோத்தது போல அழகிதாய் மணியெனத் திகழும்.

பிள்ளையவர்கள் பதிப்பதோடன்றித் தமிழ் கற்க விழையும் பெரியோர்க்கும் இளைஞர்க்கும் கணக்காயராய் அமர்ந்து அவர்தம் அறிவுப் பசிக்குக் கண்ணுக்கரும்பா, நகைமுகமே நாண்மலரா, இன்மொழியின் வாய்மையே தீங்காயா, வண்மை பலமா அறிவு விருந்தூட்டி, எண் சுவை கொள்ள அளிக்கும் அரிய கற்பகத் தருவாய்த் திகழ்பவர்களாவார்கள்.

செயற்கரிய செய்து வரும் பெரியார், பலர் புகழ் நன் மொழிப் புலவர் பெருந்தகை, திரு. மே. வீ. வேணு கோபாலப் பிள்ளையவர்கள் இம்மணிவிழாவில் மகிழ்ந்து நூற்றாண்டு விழாவும் பெற்றுப் பொன்றாப் புகழுடன் பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்று பழி தீர் செல்வமொடு வழிவழி சிறந்து பன்னெடுங்காலம் வாழிய வாழியவென மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்!

* * *

திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள், B.A.
[சென்னை அரசினர் துணைத் தமிழ் மொழிபெயர்ப்பாளர்,
சென்னை மாணவர் மன்றத் துணைத்தலைவர்.]

குணம் என்னும் குன்றேறி நின்றார்.

என் மதிப்புக்கும் வழிபாட்டுக்கும் போற்றுதலுக் கும் உரிய பெரியார் உயர்திரு. மே.வீ. வேணுகோபாலப்

பிள்ளை அவர்கள் ஓர் அதிசயப்பிறவியாவர். நற்குணங்க ளின் நடமாடும் காட்சி நிலையம் என நான் அவரைக் கருதுகிறேன். உத்தமப் பண்புகள் அனைத்தும் அவரிடம் ஒருங்கே குவிந்து கிடப்பதை மட்டும் நான் காணவில்லை; முதன்மை பெற அவை ஒன்றோடொன்று போராடும் அபூர்வக்காட்சியினையும் காண்கிறேன். சான்றாண்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், இரக்கம், தண்ணளி, இன் சொல், மலை பெயரினும் நிலைபெயரா மாண்பு, செந்தமிழ்ப் புலமை, தீந்தமிழ்ப் பாட்டிசைக்கும் திறம், சமயப் பொ றை, நாநலம், நூலறிவுடன் கூடிய மதிநலம், தெய்வபத்தி, உயர்ந்த சீலம், நட்புக்குப் பாத்திரமாதல், செய்ந்நன்றி அறிதல், குருபத்தி - இன்னோரன்ன பிறநலங்களெல்லாம் தாம் உய்யப் பிணங்குகின்றன அவர் மாட்டு. இத்தகைய சீரிய குணங்களெல்லாம் வாழ வேண்டுமானால், இவைகட் குப் பற்றுக்கோடாய் உள்ள புலவர் வேணுகோபாலர் வாழ வேண்டும்.

அவரும் அவர்தம் மறைந்த ஆசிரியர் கா. ர. கோவிந் தராஜ முதலியாரவர்களும் குழந்தைகள் போலவும், நண் பர்கள் போலவும், ஊடல்கொண்ட காதலர்கள் போலவும், ஆசிரியர் மாணவர் முறையிலும் உரையாடும் அழகினை இன்றைக்கெல்லாம் சுவைத்துக்கொண்டிருக்கலாம். அத் தகைய பேறு பெற்றவர்களுள் யான் ஒருவன்.

நம் ஸ்ரீவைஷ்ணவரை வைஷ்ணவப்பரிபாஷையி லேயே "இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்!" என வாழ்த் துகிறேன். என் வாழ்த்தினை நிறைவேற்றி வைக்குமாறு காக்குங்கடவுளை வேண்டுகிறேன்! ஆங்கிலத்திலோ வட மொழியிலோ அல்லாமல், தமிழில் வேண்டுகிறேன். இதற்குக்காரணம் உண்டு. முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் எங்கள் முருகன். அவனுடைய மாமன்,

'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப்பசுங்கொண்டல்' ஆவன். அதிலும், காஞ்சிமா நகர்க் கார் வண்ணன், தமிழுக்கு அடிமைப்பட்டவன். தமிழால் இடும் எந்த வேலையும் செய்து 'யதோத்காரி' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவன். எனவே, செந் நாப்புலவனுகிய யான் சொன்ன வண்ணமும் அப்பெரு மான் செய்வானென்பது திண்ணம்!

* * *

திரு. ப. இராமநாதரவர்கள்

[திருவள்ளுவரகம், சென்னை]

செந்தமிழே பூணுச் சிறக்கும் பெரும்புலவன்
வந்தமால் வேணுகோ பாலவள்ளல்—முந்துமன்பர்
போற்று மணிவிழாக் கொண்டான் புகழ்நலம்போன்
ஆற்றுநா ளால்வாழ்க அன்பு.

* * *

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள், B.A., B.L.

மணிவிழா மிகச் சிறப்பாக நடை பெறுமாறும், மணி விழாத்தலைவர் பல்லாண்டுகள் வாழ்ந்து மேன்மேலும் பல தமிழ்த்தொண்டுகள் புரியுமாறும் எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றேன்.

* * *

ஜெகசெல்வன் கம்பெனியார்

[நாகர் கோவில்]

கன்னித் தமிழ்ப்பணியால் காலத்தை வெற்றிகொண்ட
மன்னு புகழ்வேணு கோபால—மன்னவ!நீ
செந்தமிழ் நாடு சிறக்கவே தொண்டாற்றிச்
சந்ததமும் வாழ்க தழைத்து!

* * *

வித்துவான். த. வைத்தியநாதப் பிள்ளையவர்கள்

[காஞ்சிபுரம்]

நேரிசையாசிரியப்பா

திருவளர் செல்வர் திருமா லடியார்
உருவுந் திருவும் ஒருங்குட னமைந்த
தீந்தமிழ்க் கடலாம் திரு.மே. வீ.வே.
நந்தமிழ் மக்கள் நவின்று நலனுறச்
செந்தமிழ் இலக்கிய இலக்கண நூற்பல
புவியோர் புகழப் பொற்புடன் பதித்தும்,
கவிஞர் களிப்புறக் கவிக ளியற்றியும்,
சுவையுள சொல்லும் பொருளும் பொதுள
அவையோர் மகிழ அன்புடன் நவின்றும்,
ஆணவம் நீங்கி அறிவு ஒளிபெற
மாணவர் தமக்கு மாண்புடன் அருளியும்,
ஆதவன் உலகிருள் அகற்றுதல் போலப்
பல்லோர் மனவிருள் பாங்குட னகற்றியும்,
இன்னும் பல்லாண் டின்புடன் வாழத்
திருவருள் சுரக்கத் தேவ தேவன்
மருமல ரடியிணை மகிழ்வுடன்
சிந்தித் தேத்தி வந்திப்ப னினிதே !

*   *   *

திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள்

[இந்து மத பாடசாலை, வாலாஜாபாது.]

எல்லார்க்கும் இனிய நல்லாசிரியர்

சில ஆண்டுகளாகக் காஞ்சீபுரத்தில் தமிழ் மொழி வளர்ச்சி விரைந்து நடைபெறுகிறது. பல இளைஞர்கள் செந்தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்றுத் தேர்வும் எழுதிப் புலவர் மணிகளாக வெளி வருகிருர்கள். எங்கும் தமிழ் மொழி பற்றிய பேச்சும், திருந்திய சொற்பொழிவு

களும், புதுப்புது நூல் வெளியீடுகளும், கழகங்களும் காணப்பெறுகின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் பேராசிரியர் மே. வீ. வே. அவர்கள் காஞ்சி நகர்க்கு வருகை புரிந்து தங்கினதே என்பதை அறிந்தபோது நான் அடைந்த மகிழ்ச்சி பெரிது!

சிலர் பெருநூல்களையெல்லாம் நன்கு பயின்று அவற்றில் கூறப்படும் பொருள்களையும் இனிது உணர்ந்துள்ளார்கள் எனினும், அவர்களால் பலர் நலனடையும் வாய்ப்பு இல்லாமலே போகிறதைக் காண்கின்றோம். அத்தகையோர் சில நாளாவது உயர்திரு. மே. வீ. வே. அவர்களது வகுப்பிற்குச் செல்லவும் அவர் சொற்பொழிவு களைக் கேட்கவும் வாய்ப்புப் பெறுவார்களானால், நாட்டுக்கு நற்பயன்கள் பல விளையும். கற்றவர்களும் கல்லாதவர்களும் நன்கு கேட்டுச் சுவைக்கும் வண்ணம் எந்தப் பொருளைப் பற்றியும் எடுத்துக் கூறும் அப்புலவர் பெருமானைப் பாராட்டும் வாய்ப்புப் பெற்றமைக்கு நான் உண்மையிலேயே மகிழ்கிறேன்!

அறுபதாண்டு வாழ்ந்த அண்ணல், இனியும் அவனி மக்களுக்குப் பெரும்பணி புரிதல் வேண்டும். பொது மக்கள் நலத்தையே கருதிப் பண்டை நாள் நலன்கள் பாரெங்கும் மல்கவும் மக்கள் யாவரும் மாண்புறு வாழ்க்கை வாழவும் நல்லுரைகளை நாடோறும் நவிலுதல் வேண்டும். அப்பெருந்தகையாருக்கு எல்லா நலன்களும் அருளிச் செய்ய இறைவன் திருவருளை வேண்டுகிறேன்!

* * *

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

1. வரிப்பாட்டு

[பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள், M.A., B.L., M.O.L.]

கானல் வரி என்பது சிலப்பதிகாரத்தில் ஒரு பகுதி. அதன் உயிர்நிலை கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தற்பாடலே. வரி என்பது தேவ பாணியல்லாத பாணியே ஆம். பண்ணோடு தொடர்புடையதே பாணி. காதற்பாணி என்று ஆசிரியரே பிற இடங்களில் கூறுகிறார். "வரிப்பாடலாவது பண்ணும் திறமும் செயலும் பாணியும் (தாளமும்) ஒரு நெறியின்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்று, தன் முதலும் இறுதியும் கெட்டு, இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறுதும் வரும்," என்று எழுதுகிறார் அரும்பத உரைகாரர். எட்டு என்ன? ஆறு என்ன? எட்டன் மட்டம் ஆறன் மட்டமா? அவைதாம் எவை? தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் அம்போதரங்கம் அராகம் என்ற ஆறு? அம்போதரங்கத்தைப் பேரெண் சிற்றெண் இடை எண் என மூன்றாக்க வரும் எட்டா? இவற்றின் நுட்பமெல்லாம் தெரியாமற் போனாலும், பல வகை இராகங்களும் பல வகைக் கதைப் பகுதிகளும் கலந்து வரும் கலவை இசைப்பாட்டே என்று அதனைக் கொள்ளலாம். இடத்துக்கும் பொருளுக்கும் ஏற்ப மாறி மாறி வரும் கலவை நிலை அவற்றினிடையே ஓர் ஒற்றுமையையும் வளர்ச்சியையும் காட்டித் தோன்றும் போலும்!

சந்தி என்பது கதையின் வளர்ச்சியைக் குறித்து நிற்கும் திருப்பு மையம் என்னலாம். அஃது ஐந்து வகைப்படும் என்பர். முகம் என்பது தோற்றுவாய். உழுது பண்பட்டுச் சேடையாடிய நிலத்தில் இட்ட வித்துத் தக்க பருவத்தே முளைப்பது போன்றதென இத் தோற்று வாயை உவமை கொண்டு அறிஞர்கள் விளக்குவார்கள். இரண்டாவதாகப் பிரதிமுகம் என்ற நாடகப் பகுதி அல்லது கதைப்பகுதியைக் கூறுவர். இது கதை விரிந்து நிற்கிற நிலை ஆகும். வித்து மேலே முளைந்து வந்தது பின் இலை தோன்றி நாற்றாய் முடிவது போன்றதென உவமையால் இதனை விளக்குவர். கருப்பமென்பது மூன்றாவது சந்தி. கதையின் உயிர்நிலையான பகுதியே இது. இதுவரை முற்றி வந்த கதையின் சூழ்நிலையில் இங்கே தோன்றத் தொடங்கும் கதையின் சிக்கல் இப்பகுதியில் முற்றி வரும். மேலே கூறிய நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுள் பொருள் பொதிந்து கருப்பமுற்றி நிற்பது போல்வதென உவமையால் இதனை விளக்குவர். விளைவு என்பது கதையில் எழுந்த சிக்கல் முற்றிப் பின் சிக்கல் தீர்ந்து செவ்வனே முடிவது ஆகும். கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக்காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது என உவமையால் இதனை விளக்குவர். பின்னுரையாகக் கதை முழுவதையும் புலப்படுத்தித் தெள்ளத் தெளிய முடிப்பது துய்த்தல் என்ற பகுதியாகும். விளைக்கப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடா விட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டு போய் உண்டு மகிழ்வது போல்வது என உவமையால் இதனை விளக்குவர். கண்ணகியோடு கோவலன் வாழ்கின்ற வாழ்வை முகமென்றும், மாதவியோடு வாழ்கின்ற வாழ்வைப் பிரதிமுகமென்றும், கானல் வரியின்

நின்று தொடங்குவனவற்றைக் கருப்பமென்றும், கோவலன் கொலையுண்பதிலிருந்து கண்ணகி கடவுளாய்த் தெய்வமாய் வான ஊர்தியில் செல்வது வரையிலுள்ளதனை விளைவென்றும், வஞ்சிக் காண்டத்தைத் துய்த்தலென்றும் கொண்டால் இச்சொற்களின் பொருள் ஒருவாறு விளங்கும். இவ்வாறு கதை வளருந்தன்மையும் வரிப்பாடலில் வரலாம். வாராது, ஏதேனும் ஒரு நிலையைக் கூறினாலும் கூறலாம். கானல் வரிப்பாட்டு முழுவதையும் ஒரு கதையாகக் கொண்டு தொடக்கக் கட்டுரையை முகமாகவும், ஆற்று வரியைப் பிரதிமுகமாகவும், பிற்பகுதியைக் கருவாகவும், மாதவிப் பாடலை விளைவாகவும், முடிக்கும் கட்டுரையைத் துய்த்ததாகவும் கொள்ளலாம். கோவலன் பாட்டையும் மாதவிப் பாட்டையும் தனித்தனியே கொண்டு இவ்வாறு ஐந்து சந்திகள் வருவதாகவும் கொள்ளலாம்.

சார்த்து என்பது சார்த்து வரியோ அல்லது வேறோ விளங்கவில்லை. "பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும்—சார்த்திப் பாடின் சார்த்துஎனப் படுமே," என்றொரு சூத்திரத்தை எடுத்துக்காட்டுகிறார் அரும்பத உரைகாரர். கானல் வரியில் பாட்டுடைத் தலைவனாக வரும் சோழன் என்ற பெயரோடும் அவன் ஊராகிய புகாரோடும் சார்த்துவரி வருதல் காண்க. இது முகச் சார்த்தென்றும் முரிச்சார்த்தென்றும் கொச்சகச் சார்த்தென்றும் மூன்று வகையாகும். மூன்றடியாலும் நாலடியாலும் ஐந்தடியாலும் ஆறடியாலும் வருவது முகச் சார்த்தாம். குற்றெழுத்தியலால் குறுகிய நடையால் மூன்றடியாலே வருவது முரிச்சார்த்தாம். கொச்சகம் போல வருவது கொச்சகச் சார்த்தாம். கானல் வரியில் வருவது முகச்சார்த்தாகும்.

வரிப்பாட்டு, தெய்வஞ் சுற்றிய வரிப்பாட்டு ஆகவும், மக்களைப் பழிச்சிய வரிப்பாட்டு ஆகவும் வரும். கானல் வரி மக்களைப் பழிச்சியதேயாம். இப்பாட்டு, கூடை என்றும் வாரம் என்றும் இரண்டு வகையாம்.

" கூடை யென்பது கூறுங் காலை
நான்கடி யாகி இடையடி மடக்கி
நான்கடி அஃகி நடத்தற்கும் உரித்தே."

என்ற சூத்திரங்கொண்டு இதை விளக்குகிறார் அரும்பத வுரைகாரர். கானல் வரியில் ஆற்று வரிப் பாடலாக வருவன இத்தகையன.

" வார மென்பது வகுக்குங் காலை
நடையினும் ஒலியினும் எழுத்தினும் நோக்கித்
தொடையமைந் தொழுகும் தொன்மைத் தென்ப."

" இவை அடி வரையிட்டன " என அரும்பத உரையில் உள்ளது, " அடிவரையறை அற்றன " என இருக்குமோ என்பதை ஆராய்தல் வேண்டும்.

" எழுவகை நிலத்தினும் எய்திய வரி " என்று ஊர் காண் காதையில் இளங்கோவடிகள் பாடுகிறார். இங்கே எழுவகை வரிப்பாடல்களைக் குறிக்கிறார் அரும்பதவுரைகாரர். ஆற்றுவரி, சார்த்துவரி, திணை நிலை வரி, மயங்கு திணை நிலை வரி, முகமுடை வரி, முகமில் வரி, படைப்பு வரி என்று அங்கே அவற்றின் பெயரை அவரே கூறுகிறார். ஆற்று வரி என்பது கானல் வரியில் காவிரியைப் பாடுவது போல, ஆற்றைப்பாடுவது ஆகும். சார்த்து வரியை முன்னரே கண்டோம். திணை நிலை வரியை நிலை வரி என்றும் கூறுவர்.

" முகமும் முரியும் தன்னொடு முடியும்
நிலையை யுடையது நிலையெனப் படுமே."

என்பர். இங்கே முகவரிப்பாடலும் முரிவரிப்பாடலும் தன்னில் முடியப் பாடுவது நிலை வரி என்கிறார். முரி வரி என்பது இவ்வாறு நிலை வரியின் உறுப்பாக அமைவதால் ஏழோடு இதனையும் கூட்டி எட்டாக எண்ணவில்லை போலும்! முரி வரி என்பதனை,

> " எடுத்த இயலும் இசையும் தம்மில்
> முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே."

என்ற சூத்திரத்தை எடுத்துக்காட்டி விளக்குகிறார் அரும் பதவுரைகாரர். சந்தமும் இசையும் மாறிவரும் என்பதோடு முரி வரிச் சார்த்துப் போலக் குற்றெழுத்தியலால் குறுகிய நடையால் அராகம் போல வரும் என்றும் கொள்ளலாம். " பொழில்தரு நறுமலரே " என்பது முதலாக வரும் மூன்று பாடல்கள் முரி வரியாம். ஒரு துறையாக அல்லா மல் வெவ்வேறு துறைகள் கலந்து வருமானால், அதனை மயங்கு திணை நிலை வரி என்பர். இதற்கு விளக்கம் அரும் பதவுரைகாரர் கூறவில்லை. ஆனால், அலரறிவுறீஇ வரைவு கடாவியதனையும், பொழுது கொண்டு ஆற்றுளா கிய தலைமகள் தோழிக்கு உரைத்தவற்றையும் ஒருங்கு சேர்த்துப் பாடுவதை மயங்கு திணை நிலை வரி என்று அரும்பதவுரைகாரர் காட்டுகிறார்.

மூன்று ஆக முகமுடை வரி, முகமில் வரி, படைப்பு வரி என்பவற்றையே சிறப்பாகக் கொண்டு வரி என் பது இவ்வாறு மூவகைப்படும் என்று முதலில் அரும்பத வுரைகாரர் கூறுவர். முகமுடை வரியாவது முகமுடை யதாம். வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகமெனப் படும் என்பர்.

> " நிலமுத லாகிய உலகியல் வரிக்கு
> முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே."

என்ற சூத்திரத்தையும் எடுத்துக் காட்டுவர். "முக மில் வரியாவது, முகமொழிந்து ஏனைய உறுப்புக்களின் வருவது," என்பர். "திங்கள் மாலை வெண்குடையான்" என வரும் ஆற்று வரியை முகமுடை வரி என்றும், 'துறைமேய் வலம்புரி' என்ற பாட்டினை முகமில் வரி என்றும் அரும்பதவுரைகாரர் விளக்குவர். "படைப்பு வரி யாவது, எல்லா உறுப்பும் ஒன்றுனும் பலவானும் வெள்ளையானும் ஆசிரியமானும் கொச்சகம் பெற்றும் பெருதும் வேறு வேருக வருவது," என்பர். 'எல்லா உறுப்பும்' என்பது நன்கு விளங்காமையால், இதனை அறி வது அருமையாகிறது.

இவையேயன்றிக் கானல் வரி என்ற ஒன்றும் சாயல் வரி என்ற ஒன்றும் கூறுகிருர் அரும்பதவுரைகாரர். 'கைதை வேலி' என்பது முதலாக வரும் மூன்று பாடல் களைச் சாயல் வரி என்று அரும்பதவுரைகாரர் கொள்வர். ஒரு சில பிரிதிகளில் 'கடல்புக்கு உயிர்கொன்று' என் பது முதலாக வரும் மூன்று பாடல்களும் சாயல் வரி என்று மூலத்தில் எழுதப்பட்டுள்ளதாம். 'பவள உலக்கை' என்பது முதலான மூன்று பாடல்களைத் துள்ளல் வரி என்றும் மூலத்தில் கண்டுள்ளதாம்! துள்ளோசை வரும் வரிப்பாடல் என்பதே இதுபோலும்! சாயல் என்பது இங்கே நெய்தற்றிணையில் வரும் "உள்ளதன் நுணுக்கமாகிய இரங்கத்தக்கதோர் நிலையைக் குறிப்பதாகலாம்." "நம் மானேர் நோக்கம் மறப்பார் அல்லர்," எனத் தலைவனுக்குத் தலைவி வருந்துவதும், "இடை இழவர் கண்டாய்" எனத் தலைவன் தலைவிக்குப் பரிதலும் சாயலாம். 'நிணங்கொள்" என்பது முதலாக வரும் இரண்டு பாடல்கள் கானலையே குறிப்பிடுவதால் கானல் வரி என அரும்புதவுரைகாரரால் காட்டப்பட்டுள்

என. 'நில முதலாகிய உலகியல் வரிக்கு' என அவர் எடுத்துக் காட்டும் சூத்திரம் கூறுவதால், உலகியலில் வரும் பல பொருள்களையும் கூறும் வரிப்பாடல்கள் கானல் வரிப் பாடல் போல அவ்வவற்றின் பேரால் வழங்கப் பெறும் போலும்! பின் கீழே வரும் கலி வெண்பாவில் வருவனவற்றையும் காண்க. ஆனல், இளங்கோவடிகள் முகமுடை வரி, முகமில் வரி, சாயல் வரி, நிலை வரி, கொச்ச கம் என்ற அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தே கானல் வரி என்றும் கானல் வரிப்பாடல் என்றும் கூறுகிறார்.

'வரி என்பது பல்வரிக் கூத்துக்கும் பெயர் என்பாரும் உளர்' என அடியார்க்கு நல்லார் கூறுவர். அவற்றின் பெயர்களையும் ஒரு சூத்திரங்கொண்டு கூறுகிறார். அவை நாடோடிப்பாடலும் கூத்துமாக அமைவதைக் காணலாம். வேட்டுவ வரி என்றும் ஊர்சூழ் வரி என்றும் வருவனவும் காணலாம். குன்றக் குரவை ஆய்ச்சியர் குரவை என வருவனவற்றில் வரும் பாடல்களும் வரிப்பாடல்களே எனலாம். ஆய்ச்சியர் குரவையில் 'உள் வரி வாழ்த்து' என ஒன்றும் வருகிறது.

'சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி ஓர்முலை
கொந்தி கவுசி குடப்பிழுக்கை—கந்தன்பாட்டு
ஆலங்காட் டாண்டி பருமணல் நெல்லிச்சி
சூலந் தருநட்டம் தூண்டிலுடன்—சீலமிகும்
ஆண்டி அமண்புனவேடு ஆளத்தி கோப்பாளி
பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி—மீண்ட
கடவுட் சடைவீர மாகேசம்—காமன்
மகிழ்சிந்து வாமன ரூபம்—விகடநெடும்
பத்திரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண்
தத்தசம் பாரம் தகுணிச்சம்— கத்து
முறையீண்டு இருஞ்சித்து முண்டித மன்னப்

பறைபண் டிதன்புட்ப பாணம்—இறைபரவு
பத்தன் குரவையே பப்பறை காவதன்
பித்தனெடு மாணி பெரும்பிழுக்கை—எத்துறையும்
ஏத்திவரும் கட்களி யாண்டு விளையாட்டுக்
கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து—மூத்த
கிழவன் கிழவியே கிள்ளுப் பிருண்டி
அழகுடைய பள்ளிவிக டாங்கம்—திகழ்செம்பொன்
அம்மனை பந்து கழங்காடல் ஆலிக்கும்
விண்ணகக் காளி விறற்கொந்தி—அல்லாத
வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன்
சாந்த முடைய சடாதாரி—ஏய்ந்தவிடை
தக்கபிடார் நிர்த்தந் தளிப்பாட்டுச் சாதுரங்கம்
தொக்க தொழில்புனைந்த சோணண்டு—மிக்க
மலையாளி வேதாளி வாணி குதிரை
சிலையோடு வேடு சிவப்புத்—தலையில்
திருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்டு
இருண்முகத்துப் பேதை இருளன்—பொருமுகத்துப்
பல்லாங் குழியே பகடி பகவதியாள்
நல்லார்தம் தோள்வீச்சு நற்சாழல்—அல்லாத
உந்தி அவலிடி ஊராளி யோகினிச்சி
குந்திவரும் பாரன் குணலைக்கூத்து—அந்தியம்போது
ஆடுங் களிகொய்யு முள்ளிப்பூ ஐயனுக்குப்
பாடும்பாட்டு ஆடும் படுபள்ளி—நாடறியும்
கும்பீடு நாட்டம் குணட்டம் குணலையே
துஞ்சாத சும்மைப்பூச் சோனகம் மஞ்சரி
ஏற்ற உழைமை பறைமைமுதல் என்றுஎண்ணிக்
கோத்தவரிக் கூத்தின் குலம்.'

இவற்றிற்சில கலம்பகங்களிலும் தத்துவராயர் பாடு துறையிலும் பின்னர் எழுந்த பள்ளு குறவஞ்சி நொண்டி நாடகங்களிலும் வளர்ந்து தோன்றக் காணலாம்.

இனி, வரி எட்டு வகைப்படும் எனவும், "அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழில் தன்மை யும் தோன்ற நடித்தல்" என்றும் அதனை விளக்கிக்

"கண்கூடு காண்வரி உள்வரி புறவரி
கிளர்வரி ஐந்தொடு ஒன்ற உரைப்பின்
காட்சி தேர்ச்சி எடுத்துக் கோளென
மாட்சியின் வருஉம் எண்வகை நெறித்தே."

என்று அதன் எட்டு வகையையும் ஒரு சூத்திரம் கொண்டு அவரே கூறுகின்றார். வசந்தமாலை மாதவியின் காத லோலையைக் கோவலனிடம் கொண்டு வந்த பொழுது, "இந்த எட்டு வகையாக நடித்து என்னை ஏமாற்றினாள்," என அவன் கூறுகிறான். இங்கு உள்ள வியப்பு என்ன வென்றால், அரங்கேற்று காதையில் இந்த எட்டு வகை வரியின் பெயரையும் கூறிய பின் அடியார்க்கு நல்லார் "அவற்றின் பகுதியெல்லாம் கானல் வரியிற் கூறுதும்," என்று எழுதுகிறார். அப்படியானால், கானல் வரியில் மாதவி பாடுதலையெல்லாம் இந்த எட்டு வகையாக வகுத்துப் பொருள் எழுதினாரோ, என்னவோ, நமக்குத் தெரியவில்லை. அந்தப் பகுதிக்கு அவர் எழுதிய உரை நமக்குக் கிடைக்கவில்லை. இந்த எட்டு வரிகளும் காதற்கதையாய்ப் படிப்படியாக முற்றிப் பிறர் எடுத்து மூர்ச்சை தீர்க்கின்ற அளவுக்கு முற்றிப் போகிற நெய்தல் ஒழுக்கத்தையே குறிப்பனவாகக் காணலாம். கானல் வரி நெய்தற்றிணையை இவ்வாறு பாடுதலின் இதற்கேற்பப் பொருத்திக் காட்டினாரோ, என்னவோ!

கண்கூடு வரி முதலியவற்றை ஐந்திணை ஒழுக்கப் பாடல்களோடு பொருத்திக் காட்டலாம்.

"கண்கூ டென்பது கருதுங் காலை
இசைப்ப வாராது தானே வந்து
தலைப்பெய்து நிற்கும்."

என்பது உரையாசிரியர்கள் காட்டும் சூத்திரம். அஃதாவது, காட்சி. "அஃது ஒருவர் கூட்டவன்றித் தானே வந்து நிற்கும் நிலைமை. பாங்கற்கூட்டமும் பாங்கியிற்கூட்டமுமாகாது, தெய்வம் இயற்கையாகக் கூட்டி வைக்க, ஒத்த கிழவனும் கிழவியும் காண்பதாகும். இதனைப் 'பிரிய தரிசனம்' என்பார் அடியார்க்கு நல்லார்; 'பிரதம தேசத்தில் நிகழ்வது' என்பர் அரும்பதவுரையாசிரியர்.

'காண்வரி என்பது காணுங் காலை
வந்த பின்னர் மனமகி ழுறுவன
தந்து நீங்கும் தன்மைய தாகும்.'

பின் எழும் பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம், இடந்தலைப்பாடு முதலியவையெல்லாம் இதனுள் அடங்கும்.

'உள்வரி என்பது உணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோர் உருவம்
கொண்டும் கொள்ளாதும் ஆடுதற் குரித்தே.'

என்பது சூத்திரம். தோழி அறியாள் போலக் கூறுவனவும், தலைவியின் மறைந்த ஒழுக்கமும், தலைவியை அணங்கு என்று கூறல் முதலியனவும் இதனுள் அடங்கலாம்.

'புறவரி என்பது புணர்க்குங் காலை
இசைப்ப வந்து தலைவன்முற் படாது
புறத்துநின் ருடி விடைபெறு வதுவே.'

சிறைப்புறமாகப் பேசுவனவும், முன்னிலைப் புறமொழி

யாகப் பேசுவனவும், குறி பிழைப்பும், காவல் கடுகுதலும், இற்செறிப்பும் இதனுள் அடங்கும்.

‘கிளர்வரி என்பது கிளக்குங் காலை
ஒருவர் உய்ப்பத் தோன்றி அவர்வாய்
இருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே.’

என்பது சூத்திரம். இயற்பழித்தலும், இயற்பட மொழிதலும், தன்வயின் உரிமையும், அவன்வயிற்பரத்தமையும் தோன்றக்கூறுவனவும், புலவி நுணுக்கமாக எழுவனவும் இதனுள் அடங்கும்.

‘தேர்ச்சிவரி என்பது தெரியுங் காலை
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன்
பட்டதும் உற்றதும் இருந்து
தேர்ச்சியோ டிருப்பது தேர்ச்சிவரி யாகும்.’

என்பது சூத்திரம். ‘நாயகன் கிளைகட்குத் தன் துன்பங்களைத் தேடித்தேடிச் சொல்லுதல்’ என்பர் அடியார்க்கு நல்லார்.

‘காட்சிவரி என்பது கருதுங் காலை
கெட்ட மாக்கள் கிளைகண்டு அவர்முனர்ப்
பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே.’

என்பது சூத்திரம். ‘தன் வருத்தத்தைப் பலரும் காணும்படி நடித்தல்’ என்பர் அடியார்க்கு நல்லார். தேர்ச்சி வரியில் துன்பத்தைத் தேடித் தேடிச் சொல்ல இதில் கையறவு மிகுதலால், தன் வருத்தத்தைப் பலருங் காணநிற்பதனைக் காண்கிறோம். இதனினும் முற்றிய கையறவு நிலை மூர்ச்சையில் முடிகிறது.

‘எடுத்துக் கோளை இசைக்குங் காலை
அடுத்துஅடுத்து அழிந்து மாழ்கி அயலவர்
எடுத்துக்கோள் புரிந்தது எடுத்துக் கோளே.’

என்பது சூத்திரம். நெய்தற்கலியில் தேர்ச்சி வரியும் காட்சி வரியும் எடுத்துக்கோள் வரியும் வரக் காண்கிறோம். நெய்தற்பாட்டுக் கையறவாதலின், அதில் இந்த மூன்று நிலையினையும் காணலாம். கானல் வரி படிப்படியாக முற்றும் இந்த மூன்று நிலையும் நேராகவும், மற்ற ஐந்தினையும் முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறிக்கும் வகையாகவும் பாடிப் போவதாகக் கொள்ளலாம்.

ஆனால், கானல் வரியில் இந்த எண்வகை வரியும் வரப் பாடினரா? இந்தக் கானல் வரியையா பின் வேனிற்காதையில் கோலவன் நினைத்துக்கொள்கிறான்? கானல்வரியையே யன்றி மாதவியோடு முதல் நாண் முதல் கலந்த வாழ்வை எல்லாம் எண்ணுகிறான் என்றே அங்குக் கொள்ளுதல் வேண்டும். வேனிற்காதையில் இந்த எண்வரிகளையும் சூத்திரங்கள் கொண்டு அடியார்க்கு நல்லார் விளக்குகிறார். கானல் வரியில் விளக்கியிருந்தால் மறுபடியும் வேனிற் காதையில் இவ்வாறு விளக்குவாரோ என்பதை ஆராய்தல் வேண்டும். ஒரு வேளை அரங்கேற்று காதையில் "வேனிற்காதையிற் கூறுதும்" எனத் தவறாக எழுதப் பெற்றது போலும்! அவ்வாறாயின் இந்த எண்வகை வரிக்கு ஏற்பக் கானல் வரிக்குப் பொருள் கூற வேண்டுவதில்லை.

மாதவி கடைசியில் "சூள் பொய்த்ததனைக் கடல் தெய்வம் பொறுக்க வேண்டும்" என்று பாடி முடிக்கும் பாடலைக் கொச்சகம் என்பர் அரும்பதவுரைகாரர். "முக நிலை முரிகளாற் பயந்த வேறுபடு பொருண்மை எல்லாம் தன்னகத்தடக்கி ஒரு நெறிப்படுதலாற் கொச்சகம் எனப் படும்," என்பர். ஆனால், "அது வெள்ளையானும் அக வலானும் முடியும்," என்று அவர் கூறுவதுபோல இரண் டில் ஏதொன்றாகவும் முடியக்காணோம்.

வரிப்பாடல்கள் நாடோடிப் பாடல் போன்றவை.

சமுதாயப் பாடல்களாய் அவை அரசனையும் நாட்டையும் வாழ்த்தி முடிவது வழக்கம். வேட்டுவ வரி, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை முதலியன இவ்வாறு வாழ்த்தி முடியக் காண்கிறோம். இதுவும் அவ்வாறே முடிந்திருத்தல் வேண்டும். 'ஆங்கு' என்ற தனிச்சொல்லும் 'மாயிரு ஞாலம்' என வரும் நேரிசை ஆசிரியப் பாவும் இத்தகைய வாழ்த்தாக மாதவி பாடிய 'வணங்குதும்' என்ற முடிபோடு சேரும். அரும்பத வுரைகாரர், "வெள்ளையானும் அகவலானும் முடியும்," என்றது இந்தச் சரித கத்தையே நோக்கியதாதல் வேண்டும். இவ்வுரைகாரர் பொருள் எழுதும்போது இந்தச் சரிதகத்தைக் கட்டுரை யாக முடியும் "மாதவிதன் மனைபுக்காள்" என்பதோடு சேர்த்து முடித்தாலும் இவ்வாறு நாம் கூறியது போலக் கொள்வதே வரிப்பாட்டின்இயல்புக்கு உரித்தாகும். இளங் கோவடிகள் பாடியபடியே நமக்கு அவர் நூல் கிடைத் துள்ளது என்று கூறுவதற்கு இல்லை. கானல் வரியை மயங்கிசைக் கொச்சகப்பா என ஒன்றாகக் கொள்ளலாம்.

2. பண்டைத் தமிழர் பண்பாடு

[டாக்டர் மொ. அ. துரையரங்கசாமி, M.A., M.O.L., Ph.D.
பல்கலைக் கழகம், சென்னை.]

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து"

வாழ்ந்து வந்த பண்டைத் தமிழர் பண்பாட்டினை உணரத் தொல்காப்பியரோடு ஒரு சாலை மாணவராயிருந்த பனம்பாரனார் பாடிய ஒரு நூற்பாவின் இந்த மூன்று அடிகளே சாலும். இவை தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் உள்ளவை. 'தமிழைத் தம் தாய் மொழியா

கக் கொண்ட ஒரு தனி இனத்தவரே தமிழர். இவர்கள் வாழ்ந்து வந்த தமிழகம், வேங்கடத்தை வடவெல்லையாக வும், குமரியைத் தென்னெல்லையாகவும் உடையது.' இத் தமிழகம் ஈண்டு நல்லுலகம் என்று சிறப்பிக்கப்பட்டுள் ளது. காடுறையுலகம், மைவரையுலகம், தீம்புனலுல கம், பெருமணலுலகம் என்ற வழக்குப்போல, உலகத் தின் ஒரு கூறுகிய தமிழகம், 'நல்லுலகம்' எனப்பட்டது. நல்லன எனப்படும் அனைத்தும் நிறைந்த இடம் தமிழகம். நற்குண நற்செயல்கள், அவற்றைத் துணையாகக் கொண் டக்கால், பிறவிப்பயனுகிய பேரின்பம் அளித்தற்குரிய தெய்வம், அதனை உணர்தற்குரிய கல்விகேள்வி மதிநுட்பம், அவற்றை அடைதற்குரிய நல்வாழ்வாகிய இல்லறம், அதை நடத்துதற்கு உறுதுணையாகிய முடி மன்னன், அமைச்சர், பெருங்குடி வணிகர், அனைவர்க்கும் உண வளிக்கும் உழவுத் தொழில் வல்ல வேளாளர்கள், இன்ன பிற அனைத்தும் நிறைந்த தமிழகம் நல்லுலகம் எனப்பட் டது புதுமையன்று. 'கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' மக்கள் தமிழர்கள். தமிழகமாகிய நல்லுலகமும் தொன்மையது. உலகில் ஏனைய இனத்தவர் பண்படுவதற்கு முன்னரே பண்பட்டு விளங்கினவர் தமிழர். எனவே, தமிழர் பண் பாடு தொன்மையது, சிறந்தது என்பது கூறுமலே விளங் கும். தமிழகம், தமிழ் நாடு, நல்லுலகம் எனப்படும் நம் பிறப்பகம், உலகில் மிகவும் பழையது என்பது நில நூல் வல்லாரும் ஆராய்ந்து கண்ட உண்மையாகும்.

தொல்காப்பியம் முதலாக நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் வாயிலாகத் தமிழர் பண்பாட்டை நாம் உணர லாம். தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட நூல்கள் நமக்குக் கிடைத்தில எனினும், அதன் மூலமாகவே எண்ணற்ற

நூல்கள் நம் தமிழகத்தில் பண்டு இருந்தன என்பதை உணரலாம். தமிழ்மொழிக்கு அயல் மொழிகளாலான நூல்களில் தமிழகத்தைப்பற்றியும் தமிழர்களைப் பற்றியும் கிடைக்கும் குறிப்புக்களும் நம் முன்னோர்கள் சிறந்த பண்பாடு பெற்றிருந்தவர்கள் என்பதை உணர்த்துகின்றன. தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்ட ஸ்மிருதிகள் வடமொழியில் உள்ளன. அவற்றின் மூலமாக நம் தமிழ் நாட்டின் வடவெல்லை துங்கபத்திரை என்று அறியும்போது நமக்குப் புதுமையாக இருக்கிறது. ஸ்மிருதிகளின் பயிற்சி பெற்ற நம்பியாரூரராகிய **சுந்தரர்**, தமிழக அடியார்களை மட்டும் சிறப்பித்துப் பாடியுள்ளார், '**திருத்தொண்டத் தொகை**' என்னும் பதிகத்தில். அவ்வடியார்களுள் ஒருவர் **நேசநாயனார்**. அவருடைய பிறப்பிடம் **கம்பிலி** என்பது. இது துங்கபத்திரை ஆற்றங்கரையிலிருப்பது. எனவே, சுந்தரர் கூற்றுலும் தமிழகத்தின் வடவெல்லை துங்கபத்திரையாறு என்பது உறுதியாகிறது. தொல்காப்பியத்தாலும் அறியப்படாத தமிழக வடவெல்லை, சுந்தரர் திருத்தொண்டத்தொகையால் அறியப்படுகின்றது. வடவெல்லையாகிய துங்கபத்திரை யாற்றையும் பறிகொடுத்தோம்! வடவெல்லையாகிய வடவேங்கடத்தையும் பறிகொடுத்தோம்! பண்டைத் தமிழகப் பண்பாட்டை உணர்ந்து இனியாவது போற்றுதொழிவோமாயின், அயலவர்க்கெல்லாம் அடிமைப்பட்டு, இன்னும் சிலவற்றைப் பறிகொடுத்துவிடுவோம் என்பதற்கையமில்லை. பண்டைத் தமிழெல்லையான துங்கபத்திரையாற்றிலிருந்து இப்போதுள்ள நம் தமிழ் நாட்டிற்குத் தண்ணீர் கொண்டுவர, அயல் மொழியகத்தாருடைய ஆணையை எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறோம்! இது நிற்க.

தமிழர் பண்பாட்டின் அடிப்படையாவது, தெய்வ

வழிபாடு. சமய நூலெனத் தனியே ஒன்றும் வேண்டாமலே இந்த அடிப்படைப் பண்பாட்டின் உண்மையையும் உயர்வையும், தமிழ் மொழியில் உள்ள சில சொற்களைக் கொண்டே தெளியலாம். கடவுள், இறை, இயவுள், தெய்வம் என்ற நான்கு தமிழ்ச்சொற்களே இதற்குச் சாலும். இவற்றுள் தெய்வம் என்ற சொல் தேவு என்ற முதனிலையடியாகப் பிறந்த தமிழ்ச் சொல்லாதலால், எழுத் தொப்புமை கண்டு, 'திவ்' என்ற தாது அடியாகப் பிறக்கும் தெய்வம் என்ற வடசொல் என மயங்குதலாகாது. மன மொழிமெய்களைக் கடந்து நிற்பதென்னும் பொருளை உடையது, உலக காரணமாகிய முதற்பொருளை உணர்த்தும் 'கடவுள்' என்னும் சொல். யாண்டும் நீக்கமின்றி நிறைந்திலங்குவது என்னும் பொருளையுடையது 'இறை' என்னும் சொல். நம் உள்ளத்திலிருந்துகொண்டு கருவி கரணங்களை இயக்குவதென்னும் பொருளையுடையது 'இயவுள்' என்னும் சொல். முதற்பொருளின் உண்மையை உணர இந்த மூன்று சொற்களுக்குமேல் வேறொன்றும் தேவையில்லை. முதற்பொருளின் உண்மையை மட்டும் உணர்வதால் பயனென்னை ? 'மன மொழி மெய்களைக் கடந்தது, யாண்டும் நிறைந்தது, உள்ளிருந்து இயக்குவது என்றெல்லாம் உரைக்கப்படும் முதற் பொருள், இத்தகையது என நம் உணர்வாலோ, கண்ணாலோ அறிய முடியாத வரையில், அதனால் நமக்கொன்றும் பயனே இல்லையாகும்,' என்று அதனைக் கைவிட்டு விடுதல் ஆகாது. ஏனைய பொருள்கள் போல அதுவும் நம்மால் கொள்வதற்குரிய பொருளே என்பதைத் தேவு என்ற முதனிலையடியாகப் பிறந்த தெய்வம் என்னும் சொல் உணர்த்துவதாகும். அது கொள்வதற்குரிய பொருளே என்பதையும், எந்த வடிவமாக அதைக் காண

விழைகிறேமோ அந்த வடிவமாக அதுவந்து காட்சியளிக்கும் என்பதையும் இடைக்கால நூலும் உணர்த்துவது போற்றற்குரியதாகும்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்."

என்ற சிவஞான சித்தியார் பாடற்பகுதியில், 'தெய்வங் கொண்டீர்' என்ற தொடர், தாம் நினைத்த வடிவமாகக் கொள்ளுதற்குரியதாவதே தெய்வம் என அத்தெய்வச் சொல்லின் உண்மைப் பொருளை விளக்குதல் காணலாம். சைவ நூல் வழக்குப்பற்றி, 'மாதொரு பாகனார்தாம் வருவர்' எனக் கூறப்பெற்றுள்ளதேனும், 'அம்முதற் பொருள் வரும்,' என்று பொதுவாகக் கொள்ளுவதில் தவறொன்றும் ஏற்படாது. கொள்வதற்குரியதாக அம்முதற்பொருள் பயன்படும் என்ற கருத்தைத் 'தெய்வங் கொள்கை' என்ற தொடரும் புலப்படுத்தல் காணலாம். கடவுளைக் கொள்கை, இறையைக் கொள்கை, இயவுளைக் கொள்கை என்னமல், தெய்வத்தைக்கொள்கை எனத் தெய்வச் சொல்லில் மட்டும் கொள்கையைச் சேர்த்துப் பண்டையோர் ஆண்டிருத்தல், கொள்ளுதற்குரியதாகின்ற போது அது தெய்வமாகக் கொள்ளுதற்குரியது என்பதை விளக்குதற்கேயாம். யாண்டும் நிறைந்திருந்தும் அருவமாக இருத்தலால் புலப்படாது நிற்குமது, யாம் வேண்டிய வடிவமாக—உருவமாக—வரின், அது புலப்படும்; அதற்குரிய வழி, அதைத் தெய்வமாகக் கொள்ளுதலே யாகும். இவ்வாறு கொள்ளுவதற்கு மூல மந்திரமோ, பீஜாக்ஷரமோ பண்டைத் தமிழகத்தில் பயன்பட்டதாகத் தெரியவில்லை. அன்பொன்றே துணையாகத் தாம் வரையறுத்துக்கொண்ட இடத்தில், தமக்குத் தெரிந்த போற்றுரை கூறித் தாம் நினைந்த வடிவில் காட்சி தர வேண்டும்

என்று வேண்டி நின்ற இடத்தில், அம்முதற்பொருள் அவர் வேண்டிய இடத்தில் அவர் அன்பில் தளைப்பட்டு அவர் வேண்டிய தெய்வமாய் வந்து காட்சி தந்து அவர்கள் வேண்டிய நலன்களையெல்லாம் தந்த செய்தி சங்க நூல்கள் எல்லாவற்றிலும் பயின்றிருக்கின்றது. உருவமாகக் கொள்ளுமிடத்திலும், திருத்தமான முறையில் அதனைக் கொள்ளலாற்ருதவர்பொருட்டுக் கோயில்கள் எடுத்து மாயோனுகவும், சேயோனுகவும், முக்கண்ணனுகவும் உருவங்கள் அமைத்துத் தந்தனர் பண்டைத் தமிழ்ச் சான்ருேர். அந்த உருவங்களில் தமக்கு விருப்பமான ஒன்றை உள்ளத்தில் பதிவு செய்துகொண்டு அவ்வாறு காட்சி தர வேண்டும் என்று அன்பொடு வேண்டினுல், அவ்வுருவமாகத் தெய்வக் காட்சி பெறலாம்; அதனிடமிருந்து தாம் விரும்பும் பேறு பெறலாம்.

திருமுருகாற்றுப்படையில் இந்த உண்மைகளெல்லாம் நன்கு விளக்கப்பட்டுள்ளன. முருகனைத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை இவற்றுளொன்றில் பண்டே அமைந்துள்ள கோயிலில் வழிபாடாற்றிக் காணலாம். குன்றுதோறும் அவன் உறைவிடமாதலால், எந்தக் குன்றில் வேண்டுமானுலும் காணலாம். காடு, சோலை, ஆற்றிடைக்குறை, குளக்கரை, சந்தி, சதுக்கம், கடப்ப மரம், மன்றம், பொதியில், கந்துடைநிலை யாண்டு வேண்டுமானுலும், முருகனைக் காணலாம். யாண்டாண்டாயினுமாக! உள்ளத்தில் அவன் உருவைப் பதித்துக்கொண்டு அவனைக் கைகூப்பி வணங்கிக் காலுறத் தொழுது, 'மலைமகள் மகனே, மாற்ருேர் கூற்றே, அந்தணர் வெறுக்கை, அறிந்தோர் சொல் மலை, மங்கையர் கணவ, வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ்செல்வ, அரும்பெறல் மரபின்

பெரும்பெயர் முருக,' எனத் தாம் அறிந்த போற்றுரை கூறி அன்போடு அழைத்தால், "தெய்வம் சான்ற திறல் விளங்குருவின் வான்தோய் நிவப்பின் தான் வந்தெய்தி, அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன் மணங் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி" எதிரே நின்று, "அஞ்சல், ஓம்புமதி, அறிவல் நின் வரவு," என்று கூறி, ஒப்பற்ற நிலைமை எய்துமாறு பரிசில் பலவுடன் தருவான். ஈண்டும் 'தெய்வம் சான்ற திறல் விளங்குரு' எனவும், 'தெய்வத்து இளநலம் காட்டி' எனவும் திருமுருகாற்றுப் படை குறித்தலின், தெய்வமாகக் கொள்ளும் ஆறு இவ் வாறேயாகும் என்பது தெரியலாம். இவ்வாற்றைக் கடைப்பிடித்தற்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லை. குறவர் மக்கள், 'மலை வான் கொள்க' என உயர் பலி தூவி மழை பெற்று, 'மழை போதும் போ' என்று அனுப்பிவிடும் ஆற்றல் பெற்றிருந் தார்கள் இத்தகைய தெய்வ வழிபாட்டு முறையால் என்பதைச் சங்க நூல்களால் அறியலாம். தமிழர் பண் பாட்டில் இது சிறந்த பண்பாடேயன்றோ! 'அருவமாக அன்றி நாங்கள் கடவுளைக் கருதோம்; கோயிலை இடிப் போம்; சிலைகளை உடைப்போம்,' என்று அணிவகுத்துக் கொண்டு தமிழ்த்தொண்டு செய்வதாக இளமாணவர் களைத் தவறான வழியில் செலுத்தும் பெரியார்களெல்லாம் நம் பண்டைத் தெய்வவழிபாட்டின் பண்பாட்டை உணர்ந்து போற்றவேண்டும் என்பதற்காகவே இது பற்றி இவ்வளவு எழுதலாயிற்று.

'பரமேது? வினை செயும் பயனேது?' என்னுந் தொடக்கத்தனவாக முரண்மொழிகளைக் கூறிக்கொண்டு, தாம் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனத் திரி பவர்கள் எந்நாளும் உண்டு. இத்தகையவர்களைக் 'கயவர்'

என்பர் திருவள்ளுவர். இவர்களை மக்களுடம்பு பெற்றிருத்தல் கொண்டு உயர்திணை மக்கள் எனலாகாது; அஃறிணை மாக்கள், விலங்குகள் எனல் வேண்டுமென்பர் தொல்காப்பியர். கயவரென்னும் மாக்களை அறிந்து அவர்களிடமிருந்து நீங்கி வாழ வேண்டும். ஆனால், 'ஒரேதன்மையான மக்களுடம்பே கயவரும் பேற்றிருத்தலால், வேறுபாடு அறியமுடியவில்லையே!' என்று திருவள்ளுவர் கூட மனம் கவல்கின்ருர். உருவத்தால் வேறுபாடு அறிய முடியாவிட்டாலும், அவர்கள் குணஞ்செயல்களால் அறிந்துகொள்ளலாம். அவர்கள் இந்த இந்த வகையான குணஞ்செயல்களுடையவர்கள் எனக் 'கயமை' என்ற ஓரதிகாரத்தால் நம்பொருட்டுத் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். மக்களுடம்பு பெற்றவர்களுள்ளும் உயர்திணை அஃறிணை என்ற இரு திணையுண்டு என்று போற்றிய பண்டைத் தமிழர் பண்பாடு, நாகரிக உச்சநிலையில் பண்டே தமிழர் இருந்தமையைத் தெற்றெனப் புலப்படுத்தும்.

உயர்திணைமக்கள், அஃறிணைக்கயவர் என இருவகையினராக மக்களுடம்பு பெற்றவர் உளரென்றதோடு நில்லாமல், கயவரும் மக்களாக உயரும் வழியையும் உணர்த்தியுள்ளனர் பண்டைச்சான்ருேர். கல்வி கற்றலே கயவரும் மக்களாதற்குரிய ஒரே வழியாகும். மக்களுடம்பெடுத்தவர் கல்வி கற்காவிட்டால், விலங்கை ஒப்பர் எனவும், அவர்கள் தங்கள் முகத்தில் கண்ணுடையவரெனினும் புண்ணுடையவர் என்றே கருதப்படுவர் எனவும் கூறி, அனைவரும் மக்களென்று உயர்த்துக் கூறுதற்குரிமை பெறுவது கல்வி கற்ருல் மட்டும் இயல்வதாம் எனவும் வழிகாட்டிக் கல்வி கற்றலால் வரும் ஏனைய உயர்வுகளையும் கல்வி கல்லாமையால் ஏற்படும் இழிவுகளையும் பல

பட விளக்கி, அனைவரையும் கல்வியில் ஈடுபடுமாறு செய்தனர், தம்மைப் போல அனைவரும் உயரவேண்டும் என்று கருதிய பண்டைத் தமிழ்ச்சான்றோர். "தன் மக்கள் அனைவரிடமும் ஒத்த அன்பு காட்டுதற்குக் கடமைப்பட்ட தாயும், தன் மனம் திரிந்து, அவருள் கற்றவனிடம் மிகுதியாக அன்பு காட்டத் தலைப்படுவாள். வயதால் மூத்தவர்க்கு மதிப்புத் தாராது, கற்ற இளையவனுக்கு மதிப்புத் தந்து, அவனைப் பணிவுடன் வரவேற்று, அவன் கூறும் அறநெறியையே வேந்தனும் கடைப்பிடிப்பான். மேற்குலத்தில் பிறந்த ஒருவன், கீழ்க்குலத்தில் பிறந்த ஒருவன் கற்று வல்ல புலமையுடையவனாயின், அவனிடம் கல்வி கற்றற்பொருட்டு அவனையடைந்து தலை வணங்கி நிற்பான். ஆதலின், "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், ஆரிசியனுக்கு வழிபாடு செய்தல் தன் உயர்விற்குத் தகாது என்று வெறுப்புக் கொள்ளாமல், வழிபாடு செய்து, நல்லாசிரியனிடம் கற்றல் நன்றே," என ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் பேரரசன் கூறுவது அனைவரும் போற்றுதற்குரியது. 'கல்வி, இம்மையில் அறம் பொருள் இன்பம் பயக்கும்; மறுமையில் வீடு பயக்கும். கற்றவனுக்கு யாதும் ஊர்; யாவரும் கேளிர்; யாதும் தன் உரிமை நாடாம்; யாதும் தன் உரிமை ஊராம். மன்னவனுக்குத் தன் ஒரு நாட்டில், அதிலும் தன் தலை நகரில் மட்டும் சிறப்புக் கிடைக்கும்; கற்றோனுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். ஆதலால், சாந்துணையும் என் ஒருவன் கல்லாதவாறு? பாடை ஏறினும் ஏடதுகைவிடேல்,' என்றெல்லாம் உணர்த்திக் கல்வியில் அனைவரையும் ஈடுபடுமாறுசெய்தனர் பண்டைச் சான்றோர். இப்பண்பாடு, பண்டைத் தமிழகத்தில் அயல் நாட்டவரெல்லாம் வியந்து

பாராட்டுதற்குரிய ஒன்ருய்த் திகழ்ந்ததென்பது காணு மிடத்துக் கல்வி குறித்து இக்காலத்தில் எவ்வளவு மிகுதி யாக நம் கருத்தைச் செலுத்த வேண்டுமென்பது விளங்கும்.

மக்களுடம்பு பெற்றவர் அனைவரும் கல்வி கற்றற் குரியவர் என்பது தொல்காப்பியர் காலத் தமிழ் மக்கள் பண்பாடாகும். கல்வி கற்றற்குரியவர், அல்லார் என்ற பாகுபாடு, மாணவரிடம் பிரப்பங்கோல் ஆட்சி செலுத் தித் தமக்கு முன் கை கட்டி வாய் பொத்தி நின்று வணங்கி வழிபாடு செய்துதான் கல்வியை மாணவர் கற்றல் வேண் டும் என்று கற்பிக்கத்தகுதியற்ற ஆசிரியர் கல்வியுலகைக் கைப்பற்றிய காலத்திலேதான் ஏற்பட்டிருத்தல் வேண் டும். மேனுட்டில், சமயத் தலைவர், முடி மன்னரையும் தம் ஆட்சிக்கு அடிமைப்படுத்திய காலம் வரலாற்றில் அறிந்த உண்மை. பிரப்பங்கோல் ஆட்சி செலுத்தும் ஆசிரிய பரம்பரையில் வந்த ஆசிரியர்கள் இன்றும் நாட் டுப்புறங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் அவ்வாட்சி யைக் குன்ருமல் நடாத்திக்கொண்டுதான் வருகின்ருர்கள். மிளகாய் நெடி போட்டுக் கோதண்டத்தில் தொங்கவிடு தல், காலில் தளைபூட்டுதல், தொழுவிற்கைகளை இறுக்கு தல், மாட்டை அடிப்பது போலப் பிரம்பால் அடித்தல் முதலியவற்றை மேற்கொண்டு மாணவர்களைக் கொடு மைப்படுத்திய ஆசிரியர்கள் இந்த நூற்ருண்டின் தொடக் கத்திற்கூடப் பெருவாரியாக இருந்தார்கள்; இன்றும் சிலர் இருக்கின்றனர். அவர்களிடத்திற்சென்று, ‘கண்ணை மட்டும் விட்டுவிட்டுத் தோலை உரித்துவிடுங்கள்!’ என்று கூறும் பெற்ருேர்கூடச் சிலர் இன்னும் நாட்டுப் புறத்தில் இருக்கின்றனர். இக்கொடுமைகளையெல்லாம் செய்து பின் கற்பிக்கத் தகுதியற்றவர் எனப் பட்டஞ்

சூட்டிப் பல பல மாணவர்களை நீக்கிவிடுவார்கள் கல்வி யுலக ஆட்சிப் பீடத்தில் இருந்து பிரப்பங்கோல் ஏந்தி ஆட்சி புரியும் இந்த ஆசிரியர் பெருமக்கள். தொல்காப் பியர் காலப் பயிற்று முறை உணர்ந்த ஆசிரியர்களிடம் இந்தக் கொடுமையும், கற்பிக்கத் தகுதியற்றவர் என்று மாணவர்க்குப் பட்டஞ்சூட்டி நீக்கிவிடுதலும் இருந்த தாகத் தெரியவில்லை. பயிற்று முறையிலிருந்த பண்பாடு எப்படியோ தொல்காப்பியர் காலத்திற்கு அண்மையி லேயே மண்ணிற்புதையுண்டது.

பிறந்தபின் ஐந்தாண்டுகள் வரையில் இளஞ்சிறுவர் கள் பெற்றோர்களிடமிருந்து வீட்டிலும் வீட்டின் சூழலி லும் உள்ள பொருள்களை அறிந்து, அவற்றைத் தொடர் மொழிகளில் ஆளப்பழகுகிறார்கள். ஈன்று புறந்தருதலைத் தாய் தன் கடமையாகவும், சான்றோனாக்குதலைத் தந்தை தன் கடமையாகவும் கொண்ட நம் தமிழகத்தில் தாம் பெற்ற பிள்ளைக்கு உணர்வு பெருக வேண்டும் என்று அப்பெற்றோர் கண்ணுங்கருத்துமாய் இருந்து தம்மால் ஆவனவெல்லாம் செய்யவே செய்வர். உணர்வைச் சூனியமாக வைத்துக்கொண்டு எந்தப் பிள்ளையும் ஆசிரி யனை அடைவதில்லை. தம்மிடம் வந்த மாணவனது உணர் வாற்றலை அளவிட்டுக்கொண்டு படிப்படியாக அவன் உணர்வைப் பெருக்கும் முறையறிந்து ஆசிரியர் கற்பிப் பாராயின், அவன் படிப்படியாகப் பயின்று, புலமை நிரம் பப்பெறுவான். தெரியாத சொற்களைத் தெரிந்த சொல் கொண்டு விளக்குதல், தொடர் மொழியில் ஆண்டு சொற் பொருளை உணர்த்தல், அப்பொருளை நேரில் கொண்டு வந்து காட்டுதல் முதலியவற்றைக் கையாண்டும் சில மாணவர்கள் சொற்பொருள்களை உணர முடியவில்லை யென்றால், அவ்வாறு மாணவர்கள் உணரமாட்டாமைக்

குக் காரணம் ஆசிரியர்க்குப் பயிற்றுமுறை தெரியாத குற்றமேயன்றி, மாணவர் உணர மாட்டாமைக் குற்றமே யன்று. இதனை 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே,' என்பதால் தொல்காப்பியர் உணர்த்தியுள்ளார். உணர்ச்சியது வழி உணர்வோரது உணர்வை வலியாக உடையது. உணர்வோரது உணர்வை உணர்ந்து உணர்த்தினல் அவர் ஏன் உணர்ந்துகொள்ள மாட்டார்? அவ் வுணர்வை உணரமுடியவில்லை என்ருல், அவரை உணர்த்தும் வழியில்லை என்ருல், மாணவர் தகுதியற்றவர் என்பது பொருளா? ஆசிரியர் தகுதியற்றவர் என்பதுதானே பொருள்? மாணவர் உணர்வில் முன்னரே உள்ள பொருள் களின் திரட்சியைத் தாங்கள் உணர்ந்துகொண்டு, அப் பொருள்களின் திரட்சியை அடிப்படையாகக்கொண்டு முறையாக உணர்த்தும் உணர்வு பெற்ற ஆசிரியர்கள் தொல்காப்பியர் காலத்து ஆசிரியர்கள். இவ்வாறு உணர்ந்து உணர்த்துவதுதான் பயிற்றுமுறை என்று இக் காலத்தில் பயிற்றுமுறைக்கல்லூரியில் ஆசிரியர்கட்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்முறை தொல்காப்பியர் காலத்திலிருந்தது என்பதைத் தொல்காப்பியர் வாயுரையால் அறியும்போது கல்வியுலகில் தமிழரிடமிருந்த பண் பாடு வியந்து வியந்து பாராட்டுதற்கு உரியதாகும். பிரப் பங்கோல் ஆட்சி செலுத்திய ஆசிரியரிடம் பயின்ற அச்சத் தால், உண்மையுரை உரைக்கப்புகுந்த சேனவரையர் கூடச் சில மாணவரை உணர்த்தும் வழியில்லை என்று நாம் மயங்குமாறு மேற்காட்டிய நூற்பாவிற்குப்பொருள் எழுதிச் சென்றுவிட்டார். அவர் கூறும் உண்மையை ஐயம் நீங்கித் தெளிய மாட்டாதவர், மாணவர்மீது பழி போட்டு, அவரைக் கற்றற்குரியரல்லாதவர் என நீக்கிச் சிலரே கற்றற்குரியராவர் என வழிவழியே கல்வியுலகில்

மாசுபடுத்தி வரலாயினர். இக்காலப் பயிற்றுமுறை தொல்காப்பியர் காலத்தில் இருந்ததன் மறுமலர்ச்சி என அறியாதவர், ஏதோ மேனாட்டவரிடமிருந்து நாம் பெற்ற பெரும்புதையல் என்று வாய் கூசாது கூறுகின்றனர். பண்டைத் தமிழகப் பண்பாடுகளுள் பலபல இவ்வாறு பறிகொடுக்கப்பட்டன. தொல்காப்பியர் கூறும் நாலைந்து நூற்பாக்களினால் இக்காலப் பயிற்றுமுறையனைத்தும் நாம் மிக்க விரைவில் உணர்ந்துகொள்ளலாம் என்று அறியும்போது, கல்வியுலகில் பண்டைத்தமிழரிடமிருந்த பண்பாடு ஒப்புயர்வற்றது என்று கூறலாமன்றோ!

'களி, மடி, மானி, கள்வன்—இன்னோர்க்குப் பகரார் நூலே.' என்னே கொடுமை! பிறப்பில் வந்த உரிமையா இப்பட்டங்கள் மாணவர்கட்கு! நல் நடை நல்கல் வேந்தன் கடமை' என்றால், வேந்தன் நல் நடை நல்குதலால் பெற்றோர்களிடம் நல் நடை இருக்க வேண்டும் என்றால், அவர்கள் பெற்ற பிள்ளைகளா களி, மடி, இன்னோரன்னவர் ஆவர்? ஆசிரியர்க்கு அஞ்சிக் கல்வியில் வெறுப்புற்றுப் பெற்றோர்கள் பால் செல்லவும் அஞ்சிப் பிற சூழல்களிற்சிக்கிய பின்னர் மாணவர் களி, மடி இன்னோரன்னவர் ஆவர் என்று கொள்வதுதானே பொருத்தம்! இடைக்காலத்தில் எவ்வாறோ இங்ஙனம் செல்லரிபட்ட பண்பாடு, இப்போது வளர்ந்து முன் நிலைமையை எட்டுகிறது என்று கூறலாம். பிறந்தவர் அனைவரும் கல்வி கற்று விலங்குத் தன்மையின் நீங்கி மக்கட்டன்மையுடையவராவர்; முகத்திற் புண்கள் என்ற குறையின் நீங்கி உண்மைக் கண்களுடையவராவர்.

நல் நடை நல்கும், குடிதழுவிக் கோலோச்சும் வேந்தன் காவல் பெற்றிலங்கியது பண்டைத் தமிழகம். பழுதெண்ணும் மந்திரியர்களாக இல்லாமல், மதி நுட்பமும்

நூலறிவும் நிறைந்து, மன்னவன் அறிகொன்று அறியானு யிருப்பினும் அவன் பக்கத்திலேயே இருந்து உறுதி கூறும் தன்மையர்களான அமைச்சர்களையும், உயிரைவிட மான மே பெரிதெனக் கொண்டு, போரென்றால் முன் அணியில் நிற்கும் வீரர்களை ஊக்கிச் செலுத்தும் படைத் தலைவர் களையும், அமைதியை நிலைநாட்டுவதற்குப் பகைவேந்தனி டம் சென்று அஞ்சாது உரையாடி வரும் தூதுவர்களை யும் தனக்கு உறவாகப் பெற்று, முறை வேண்டினுர்க்கும் குறை உணர்த்தினுர்க்கும் காட்சிக்கு எளியனுய்க் கடுஞ் சொல்லன் அல்லனுய் அவர்தம் முறையைக் கேட்டும், குறையை நீக்கியும், செங்கோலோச்சிக் குடிகளெல்லாம் தெய்வம் என்று சிறப்பிக்கும் பேறு பெற்ற வேந்தனைப் பெற்று வீறு பெற்ற நாடு நம் பண்டைத் தமிழ் நாடு. முடிமன்னர் மூவராய் முக்கூறுபடுத்தித் தமிழ் நாட்டை ஆண்ட காலத்தும், அவர் மூவரும் ஒரே மொழி, ஒரே வகையான முறை, ஒற்றுமை போற்றிக் குடிமக்களை உயிராக மதித்து வந்தனர் எனலாம். அயலவர் சூழ்ச் சிக்கு ஆளாகத் தொடங்கிய பிறகே அவருள் ஒருவரோ டொருவர் பகைமை பூண்டு, தமக்கும் தம் குடிமக்களுக் கும் கேடு சூழ்ந்தனர். ஒரே வேந்தனுலோ, ஒற்றுமை கைவிடாத மூவேந்தர்களாலோ ஆளப்பட்ட தமிழகத்தில் தம் செங்கோலாட்சியால் புலவர் பாடும் புகழுடையோ ராய்த் தாமிருப்பின், வலவன் ஏவா வானவூர்தியில் தாம் துறக்கச் செல்வம் பெறுதல் உறுதி என்ற கொள்கை அவ்வொரு வேந்தனிடமோ, மூவேந்தர்களிடமோ நிலை பெற்றிருந்ததென்பது பண்டைத் தமிழ் நூல்களால் தெளிவாக விளங்குகின்றது.

போர் நேர்ந்தால், தானும் முன்னணியில் நிற்றல், புறங்காட்டாமை, போர் தொடங்குமுன் ஆவையும் அந்

தணரையும், பெண்டிரையும் பிணியுடையோரையும் தென்புலத்தார் கடனிறுக்கும் மக்களைப் பெருதோரையும் தமக்குக்காவலான இடத்திற்குப் போய்விடும்படி உரைத்தனுப்பிவிடுதல், புறங்காட்டினவர்மீது படை ஏவாதிருத்தல், வென்றபடைஞர்க்குச் சிறப்புச் செய்தல், மலையரண், காட்டரண், நிலவரண், நீரரண், மதிலரண் இவற்ருல் தம் தலைநகரை எளிதில் பகைவர் கைப்பற்ருதபடி முன்னரே அமைத்துக்கொள்ளுதல் ஆகிய இவற்றையெல்லாம் வேந்தன் மேற்கொண்டிருந்தமை நம் தமிழகப் பண்பாட்டின் சிறப்பாகும்.

பெருங்குடி வணிகர்கள் கடல் கடந்து அயல் நாடுகளுக்கும் சென்று வாணிகத் துறையில் பொருளீட்டி வந்து நாட்டைப் பெருஞ்செல்வமுடைத்தாகச் செய்து வந்தார்கள். கடல் கடக்கக்கப்பல் கட்டும் தொழில் மிகுந்திருந்தது. 'வானவூர்தி'யிலும் சென்று வந்தார்கள் எனவும் சொல்ல இடமுண்டு. கப்பல் கட்டும் தொழில் இருந்தமையால் கடற்போரிலும் சிறந்திருந்தது நாடு எனலாம்.

நம் நாடு நிலவளம் மிக்க நாடு. எனவே, உழவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றது. 'உழந்தும் உழவே தலை,' என உழவுத்தொழில் தலையாய தொழிலாகக் கருதப்பட்டது. உண்மையில் பிறர்க்கு அடிமையாகாது செய் தொழில் உழவுத்தொழிலே. எல்லா நாடுகளிலும்விட இத்தொழில் நம் நாட்டிலேதான் சிறந்திலங்கியது எனலாம்; எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்து நீர் நிலைகள் பலவற்றிலிருந்து நீர் பாய்ச்சி நிலவளத்தால் உணவுப் பொருள்கள் பலவற்றை ஆண்டு முழுதும் ஈட்டி வந்தார்கள் எனலாம். பிடித்தெருவும் வேண்டாது நிலத்தை வளம்படுத்தும் முறை நம் நாட்டிலேதான் அறியப் பட்டிருந்தது. கோடைகாலத்தில் மழை பெய்தவுடன்

நிலத்தை உழுது ஒரு பலம் மண்ணைக் காற்பலம் மண்ணு கக் காயவைத்தால், பிடி அளவு எருவும் தேவையில்லை யாம். "தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்," என்பது குறள். உழவுத் தொழிலால் உணவுப் பொருள் மிகுதியாகப் பெற்றிருந்த படியால் 'விருந்தோம்பல்' அறம், தலையாய அறமாகக் கொள்ளப்பட்டது. விருந்தினர் அனிச்சப்பூவினும் மென் மையுடையவர். ஆதலால், அவரைக் கண்டவுடன் முக மலர்ச்சி கொண்டு, இன்சொல் கூறி அவரை வரவேற்று உபசரித்து வந்தார்கள். என்னே தமிழர்கள் பண்பாடு! இவற்றையெல்லாம் விரித்தெழுத இடமும் இல்லை; காலமும் இல்லையே!

செங்கோல் வேந்தன் நல்லாட்சியில், நாடாவளங்களை யெல்லாம் பெற்ற நாட்டில் குடி மக்கள், தெய்வலோக வாழ்க்கை வாழ்ந்து இன்பமே திளைத்து வந்தார்கள். 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்பது தமிழர் பண்பாடு. ஒருவனும் ஒருத்தியும், முற்பிறப்புக்களில் கணவனும் மனைவியுமாகக் கூடியிருந்து பிரிந்து, இப் பிறப்பில் ஊழ் கூட்டச் செம்புலப்பெயல்நீர்போல அன்பு டை நெஞ்சம் தாமே கலந்து ஒன்றுகத் தாம் முன் போலக் கணவனும் மனைவியும் ஆவர். பிரிந்தவர் கூடுங் கால் ஏற்படும் இன்பம் எல்லையற்றது. இவ்வின்பம் கள்ளுண்ட காலத்து ஏற்படும் இன்பம் போல்வது. ஆனல், கள் உண்பார்க்கு அறிவு திரிதலால், இன்னது செய்யத் தக்கது, இன்னது செய்யத்தகாதது என்ற வேறு பாடு தோன்றுது. ஈண்டு அத்தகைய அறிவு திரிவு இல்லை. கள்ளில் உள்ள மயக்கம் அதற்குப் பொருந்தா தது. களிப்புண்டாக்குவதே கள் எனல் வேண்டும்; எனினும், எவ்வாறு அதன்கண் மயக்கம் உண்டாக்

கும் தன்மையும் புகுந்துவிட்டது. தானே அவளாக வும், அவளே தானாகவும் கலந்து ஒருயிராய் நிற்கும் நிலையில் மயங்குவோர் யார் ? மயக்கற்குரியார் யார் ? எனவே, தனிப்பட்ட களிப்பே அடைந்து நிற்கும் இந்த நிலை களவு என்று வழங்கலாயிற்று. பிரமானுபவ இன்பத்தை விளக்கச் சுழுத்தியின்பத்தை எடுத்துக்காட் டும்போது, சுழுத்தியில் உள்ள அறியாமையை நீக்கி இன் பம் மட்டுமே கொள்ளுதல் போல, ஒருவனும் ஒருத்தியும் தாமே தமித்துக் கூடிப் பெறும் இன்பத்தை விளக்கக் கள்ளின் இன்பத்தை எடுத்துக் காட்டுவது பொருத்தமே யாகும். இது பற்றியே களவு கற்பு இரண்டனுள் களவே சிறந்ததென்று பரிபாடல் பாராட்டலாயிற்று. தமக்குத் தாமே களவின்பம் நுகர்ந்து களவொழுக்கம் பூண்டவர், தம்மில் ஒருவரை ஒருவர் பிரியாமல் ஓரில்லில் உறைந்து இல்லறமாம் நல்லறம் பேணித் தம்முள் ஒருயிராய் நிறைவுபெறத் திண்மையுடன் நின்று கடனாற்றுவதே கற்பாகும். கல் போலும் திண்மை நிலையே கற்பாகும். இதன் உண்மையை உணர்த்தவே 'கற்பெனும் திண்மை' என்றார் திருவள்ளுவர். 'இத்திண்மை ஒரு பெண்ணிடம் நிலைபெற்றுவிட்டால், ஒருவன் அடையும் பொருள் களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவை உள ?' என்று கேட்கிறார் அப்புலவர் பெருமான். இத் திண்மை ஆடவர்களுக்கும் இருத்தல் வேண்டும். இயல் பாகவே ஆடவர் திண்மையுடையவராவராதலால், 'கற் பெனும் திண்மை'-கல் போலக் கலங்காது நிற்றலாகிய திண்மை-இயல்பில் திண்மையிலாராகிய பெண்களுக்கு வலியுறுத்தப்பட்டது. குழவி உருண்டுருண்டு எவ்வளவு தான் அசைக்க முயன்றாலும், அம்மிக்கல் அசையாதிருத் தல் போல, மாறிமாறி எவ்வளவுதான் துன்பம் வந்தாலும்

தான் அசையாதிருத்தல் வேண்டும் என்ற உண்மை, அம்மிக்கல் மிதித்தற்சடங்கில் இன்றும் பெண்களுக்கு வலியுறுத்தப்படுகிறது, மணவினைச் சடங்கில்.

கலப்பில்லாத பொன் போன்றது சிவம். பொருளை களிம்புண்ட செம்புபோன்றது சீவன். அறியாமையொடு கலப்புண்ட சீவன், கடமைகளாகச் சில செயல்கள் ஆற்றுதலால், அறியாமையிலிருந்து நீக்கம் பெறலாம். இதற்கெனவே ஒருயிர், இரண்டுடல் பெற்றுக் கணவனும் மனைவியும் ஆகிறது. அறியாமை நீங்கும் வரையில் மாறிமாறிப் பிறந்திறந்து வரும் தன்மையது அவ்வுயிர். அறியாமை நீங்கினவுடன் இரண்டுடலிலும் இரு வேறுகப் பிரிந்து நிற்கும் அவ்வுயிர், மீண்டும் ஒருயிராக நிறைவு பெற்றுவிடும். இந்த நிலையே 'பிரிவரிதாகிய தண்டாக் காமம்' எனக் குறுந்தொகையால் உணர்த்தப்படுகிறது. 'பிரிவரிதாகிய தண்டாக்காமமொடு உடனுயிர் போகுக தில்ல,' என்பதால் காமம் என்பது 'கமம் நிறைந்தியலும்' என்றபடி அறியாமையிலிருந்து நீங்கி நிறைவு பெறும் மாசில் நிலை என்ற பொருளுடையது. தானே அவளே, அவளே தானேயாகக் கூடும் நிலையே காதல் எனப்படுவது. காதல் வாழ்வில் பெறுகின்ற இன்பம் களவின்பம். களவொழுக்கம் அடிப்படையாகக் கடமையாற்றுதலில் கல் போல் திண்மை பெறும் நிலையே கற்பு. கற்பொழுக்கம் பூண்டு, ஈருயிர் ஒருயிராய் அறியாமை அறவே நீங்கி நிறைவுபெறும் நிலையே காமம் என்பது. காம வாழ்வு கைகூடிவிட்டால் இனிப்பிறவாப் பேரின்ப நிலையை உயிர் எய்திவிடும். இவ்வுண்மைகளை உணரார், வடமொழிக் காமத்தோடு தமிழ்மொழிக் காமத்திடை வேறுபாடு உணரார், காமம் என்று கேட்டவுடன், அஃது அணங்காகும், பிணியாகும் என்ற அச்சம் கொள்வர்; மனைவியை விட

வேண்டும் என நினைப்பர். தமிழர் பண்பாட்டில் மனைவி உயிரும் தன் உயிரும் ஒருயிராம். அவ்வாறுயின், மனைவியை விடுதல் என்பது எவ்வாறு பொருந்தும் ? கடமையாற்றுதலால் அறியாமையாகிய களிம்பிலிருந்து நீங்கிப் பொன்போல் தூய்மை பெறலாம் என்று ஈருடல் பெற்று வந்து கடமை ஆற்றி அறியாமை நீங்கி ஈருடல் பெற்றுள்ள காலத்திலேயே ஒருயிராய் நிறைந்து நிலைபெற்று விட்டால் பற்றென்ற பேச்சுக்கே இடமில்லை. பற்றற்ற நிலையே உண்மைத்துறவுநிலை. 'பற்றற்ற கண்ணே பிறப் பறுக்கும்.' இஃதன்றி மழித்தலும் நீட்டலும் செய்து, ஒருவரின் ஒருவர் நீங்கி, மலை முழையிலும் புதரிலும் கரந்துறைதலால் அறியாமையிலிருந்து நீங்கி உய்தலும் கூடாது. நிறைவு பெறுமையின், குறைவோடேயே மீண்டு மீண்டும் பிறக்கவே நேரும். இத்தகைய பண்டைத்தமிழர் பண்பாடு உலகிலுள்ள அனைவரும் போற்றிக் கொள்ளற்குரியது என்பதைப் பகுத்தறிவுடைய எவரும் மறுக்கவே முடியாது. பண்டைத் தமிழருடைய இப்பண்பாட்டைப் போற்றுமையால் போலித்துறவுகள் தமிழ் நாட்டிற்புகுந்து, வெறுப்புணர்ச்சியை வளர விட்டு, உலக வாழ்வை நரக வாழ்க்கையாக்கியது. இவ்வாழ்க்கையிலிருந்து நீங்கிப் பண்டைத் தமிழர் காமவாழ்க்கை எய்துங்காலம் மீண்டும் வருமோ என்பதே ஐயத்திற்கிடமாகிவிட்டது.

உலகிற்பெறும் பேறுகளுள் அறிவறிந்த மக்கட்பேறே உயர்ந்தது. மக்களைப் பெறுதல், தாம் இறந்த பின் தமக்கு ஸ்ராத்தம் கொடுப்பதற்காக மட்டும் அன்று. தாம் அறிந்தோ அறியாமலோ செய்யும் செயல்களைப்பார்த்து அப்படியே செய்யும் தன்மை வாய்ந்தவர்கள் தம் மக்கள். அவர்கள் செயல்களில் நல்லனவும் தீயனவும் காட்சியளிக்

கும். தம் மக்களிடத்துத் தீய செயல்கள் கண்டவிடத்து அவற்றை வெறுத்து நீக்கவே பெற்ருேர் கருதுவர். ஆனல், அவர்களிடத்துக் காணப்படும் தீய செயல்கள் அவர்களிடத்திலிருந்து இயல்பாகத் தோன்றிய செயல்க ளல்ல; தம்மிடத்திலிருந்து மேற்கொண்ட தீய செயல் களே. எனவே, தம்மிடத்துள்ள குறைகளைக் காட்ட வல்ல கண்ணுடி போன்றவர்கள் தம் மக்கள் என்று உணர்ந்து, தம் குறைகளைத் தம்மிடத்திலிருந்து நீக்கிவிடப் பெற்ருேர்கள் முயன்று, அவற்றை நீக்கிவிட வேண்டும். தம் குறைகளை உணர்த்தும் ஆற்றல் தம் மக்களிடத் தன்றிப் பிறரிடத்து இல்லையாதலால், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற," என மக்கட்பேற்றைச் சிறப்பித்தார் திருவள்ளுவர். அறி வறிந்த நன்மக்களைப் பெறுதலில் விழைவு மிகப்பெற்று நின்ற தமிழர் பண்பாடு ஈடெடுப்பற்றது. இந்த உண்மை அறியாதபடியால் கருத்தடைகளில் கருத்துச் செலுத்து கின்றனர் இக்கால நாகரிகர். என்னே அறியாமை இருந்த வாறு! தம் குறைவு நிறைவுகளை உணர்த்துதற்கெனவே கண்ணுடிகள் போன்று உதவியாற்றத் தோன்றிய தம் மக்களுக்குப் பெற்ருேர்கள் ஆற்றத் தகும் கைம்மாறு யாது? ஈன்ற தாய், தன் மக்களைப் புறந்தருதல் வேண்டும். பெற்ற தந்தை, தன் மக்களைக் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் நிறைந்த சான்ருேராக்குதல் வேண்டும். நாட்டுக்குத் தொண்டு செய்யப் பயிற்சி தரல்வேண்டும்; தான் பெற்ற இன்பம் தன் நாட்டவரும் பெற வேண்டும் அன்ருே!

பெற்ருேர்களால் கண்ணுங்கருத்துமாய் வளர்க்கப் பெறும் மக்கள், பிற்காலத்தில் நாட்டின் நல்ல குடிமக்க ளாகத் திகழ்வார்கள். எல்லாக் கலைகளிலும் பயிற்று

விக்கப்படும் மக்கள், நாட்டில் எல்லாக் கலைகளையும் வளர்த்து அந்நாட்டைப் பொன்னுடாக்குவார்கள். ஒழுக்கம் விழுப்பம் தரும் என்று உணர்த்தி அவ்வொழுக்கத்தை உயிரினும் சிறந்ததாய்ப் போற்றவேண்டும் என்று பயிற்றுவிக்கப்படும் மக்கள், நோயும் கவலையுமின்றி வாழ்க்கை நடத்துவார்கள். நோயில்லை என்றால் மருந்தெதற்கு? ஒழுக்கத்தை விழிப்பொடு போற்றுதவர்களுக்கே மருந்து வேண்டற்பாலது. முன் உண்டது நன்கு சீரணமானபின் அளவறிந்து உண்பார்க்கு நோயே வாராது. உழைக்கும் காலத்தில் உழைத்து, உறங்கும் காலத்தில் உறங்கித் தொழில் ஆற்றும் காலத்தில் தொழிலாற்றி, அறங்களெல்லாம் கடைப்பிடித்துக் கயவரின் நீங்கிச் சான்றோரினஞ் சேர்ந்து எந்நாளும் திண்மையொடு நெறி நின்றொழுகும் மக்களுக்கு நோயோ கவலையோ ஏற்பட இடமேயில்லை. 'மருந்து' என ஓரதிகாரம் வகுத்து, அதில் 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' எனத் திருவள்ளுவர் உணர்த்துவது வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்ததாகின்றது.

இதுகாறும் கூறியவாற்றால், 'தமிழகத்தில் வாழ்ந்து வந்த பண்டைத் தமிழ் மக்கள் தெய்வங்கொள்கையை அடிப்படையாகக் கொண்டவர்; கயவரையும் மக்களாக்கும் கருத்துடன் கல்வியை ஈடெடுப்பற்ற துணையாகக் கொண்டவர்; அனைவரும் கற்றற்குரியவரெனக் கண்டவர்; பயிற்றுமுறையை நன்குணர்ந்தவர்; செங்கோல் வேந்தனால் நல்லாட்சி பெற்றவர்; நாடாவளம் பெற்ற நாடு பெற்றவர்; உழவுத்தொழிலால் உணவுக்குறை இல்லாது வாழ்ந்தவர்; இல்லறமே சிறந்ததெனப் போற்றினவர்; பற்றற்ற வாழ்க்கையே துறவென அறிந்தவர்; பெறும் பேறுகளுள் மக்கட்பேறே சிறந்த பேறென விழைந்தவர்;

மருந்தே வேண்டாது ஒழுக்க முறையால் நல்வாழ்வு வாழ்ந்தவர்,' என்பது நன்கு விளங்கும். இவ்வாற்றால் பண்டைத் தமிழர் பண்பாடு ஈடெடுப்பற்ற சிறப்புடைய தென்பதும் துலங்கும்.

3. தமிழக வரலாறு

டாக்டர் மா. இராசமாணிக்கனாரவர்கள், M.A., L.T., M.O.L., Ph.D.
[தியாகராசர் கல்லூரி, மதுரை.]

அரசியல் வரலாறு :

இன்றுள்ள தமிழ் நூல்களுள் தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன சங்க நூல்கள் என்று பெயர் பெறும். இவை யாவும் ஏறத்தாழக் கி.பி. 300க்கு முற்பட்டவை. இந்நூல்களில் உள்ள செய்திகள் எல்லாம் தமிழகத்தில் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆட்சியையே குறிக்கின்றன. இம்முடியுடைய மூவேந்தர் நெடுநில மன்னரென்றும், இவர்க்கு அடங்கியும் அடங்காமலும் இருந்த பாரி, பேகன் முதலியோர் குறுநில மன்னர் என்றும் பெயர் பெற்றிருந்தனர். சங்க காலத்தில் தமிழகத்து மன்னரிடையே பல போர்கள் நடந்தன. ஒரு காலத்தில் சோழன் பேரரசனாய் விளங்கினான்; வேறொரு காலத்தில் பாண்டியன் பேரரசனாய் விளக்கமுற்றான்; பிறிதொரு சமயம் சேரன் பேரரசனாய்த் திகழ்ந்தான். கரிகாற்சோழன் இமயம் வரை சென்று இமயத்தில் புலிப்பொறி பதித்து மீண்டான். இவ்வாறே வடநாடு சென்று நெடுஞ்சேரலாதன் 'இமயவரம்பன்' எனப் பெயர் பெற்றான். பாண்டி

யன் நெடுஞ்செழியன் ஆரியர்களை வென்று, 'ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்' என்று புகழ் பெற்றான்.

கி. பி. 300 முதல் 900 வரை தமிழகத்தின் பெரும் பகுதி பல்லவர் என்ற புதிய மரபினர் ஆட்சியில் இருந்தது. சோழர் சிற்றரசர் ஆயினர். தெற்கே இருந்த பாண்டியரும் மேற்கே இருந்த சேரர், கங்கர், கதம்பர் என்பவரும் பல்லவ நாட்டுக்கு வடமேற்கே இருந்த சாளுக்கியரும், அவர்க்குப் பின் வந்த இராட்டிரகூடரும் பல்லவருடன் ஓயாது போரிட்டனர்.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவப் பேரரசு ஒழிந்து, சோழப் பேரரசு ஏற்பட்டது. அதனைத் தோற்றுவித்த சுந்தரர் தேவாரத்திலும், திருமங்கையாழ்வார் பாசுரத்திலும், நந்திக்கலம்பகத்திலும், பாரத வெண்பாவிலும், சில தனிப்பாடல்களிலும் பல்லவரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆதித்த சோழன் முதல் மூன்றாம் இராசராசன் வரையில் சோழப் பேரரசர் பலர் தமிழகத்தின் பெருநிலப்பரப்பை ஒரு குடைக்கீழ் வைத்தாண்டனர். இப்பேரரசரும் பாண்டியருடனும் சேரருடனும் இலங்கை அரசருடனும் இராட்டிரகூடருடனும் அவர்க்குப் பின் வந்த சாளுக்கியருடனும் பல போர்கள் செய்ய வேண்டியவராயினர். ஆயினும், போர்க்கப்பல்களைச் செலுத்திப் பல தீவுகளை வென்ற பெருமை இச்சோழர்க்கே உரியது. சோழப் பெருநாடு வடக்கே துங்கபத்திரையாறு வரை பரவியிருந்தது. இப்பெருநாட்டை ஏற்படுத்தியவன் முதலாம் இராசராசன். கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் மைசூர்ப் பகுதியை ஆண்ட ஹொய்சலர் படையெடுப்பாலும், தம்மாட்சி பெற்ற பாண்டியர் படையெடுப்பாலும் சோழப் பேரரசு ஒழிந்தது. சோழர்களின் போர்ச்

செயல்களை ஒன்பதாம் திருமுறை, கலிங்கத்துப் பரணி, மூவருலா, பெரிய புராணம் முதலிய தமிழ் நூல்களில் காணலாம்.

கி.பி.14-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் மாலிக்-காபூர் என்பவர் விந்த மலையைக் கடந்து யாதவ அரசையும், காகதிய அரசையும், ஹொய்சல அரசையும் வென்று பாண்டி நாட்டையும் கைப்பற்றினுர். தமிழகத்துச் செல்வம் கொள்ளை போயிற்று. சிறிது காலம் தமிழகம் நிலை தளர்ந்தது; விஜய நகர அரசு ஏற்பட்ட பின்பு தமிழகம் அமைதியுற்றது. மதுரையிலும் தஞ்சையிலும் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. பின்பு தஞ்சையில் மகாராட்டிரர் ஆட்சி உண்டானது. விஜயநகர ஆட்சிக்குப் பின்பு தமிழகம் கருநாடக நவாபுகளின் ஆட்சிக்கு உட்பட்டது. யாண்டும் ஓயாத போர்கள் நடைபெற்றன. வாணிகத்துக்காக வந்த ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டுத் தமிழகத்தை மேலும் பாழாக்கினர். இறுதியில் ஆங்கில ஆட்சி ஏற்பட்டது. அதுவும் ஒழிந்து இன்று நம் நாட்டில் குடியாட்சி நடைபெறுகிறது.

ஆட்சி முறை:

சங்க காலத்தில் நாட்டை ஆட்சி புரிவதில் அரசனுக்கு உதவியாக ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இருந்தன. பிற்காலத்தில் பல துறை அமைச்சர்களும் பல துறை அலுவலர்களும் இருந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அரசனுடனிருந்து ஆட்சி முறைகளைக் கவனித்த அமைச்சர்கள், 'உடன் கூட்டத்து அதிகாரிகள்' எனப்பட்டார்கள். நாடு பல மண்டலங்களாகவும், மண்டலம் வளநாடு, நாடு, கூற்றம், சிற்றூர் என்றும் பலவாறு பிரிக்கப்பட்டிருந்தன.

ஊராட்சி :

ஒவ்வொரு கிராமமும் ஊரவையார் ஆட்சியில் இருந்தது. ஒவ்வோர் ஊரும் பல குடும்புகளாகப் (wards) பிரிக்கப்பட்டிருந்தது. கால் வேலி நிலமும் சொந்த மனையும் உடையவராய், பல சாத்திர நூல்களையும் கற்றுப் பிறர்க்கு உணர்த்த வல்லவராய், செயலாற்றலில் திறமை உடையவராய், முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபத்தைந்துக்கு உட்பட்ட வயதினராய், நல்வழியில் சம்பாதித்த பொருளும் தூயவாழ்க்கையும் உடையவராய், மூன்று ஆண்டுகட்கு உட்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராய் இராதவராய் இருப்பவரே ஊரினரால் தேர்ந்தெடுக்க உரிமை உடையவராவர்.

அவையில் உறுப்பினராய் இருந்து கணக்குக் காட்டாதவரும், ஐவகைப் பெருந்தீமைகள் செய்தவரும், கிராமக் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், கள்ளக் கையெழுத்திட்டவரும், பிறர் பொருளை வவ்வினேரும், குற்றம் காரணமாகக் கழுதையின்மீது ஏற்றப்பட்டவரும், கையூட்டு (லஞ்சம்) வாங்கினவரும், 'கிராமத் துரோகி' என்று கருதப்பட்டவரும், இவர்கட்கு உறவினரும் தம் வாழ்நாள் முழுமையும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

தேர்தல் முறை :

தேர்தல் நடைபெறும் நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர், சபை கூடுவதற்கான மாளிகையில் ஊரார் அனைவரையும் கூட்டுவர். கூட்டத்தின் நடுவில் ஒரு குடம் வைக்கப்படும். அங்குள்ள பெரியவருள் ஒருவர், அக் குடத்துள் ஒன்றும் இல்லை என்பதை ஊரார்க்குக் காட்டிக் கீழே வைப்பர். பின்னர், ஒவ்வொரு குடும்பினரும் தம் குடும்புக்கு ஏற்ற ஒருவர் பெயரைத் தனித்தனி ஓலையில்

எழுதுவர்; அவ்வோலைகள் சேர்த்து அக்குடும்பின் பெயரெழுதிய வாயோலையால் மூடப்பட்டுக் கட்டப்படும்; அக்கட்டு, குடத்துள் வைக்கப்படும். இவ்வாறே எல்லாக் குடும்பினரும் குடவோலை இடுவர். பின்னர், ஊர்த்தலைவரான முதியவர், சிறுவன் ஒருவனை அழைத்துக் குடத்திலிருந்து ஓர் ஓலைக்கட்டை எடுப்பிப்பர்; அதனை அவிழ்த்து வேறொரு குடத்தில் இட்டுக் குலுக்குவர்: அவற்றுள் ஒன்றை அச்சிறுவனைக் கொண்டு எடுப்பிப்பர்: அதனைத் தாம் வாங்கிக் கிராமக் கணக்கனிடம் தருவர். அவன், தன் கையில் ஒன்றும் இல்லையென்பதை அவையோர்க்குக் காட்டி, அவ்வோலையைப் பெற்று, யாவரும் கேட்க அதில் எழுதப்பட்டுள்ள பெயரை உரக்க வாசிப்பான். பின்னர், அதனை அங்குள்ள அறிஞர் எல்லோரும் வாசிப்பர். பிறகு அப்பெயர் ஓர் ஓலையில் வரையப்படும். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவரே அக்குடும்பின் பிரதிநிதியாவர். இவ்வாறு பிற குடும்புகட்கும் தேர்தல் நடைபெறும். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஓராண்டு வரை ஊராட்சிக் கழகத்தினர் ஆவர்.

உட்கழகங்களும் வேலைகளும்:

ஒவ்வோர் ஊராட்சிக் கழகத்திலும் சில உட்கழகங்கள் இருக்கும். தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினருள் வயதிலும் கல்வியிலும் அறிவிலும் அநுபவத்திலும் மிக்கவர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றவருட்சிலர் ஏரி வாரியராகவும், சிலர் பொன் வாரியராகவும், சிலர் பஞ்ச வாரியராகவும், மற்றும் சிலர் தோட்ட வாரியராகவும் தேர்ந்தெடுக்கப்படுவர். இங்ஙனம் ஊராட்சிக் கழகம் ஊர்த் தேவைகட்கு ஏற்பப் பல உட்கழகங்களாகப் பிரிந்து நின்று கடனாற்றும்.

நியாய விசாரணை செய்தலும் அறநிலையங்களை மேற்

பார்வை இடுதலும் சம்வத்சர வாரியர் கடமை. ஏரி, குளம், ஊருணி முதலிய நீர் நிலைகளைப் பாதுகாத்தலும் விளை நிலங்கட்கு வேண்டுமளவு நீரைப் பாயச் செய்தலும் ஏரி வாரியத்தார் கடமை. நிலங்கள், தோட்டங்கள் இவற்றைப் பற்றிய எல்லாவற்றையும் கவனித்தல் தோட்டவாரியர் தொழிலாகும். பல வகையாலும் வாங்கப்பட்ட காசுகளை ஆராய்வது பொன் வாரியர் பொறுப்பாகும். ஊரில் எப்பொழுதேனும் பஞ்சம், வெள்ளச்சேதம் இவை ஏற்படின், ஊராரைக் காப்பதற்கு முன்னேற்பாடாக ஆண்டுதோறும் குடிமக்களிடம் 'பஞ்ச' நெல் முதலியன வாங்கிச் சேமித்தல் பஞ்ச வாரியர் தொழிலாகும். இவ்வூராட்சியினர் 'பெருமக்கள்' எனவும், 'ஆளுங்கணத்தார்' எனவும் வழங்கப்பட்டார்கள். இவர்களது ஆட்சிக்குரிய மாளிகை ஒன்று ஒவ்வொரு சிற்றூரிலும் இருந்தது.

வாணிகம் :

கிறிஸ்துவிற்கு முன்பு பல நூற்றுண்டுகளாகத் தமிழர் மேல் நாடுகளுடனும் கீழ் நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்து வந்தனர். மிக மெல்லிய ஆடைகள், மிளகு, யானைத்தந்தம், மணப்பொருள்கள் முதலியன வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பல வகைப் பொறிகள், கண்ணுடிப் பொருள்கள் முதலியன இறக்குமதியாயின. தமிழர் கடல் கடந்து சென்று வெளிநாடுகளில் தங்கி, வாணிகம் செய்தனர்; பல நாட்டாருடன் பழகினர்; அவர்தம் மொழிகளைக் கற்றனர்; இங்ஙனம் அயலாரோடு நெருங்கிய உறவு கொண்ட காரணத்தால், "யாதும் ஊரே : யாவரும் கேளிர்," என்று கூறலாயினர்.

சங்க காலத்தில் முசிறி, கொற்கை, காவிரிப்பூம்பட்டி

னம் முதலியன தமிழ் நாட்டுத் துறைமுக நகரங்களாய் விளங்கின. பிற்காலத்தில் நாகப்பட்டினம், காயல்பட்டினம், காந்தளூர்ச்சாலை, மாமல்லபுரம், மயிலை முதலியன துறைமுக நகரங்களாய் இருந்தன. சீனப் பேரரசர் தமிழகத்துடன் வாணிகவுறவு கொண்டிருந்தனர். உள்நாட்டு வாணிகமும் சிறப்புற நடந்தது. கடல் வாணிகத்தால் தமிழகத்துப் பொருளாதார நிலை உயர்ந்து காணப்பட்டது.

தொழில்கள்:

பயிர்த்தொழிலுக்கு அடுத்தபடி நெசவுத் தொழில் சிறப்பாகக் கருதப்பட்டது. பருத்தி நூல், பட்டு நூல், எலி மயிர் இவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டன. முப்பதுக்கு மேற்பட்ட ஆடை வகைகள் சிலப்பதிகார காலத்தில் இருந்தன என்பது அடியார்க்கு நல்லார் உரையால் அறியப்படும். பொது மக்களுக்குத் தேவையான பல திறப்பட்ட பொருள்கள் கைத்தொழில்களால் வளம் பெற்றன. பொற்கொல்லத் தொழில் மிகவுயரிய முறையில் அமைந்திருந்தது.

பயிர்த்தொழில் நாட்டின் உயிர் நாடி. ஆதலால், தமிழரசர் அதனைக் கண்ணுங்கருத்துமாகக் காத்து வந்தனர். ஆற்று வசதி இல்லாத இடங்களில் பெரிய ஏரிகளும், குளங்களும், கிணறுகளும் எடுப்பிக்கப்பட்டன. மகேந்திர தடாகம் முதலிய பெயர்கள் பல்லவ வேந்தரை நினைவூட்டுவன. சோழப் பேரரசர், வீரசோழன் ஆறு, முடி கொண்டான் ஆறு என்னும் ஆறுகளையும், இராசராசன் வாய்க்கால் முதலிய வாய்க்கால்களையும் வெட்டுவித்தனர். திருமலைராயன் ஆறு என்பது பின் நூற்றாண்டுகளில் வெட்டப்பட்டது. இவ்வாறு நாடாண்ட மன்னர்கள் ஆறுகளைத் தோற்றுவித்தும், வாய்க்கால்களைப் படைத்தும், ஏரி குளங்களை ஏற்படுத்தியும், ஆற்றின்

கரைகளை உயர்த்தியும் பயிர்த் தொழிலைப் பாதுகாத்து வளர்த்தனர்.

அளவைகள் :

நிறுத்தலளவை, நீட்டலளவை, முகத்தலளவை, எண்ணலளவை என்பன வழக்கில் இருந்தன. இராச கேசரி மரக்கால், ஆடவல்லான் மரக்கால், அருண்மொழி நங்கை மரக்கால் என முகத்தலளவைக் கருவிகள், கடவுள், அரசன், அரசியின் பெயர்கள் பெற்று விளங்கின. பொன், வெள்ளி, செம்பு நாணயங்களும் வழக்கிலிருந்தன.

சமுதாய வரலாறு :

சங்க காலத்தில் தொழில் பற்றிய பிரிவுகளே சமுதாயத்தில் இருந்தன. பின்பு, கொல்லன் மகன் கொல்லனாகவும், பறையன் மகன் பறையனாகவும் கருதத்தகும் முறையில் சாதிகள் ஏற்பட்டுவிட்டன. வடநாட்டு வருண பேதங்கள் இந்நாட்டிலும் நுழைக்கப்பட்டன. இவ்வேறுபாடுகளால் சமுதாயத்தில் இருந்த ஒற்றுமை சிதறடிக்கப்பட்டது. ஒருவனை ஒருவன் உயர்ந்தவனாகவும் தாழ்ந்தவனாகவும் கருதினமையால், உயர்வு மனப்பான்மையும் இழிவு மனப்பான்மையும் மக்களிடையே வேரூன்றின. சமுதாயத்தில் ஏறத்தாழ மூவாயிரம் பெருஞ்சாதிகளும், ஒவ்வொரு பெருஞ்சாதியிலும் 3 முதல் 12 வரை உட்பிரிவுகளும் ஏற்பட்டுவிட்டன. மனுதர்ம சாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு சமுதாயம் வகுக்கப்பட்டது. அம்முறைப்படி நாடாண்டதாக மன்னர்களும் வெட்கமின்றிப் பறை சாற்றினர்கள். இவ்விழி நிலையால், சங்க காலத்தில் ஒன்றுபட்டிருந்த தமிழ்ச் சமுதாயம், பின் நூற்றுண்டுகளில் சின்னபின்னப்பட்டது. சோழப் பேரரசில் இச்சாதிக் கொடுமைகள் தலை விரித்தாடின. இன்ன வகுப்பார் தெருக்களில் செருப்பணிந்து

போகலாகாது; இன்ன வகுப்பார் மாடி வீடு கட்டலாகாது; இன்ன வகுப்பார் மாடி வீடு கட்டினும் இத் துணைச் சன்னல்களுக்குமேல் வைக்கக்கூடாது என்று மன்னனது ஆணை இருந்தது. இத்தகைய கொடுமைகள் சமுதாய ஒற்றுமையைக் குலைத்துவிட்டன; மனித முன்னேற்றத்தைத் தடை செய்துவிட்டன. சித்தர்களும், இராமலிங்கர் போன்ற பெரியாரும் சாதிகளையும் அவற்றை வற்புறுத்தும் பாழான சாத்திரங்களையும் வன்மையாகக் கண்டித்தனர். காந்தியடிகளாலும் பெரியாரது பெருந் தொண்டினாலும் அரசாங்கத்தின் சட்டத்தினாலும் இன்று இவ்வேறுபாடுகள் மறைந்து வருகின்றன. சங்க காலச் சமுதாய வாழ்க்கையை நோக்கி இன்றைய தமிழ்ச் சமுதாயம் போய்க்கொண்டிருக்கிறது என்று கூறலாம். ஆயினும், இப்போக்கில் விரைவு வேண்டும்; யாவரும் தமிழர் என்ற எண்ணம் வேண்டும்; கலப்பு மணங்கள் மிகுதல் வேண்டும்; சாதிகள் அறவே ஒழிதல் வேண்டும்; தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்ற முறையில் புதிய சட்டம் வகுக்க வேண்டும். ஒரு குலத்திற்கு ஒரு நீதி கூறும் சட்டம் மாய்ந்தொழிதல் வேண்டும்.

கல்வி நிலை:

சங்க காலத்தில் சாதியற்ற சமுதாயத்தில் எல்லோரும் கல்வி கற்று வந்தனர். குறமகள், குயத்தி, பாடினி, வளமனையைக் காத்த காவற்பெண்டு முதலிய பெண்மணிகளும், கொல்லன் முதலிய பல திறப்பட்ட தொழிலாளர்களும் கவி பாடும் ஆற்றல் பெற்று விளங்கினர் என்பது சங்க நூல்களால் அறிகின்றோம். இத்தகைய கல்வி நிலை 2000 ஆண்டுகளாக இல்லாமற் போய்விட்டது. பின் நூற்றாண்டுகளில் வடமொழிக் கல்லூரிகள் வளம் பெற்றன என்பதற்குத்தான் சான்றுகள் கிடைக்கின்றனவே

தவிர, ஒரு தமிழ்க் கல்லூரியாவது இருந்தது என்பதற்குச் சான்று கிடைக்கவில்லை. காலப் போக்கில் தொழிலாளர்கள் கல்வியை இழந்தார்கள். கற்கும் உரிமை ஒரு சில வகுப்பினர்க்கே இருந்து வந்தது. சாதி வேறுபாட்டாலும் தீண்டாமையாலும் பல வகுப்பினரும் சேர்ந்து படிக்க வசதி ஏற்படவில்லை. இந்த அவல நிலையில், அரசியல் போர்களும் குழப்பங்களும் கொள்ளைகளும் சமயப் போர்களும் சமுதாய அமைதியைக் கெடுத்தன. நாம் செய்த நற்பேற்றின் பயனாக, சாதி வேறுபாட்டைப் பெருத வெள்ளையர் ஆட்சி இந்நாட்டில் ஏற்பட்டது. யாவரும் கல்வி கற்க முற்பட்டனர். ஏழைகள் பண வசதியின்றி அல்லல் பட்டார்கள். தமிழன்னையின் தவப்புதல்வரான காமராசர் ஆட்சியில் ஏழைகளுக்கு இலவசக்கல்வி வழங்கப்படுகிறது. இப்பொழுது தமிழ் உணர்ச்சியும் தமிழ் நாட்டுப் பற்றும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

சமய வரலாறு :

தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட தமிழர் பல வகைக் கடவுளரை வணங்கி வந்தனர். குறிஞ்சி நில மக்கள் முருகனையும், முல்லை நில மக்கள் கண்ணனையும், பாலை நில மக்கள் கொற்றவையையும், மருத நில மக்கள் மன்னனையும், நெய்தல் நில மக்கள் கடலையும் வழிபட்டு வந்தனர். வடநாட்டு மக்கள் தமிழகத்தில் குடியேறிய காரணத்தால் தொல்காப்பியர் காலத்தில் கடல்—வருணனாகவும், மன்னன்—இந்திரனாகவும், உருவகப்படுத்தப்படும் நிலைமை உண்டாயிற்று என்று கூறலாம். வடவர் கூட்டுறவால் முருகன் சுப்பிரமணியனானன்; கொற்றவை துர்க்கையானாள்; இவ்வாறே பல மாற்றங்களும் சேர்க்கைகளும் சமயத் துறையில் உண்டாயின. இந்திரனுக்

கும் அவன் வாகனமான வெள்ளை யானைக்கும் பலதேவ னுக்கும் மன்மதனுக்கும் தமிழகத்தில் கோவில்கள் ஏற் பட்டன. சமணராலும் பௌத்தராலும் ஏற்பட்ட கோவில்கள் பல. வைதிகரின் நுழைவால் வடமொழி மந்திரங்கள் தமிழகத்தில் நுழைந்தன. சுருங்கக்கூறின், சங்க இறுதிக் காலத்தில் பழந்தமிழர் சமயம் வைதிகர் சம யத்தோடு கலப்புண்டது. தமிழர்தம் சிவன் உத்தர சிவ னுக்கப்பட்டான். வடவர் சமயக்கலைகள் யாவும் தமி ழகத்தில் பரவின. கண்ணன் வழிபாடு விஷ்ணு வழி பாடாக மாறியது. இவ்வாறு உண்டான மாறுதல்கள் பல.

பல்லவர் காலத்தில் சைவ வைணவ சமயங்கள் பௌத்த சமண சமயங்களைத் தாக்கி வெற்றி பெற்றன; அப்போது நாட்டில் பலநூறு கோயில்கள் தோற்றமெடுத் தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலந்தோறும் சென்று அருட்பாடல்களைப் பாடினார்கள். நாயன்மார் பாடியவை 'திருமுறைகள்' என்றும் ஆழ்வார்கள் பாடியவை 'அருளிச் செயல்' என்றும் பெயர் பெற்றன. பல்லவர்கள் மலைச்சரிவுகளைக் குடைந்து கோவில்களை அமைத்தார்கள்; பாறைகளையே கோவில்களாக மாற்றினார் கள்; கற்களை உடைத்து ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோவில் கட்டினார்கள்; பல்லவ மன்னர் சைவ வைணவ சமயங்களுக்குப் பெரிதும் ஆக்கமளித்தனர்; மறையவர் களுக்குப் பல புதிய ஊர்களையும் நிலங்களையும் வழங் கினர்; வடமொழிக் கல்லூரிகளை ஏற்படுத்தினர். இவற் றால் வைதிகர் செல்வாக்கு நாட்டில் மிகுதிப்பட்டது.

சோழர் காலத்தில் இக்கோயில்களெல்லாம் சிறப் புற்றன. பல கோயில்கள் கற்றளிகளாய் மாறின. தஞ் சைப் பெரிய கோவில் போன்ற புதிய கற்கோவில்களும் தோற்றமெடுத்தன. சைவ சித்தாந்த சாத்திரங்களும்

புராணங்களும் தோன்றின. வைதிகர் செல்வாக்கும் மிகுதிப்பட்டது. வைணவமும் வளர்ந்தது. ஆழ்வார் அருட்பாடல்கட்கு மணிப்பிரவாள நடையில் விளக்கவுரை எழுதப்பட்டது. வடநாட்டுச் சான்றோர் சோழர்க்கு அரச குருமாராய் அமர்ந்தனர். முஸ்லிம் படையெடுப்பினால் சமயநிலை பெரிதும் தளர்ந்தது; ஆனால், நாயக்கர் ஆட்சியிலும் மகாராஷ்டிரர் ஆட்சியிலும் புத்துயிர் பெற்றது; அக்காலத்தில் குமரகுருபரர், சிவப்பிரகாசர் முதலியோர் சைவத்தை வளர்த்தனர். வெள்ளையர் ஆட்சியில் சமயம் ஓரளவு நலம் பெற்றது.

சைவத்திலும் வைணவத்திலும் சாதிவேறுபாடுகளின் கொடுமையால் வாடி வதங்கிய மக்கள், சாதி வேறுபாடு அற்ற இஸ்லாத்தையும், கிறிஸ்துவத்தையும் தழுவித் தங்கள் மனக்கவலையை மாற்றிக்கொண்டார்கள். மேனாட்டுப் பாதிரிமார் தமிழகம் போந்து கல்வியறிவையும் மருத்துவ உதவியையும் அளித்தனர். இவ்வருந்தொண்டால் தமிழர் பலர் கிறிஸ்தவராயினர். இங்ஙனம் கி. பி. 14-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு தமிழகத்தில் இஸ்லாமும், கிறிஸ்துவமும் தோன்றி வளர்ந்தன. சுருங்கக்கூறின், சைவர் வைணவர் கொடுமைகளே இச்சமயங்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணம் எனலாம்.

மனிதனது நேர்மையான வாழ்க்கைக்கு உரிய கொள்கைகளின் தொகுப்பே சமயம் எனப்படும். அச்சமயம் இறை உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், காலப் போக்கில் சமயக்கதைகள் பலவற்றையும் மூடநம்பிக்கைகள் பலவற்றையும் புகுத்திச் சிலர் சமயத்தின் பேரால் வாணிகம் நடத்தலாயினர்.

இக்கதைகளையும் நம்பிக்கைகளையும் பற்றி விரிவான முறையில் எழுதப்பட்டவையே புராணங்கள் என்பவை.

ஆங்கில அறிவும் எதனையும் எண்ணிப்பார்த்துச் செய்யும் ஆற்றலும் மிகுந்த நம் நாட்டு அறிஞர் பலர், இப்போது இவற்றின் பயனின்மையை உணர்ந்து வருகின்றனர்; இவற்றிற்கும் சமயத்திற்கும் கடுகளவும் தொடர்பில்லை என்பதை நன்கு விளக்கியுள்ளனர். பதி, பசு, பாசம் என்னும் சைவ சித்தாந்த முப்பொருள்கள் அறிஞரால் ஒப்புக்கொள்ளக் கூடியவை. இவ்வாறே ஒவ்வோர் சமயத்திலும் உள்ள சமயக்கட்டுக்கதைகள் நீக்கப்பட்டு, உண்மைக் கொள்கைகள் மட்டும் மக்களால் பின்பற்றப் படுதல் வேண்டும் என்பது நாட்டிற்பிறந்த நல்லறிஞர் கருத்து. மக்களுக்குக் கல்வியறிவும் எண்ணிப்பார்க்கும் ஆற்றலும் வளர வளர, இக்கருத்து வலுப் பெற்று வருகின்றது.

மொழி வரலாறு :

இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். அஃது ஏறத்தாழக் கி. மு. 300ல் இயற்றப்பட்டது என்று கூறலாம். அந்நூலில் சில வட சொற்கள் கலந்துள்ளன. அவை வடவர் நுழைவால் தமிழிற்கலந்துள்ளன. இதனால், வடவர் நுழைவிற்கு முன் இருந்த தமிழ் நூல்களெல்லாம் தனித் தமிழிலேயே இயன்றவை என்னும் உண்மையை எளிதில் உணரலாம். பின்னர் நாளடைவில் வேதியர் சமயத்தலைவர் ஆயினர். அவர்தம் வழிபாட்டு முறைகள் தமிழ் நாட்டில் பரவின. இன்ன பிற காரணங்களால் சங்க காலத்திலேயே வட சொற்கள் தமிழிற்கலந்தன. புத்த சமயத்தவராலும் சமண சமயத்தவராலும் பிராகிருதச் சொற்களும் தமிழிற் கலந்தன. வடவர் செல்வாக்கு மிக மிக, தமிழிலும் வட சொற்கள் மிகுந்துகொண்டே வந்தன. தமிழ் யாப்பிலக்கணத்திலும் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றிப்

புதிய பாக்கள் தோன்றின ; அணியிலக்கண நூல்களும் தோன்றின. இன்னின்ன சாதியினரைப் பாடும்பொழுது இன்னின்ன எழுத்துக்கள் பாவின் முதலில் இருக்க வேண்டும் என்னும் கேடான வரையரையும் ஏற்பட்டது. தமிழாசிரியருள் சிலர் வடமொழியையும் கற்று, 'வடநூல் வழித் தமிழாசிரியர்' என்று பெயர் பெற்றனர். வடமொழி இலக்கணத்தால் உண்டான புதுமைகளை யாப்பருங்கல விருத்தியுரையில் நன்கு காணலாம். சோழப் பேரரசர் காலத்தில் பாதி தமிழும் பாதி வடமொழியும் கலந்த புதிய நடையில் ஆழ்வார் அருட்பாடல்கட்கு விளக்கவுரை எழுதப்பட்டது. சைவமும் வைணவமும் வடமொழி வாணரால் பரப்பப்பட்டன. ஆதலால், அச்சமய நூல்களின் நடை கலப்பு நடையாகவே காணப்பட்டது. சைவசித்தாந்தக் கருத்துக்களும் கலப்பு நடையிலேயே எழுதப்பட்டன. ஏறத்தாழ 500 ஆண்டுகட்கு முன் இருந்த வில்லிபுத்தூர் ஆழ்வார் இயற்றிய பாரதத்தில் வடசொற்கள் மிகுந்திருத்தலைக் காணலாம். இவ்வாறே அருணகிரிநாதர் பாடல்களிலும், தாயுமானவர் பாடல்களிலும் எண்ணற்ற புராணங்களிலும் வடசொற்கள் மிக்குள்ளன. விசய நகர ஆட்சியில் தமிழிசை ஒழிந்து கருநாடக இசை தமிழகத்தில் வேரூன்றியது.

ஒரு மொழியின் சேர்க்கையால் தமிழின் தனித்தன்மை எவ்வாறு கெட்டது என்பதை இதுகாறும் கூறியவற்றால் நன்கறியலாம். இன்று தமிழ் உணர்ச்சி வீறு கொண்டிருக்கிறது. தூய தமிழில் பேச வேண்டும் என்று மாணவர் உலகம் துடிக்கின்றது. தமிழறிஞர்களும் தூய எளிய நடையில் நூல்களை வெளியிடுகின்றனர் ; தூய தமிழில் பேசுகின்றனர் ; பழந்தமிழ்ப் பெயர்கள் வழக்கில் வந்துகொண்டிருக்கின்றன. மறைமலையடிகள், திரு. வி. க.

போன்ற தமிழ்ச் சான்றோர்களால் தனித்தமிழ் நடை உருவானது. இன்று அதனை வளர்க்க நற்றமிழர் விழைகின்றனர்.

முடிவுரை :

தமிழ் மக்களுக்குத் தமிழ், தமிழர், தமிழ் நாடு என்னும் கவலை ஏற்படுதல் வேண்டும்; மொழியைப் பாதுகாக்கவும் தமிழர் இன ஒற்றுமையை வளர்க்கவும் அறிவு வேண்டும்; சுயநலமே பெரிதெனக் கருதி மொழியையும், இனத்தையும், நாட்டையும் காட்டிக் கொடுக்கும் கயமை ஒழிதல் வேண்டும். மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப் பற்று ஆகிய மூன்றும் தமிழ் நாட்டுத் தலைவர்களிடம் உண்மையில் தோன்றுமாயின், இத்தமிழகம் சங்க காலத் தமிழகமாக மாறுவது எளிது.

4. இயல் தமிழ்

[திரு. அ. ச. ஞானசம்பந்தனாரவர்கள், M.A.]

[அகில இந்திய வானொலி நிலைய நாடகப்பகுதி இயக்குநர், சென்னை.]

பொதிய மலையில் பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே வளர்ந்த தமிழ் எனும் கன்னி, உலகிடைத் தோன்றிய உயர்தனிச் செம்மொழி களாம் அணங்குகளுள் ஒருத்தியாவள். 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவளாம் என்று உணர முடியாத இயல்பினையுடையவள்' இக்கன்னி. இத்துணை ஆயிரம் ஆண்டுகளாக இவள் வாழ்பவளாயினும் முதுமைக் குறி ஏதுமின்றிச் சிறிளமை உடையவளாய் வாழ்ந்து வருகிறாள்.

இந்தப் பெருமாட்டியின் வளர்ச்சியைக் கருதி அப் பழைய நாளில் இவளை முத்தமிழ் என வழங்கினர். இயல், இசை, நாடகம் என்ற மூன்று பகுதிகளையே அவ் வாறு குறித்தனர். இவற்றுள் முதல் வகை வளர்ச்சியைக் காண்பதே இன்று நம் கருத்தாகும். நல்ல பருவ காலத் தில் தினம் தினம் புதிய அழகுடன் விளங்கும் ஒரு பெண் ணின் அத்துணை அழகையும் காண வேண்டுமாயின், அதனை ஓயாது உடன் இருந்து காண்பதே சிறந்த வழி. இதிலும் ஓர் இடையூறு உண்டு. அழகிலும் இரு வகை உண்டு. சில வகை அழகுகள் நிலை பெற்றிருப்பன. சில வகை, சில நேரம் நின்று மறைந்துவிடுவன. நிலை பெற்ற அழகுடையவர்களும், அழகிய புன்முறுவல் கொள்கை யில் அதிக அழகுடன் விளங்கக் காண்கிறோம். ஆனால், புன்முறுவலால் பிறந்த அழகு உடனே மாறிவிடும் இயல் புடையதெனக் கூறல் வேண்டா.

தமிழ்க் கன்னியின் நிலை பெற்ற அழகுப் பகுதியை நமக்கு எடுத்துக்காட்ட இன்று நூற்றுக் கணக்கான நூல்கள் உண்டு. தோன்றி மறையும் அவள் அழகை வெளியிட்ட பல நூல்கள் இன்று இல்லாமல் ஒழிந்தன. இடைக்காலத்தில் இருந்து இன்று பெயரளவில் மட்டும் கிடைக்கும் அத்தனை நூல்களும் இருந்திருப்பின் இக் கன்னியின் பேரழகைப் பல கோணங்களிலிருந்து காணும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

அது ஒரு புறம் இருக்க, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இத்தமிழ்க் கன்னி நாடாளும் உரிமை பெற்று, வடவேங்கடம் தென்குமரியிடைப்பட்ட நாட்டில் அரசு செலுத்தி வந்தாள். அந்நாளில் இவளுக் குப் பல அணிகளையும் செய்து சார்த்தி மகிழ்ந்த பெரு மக்கள் பலருண்டு. கழுத்தில் அணிகின்ற பெரிய வைர

மாலை செய்து சார்த்தினவர்களும் உண்டு. விரலுக்குரிய கணையாழி செய்தவர்களும்,மூக்கில் இடும் சிறிய பொட்டு ஒன்றை மட்டுமே செய்தவர்களும் ஆகப் பலர் பல அணிகளைச் செய்து தம் அரசிக்குச் சார்த்தி மகிழ்ந்தனர்.

அணிகளைச் செய்துவிடலாம் எளிதாக. ஆனால், 'அவ்வணி அரசியின் சிறப்புக்கு ஏற்றதா? அவள் அதை அணியலாமா?' என்பதை யார் அறிந்து கூறுவது? தனி ஒருவருக்கு ஓர் அணி அழகென்று தோன்றலாம். பிறர் அதை வெறுக்கவும் செய்யலாம். இதற்கு வழி யாது? ஒரு கூட்டமே இருந்து ஒவ்வோர் அணியும் செய்து தரப்பட்டவுடன் அதனை ஆய்ந்து கண்டு தன் அரசிக்கு அவ்வணி ஏற்றதுதானா என்பதில் முடிவு கூறிற்று.

இக்கூட்டத்தையே 'தமிழ்ச் சங்கம்' என அந்நாளைய தமிழர் கூறினர். மதுரைமா நகரில் நிலைபெற்ற இச்சங்கம் 'சங்கம்' என்ற பெயருடன் இருக்கவில்லை. சங்கம் என்பது பிற்காலத்தார் இட்ட பெயராகும். தமிழ் நிலை என்ற பெயருடன் பழைய சங்கம் இருந்திருக்கும் போலும்! "தமிழ் நிலை பெற்ற தாங்கருஞ்சிறப்பின் மதுரை" (சிறுபாணாற்றுப்படை) என்பனபோன்ற அடிகள் இவ்வுண்மையை அறிவிக்கின்றன.

இயற்றமிழ் என்ற தலைப்புப் பரந்துபட்டது. கிறிஸ்து நாதருக்கு நான்கு நூற்றுண்டுகட்கு முற்பட்டவராகலாம் என்று கருதப்பெறும் தொல்காப்பியனார் இயற்றிய 'தொல்காப்பிய'மே இன்று நமக்குக் கிடைக்கும் இயல் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானது. ஏனைய மொழிகளிலும் பழைய இலக்கணங்கள் உண்டு. எனினும், அவை எழுத்து, சொல் என்ற இரண்டிற்கு மட்டுமே இலக்கணம் கூறும். 'எழுத்தும் சொல்லும் கற்பது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே? பொருள் இல்லை

யேல் இவை இரண்டும் பயனற்றனவே,' என்று கூறும் இறையனுர் களவியல் கதை, ஆழ்ந்த ஓர் உண்மையை உட்கொண்டது. இத்தமிழர் பொருளதிகாரத்துக்கு எத்துணை மதிப்பு வைத்திருந்தனர் என்பதையே இது புலப்படுத்துகிறது.

பொருளதிகாரம் என்பது மக்கள் வாழ்க்கை பற்றிக் கூறும் பகுதி. மொழிக்கு இலக்கணம் வகுக்கப் புகுந்த தொல்காப்பியனுர், அம்மொழி பேசும் மக்கள் வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்தார். உலக மொழிகளில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பாகும் இது.

தொல்காப்பியத்தை அடுத்துக் கிறிஸ்துநாதர் தோன்றிய ஒரு நூற்றுண்டுக்குள் பல திரப் பாடல்கள் தோன்றின. புறத்திணை பற்றித் தொகுக்கப் பெற்றுப் 'புறநானூறு' என்ற பெயருடன் இன்று வழங்கும் தொகுப்பு நூலில் பெரும்பான்மையான பாடல்கள்இக்காலஎல்லையில் தோன்றியனவேயாம். இப்பாடல்கள் அந்நாளில் வாழ்ந்த நம் மூதாதையர்கள் என்ன உண்டனர், எவற்றை உடுத்தனர், என்ன நினைத்தனர், எவற்றைக் குறிக்கோளாகக் கொண்டனர் என்பன போன்ற அரிய கருத்துக்களை அறிய உதவுகின்றன. சுருங்கக் கூறின், 'புறநானூறு' ஒன்று மட்டும் கொண்டு தமிழருடைய நாகரிகப் பண்பாட்டு வரலாற்றைத் தொகுத்துவிடலாம் எனலாம். இத்தகைய ஒரு தொகுப்பு நூலை உலக மொழிகளில் வேறு யாண்டும் காண்டல் அரிது. புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை முதலிய எட்டுத்தொகை (தொகுப்பு நூல்கள், Anthologies) நூல்கள் ஏறத்தாழ இந்தக் கால அளவில் தோன்றின என்று கூறுதல் மிகையாகாது. இவற்றுட் சில பாடல்கள் கி. பி. முதலாம் நூற்றுண்டை அடுத்தும் தோன்றியிருக்கலாம்.

இப்பகுதியிலேதான் 'பத்துப் பாட்டு' என்று இன்று வழங்கப்படும் தொகையில் பல பாடல்கள் தோன்றியிருத்தல் வேண்டும். பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் தொகை நூல்கள் எனினும், தமிழர் வாழ்வின் ஆணி வேரான அகம், புறம் என்ற இரண்டையும் எடுத்து விளக்குவனவாதலின், இயற்றமிழ் வளர்ச்சியில் இவை பெரு மதிப்புக் கொண்டவை.

கி. பி. முதலாம் நூற்றுண்டினதாக இருத்தல் கூடும் என்றும், தொகை நூல்கட்கு முற்பட்டதாக இருத்தல் கூடும் என்றும் கருத்து வேறுபாடுகட்கு இடந்தந்து நிற்கும் திருக்குறளும் இக்காலத்தைச் சேர்ந்ததேயாகும். 'உலகப் பொதுமறை' என்று கூறுவதற்குரிய அனைத்து மதிப்பையும் பெற்று, அணுவைத் துளைத்து எழு கடலைப் புகட்டும் சிறப்புடையதாய் விளங்கும் குறளின் பெருமையை விரிக்க இஃது இடமன்று. தமிழ்க்கன்னியின் மார்பை அணி செய்யும் மதாணியாய் விளங்குவது இது.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் தோன்றிய பெரு நூல் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகும். முத்தமிழ்க் காப்பியம் என்று பிற்காலத்தில் கொண்டாடப்படும் பெருமை பெற்ற இஃது, இயற்றமிழ் வளர்ச்சியில் புது முறை வகுத்தது. சாதாரணமான ஒரு வணிகனைப் பற்றியும் 'மேலோராயினும் நூலோராயினும் பிணி எனக் கொண்டு பிறக்கிட்டொழியும் கணிகையர்' வாழ்க்கையுடைய ஒருத்தியைப் பற்றியும் பெருங்காப்பியம் ஒன்றை எழுதி அதனைப் பிறர் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளுமாறு செய்யலாம் என்ற பேருண்மையை உலகுக்குக் காட்டிய பெருமை இளங்கோ அடிகட்கு உரியதாகும். தமிழில் முதலில் தோன்றிய கலைக்காப்பியமாகும் இது. பெருங்காப்பிய இலக்கணம் அனைத்தும் பெற்று விளங்கும் இது,

தமிழ்க்கன்னியின் நடை அழகை அறிவிக்கும் சிலம்பாய் அமைந்தது சாலப் பொருத்தமுடையதே.

சிலம்பை அடுத்து மூன்றும் நூற்றுண்டின் இறுதியில் 'மணிமேகலே' என்னும் காப்பியம் எழுந்தது. மணிமேகலே காலத்தில் இயற்றமிழ் மற்றொரு பெருமாறுதலே அடைந்தது. சமயக் கொள்கை முதலியவற்றை வலியுறுத்த ஒரு வரலாற்றைக் கையாளலாம் என்ற புது முறையைக் கையாண்டார் கூலவாணிகன் சாத்தனுர். சாத்தனுர் புகுத்திய இப்புதுமுறை இயல் தமிழில் நிலேத்துவிட்டது. பின்னர்த் தோன்றிய சிந்தாமணி, வளேயாபதி, குண்டலகேசி, பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய அனேத்தும் இம்முறையில் எழுந்தனவே. வேறு பயன் கருதாமல் காப்பியம் இயற்றும் மரபு இளங்கோவுடன் மறைந்துவிட்டது போலும்!

கி. பி. நான்காம் நூற்றுண்டு தொடங்கிக் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கம் வரையில் தமிழ் நாட்டுக்கும் இயல் தமிழுக்கும் இருண்டகாலம் என்று கூற வேண்டும். தமிழரல்லாத களப்பிரர் என்ற இனத்தார் தமிழ் நாட்டைப் பிடித்து ஆட்சி செய்தமையின், தமிழ் மொழி போற்றுவாரற்றுக் கிடந்தது. எனவே, இக்கால எல்லேயில் ஒரு பெருநூல் தவிர வேறு ஒன்றுந்தோன்றவில்லே. அவ்வொரு நூலும் சைன சமண நூலாய், மொழி பெயர்ப்பு நூலாய் அமைந்தது புதுமையே. 'பெருங்கதை' என வழங்கும் 'உதயணன் கதை' இயல் தமிழ் வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தைப் போன்றது. வடமொழியிலிருந்து காப்பியங்களே மொழி பெயர்க்கும்மரபை முதலில் தோற்றுவித்தது பெருங்கதையேயாகும்.

தமிழ் நாகரிகத்தையும் இலக்கியத்தையும் அடக்கி ஆண்ட களப்பிரருடைய கொடுமையை வென்று தமிழ்

நாகரிகத்தை நிலை நிறுத்த ஒரு புரட்சி தேவைப்பட்டது. அரசியல் முறையில் ஏற்படும் புரட்சியைக்காட்டிலும் வலுவுடையதாய், மக்கள் மனத்தில் தமிழ்ப் பண்பாட்டை மீட்டும் நினைவூட்டும் பணியை மேற்கொள்வதாய் உள்ள ஒரு வகைப் புரட்சி தேவைப்பட்டது. இதனைச் செய்த வர் திருஞான சம்பந்தர் என்று போற்றப்படும் சமயகுரவ ராவர். 'தமிழ் ஞான சம்பந்தன்' என்றும் 'முத்தமிழ் விரகன்' என்றும் தம்மைக் கூறிக்கொள்ளும் இவர்தாம் களப்பிரர் சமுதாய வாழ்வில் செய்திருந்த கொடுமைகளை மாற்றியமைத்தவர். அன்றியும், அது வரையில் வழக்கில் அதிகம் பயின்று வாராத 'விருத்தப் பாவில்' தம் பாடல் களை இயற்றிய பெருமை இவரையே சாரும். இதன் பிறகு பழம்பாடல் முறையைப் பின் பற்றி அகவல், கலி முதலிய பாமுறைகள் தலை எடுக்கவே இல்லை. சமயப் புரட்சியால் மக்கள் வாழ்வு முறை மாறினதுபோல, இயல் தமிழ் பெற்ற மாறுதலாகும் இது.

இம்மாறுதலால் தமிழ்க்கன்னி புதிய பொலிவு பெற் றாள். ஆசிரியம், வஞ்சி முதலிய பா வகைகள் கவிஞ னுடைய கற்பனைக்கு ஏற்ப விரிந்து கொடுப்பவை யல்ல. எனவே, சொல்லாட்சி முறையிலும் ஓசையிலும் கவிஞன் ஏற்றும் பொருளை முற்றிலும் ஏற்க முடியாமல் அப் பா முறைகள் தவித்தன. புதிய விருத்தப்பாடலால் இக் குறை நீங்கிற்று. ஞானசம்பந்தர் முதலிய நாயன்மார் பாடலிலும் ஆழ்வாராதியர் பிரபந்தங்களிலும் அதற்கு முன்னர்த் தமிழ்க் கவிதைகளிற்காணுத ஓசை அழகைக் காண்டல் கூடும். இப்பெருமாற்றத்தால் இயற்றமிழ் பெற்ற சிறப்பை அளவிட முடியாது.

ஏழாம் நூற்றூண்டு தொடங்கிப் பன்னிரண்டாம் நூற்றூண்டு முடியத் தமிழ் மொழியின் பொற்காலம்

என்று கூறலாம். முதலாழ்வார்களும் நாயன்மாருள் இருவரும் இக்காலத்து வாழ்ந்தவரே. எட்டாம் நூற்றாண்டில் நம்மாழ்வார், பெரியாழ்வார், சூடிக்கொடுத்த நாச்சியார், திருமங்கை மன்னர், சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய பெரியவர் பலர் விளங்கினர். இப்பெரியார்களால் இயற்றமிழ் பெற்ற வளர்ச்சிக்கு ஓர் அளவேயில்லை.

ஒன்பதாம் நூற்றாண்டில் ஈடு இணையற்றதாய் உலக மொழிகளில் உள்ள பத்திப் பாடல்கள் அனைத்திலும் தலைமை இடம் பெற்ற 'திருவாசகம்' தோன்றிற்று. பத்தாம் நூற்றாண்டில் விருத்தப் பாவில் முதற்காப்பியமாகிய சீவகசிந்தாமணி பிறந்தது. இந்நூற்றாண்டில் சமணப் பெருமக்கள் தமிழுக்குச் செய்த தொண்டு மிகப் பெரிது. இப்பகுதியின் ஒரு நூற்றாண்டு முன்னும் பின்னும் யாப்பருங்கலம், காரிகை முதலிய பாவியல் இலக்கணங்களும், நிகண்டுகளும் தோன்றின. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி முதலிய நூல்களும் தோன்றின.

பதினொராம் நூற்றாண்டிலேதான் ஒட்டக்கூத்தருடைய தக்கயாகப்பரணி போன்ற நூல்களும், செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும் பிறந்தன. இந்நூற்றாண்டில் தொல்காப்பியத்திற்கு உரையிட்ட 'இளம்பூரண அடிகள்' விளங்கியிருத்தல் கூடும். விரிந்த முறையில் நூலுக்கு உரையிடும் மரபு இக்காலத்தே தோன்றியிருத்தல் வேண்டும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் சேக்கிழாரின் பெரிய புராணமும், அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் 'கற்றோர்க்கு இதயம் களிக்கச் செய்யும்' கம்ப நாடரின் ஒப்புயர்வற்ற பெருங்காப்பியமும் தோன்றின.

பதின்மூன்றும் நூற்றுண்டு பதினுன்காம் நூற்றுண்டு களைச் சமய சாத்திர காலம் என்று கூறலாம். குறளைப் போலக் கடுகைத் துளைத்துக் கடலைப் புகட்டும் சிவஞான போதம் முதலிய சைவ சமய சாத்திரங்கள் பன்னிரண்டும் தோன்றியது இக்கால எல்லையிலேயே. வைணவப் பெரி யார் பலரும் இக்காலத்தே வாழ்ந்தனர். நச்சினுர்க் கினியர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார் முதலிய பேருரையாசிரியரும் இக்காலத்தவரேயாவர். கவிதைப் பெருக்கம் குறைந்து உரைநடை வளர்ச்சி பெற்ற கால எல்லையாகும் இது.

இறையஞர் களவியல் உரைதான் முதன்முதலில் நாம் காணும் உரைநடைப் பகுதியாகும். ஆசிரியர் தொல் காப்பியஞர் 'உரைநடை வகையே நான்கென மொழிப' என்று கூறியிருந்தும், பழைய உரைநடை நூல் ஒன்றும் கிடைத்திலது. கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதி யில் தோன்றிய இவ்வுரை நடையை அடுத்து மீட்டும் உரைநடை பல்கிய காலம் 13, 14ஆம் நூற்றுண்டுகளாம்.

கி.பி. பதினேந்தாம் நூற்றுண்டு முதல் பதினெட்டாம் நூற்றுண்டுவரை இயற்றமிழ் இருந்து வந்தது என்று கூற லாமேதவிர, வளர்ந்து வந்தது என்று கூறல் இயலாது. இப்பகுதியில் சிறந்த பெரியார் மூவர் தோன்றினர். குமர குருபரர், சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர் என்ற மூவரும் தமிழ்க்கன்னியைப் பழைய நிலைக்குக் கொணரப் பெரு முயற்சி செய்தனர். கம்பநாடர் காலத்திற்குப் பின் தமிழ் பழைய நிலையை அடைய முடியவே இல்லை. சிறந்த கவிஞராய் இருந்தும் குமரகுருபரர் பிள்ளைத் தமிழ், கலம் பகம், குறம் முதலிய சிற்றிலக்கியங்கள் ஆக்கினுரே தவிரப் பெரிய அளவில் ஒன்றும் செய்யவில்லை.

குமரகுருபரரை ஒத்த பெரும்புலவர் முயன்றிருப்

பின், காப்பியம் பாடியிருக்கலாம். பிற்காலக் கவிஞர் களுள் அவரை ஒத்த கவிஞரைக் காண்டல் அரிது. எனினும், காப்பியம் பாடும் மரபு அருகிவிட்டமையின், அவர் அதில் நுழையவில்லை போலும்! காப்பியம் பெற்றிருந்த இடத்தில் ஸ்தல புராணங்கள் புகுந்தன. இவ்வகை இலக்கியங்களில் பரஞ்சோதியார் திருவிளையாடல், கந்தபுராணம், காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம் என்பவை தவிர ஏனைய பெயரளவில் கவிதைகளேயாம்.

இந்நூற்றுண்டுப் பகுதியில் இயற்றமிழில் ஒரு புது முறை வளர்ச்சி தோன்றலாயிற்று. அதுவே, மணிப் பிரவாளநடை எனப்படும். வடமொழியும் தமிழ் மொழியும் கலந்து எழுதுவதே இம்முறை. இம்முறையில் பல நன்மைகளும் தீமைகளும் உண்டு. திவ்யப் பிரபந்தங்கட்கு உரையிட்ட பெரியவாச்சான்பிள்ளை போன்றவர்களும் வடக்குத் திருவீதிப் பிள்ளை போன்றவர்களும் இம்முறையைக் கையாண்டு சிறப்படையச் செய்தனர். இலக்கண விளக்க ஆசிரியர் போன்ற சில அறிஞர்கள் இம்முறையின் சிறப்பை அறியாமல் வடமொழியிலிருந்து தமிழ் மொழி பிறந்தது என்று அறியாமையின் எல்லையில் நின்று கூறவும் இஃது இடந்தந்தது.

பழைய முறையில் காப்பியம் பாட முயன்ற பெருமை சிவப்பிரகாசர்க்கே உரியது. ‘பிரபுலிங்க லீலை’ நல்ல காப்பியமேயாயினும், மிகச் சிறந்த கவிதைகள் பல அதனுள் இருப்பினும், கால மாறுபாட்டால் அதுதலையாய காப்பியங்களுள் வைத்து எண்ணப்படக் கூடாததாய் விட்டது.

சிவஞான முனிவர் முற்கூறியவர்களைப் போல்பவர் அல்லர். அவர்கள் கவிஞர்கள்; கலைஞர்கள்; ஆனல், திறனய்வாளர் அல்லர். ஆனல், சிவஞான முனிவர்,

கவிஞர், திறனாய்வாளர், பேர் உரையாசிரியர், இலக்கண ஆசிரியர் ஆகிய அனைவருமாவர். தமிழ் நாட்டில் மடங்கள் செய்த இரண்டொரு நன்மைகளுள் குமரகுருபரர், சிவஞான முனிவர் போன்ற ஒரு சிலரைப் படைத்தமையும் ஒன்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயல் தமிழ் புதிய முறைகளில் முன்னேறலாயிற்று. மேனாடுகளிலிருந்து சமயம் பரப்பத் தமிழ்நாடுபோந்த தொண்டர் சிலர் புது முறையில் தமிழ் வளர்த்தனர். வீரமாமுனிவர், ஜி. யூ. போப்பு, கால்டுவெல் என்பவர் அவருள் முக்கியமானவர். இவர்களால் உரைநடைப் பகுதி வளம் பெறலாயிற்று. இந்நிலையில் இராமலிங்க வள்ளலார், ஆறுமுக நாவலர் போன்ற தமிழ்ப் பெரியார்களும் இயற்றமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். முன்னையவர் கவிதைகளாலும் பின்னையவர் உரைநடையாலும் மொழியை வளர்த்தனர்; பண்பாட்டையும் கடன் வளர்த்தனர். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தாயுமான அடிகள் சமரச வழியைப்பெரிதும் போற்றி நூல் செய்தார். 19-ஆம் நூற்றாண்டில் வள்ளலார் அவ்வழியைப் பெரிதும் போற்றிக் கவிதை புனைந்தார். துறவியரான இவர் இருவர் தவிர இந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வேதநாயகம் பிள்ளையும் இத்துறையில் பெருந்தொண்டு புரிந்தார். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் அவருடைய சீடர் டாக்டர் உ. வே. சாமிநாதையரும் செய்த தொண்டுகள் எண்ணுந் தரத்தனவல்ல. சோழவந்தான் அரசஞ்சண்முகனார் இந்நூற்றாண்டின் ஒப்புயர்வற்ற செல்வம்.

இருபதாம் நூற்றாண்டில் இயல் தமிழ் மேலும் பல துறைகளில் முன்னேறியது. கவிதைத் துறையில் கவிச்

சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் புதுமுறைக் கவிதைகள் புனைந்து தமிழ்க்கன்னிக்குப் படையல் செய்தனர். இன்று எத்தனையோ இளங்கவிஞர் தொண்டு செய்து வருகின்றனர். உரைநடை, ஆராய்ச்சிப் பகுதிகளுள் ந. மு. வேங்கடசாமி நாட்டார், விபுலானந்த அடிகள், திரு. வி. கலியாண சுந்தரனார், கந்தசாமியார், மு. கதிரேசச் செட்டியார், இரா. இராகவையங்கார், கா. சுப்பிரமணிய பிள்ளை, வெ. பா. சுப்பிரமணிய முதலியார், டி. கே. சி., போன்ற பெரியவர்கள் தத்தம் துறையில் அளப்பருந்தொண்டு செய்தனர். இன்று நம்மிடையே காணப்பெறாத இவர்கள் தவிர, நம்முடன் வாழும் எத்தனையோ பெரியோர்கள் தமிழ்க்கன்னியின் அழகைப் பெருக்க அருந்தொண்டு செய்து வருகின்றனர்.

இவ்விழாக் காணுந் தலைவர் உட்பட இன்று தொண்டாற்றும் பெரியோர்களைக் குறிப்பது முறையன்றாகலின் இவ்வளவில் நிறுத்துகிறேன். இவ்விரண்டாயிரம் ஆண்டுகளாக ஆற்றொழுக்குப் போல விடாது வளர்ந்து வரும் ஒரு துறையாகும் இயல் தமிழ்த்துறை. அது மேலும் வளம் பெறத் தமிழர் உழைப்பாராக!

5. நாடகத் தமிழ்

[திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், M.A., M.Litt.]

தமிழ் என்றால் இனிக்கும் என்பர். தமிழைத் தேனாகவும் பாலாகவும் சுவைப்பவரும் உள்ளனர். 'செந்தமிழ் நாடு எனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!' என்றார் இந்த நூற்றாண்டுக்கவிஞர் பாரதியார். மற்றொருவர் ஒரு புலவர் எழுதிய தமிழ் ஏட்டைத் 'தொட்டாலும் கை மணக்கும்; சொன்னாலும்

வாய்மணக்கும்; துய்யசேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயி ராய் விளைந்திடும்' என்று போற்றிப் புகழ்ந்தார். ஆம்!

தமிழனுக்குத் தமிழ் கற்கண்டு—தேன்—ஏன்? — அவற்றுக்குமேல் என்னென்ன இனிமை உண்டோ அத்தனையும் அவனுக்குத் தமிழ்தான்.

தமிழனுக்கு மட்டுமன்றிப் பிற நாட்டிலிருந்து தமிழ் பயில வந்தவருக்குங்கூட இந்த இனிமை புலப்படாமற் போகாது. அவ்வாறு தமிழ்த் தேனில் மயங்கி வீழ்ந்த வண்டுகளாகிய போப்பு, பெஸ்கி போன்ற மேலை நாட்டவரை நாம் மறக்க முடியுமா? 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்!' என்று போற்றுவதும், 'மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக்கணியும் பிறவியே வேண்டுவன்,' என்று அடியவர் வேண்டுவதும் எதனால்? தமிழ் இனிமை கண்ட தரத்தாலன்றோ? ஆம்! அத்தமிழ்க்கு இனிமை எங்கிருந்து வந்தது?

மிட்டாய்க் கடையில் பல தின்பண்டங்கள் விற்கின்றன. அத்தின்பண்டங்கள் செய்யும் கைத்திறன் உடைய ஒருவன்—அக்கலையில் வல்லவனாகிய ஒருவன்—வகை வகையாக அப்பண்டங்களைச் செய்து அடுக்கி வைக்கின்றான். பாவம்! அவ்வழியாகச் செல்லும் மனித இனம் மட்டுமன்றி, ஈ முதலியனவுங்கூட அவற்றைக் கண்டு பறந்து வருகின்றன. பார்த்தாலும், மோந்தாலும், அவற்றிற்கு மேலாக வாயாற்சுவைத்தாலும் அதில் ஒரு தனிச் சிறப்பு இருப்பதைக் காண்கின்றோம். சர்க்கரையும் மைதாவும் அன்றி, கோவாவும் கலந்து கலந்து இத்தனை வகை இனிப்புப் பண்டங்களைச் செய்யும் அவனை வியந்து

அப்பண்டங்களைச் சுவைக்கின்றோம் நாம்.

சர்க்கரை வாயில் இட்டால் இனிக்கத்தான் செய்கின்றது. தமிழ் மொழியும் அதைப் போன்றதே. அதே சர்க்கரையைக் கோவா பிற முதலிய பொருள்களோடு சேர்த்துப் பல்வேறு பண்டங்கள் செய்வதைப் போன்று, புலவர்கள் அத்தமிழைத் தங்கள் திறன் கொண்டு அணிகளாலும், யாப்பாலும், பிறவற்றாலும் சிறப்புச் செய்து பல்வேறு வகையில் காதுக்கு இனிமை தருவதோடு கருத்துக்கும் இனிமை தரும் காவியங்களையும் கவிதைகளையும் ஆக்கித் தருகின்றார்கள். இனிப்புப் பண்டங்கள் யார் செய்தாலும் அத்தகைய இனிய சுவையைத் தருவதில்லை. 'ஆரிய பவன் இனிப்பு என்றாலே அலாதி' என்று பேசுபவர் உண்டன்றோ! அதுபோன்றே என்னதான் அணியும் யாப்பும் அழகிய சொற்களும் அமைத்துச் சிலர் கவி செய்தாலும்அவை இனிப்பதில்லை. 'கைப்பாகம்' சிறப்பதில்லை. ஆனால், ஒரு சிலர் எழுதுவனவோ, மிகமிகச் சுவையாக எக்காலத்தும் இனித்துக்கொண்டே இருக்கும் வகையில் அமைந்து விடுகின்றன. இனிய பண்டங்களைக் காற்றுப் புகாப் பாத்திரங்களில் மூடிப் பத்திரப்படுத்துவது போன்று, இந்த இனிய தமிழ்ப்புலமைகளைக் கவிதைப் பாத்திரங்களில் பத்திரப்படுத்தி வைப்பர். அவை எடுக்க வகை தெரிந்தவர்தம் வாய்வழிப் புகுந்து கருத்தை இனிமையாக்கி வருகின்றன. அவை யாவை ?

அவைதாம் இயலும் இசையும் நாடகமும். தமிழை 'முத்தமிழ்' என்பர். 'முத்துத் தமிழ்' என்பாரும் உளர். ஒருவனுக்கு மொழி, பொன் முத்து பவளம் வைரம் அனைத்தினுக்கும் மேற்பட்டதுதானே? இத்தமிழ் மொழி காலத்தால் முந்தியது என்பர் மொழிநூலாராய்ச்சியாளர்;

கருத்தாழமுடையது என்பர் கற்றறி புலவர் ; கலைநலமும் கற்பனை நலமும் சிறந்துள்ளதென்பர் கற்பவர். எப்படி யாயினும், தமிழனுக்கு இத்தமிழைக்காட்டிலும் அவன் வாழும் உலகில் வேறு உயர்ந்த பொருள் எப்படி இருக்க முடியும் ?

இயலும் இசையும் தனித்தனியான தன்மை உடையன. நாடகமும் அத்தகையதே. எனினும், மூன்றும் ஒன்றேயாகும். இயற்றமிழே இசையையும் நாடகத்தையும் பெற்று வளர்த்த தாயாகும். இசையும் நாடகமும் பெற்ற தாயின் பெருமையை உலகுக்கு உணர்த்தி உயரச் செய்கின்றன. இம்மூன்றும் இன்று ஒன்றோடு ஒன்று பின்னி வளர்கின்றன.

மொழி தோன்றிய நாளிலிருந்து வளர்ச்சி அடைய நெடுங்காலம் கழிந்திருக்கும். அந்த நெடுங்காலத்துக்கு இடையிலே அது அடைந்த மாற்றங்கள் அளவில. தமிழ் மொழி இன்றைய நிலை பெறுவதற்கு எத்தனை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். அக்காலத்தி லெல்லாம் அது வெவ்வேறு மாற்றம் பெற்று வந்ததை மொழி ஆராய்ச்சியாளராலும் திட்டமாகக் கூறமுடியாது. நாம் அறிவன யாவும் தொல்காப்பியர் காலத்துக்குள்ளே தான் அடங்கும். ஆனால், அதற்கு முன்னரே தமிழ் மொழி சிறந்த நிலையில் இருந்ததென்பதை மட்டும் மறுக்க முடியாது.

அத்தொல்காப்பியர் காலம் தொட்டு இசையும் நாடகமும் இயலை வளர்த்து வருகின்றன. இயற்றமிழ் பாட்டும் உரையும் விரவி வந்து கற்போர் உள்ளத்தை ஈர்க்கும் தன்மையதாய் அமைவது. அப்பாட்டு இசையொடு பொருந்துவதே இசைத் தமிழாகும். இயலும் இசையும் அமைய, எழுத்தும் பாட்டும் பொருந்த, அவற்றுடன்

நடிப்பும் கலந்து நிற்பதே நாடகத்தமிழ் என்னலாம். இம் மூன்றனுள் நாடகத்தமிழ் மற்ற இரண்டையும் தன்னுள் அடக்கி நிறைவு பெற்றதாகத் தமிழ் மொழியின் குறைவை நிறைவு ஆக்கும் ஒன்ருக அமைகின்றது.

நாடகத்தமிழின் அவசியம் என்ன? அது தோன் றக் காரணம் யாது? இயலும் இசையும் மக்களை மகிழ் விப்பதைக்காட்டிலும் நாடகத் தமிழே பலப்பல மக்களை மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்த்தும் என்பது உறுதி. கற்ற றிந்த ஒரு சிலரே இயற்றமிழ் நலமெலாம் கண்டுகண்டு, சுவைத்துச் சுவைத்து, அதன் இனிமை காண்பர். இயற் றமிழும் அது போன்றே ஓரளவு அதன் சுவையறிந்தா ரையே மகிழ்விக்க வல்லது. நாடகத் தமிழோ, அவை போன்ற நிலேயோடு அமையாது; கல்லாமாக்களையும் அறி வற்றவர்களையுங்கூட இன்பத்தில் ஆழ்த்த வல்லதாகின் றது. அதற்குச் சான்று இன்றைய உலக நிலேயே!

இயற்றமிழ் பற்றிய பேச்சுக்களையும் ஆய்வுகளையும், பிற நலங்களையும் காண முன் நிற்கும் கூட்டத்திற்கு வரு பவரைக்காட்டிலும், இசைத் தமிழ்க் கூட்டத்திற்கு வரு பவர் எண்ணிக்கை அதிகமாகும். எனினும், நாடகத் தமிழ்க்கு வரும் கூட்டமோ, அவை இரண்டினையும்விட எத்தனையோ மடங்கு பெரிதாகும் என்பது கண்கூடு தானே! கற்றறியாச் சாதாரணக் கிராம மக்களுங்கூட, இரவெல்லாம் கண் விழித்து நாடகங்களைக் காண நெடுந் தொலைவு செல்வதைக் காண்கின்ருேமே! அதனுலேதான் போலும் வள்ளுவர் 'கூத்தாட்டு அவைக் குழாத்தை'ச் செல்வத்தின் வரவிற்குஞ் செலவிற்கும் உவமையாகக் கூறிச் சென்ருர்!

தமிழில் நாடகத்தைக் 'கூத்து' என்று கூறுவர் பாட்டிசைத்துக் கூத்தாடுபவரைக் 'கூத்தர்' என்றே

வழங்குவர். அவரை ஆற்றுப்படுத்திய ஒரு நூல் 'கூத்தர் ஆற்றுப்படை' என்றே வழங்கப்படுகின்றது. நாடகம் என்ற சொல்லும் சங்ககாலத்து முன் இருந்தது—ஏன்—தொல்காப்பியர் காலத்திருந்தே வழக்கத்தில் இருந்து வருகின்றது. 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்று வழக்கை இருவகையாகக் காட்டுகின்றார் தொல்காப்பியர். எனவே, நாடகமும் நெடுங்காலம் தொட்டே நாட்டில் வழக்கத்தில் உள்ளது என்பது புலனாகும். எனினும், நாடக நூல்கள் தமிழ் நாட்டில் அதிகமாய் இல்லை. சங்ககாலத்திலும் அதற்கு முன்னும் சில நாடக நூல்கள் இருந்தன என்று கூறினும், அவற்றுள் ஒன்றையாவது நாம் காணக் கொடுத்து வைக்கவில்லை. நாடகக் காப்பியம் என்று முதன்முதலாக நாம் கண்டெடுத்துப் போற்றுவது சிலப்பதிகாரமேயாகும்.

சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் என்பர் சிலர். சிலர் இயற்றமிழ்க் காப்பியம் என்பர். இயல், இசை, நாடகம் மூன்றும் கலந்த காப்பியமே அது. நாம் மேலே கண்டபடி நாடகத்தமிழ் இயலும் இசையும் உண்டாக்கியது தானே ? தமிழிலேயே முதன்முதல் காப்பியமாய் வந்த நூல் சிலப்பதிகாரமேயாகும். அது கோவல கண்ணகியரின் கதையை அடிப்படையாகக் கொண்டது. நாடகங்களே கதையின் அடிப்படையின் எழுவனதாமே ? ஒரு கதையை நிலைக்களனாக வைத்து, அதன்வழி மக்கள் வாழ வழி காட்டும் பல உண்மைகளை விளக்க வருவனவே நாடகங்கள். சிலப்பதிகாரம் என்னும் இந்நாடகமும் அவ்வாறே கோவலன் வரலாற்றின் மூலம் மூன்று உண்மைகளை உலகுக்கு உணர்த்துகின்றது. இவ்வுண்மையை அதன் ஆசிரியர் இளங்கோவடிகளே,

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றுவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்.'

என்று கூறுகின்றார். எனவே, நாடகம் கதை வாயிலாக உலகுக்கு நீதியை உணர்த்த உண்டானதென்னலாம். கதையோ ஏட்டில் காட்சியளிப்பது. நாடகமோ, அவ்வப் பாத்திரங்களின் வேடம் தாங்கி மேடையில் நடிப்பது. நடிப்பதை எப்படித் தமிழின்பாலதாக்கி மொழிமேல் ஏற்ற முடியும்? ஆம். அதுதான் மொழியின் ஆற்றல். இளங்கோவடிகள் கண்ணகியின் வாயிலாகப் பாண்டியன் முன் அறமுரைக்கும் காலத்தில் படிப்போர் நெஞ்சமும் நெக்குறுகின்றதன்றோ! காவிரிக்கரையின் கானல் வரிப் பாட்டில் நாம் கருத்தை இழந்துவிடவில்லையா? ஏன்? இன்றை நாடகங்களிலும், படக்காட்சிகளிலுங்கூடப் பேச்சுத்திறன் நாடகத்தில் முக்கிய பங்காக அமைந்துள்ளதை அறியாதார் யார்? மகிழ்ச்சியிலும், சினத்திலும் நடிகர் அடுக்கடுக்காகப் பொழியும் அமுத மொழியிலும், ஆத்திரச் சொற்களிலும் ஒன்றுமறியாதவருங்கூட ஒன்றிய உணர்வினராய் உட்கார்ந்திருப்பதைக் காண்கின்றோம்! எனவே, நாடகத்திலும் நல்ல தமிழ்தானே முக்கிய இடம் பெற்றுள்ளது? இவ்வாறு நாடகத்தமிழும் தமிழின் அங்கமாய்த் தமிழேயாய்த் தலைசிறந்த ஒன்றாய் விளங்குகிறது.

இயற்றமிழும் இசைத்தமிழும் செய்யாத ஒன்றை நாடகத்தமிழ் செய்கின்றது என்பதைக் கண்டோம். கற்றுரையன்றி மற்றாரும், அத்தமிழ் வழி நலம் பெறுகின்

றனர் என்பது உறுதி. அவ்வாறு பலருக்கும் பயன் தரும் இந்நாடகத்தமிழ் இப்போது நாட்டில் எவ்வாறு போற்றி வளர்க்கப்படுகின்றது? பண்டைக் காலத்தில் எவ்வாறு வளர்க்கப்பட்டது? இடைக்காலத்தில் என்னுயிற்று?

தொல்காப்பியர் காலந்தொடங்கி, கடைச்சங்கத்து இறுதிக்காலம் வரையில் இந்நாடகத்தமிழ் எந்த வகையில் போற்றப்பட்டது என்பதை அறிதல் இயலாது. பெயரளவில் கேட்கும் இரண்டொரு நாடக நூல்களைத் தவிர, தனியாக இன்றுவரை நிலைத்து வாழும் நாடகநூல் ஒன்றும் இல்லை. நாடகநூல் மட்டுமென்ன! இசைநூலும் இல்லை. அந்த நிலையில் இயற்றமிழ் ஒன்றே ஏற்றம்பெற்று வாழ்ந்த காலம் அது. எனினும், இயற்றமிழ்க்கு இடையிலே நாடகமும் இசையும் விரவி வாழ்ந்து வந்தன. சங்கப் பாடல்கள் பலவற்றுள் நாடகக் காட்சிகள் அமைந்திருக்கின்றன. தொல்காப்பியரது அகப்பொருள் இலக்கணத்திலும், சங்ககால அகப்பொருட்பாடல்களிலும் எத்தனை எத்தனைக் காட்சிகள் நம் கருத்தைக் கவர்கின்றன! மக்கள் காட்டும் நாடகக் காட்சிகளும், இயற்கையின் நாடகக் காட்சிகளும் எண்ணற்றனவாகச் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. பறம்பு நாட்டு இயற்கைவளத்தை நாடகக் காட்சியாக அன்றோ புலவர் கபிலர் காட்டுகின்ருர்? ஆற்றுப்படுக்கும் புலவர்கள் வழியிடை வழங்கும் காட்சிகளெல்லாம் நாடகக் காட்சிகள்தாமே? இவ்வாறு எத்தனையோ நாடகக் காட்சிகள் சங்க இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றன.

நாடகக் காப்பியம் என்னுமாறு முதல்முதல் தோன்றிய இலக்கியம் சிலப்பதிகாரம் என்பதைக் கண்டோம். அதை ஒட்டிச் சிறு சிறு காப்பியங்கள் எழுந்தன. சிலப்பதிகாரம் நாடகமாயினும், அதை அப்படியே எடுத்து

நடிக்கும் வகையில் அது அமையவில்லை. பாத்திரங்கள் வாயிலாகப் புலவர் சொல்லோவியக் காட்சியாகவே அது விளங்குகின்றது. அதில் இசைத் தமிழும் பல்வேறு 'வரி' களாய் அமைந்துள்ளது. அத்துடன் நாடகத்தின் ஓர் அங்கமாய் அமைந்த நடனமும் அக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. பாட்டின் நிலைக்கேற்ப ஆடுவது அன்றோ நடனம்? 'பாவமொடு இராகம் தாளம் இம்மூன்றும் பகர்வதால் பரதம் என்று உரைப்பர்' என்று பிற்காலப் புலவர் ஒருவர் பாடினர். அவற்றின் அடிப்படையாக உள்ள இயற்றமிழ் சொல்லாமல் அடங்கிக் கிடக்கின்றது. இப்பரதமாகிய நடனத்தின் அடிப்படையிலேதான் சிலம் பின் கதை உருவாகிறது. ஆடியும் பாடியும் கோவலனைக் கொண்ட மாதவியின் கானல் வரிப்பாட்டுத்தானே கதையை நீட்ட விட்டுவிட்டது? இதைத்தானே இளங் கோவடிகள், 'கானற்பாட்டு, கனகவிசயர்தம் முடித்தலை நெறித்தது' என்று மாடலன் வாயிலாகக் காட்டுகின்றார்? ஆம்! நடனமும் நாடகத்தின் ஒரு பகுதியேயாகும். இன்றைய நாடகங்களிலும் அதனாலேதான் நடனம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது.

இடைக்காலத்தில் வந்த ஞானசம்பந்தர் போன்ற இசைவல்ல புலவர்கள் இந்நடனத்தை மக்களிடத்து மட்டு மன்றி இயற்கையிடத்தும் கண்டார்கள்.

'வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டு பாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தன்
கையேற்கும் மிழலை யாமே'

என்ற சம்பந்தர் தேவாரம் இந்நடனத்தை இயற்கையின் மேல் ஏற்றிக் காட்டும் ஒன்றுதானே? இவ்வாறு இன்னும் எத்தனையோ நூல்கள் நடனத்தைப் பற்றியும் நாடகத்

தைப் பற்றியும் நாட்டில் உண்டாயின. அவற்றுள் பெரும்பாலன இன்று வழக்கத்தில் இல்லை என்னலாம்.

காலத்தால் பிற்பட்ட இயற்றமிழ் வகையைச் சேர்ந்த குறவஞ்சி, பள்ளு முதலியன நாடகக் காப்பியங்களே. பல்லவர் காலத்திலும் பிற்காலத் தஞ்சை சோழர் காலத்தும் சில சில நாடகங்கள் தோன்றி மறைந்துள்ளன. மன்னர்களே சிற்சில நாடகங்களை எழுதியுள்ளார்கள். அவர் தம் பிறந்த நாள் பெருவிழாவின் போதும் நாடகங்கள் நடித்துக் காட்டப்பெற்றன. ஆயினும், அவற்றின் அடிச் சுவடுகளையும் காணு வகையில் அவை மறைந்துவிட்டன. பிற்காலக் குறவஞ்சியும் பள்ளும் ஓரளவு நாடகத் தமிழாக வாழ்ந்து வருகின்றன.

இக்காலத்தும் எத்தனையோ நாடகங்கள் வெளி வருகின்றன. சுந்தரம் பிள்ளை அவர்களுடைய மனோன்மணீயம் ஒரு சிறந்த நாடக நூலாகும். சூரிய நாராண சாஸ்திரியார் என்னும் பரிதிமாற்கலைஞரும் இத்துறையில் பணி செய்து சில நாடகங்கள் எழுதி வைத்ததோடு, நாடகத் தமிழ் பற்றியே ஒரு நூலும் ஒழுதி வைத்துச் சென்றுள்ளார்கள். இராவ்பகதூர் சம்பந்த முதலியார் அவர்கள் இயற்றிய நாடகங்களே மிகப்பல. அவற்றுள் பல நடிக்கப் பெற்றன. சில திரைப்படமாக்கப்பெற்றன. இன்னும் சிலர் இத்துறையில் இன்று கருத்திருத்தினுலும் போதிய அளவு நாடகத் தமிழ் வளரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைய உலகம் நாடகத்தைவிடத்திரைப்படக் காட்சியை விரும்புகின்றது. செல்வமுள்ள பெரியவர்கள் நாளுக்கொரு திரைப்படமாகப் பலப்பல படங்களைக் கொண்டு வருகின்றனர். அவற்றைப்பற்றிய 'விமரிசன'ங்களைக்கண்டால் படங்கள் இவ்வளவு தாழ்வான வகை

யிலா வெளி வருகின்றன என்று எண்ணத்தோன்றும். இவற்றுக்கிடையில் திரைப்படத்தில் தோன்றும் சில நடிகர்களும், T. K. சண்முகம் போன்றவர்களும் நாடகக் குழுவின் மூலம் நாடகத்தமிழை மங்காமல் வளர்க்க உறு துணையாய் நிற்பது கண்டு ஆறுதல் பிறக்கின்றது. மேலும் நாடகம் வளர நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிப் பணி யாற்றவேண்டும். உரிமை பெற்ற இந்திய நாட்டில் பல வகையில் கலைகளை வளர்க்க அரசாங்கத்தார் முற்படுகின் றார்கள். அவர்கள் நாடகத்துறையை வளம்படுத்தப் பல வகையில் உதவுவார்கள் என்ற நம்பிக்கை எழுகிறது. தமிழ் மக்கள்—சிறப்பாகத் தமிழ் நாடகத்துறையில் கருத் திருத்தும் பெரியவர்கள்—அரசாங்க உதவி பெற்றுத் தமிழ் நாடகத்தையும், அதன் வழி நாடகத் தமிழையும்—அதன் வழி என்றுமுள தென்தமிழையும் வளர்க்க வழி கோலு வார்கள் என நம்புகின்றேன். என் நம்பிக்கையை நாடு நிறைவேற்றுமாக.

6. தமிழும் சைவமும்

[சிந்தாந்தக் கலை மணி வித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியாரவர்கள்]

தமிழ் மொழியில் சமயக் கருத்துக்கள் எந்த அளவில் இடம் பெற்றுள்ளன என்னும் ஆராய்ச்சி மிகுந்துள்ள காலம் இது. இதன்கண், தமிழுக்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பு எவ்வளவினது என ஒரு சிறிது நோக்கு தலைக் கருதியது இச்சிறு கட்டுரை.

'சிவசம்பந்தமுடையது' என்பது 'சைவம்' என்ப தன் சொற்பொருள். அச்சொல், சிவபிரானை முதல்வனகக் கொண்ட ஒரு நெறிக்குப் பெயராய் வழங்கும். ஆகவே,

சிவபிரானது முழுமுதற்றன்மையைத் தமிழ் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதனை நோக்குவோம்.

முதற்கண், 'தமிழே சிவபிரானல் தரப்பட்டது' என்பது மரபு. அம்மரபு பற்றியே கம்பநாடரும் தமது இராமாயணத்தில் அகத்தியரைக் குறிக்குமிடத்து,

"நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்"

(ஆரணிய காண்டம், அகத்தியப் படலம், 41.) எனக் கூறினர்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம்
தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்"

எனவும் "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்" (காஞ்சிப்புராணம், தழுவக்குழைந்த படலம் 248,49) எனவும் சிவஞான முனிவரர் கூறுதலும் இங்கு அறியத் தக்கது.

இனி, முருகப்பெருமானைக் குறிப்பிடும் இடத்தில் உமாபதி சிவாசாரியர் "அகத்தியனுக்கு ஒத்துரைக்கும் அண்ணல்" (சிவப்பிரகாசம் 4) எனவும் சிவஞான முனிவரர் 'அகத்தியனுர்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியன்' (தொல்காப்பியப் பாயிர விருத்தி) எனவும் கூறியிருத்தலால் சிவபிரானிடம் பொதுப்படக் கேட்ட தமிழை அகத்தியர் முருகப்பெருமானிடம் தெளிவாக உணர்ந்தனர் என்பதும் மரபாதல் விளங்கும். இவையெல்லாம் தொன்று தொட்ட வழக்கே என்பது, முதற்கண் தமிழ்ச் சங்கத்தை நிறுவினேர் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளையும் குன்றமெறிந்த குமர

வேளேயும், அகத்தியனுரையும் தலைவர்களாக நிறுவி, அவர்கள் சான்ருகத் தமிழை ஆராய்ந்தனர் எனப் பண்டு தொட்டுக் கூறப்பட்டு வருவதாக உரைக்கும் இறையனுர் அகப்பொருளுரையால் அறியப்படும். விரிசடைக்கடவுள் முதலியோர் தமிழ் மொழிக்கு முதல்வரல்லராயின் அதற்கு முதல்வராயுள்ள வேறு சிலரைத் தலைச்சங்கத்தார் தலைவராகக் கொண்டிருப்பரன்ருே ? ஆகவே, ஆயுங்குணத்து அவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு' ஏயும் புவனிக்கு இயம்பிய தண்டமிழ், என வீரசோழிய நூலார் கூறுங் கூற்றுக்குச் சான்று யாதும் இல்லையாகின்றது.

தலைச்சங்கத்தார் கொண்ட அம்முறையை இடைச்சங்கத்தவரும் கடைச்சங்கத்தவரும் அங்ஙனமே கொண்டவராவர். அதனுனே "கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து" (திருவிளையாடற்புராணம், நாட்டுப் படலம், 38) எனக்கூறுதல் மரபாயிற்று. கண்ணுதற் கடவுள் கழகத்திருந்து தமிழ் ஆராய்ந்தமையை மாணிக்க வாசகர்,

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண்
தீந்தமிழ்"

எனத் திருக்கோவையாரில் (20) அருளிப்போந்தார். சேக்கிழாரும் ஆலவாய்ப் பெருமானை,'' தலைச்சங்கப் புலவனுர்' (திருஞானசம்பந்தர் புரா. 667) எனக் கூறுவர்.

இன்னும் தமிழ் இலக்கணங்களுள் பொருளிலக்கணம் அரிதாய காலத்துச் சிவபெருமான் மதுரை ஆலவாய்க் கோயிலில் 'இறையனுர் அகப்பொருள்' என்னும் ஓர் அகப்பொருள் நூலைச் செய்தளித்தமை யாவராலும் அறியப்பட்டதொன்று. இதனையும், சேக்கிழார், "நூலின்கண்

பொருள் பாடி நூலறிவார்க் கீந்தானை '' (திருஞானசம்பந்தர் புரா. 883.) எனக் குறித்தார். இவ்வாற்றால் அகத்தியரும் முருகப்பெருமானும் தமிழ் முனிவரும் தமிழ்த்தெய்வமும் ஆயினாற்போலச் சிவபிரான் தமிழ்க்கடவுளாதல் தெற்றெனை விளங்கும்.

இவை செவிவழிச் செய்திகள். இனி, நூற்சான்றுகளை நோக்குமிடத்தும் தமிழ் சிவபிரானையே முதல்வனாகக் கொண்டுள்ளமை தெளிவாகும். தமிழ் வழக்கேயன்றி அயல் வழக்குக்களும் தமிழில் வந்து மலிந்த காலத்தில் அவற்றுள் எவை தமிழ் வழக்கு, எவை அயல் வழக்கு என்னும் ஐயத்தினை நீக்குதற்பொருட்டு ஔவையார் தமது நல்வழியில்

> " தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகம்என் றுணர்."

என உண்மை நூல்கள் இவை என்பதை வரையறுத்துணர்த்தினர். இதனுள் பொது நூல்களாகிய திருக்குறளோடும் திருநான்மறைகளோடும் மாறுகொள்ளாது ஒன்றிநிற்கும் சிறப்பு நூல்கள் சைவ சமய ஆசிரியர் அருளிய நூல்களே என்பது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வெண்பாவினுள் 'முனி மொழியும்' என்பதனைப் பெயரெச்சமாக வைத்துக் கோவை திருவாசகம் என்பவற்றோடு முடித்துரைத்தலே பொருந்தும் என்பதனை, காலஞ்சென்ற திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A. M.L., அவர்கள் கூறியுள்ளார்கள். அதற்குக் காரணம் இதனுட்கூறப்பட்ட நூல்களுக்கெல்லாம் (திருநான்மறை தவிர) ஆசிரியர் குறிப்பிடப்பட்டிருத்தலே என்பர். மேலும், 'முனிமொழியும்' என்பதற்கு வியாச

முனிவர் செய்த 'உத்தர மீமாஞ்சையும்' எனப் பொருள் கூறி, அதனை நூலாகக் கொள்ளின், அது திருநான்மறை முடிவேயன்றி வேறாகாமையால், மிகைபடக் கூறலாய் முடியும். மாணிக்கவாசகரை 'வாதவூர் முனிவர்' என வழங்குதல் உண்டு என்பதனைப் பேராசிரியர் செய்த திருக் கோவையார் உரைப்பாட்டுள்,

"திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்"

எனக் கூறியது கொண்டு உணரலாகும். 'அறவாழி அந்தணன்' என்பதுபோலத் திருக்குறள் முதலிய பொது நூல்களிற் சொல்லப்படும் பொதுச் சொற்களை "இமய வில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்" (கலித்தொகை குறிஞ்சி 2) என்றாற் போலச் சைவ சமயத்திற்குரிய சிறப்புச் சொற்களின் பொருளைக் கருதியனவாகக் கொள் ளுதல் வேண்டும் என்பது பெறப்படும். திருக்குறள் முதலிய அரும்பெருந்தமிழ் நூல்களின் கருத்தை மாண வர்களது உள்ளத்தில் இளமைதொட்டே வேரூன்றச் செய்தற்பொருட்டுச் சில சிறு நீதி நூல்களை இயற்றிப் போந்த ஔவையார் இத்தகைய சமய உண்மைகளையும் அவ்வாறு அவற்றுள் ஆங்காங்கே குறிப்பாராயினர் என்க.

இனிப் பாட்டும் தொகையுமாகிய பண்டைத் தமிழ் நூல்களை நோக்குமிடத்து, சிவபிரானது முதன்மை திட்ப முற அமைந்திருத்தல் காணப்படும். புறநானூற்றில் ஆறுவது பாடலாகிய 'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்' என்னும் பாட்டில் பாண்டியன் ஒருவனது தாழாத குடை முக்கட்செல்வரது கோயிலை வலஞ் செய்யுமிடத்துத் தாழ்வதாகும் என்னுங் கருத்துக் கூறப் படுகின்றது. அப்பாண்டியன் தமிழ் நாட்டைக் கடல் கொள்வதற்கு முன்னர் இருந்தவன் என்பதற்குச் சான்று கள் உள. இனி, அந்நூலின் 56-ஆம் பாட்டு, கடவுளர்

பலரையும் முறைப்படுத்துக் கூறுங்கால் சிவபிரானை முதற்கண் வைத்துக் கூறுகின்றது. 55–ஆம் பாட்டு,

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்"

எனச் சிவபிரான் பெருவலியுடைய தேவர்க்கு அவராற் பெறலாகாத வெற்றியைத் தந்து அருள் செய்த பெருந் தேவனுதலை விளக்கிற்று. 91–ஆம் பாட்டில் "நீலமணி மிடற்று ஒருவன் போல—மன்னுக பெரும நீயே" என அதியமான் வாழ்த்தப் பெறுகின்றான். இவ்விரு பாட்டுக் களிலும் முறையே 'அண்ணல்', 'ஒருவன்' எனக் கூறிய சொற்குறிப்புக்கள் சிவபிரானது தலைமையை விளக்குவனவாம். 'நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக' என வாழ்த்தியது முதல்வனது சிறப்பியல் பாகிய அழிவின்மையைக் காட்டுவதாகும். இதனுள் சிவபெருமான் நஞ்சுண்டு தேவரைக் காத்தமை கூறப் பட்டது.

பத்துப் பாட்டுள் ஒன்றாகிய மதுரைக் காஞ்சி, "நீரும் நிலனும் தீயும் வளியும்—மாக விசும்பொ டைந் துட னியற்றிய—மழுவாள் நெடியோன்" (அடி 453,55) என, பூதங்களுள் ஒரோ ஒன்றையோ அன்றி ஒன்றின் பகுதியையோ படைத்தோன் என்னாது, 'ஐம் பெரும்பூதங்களையும் ஒருசேரப் படைத்தோன் சிவ பிரான்' எனக் கூறுகின்றது. இவ்விடத்தும் சிவபிரான் 'நெடியோன்' எனப்படுதலைக் காண்கின்றோம். இன் னும் தொடர்ந்து அந்நூல், "மழுவாள் நெடியோன் தலை வனாக—மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்—வாடாப் பூவின் இமையா நாட்டத்து—நாற்ற வுணவின் உருகெழு

பெரியோர்க்கு—மாற்றருஞ் சிறப்பின் உயர்பலி கொடு மார்" என்று தொடங்கி மதுரை மாநகரத்து மக்கள் சிவ பிரானைத் தலைவனாகக் கொண்டு தேவர்களை வழிபட்ட முறையை விரித்துச் செல்கின்றது. இங்ஙனம் சிவ பிரானைத் தலைவனாகக் கொண்ட கடவுள் வழிபாடே தமிழ் மக்களது வழிபாட்டு முறையாதல் பற்றியே சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலையில் "நுதல் விழி நாட்டத் திறையோன் முதலாப்—பதிவாழ் சதுக் கத்துத் தெய்வம் ஈறாக—வேறுவேறு சிறப்பின் வேறு வேறு செய்வினை—ஆறறி மரபின் அறிந்தோர் செய்மின்" (விழாவறை காதை, 54-57) எனக்காவிரிப்பூம்பட்டினத் திற் பறையறைவிக்கப் பட்டமை கூறுவாராயினர். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் சிவபிரானை 'இறை யோன்' எனவும், 'பெரியோன்' எனவும் ('பிறவாயாக் கைப் பெரியோன்,' 'குழவித் திங்கள் இமையவர் ஏத்த—அழகொடு முடிந்த அருமைத் தாயினும்—உரிதின் நின்னோ டுடன்பிறப் புண்மையின்—பெரியோன் தருக திருநுத லாகென' (இந்திர விழ வூரெடுத்த காதை, மனையறம் படுத்த காதை) கூறுதலைக்காணின், அச்சொற்கள் அக் காலத்தில் சிவபிரானையே குறிப்பனவாய் அமைந்தமை அறியலாம். தமிழ் நூல்களுள் பிற கடவுளரது பெருமை களும் பலவாறு புகழ்ந்து பேசப்படினும் இவ்வாறு ஏனை யோரிற்பிரித்து, வேறு வைத்து முதன்மை தோன்றக் கூறப்படாமை உளங்கொளத் தக்கது. இங்ஙனம் சிவ பிரான் யாவர்க்கும் உரிய முதற்கடவுளாதல் பற்றியே அப்பெருமானை ஒரே ஒரு நிலத்துக்குரிய நிலத்தெய்வங்க ளுள் ஒருவனாக வைத்துத் தமிழ் நூல்கள் கூறாவாயின என்க.

இனி, தொகை நூல்கள் எட்டனுள் முதற்கண் கட

வுள் வாழ்த்துத் தனித்து அமையப் பெற்ற நூல்கள் ஆறு. அவற்றுள் நான்கு செய்யுட்கள் சிவபிரானைப் பற்றியவை. அவற்றிலும் சிவபிரானது முதன்மை மிக விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

அவற்றுள் கலித்தொகையொழிந்த ஏனைய நூல்களின் கடவுள் வாழ்த்துக்கள் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பிற்காலத்து இயற்றிச் சேர்க்கப்பட்டன எனக் கருதுவாரும் உளர். அவை அங்ஙனமே சேர்க்கப்பட்டன எனக் கொள்ளினும் அவை அத்தொகை நூல்களுக்கு மிகவும் பிற்பட்டன அல்ல என்பது அதன் நடையால் இனிது விளங்கும். அன்றியும், அவை அத்தொகை நூல்களின் மரபிற்கு மாறாக அமைந்த கருத்துக்களையுடையன என்றலும் பொருந்துவதாகாது. அவை எவ்வாறாயினும் கலித்தொகைக் கடவுள் வாழ்த்து அந்நூலின் ஒரு பகுதியாகிய நெய்தற்கலியை இயற்றிய நல்லந்துவனாரால் இயற்றப்பட்டதென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. ''ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து'' என்று தொடங்கும் அப்பாட்டு, சிவபிரான் உலகிற்கு முதலும் முடிவுமாய் நிற்கும் இயல்பினைச் செவ்வனே விளக்குகின்றது. அக்கருத்து நல்லிசைப் புலவராய சங்கத்துச் சான்றோர் ஒருவர் கருத்தாயின், ஏனைச் சான்றோர் கருத்தும் அதுவே என்றற்கு ஐயமில்லையன்றோ! இவ்வாழ்த்துச் செய்யுளில், சிவபிரான் உலகமெல்லாம் ஒடுங்கிய முற்றழிப்புக் காலத்தில் பிறர் ஒருவரும் இல்லாமையால் தனது துணைவியாகிய உமையவளே தாளம் தர ஆடுகின்றான் எனக் குறிக்கின்றது. இதனை ஆழ்ந்து நோக்கின், ஒரு நுண்கருத்துப் புலனாகும்.

தமிழுக்கே உரிய சிறப்பிலக்கணமாகிய பொருளிலக்கணத்திற் சொல்லப்படும் புறத்திணை ஏழனுள் காஞ்சி

என்னும் திணையில் 'காடு வாழ்த்து' என்பதொரு துறையுண்டு. அது சுடுகாட்டை வாழ்த்துதல் என்னும் பொருட்பகுதியாகும். யாவராலும் வெறுக்கப்படுவதாகிய சுடுகாட்டிற்கும், வாழ்த்திற்கும் என்ன இயைபு உள்ளது? காஞ்சித்திணை வாளா நிலையாமையை மட்டும் கூறுது அதனை உணர்தற்பயனுகிய வீடு பேற்றைக் குறியாகக் கொண்டே கூறப்படுவதாகலின், முதுகாட்டை வாழ்த்துமிடத்தும் அஃது யாவரும் அழிந்தொழியும் இடமாய் உள்ளதென்பதனை மட்டும் கருதி வாழ்த்தாது, அவ்விடத்து அழியாது நின்று அழிந்தோர் அனைவரையும் ஏன்று நிற்கும் ஒருவனை நினைவு கூர்ந்து வாழ்த்துவதெனவே கொள்ளுதல் கூடும். அங்ஙனம் கொள்ளாவிடின் அத்துறை பொருள் பொதிந்ததொன்ருமாறில்லை.

இத்துறைக்கு இலக்கணங்கூறுமிடத்து ஆசிரியர் தொல்காப்பியனுர், "மலர்தலையுலகத்து மரபுநன் கறியப் பலர்செலச் செல்லாக் காடுவாழ்த்து" எனக் கூறினுர். 'உலகத்தினது நிலையாமைத் தன்மையை நன்கறியுமாறு பலரும் மாயத் தான் மாயாது நிற்கும் காட்டினை வாழ்த்துதல்' என்பது இதன் பொருள். 'யாவரும் மாயத் தான் மாயாது நிற்கும்' என்பது முதுகாட்டிற்கு அத்துணைப் பொருத்தமாதல் இல்லை. எனவே, உலகம் முழுவதும் தன்பால் ஒடுங்கத் தான் ஒடுங்காது நின்று மீள அதனைத் தோற்றுவிக்கும் முதல்வனையே அது குறித்ததாதல் வேண்டும். காலம் முதலிய அறிவில் பொருள்களை இயக்கும் அறிவுடைய பொருள்களாகிய தெய்வங்களைக் காலம் முதலியவற்றின் பெயர்களானே வழங்குதல் வழக்கென்பது 'காலம் உலகம் உயிரே உடம்பே' (சொல்—கிளவியாக்கம், 57.) என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிகின்றேம். அவை போலவே காடு என்பதும்

ஆண்டு நிற்கும் கடவுளைக் குறிக்கும் என்றல் பொருந்துவ தேயாம்.

இனி இத்துறையின் இலக்கியத்தை நோக்கினும் இக்கருத்து வலியுறுகின்றது. அவ்விலக்கியமாக இரு செய்யுட்கள் காட்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்று புறநூற்றில் " களரி பரந்த " என்னும் 356-ஆம் பாட்டு. மற்றொன்று 'பெரும்பொருள் விளக்கம்' என்னும் நூற்கண் உள்ள ஒரு வெண்பா. அவைகளில் புறநானூற்றுப் பாட்டில், "எல்லார் புறனுந் தான்கண்டுலகத்து-மன்பதைக் கெல்லாம் தாஞய்த்-தன்புறங் காண்போர்க் காண்பறியாதே" என்னும் அடிகளிலும், பெரும்பொருள் விளக்க வெண்பாவில் "உலகு பொதியுருவந் தன்னுருவ மாகப் பலர்பரவத் தக்க பறந்தலை நன்காடு" என்னும் அடிகளிலும் அமைந்துள்ள பொருள் மேற்காட்டப்பட்ட பொருள்மேல் நோக்குடைத்தாதல் சிறிது உற்று நோக்கினும் புலனுவதாகும்.

இன்னும் இத்துறை காஞ்சித்திணையின் இறுதித் துறையாகக் கூறப்பட்டிருத்தலும் மேற்சொல்லிய கருத்திற்கு அரண் செய்வதாம். பொருளிலக்கணம், " இன்பமும் பொருளும் அறனும்" (தொல். பொருள். களவியல், 1) என்னும் முறையில் அவற்றைக் கூறுவது. அவற்றுள் இன்பம் முற்பட அகத்திணையியலிலும், ஏனையிரண்டும் அதனையடுத்துப் புறத்திணையியலிலும் கூறப்படுதலின், பொருளதிகாரம் அவ்விரண்டியலோடே தொகுத்தல் வகையான் ஒருவாறு முடிந்ததேயாம். அவற்றுள் புறத்திணை ஏழனுள் இறுதிக்கண்ணதாகிய பாடாண்திணை பாட்டுடைத் தலைவனது புகழ்ச்சியேயாகலின், அஃதொழிந்த ஆறு திணையோடே பொருளிலக்கணம் முற்றுதல் பெறும். இதுபற்றிப் போலும் அதனை ஆசிரி

யர் பாடாண்திணை என்று ஓதாது, 'பாடாண் பகுதி' என ஓதினர்! அவ்வாறு திணையுள் இன்பத்தைச் சார வைத்துப் பொருள் முன்னர் நான்கு திணைகளிலும், அதன் பின்னர் அறம் இறுதி இரு திணைகளிலும் கூறப்பட்டன. வீட்டினை அவற்றுள் அடக்கிக் குறிப்பாற்கூறுதல் உலகியல் நூல் நெறி. அங்ஙனமே வீடு காஞ்சித்திணைக்கண் குறிப்பாற்கூறப்பட்டதாகலின், அத்திணையை, வீடு பேற்றினைக் குறிப்பாற்காட்டி நிற்கும் காடு வாழ்த்துத்துறையில் ஆசிரியர் முடித்துள்ள நுட்பம் அறிந்து மகிழ்தற்குரியது.

இவ்வாற்றால் காஞ்சித்திணைக் காடு வாழ்த்துத் துறைப்பகுதி, கலித்தொகைக் கடவுள் வாழ்த்தின் தலைவனாகிய கூளிச் சுற்றத்து எண்டோட்பெருமானையே குறித்ததென்றல் அமைவுடைத்தாம். மற்றும் பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் சிவநெறிச் சார்பாக ஆங்காங்கு உள்ள குறிப்புக்கள் எல்லாவற்றையும் எண்ணெடுத்துக்காட்டல் அரிதாகும். இனிச் சைவத்திற்கே உரிய சிறப்பு நூல்களாய்த் தமிழில் உள்ள பெருநூல்கள் அச்சமயத்திற்கு இன்றியமையாத பிரமாண நூல்களாய் இருத்தலும், தமிழறியாத ஆசிரியர் சைவசமய ஆசிரியராகக் கொள்ளப்படாமையும் ஏனைச் சமயத்தினும் பார்க்கச் சைவசமயத்தோடு தமிழிற்கு உள்ள நெருங்கிய தொடர்பினைக் காட்டுவனவாகும்.

இங்ஙனம் உள்ள நூற்சான்றுகள் நிற்க, வரலாற்று முறையால் நோக்கினும், தமிழிற்குரிய சமயம் சைவசமயமே என்பது தெற்றென விளங்குவதாம். பண்டைத் தமிழ் முடியுடை வேந்தர் மூவரும் சைவர்களே. சேரன் செங்குட்டுவனை, "தெண்ணீர்கரந்த செஞ்சடைக் கடவுள் —வண்ணச் சேவடி மணிமுடி வைத்தவன்" (சிலப்பதி

காரம், கால்கோட்காதை, 64, 65). எனக் கூறுகின்றார் இளங்கோவடிகள். எண்டோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது வகுத்தும், திருமுறை கண்டும், திருப்பதிகம் விண்ணப்பிக்கத் திருக்கோயில்களில் நிவந்தங்கள் அமைத்தும், சிற்பக்கலைக் கூடங்களாகச் சிவபிரான் கோயில்கள் பலவற்றை எடுத்தும் சோழமன்னர்கள் வழிவழிச் சைவராய் விளங்கினமை உலகறிந்தது. கடல்கோளுக்கு முற்பட்ட காலத்திற்றானே பாண்டியனொருவன் தனதுவெண்கொற்றக்குடை தாழச் சிவபிரானது திருக்கோயிலை வழிபட்டமையை முன்னரே கண்டோம். நான்மாடக்கூடலாகிய மதுரையிலுள்ள ஆலவாய்ப் பெருமானுக்கு வழிவழித் தொண்டராய்ப் பாண்டியர் விளங்கினமை சொல்ல வேண்டா.

இத்தகைய சிவநெறியினின்றும் தமிழ் வேந்தர் எஞ்ஞான்றும் மாறியதில்லை. அதற்கு மாறாகக் கூன் பாண்டியன் ஒருவன் தொன்னெறி பிழைத்துச் சமண் சமயம் சார்ந்த பொழுது, அவன், 'மன்பதை காக்கும் தென்புலங் காவலரது மரபு என்முதல் பிழைத்தது,' என இரங்காதவாறு, ஆலவாய்ப் பெருமானது அருளை வேண்டி நோற்று அவனை அச்சமயத்தினின்றும் நீங்கிச் சைவசமயத்தின் மீளுமாறு செய்தார் அவன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியார். அதனால், அவரைச் சேக்கிழார், 'தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை' எனப் போற்றுதலோடு, தங்கட்கு இயல்பாய் அமைந்த சிவ நெறியினைப் பண்டுபோலத் தங்கள் தமிழ் நாட்டிற் பரவச் செய்தமையின், அவர்க்குத் தமிழுலகம் என்றுங் கடமைப்பட்டவாற்றினை, "இருந்தமிழர்க் குற்ற இடர் நீக்கித் தங்கள்—பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினாரைப் போற்றுவார் கழல் எம்மாற் போற்ற லாமே," எனக் குறித்துப் போந்தார்.

இங்ஙனம் முடியுடை வேந்தர் மூவரும் என்றும் மாருச் சைவராயிருந்தமை அறியப்படுதலால், அவரால் ஆளப்பட்ட தமிழ் நாட்டு மக்கள் பலரும் சைவரே என்பது இனிது பெறப்படும். தமிழரசரும் தமிழ் மக்களும் சைவராய் இருந்தமையானே தமிழகத்தில் ஏனைக் கடவுளர் கோயில்களிலும்பார்க்கச் சிவபிரான் கோயில்களே மிக்கு விளங்குவவாயின. சிவபிரான் கோயில்களும் சிவ வழிபாடும் பிறவிடத்தும் பொதுமையிற்காணப்படினும், அவை சிறப்புற்று விளங்குதல் தமிழகத்தேயாம். இதனுனே மாணிக்கவாசகர் சிவபிரானைத் "தென்னுடுடைய சிவன்" என்றருளிச் செய்தார். இவற்றுல் தமிழரது இயற்கைச் சமயம் சைவசமயமே என அறியலாகும். புதையுண்ட நகரங்களை இஞ்ஞான்று அகழ்ந்து ஆராய்வோரும் 'தமிழர் இயற்கையில் சிவ வழிபாடுடையவர்' என்றே கூறுநிற்பர். 'தமிழரது சமயம் சைவமே,' என்பதனுல், தமிழ்மக்கள் சிவ வழிபாட்டினையன்றிப் பிற கடவுளரது வழிபாட்டினை உடையரல்லர் என்பது கருத்தன்று; மேல் தமிழ் நூல்களிற்கண்டவாறு சிவபிரானை முதல்வனுகக் கொண்டு தமது கடவுளரை வழிபடுதலுடையர் என்பதே கருத்தாம். இது தமிழ் நாட்டுப் பெருங்கோயில்கள் சிவபிரானை முதலிடத்திலும், பிற கடவுளரையெல்லாம் அப்பெருமானைச் சூழவும் கொண்டும், பிற கடவுளருக்கமைந்த தனிக்கோயில்கள் அவ்வக்கடவுளரைமட்டுமே கொண்டும் விளங்குதலாலும் உணரப்படும்.

இனி, எக்காரணத்தாலோ தமிழ் வேந்தர்கள் வலி குன்றிய காலத்து அற்றம் பார்த்து நுழைந்த பல்லவர் களப்பிரர்களால் தமிழ் நாட்டின் பண்பாடு சிதறுண்ணத் தொடங்கியது. அதனுல், சைவசமயம் குன்றியது; வேற்றுச் சமயங்கள் ஆக்கம் பெறலாயின; தமிழும் சிறிது

சிறிதாகத் தனது தூய்மையையும் தலைமையையும் இழந்து, எடுப்பார் கைப்பிள்ளையாயிற்று. இங்நிலையில் தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டினையும் புத்துயிர் கொடுத்துக் காத்தவர்கள், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் முதலிய சைவ சமய ஆசிரியர்களும், பிற நாயன்மார்களும் ஆவார்கள். அவர்கள் அருளிச் செய்த பாடல்களில் தேவாரங்களும் திருவிசைப்பாக்களும் தமிழிசையாகிய பண் வகையில் அமைந்து அவற்றைக் காத்தன.

சைவ சமயாசாரியர்களது பெருநிலைக்கு அவர்கள் தமிழின் இலக்கண வரம்பிற்கு உட்பட வேண்டுவதோர் இன்றியமையாமை இல்லை. அன்றியும், அவர்கட்கு அரச ரது துணை வலி மிக்கிருந்தது. அவருள்ளும் சுந்தரருக்கு அவர் காலத்திலிருந்த அரசர் பலரது போற்றுதல்களும் இருந்தன. அதனால், அவர்கள் மொழி வகையைத் தாம் வேண்டியவாறே கொண்டிருக்கலாம்; கல்லாதார்க்கும் விளங்க வேண்டுமென்று தமிழைக் கொச்சையாக வழங்கி யிருக்கலாம்; தமிழையும் பிற மொழிகளையும் பிணைத்துப் புதியதொரு கலவை மொழியைத் தோற்றுவித்திருக்கலாம்; அல்லது வடமொழியிலே நூல்கள் செய்து அவற்றையே பரவச் செய்திருக்கலாம். அங்ஙனமெல்லாம் இன்றித் தமிழை அதன் இலக்கண வரம்பிற்கும் மரபிற்கும் உட் பட்டே அதன் சீரிளமைத்திறம் சிதையாவாறு பாதுகாத்து நிலைபெறச் செய்தனர்.

தமிழ் வேந்தர்களும் தமிழ் வள்ளல்களும் மறைந்து, தமிழ்ச் சங்கங்களும் அழிந்த காலத்தில் தமிழ், சங்ககாலத் தமிழாயே நின்றுவிடாமல், அதனைக் காலத்திற்கேற்பக் காலந்தோறும் வளர்த்து வந்தவர்களும் சைவப்பெரு மக்களேயாவர். காலத்துக்கேற்பத் தமிழ்ச் செய்யுட்களில்

இன்றியமையாது வேண்டப்பட்டதொரு சிறந்த மாறுதல், பாக்கள் பெரும்பான்மையும் நான்கடியின் முடிதலும் அவ்வடிகள் ஐஞ்சீர் முதலாக வரும் நீண்ட அடிகளாய் வருதலும் ஆகும். இதனை விருத்தம் என்னும் பெயராலும் பிறவாற்றாலும் கொண்டுள்ள எண்ணிறந்த பாடல்களைத் திருமுறைகளிலேயே முதற்கண் காண்கின்றோம். ஐஞ்சீரிற்குறைந்த அடிகளாயினும், நான்கடியான் முடிதலையே திருமந்திரப் பாடல்கள் கொண்டிருக்கின்றன. தேவாரங்களும் பெரும்பான்மையும் பல வகைப்பட்ட நான்கடிச் செய்யுட்களால் இயன்றனவே. அவற்றைப் பின்பற்றியே தமிழ்ச்செய்யுட்கள் பின்னர்ப் பெரும்பாலும் நான்கடிகளால் நடப்பவாயின. தேவார ஆசிரியர்களது நெறியை அடியொற்றியே சேக்கிழார் தமது பெரிய புராணம் முழுவதையும் நான்கடிச் செய்யுளால் யாத்தார்.

இனி, உலா, வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி, நான்மணி மாலை, மும்மணிக்கோவை, இரட்டை மணி மாலை முதலிய பிரபந்த வகைகளும் சைவத்திருமுறைகளிலேயே பழமையாகக் காணப்படுகின்றன. பதிற்றுப் பத்தந்தாதிக்குத் திருவாசகத்திலுள்ள 'திருச்சதகம்' என்பதே முதலாகக் காணப்படுகின்றது. பிற கடவுட் கோவைகளுக்கெல்லாம் முதலாய், ஆரணமாயும் ஆகமமாயும் இன்ப நூலாயும் எண்ணும் எழுத்தாயும் அவரவர்க்கு இன்பம் தரும் திருச்சிற்றம்பலக் கோவையை அறியாதார் யார்? யமகம், ஏகபாதம், மாலை மாற்று முதலிய மிறைக்கவிகளெல்லாம் திருஞான சம்பந்தரது தேவாரத்திலேயே முகிழ்த்தன. இதுபற்றியே அவரது தேவாரத்தினைச் சேக்கிழார், "மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற—ஞாலத்துயர்காழியாரைப் பாடினர் ஞானசம்பந்தர்" (திருஞானசம்பந்தர் புராணம் 277)

என மூல இலக்கியமாகக் கூறினர். தமிழ் நாட்டு அருளாளரது வரலாற்று நூலாய் உள்ளது, சைவ நாயன்மாரது வரலாருகிய திருத்தொண்டர் புராணமே. அது தமிழ் வரலாற்றுக்கும் கருவூலமாய் உள்ளது. அதனையடுத்துக் கந்தபுராணமும், திருவிளையாடற் புராணமும் வடமொழி தென்மொழிகளில் வல்ல சைவப் பேராசிரியர்களால் செய்யப்பட்டன. திருமுறை ஆசிரியர்கட்குப் பின்னர்ச் சைவ சந்தானங்களில் வந்த பெரியோர்கள் மெய்யறிவு நூல்களை வழங்கினர்கள்; அவைகளே இன்று தமிழர்தம் தத்துவ நூல்களாய் இலங்குகின்றன. அரிய சந்தப்பாக்களையும் பிறவற்றையும் அருணகிரி நாதர் ஆக்கியருளினர்.

தமிழ் மன்னர் வீழ்ச்சிக்குப் பின்னர்த் தமிழை வளர்த்தவை—வளர்க்கின்றவை—சைவ மடங்களே. அவற்றில் தோன்றிய பெரியார்கள் பல பிரபந்த வகைகளும் தல புராணங்களுமாகிய இலக்கியங்கள், இலக்கணம் பற்றிய நூல்கள், உரைகள், சாத்திரங்கள் முதலிய பலவற்றையும் செய்து தமிழைப் பெருக்கினர்கள். அவர்களுள் குமரகுருபரர், தாயுமான அடிகள், சிவப்பிரகாசர், சிவஞான முனிவரர், கச்சியப்ப முனிவரர் என்பவர் குறிப்பிடத் தக்கவர். இவர்களது பிரபந்தங்களும், காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம், சீகாளத்திப் புராணம் முதலிய தல புராணங்களுமே பிற்காலத்தில் தமிழ் கற்பார்க்கு இலக்கியமாயின. தொல்காப்பியத்திற்குப் பின்பு 'இலக்கண விளக்கம்' என்னும் விரிந்த முழு இலக்கண நூலைச் செய்தவர் வைத்தியநாத தேசிகர். திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்தை ஆக்கினர். தொல்காப்பிய ஆராய்ச்சிகட்கெல்லாம் வழி தோற்றுவித்த தொல்காப்பியப் பாயிர

விருத்தி, முதற்சூத்திர விருத்தியைக் கண்ட, வடநூற்கடலும் தென்னூற்கடலும் நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான யோகிகளைச் சைவர் எனக் கூறுதலும் வேண்டுமோ ? வடமொழியில் தத்துவநூற்பேருரைகள் பல உள. அன்னதொரு பேருரையையும், தருக்கநூன்மொழி பெயர்ப்பையும் செந்தமிழ் நலந்ததும்பத் தமிழிற் செய்தளித்தவர் அம்முனிவரரே.

இப்பெரியார்களுக்குப் பின்னர்த் திருக்குறள் முதலிய உயர்ந்த தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடிகளினின்றும் பெயர்த்து நல்ல பதிப்புக்களாக அச்சேற்றி வெளியிட்டும், சிறுவர்களுக்கு உரைநடைப் பாடங்களையும் சிற்றிலக்கணங்களையும் எழுதியும் உதவியவர் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள்.

முற்காலத் தமிழ்ச் சங்கங்கள் அழிந்த பின்னர் இக்காலத் தமிழ்ச் சங்கமாக மதுரையில் இருந்துவரும் தமிழ்ச் சங்கத்தைத் தமது பெரும்பொருட்செலவில் நிறுவி, அதிலிருந்தோர் தமது கருத்துக்கு மாறான சிலவற்றைப் பேசியும் எழுதியும் வந்தார்களாயினும், அவற்றைப் பொருட்படுத்தாது, அவர்களைக்கொண்டு அரிய நூல்களையும், ஆராய்ச்சிகளையும், 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழையும் வெளியிடுவித்தும், பண்டிதத் தேர்வு நடத்தி அதில் தேர்ச்சியுற்றவர்கட்குப் பட்டமும் பரிசும் வழங்கிப் புலவர் பலரைத் தோற்றுவித்தும் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்தவர், சிவஞான முனிவரரைத் தமது உளத்துறை ஆசிரியராகக் கொண்ட திரு. பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள். அண்மையில் வாழ்ந்து மறைந்த உயர்திரு. மறைமலை அடிகளாரும், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L. அவர்களும், தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதைத் தமிழ் மக்களும் பிறரும் உணர்ந்து போற்று

மாறு செய்தற்பொருட்டு மேற்கொண்ட உழைப்புக்கள் மிகப் பல. 'சிவ புண்ணியமே சிறந்த புண்ணியம்,' எனக் கொண்டு சிவபிரான் கோயிற்றிருப்பணிக்கே தங்கள் பொருளை அள்ளி வழங்குவோராகிய நாட்டுக் கோட்டைச் செட்டிமாருள் ஒருவராகிய ராஜா சர். அண்ணுமலைச் செட்டியாரவர்களே தமது வழிபடு கடவுளாகிய கூத்தப்பிரான் எழுந்தருளியுள்ள சிதம்பரத்திற் கருகில் தமது பெயரால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும் சென்னையில் தமிழிசை மன்றத்தையும் நிறுவி நடாத்தித் தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலைக்கும் அரும்பெருந்தொண்டினை ஆற்றினர். அவ்வமைப்புக்கள் அவர்தம் திருமகனர் டாக்டர் ராஜா சர். முத்தையச் செட்டியார் அவர்களால் நன்கு காத்து நடத்தப் பெறுகின்றன. பழந்தமிழ் ஏடுகள் பலவற்றைப் பாதுகாத்துத் தக்காரைக் கொண்டு அச்சேற்றி வெளியிடுவித்த பெருமை திருவாவடுதுறை ஆதீனத்துக்குரியது. திருப்பனந்தாள் காசி மடத்தினர், தமது நிதியிலிருந்து ஆண்டுதோறும் தமிழ் வித்துவான் பட்டத் தேர்வில் முதன்மை பெற்றவர்க்கு ஓர் ஆயிர ரூபாப் பரிசினை வழங்குவித்து வருதல் பலருமறிந்தது. திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள்களிலுள்ள சைவத் திருமடங்கள் அரிய பெரிய தமிழ் நூல்களை அழகான முறையில் அச்சேற்றி வெளியிட்டுப் பலருக்கு இலவசமாக வழங்கி வரும் செயலை மேற்கொண்டு செய்து வருகின்றன; இன்னும் பல அரிய தமிழ்த் தொண்டுகளையும் அவை செய்ய இருக்கின்றன. ஆதலின், அன்று தொட்டு இன்றுகாறும் நோக்கின், தமிழ் நின்று நிலைத்து வளர்ந்து வருதல் சைவ மக்களாலே என்பது புலனுகும்.

இங்ஙனங் கூறி வந்தவற்ருல் தமிழ் சைவத்தைப் பற்றியும், சைவம் தமிழைப் பற்றியும் நிற்றல் பெறப்படுத

லால் அவையிரண்டையும் வேருகப் பிரித்தல் இயலாது. தமிழ் மன்னர் வீழ்ச்சிக்குப் பின்னர்ப் பின் தள்ளப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் உலக அரங்கில் முன்னேறினுரில்லை. அதனுல், அவர்களது மொழி, கலை, பண்பாடுகள் மிக உயர்ந்தனவாயினும், அவை உலக அரங்கில் மதிக்கப்படுதல் இல்லை. அங்ஙனமே அவர்களது சமயமும் மதிக்கப்படுதல் இல்லை. இதனைத் தமிழ் மக்கள் ஆழ்ந்துணர்ந்து, தங்கள் மொழி, கலை, பண்பாடுகளில் தாங்கள் முதற்கண் கருத்துடையவர்களாய் இருந்து ஆவன செய்தல் வேண்டும். தமிழ் வாழச் சைவம் வாழ்க! சைவம் வாழத் தமிழ் வாழ்வதாக!

7. காலம் உணர்த்தாத கால இடை நிலைகள்

[டாக்டர் மு. வரதராசனுரவர்கள்]

எதனுல் எதை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலே சிலர் பல்குத்துவதும் காது தோண்டுவதும் உண்டு; எதையோ எண்ணியபடியே இருப்பர்; எதிரே கிடக்கும் ஒரு குச்சியை எடுத்துப் பல்லின் இடுக்குக்களைக் குத்துவர்; காதில் தினவு எடுத்தவுடன், அதற்குரிய கருவியைத் தேடும் முயற்சி இல்லாமலே, நெருப்புக் குச்சியை எடுத்துக் காதில் இட்டுத் தோண்டுவர். இவை நாகரிகம் குறைந்த செயல்களே; ஆயினும், பலரிடம் அடிக்கடி காணப்படும் செயல்கள் ஆகும். நாக

ரிகம் மிக்க மக்களும் சில வேளைகளில் எதையோ எழுதிக்

கொண்டிருக்கும் நேரத்தில், தலையில் தினவு எடுத்த போது எழுதும் பேனுவின் பின்புறத்தாலே தலையைச் சொறிந்துகொள்வதும் உண்டு. இவற்ருல் விளங்குவது என்ன ? உரிய கருவி கிடைக்கும் வரையில் காத்திராமல், எந்தக் கருவியையாவது ஒரு செயலுக்குப் பயன்படுத்தும் மனித இயல்பு விளங்குகிறது.

பல் குத்தல், காது தோண்டுதல், தலை சொறிதல் முதலிய உடலின் தேவைகளை ஒட்டிய செயல்களில் இவ்வாறு நடந்துகொள்ளும் மனிதர் மனத்தின் தேவைகளை ஒட்டிப் பேசும் பேச்சுக்களிலும் இவ்வாறே நடந்துகொள்கின்றனர். மனம் ஒரு கருத்தைப் பிறர்க்கு அறிவிக்க விரும்பும் போது, அந்தக் கருத்தை உணர்த்துவதற்கு ஏற்ற சொற்கள் கிடைக்கும் வரையில் காத்திராமல், கிடைத்த சொற்களைக்கொண்டே அந்தக் கருத்தை உணர்த்திவிடுகிறது. முதலில் தமிழன் ஒருவன் ரயில் வண்டியைக் கண்ட போது, அதற்கு உரிய பெயர் என்ன என்று கேட்டு அறியும் வரையில் காத்திருக்கவில்லை. புகை கக்கியவாறே அது ஓடுதலைக் கண்டதும் வியப்புற்று ஓடிச் சென்று, தன் நண்பனுக்கு அந்த வண்டியைப் பற்றி உணர்த்தினன். அதன் பெயர் தெரியவில்லையே என்று அவன் கவலைப்படவில்லை; 'புகை வண்டி' என்றே அதைக் குறிப்பிட்டான்; அவ்வாறே புகைப்பதற்குப் பயன்படும் ஒருவகை இலையைக் கண்டு, அது சுருட்டு ஆகிப் புகைக்கப்படுவதைக் கண்டதும், 'டுபாக்கோ' என்னும் அதனுடைய பெயரை அறியவும் முற்படாமல், அதற்குப் 'புகையிலை' என்று பெயரிட்டு வழங்கினன்; உரிய சொற்கள் கிடைக்கும் வரையில் காத்திருக்கவில்லை; தன்னிடம் இருந்த சொற்களைக்கொண்டே அவற்றைப் பற்றி உணர்த்தத் தொடங்கிவிட்டான்.

முன்னமே அறிந்த கருத்துக்களை உணர்த்தும் போதும் இவ்வாறே மனிதர் தக்க சொற்களுக்குக் காத்திராமல், கிடைத்த சொற்களைக்கொண்டு விரைவில் அந்தக் கருத்துக்களை உணர்த்துதல் உண்டு.

'இந்தக் கடையில் நெய் விற்கப்படுகிறது,' என்று சொல்வது பொருத்தம். விற்கப்படுகிறது என்ற செயப்பாட்டு வினை வழங்கிப் பழகாத காரணத்தால், 'இந்தக் கடையில் நெய் விற்கிறது' என்ற சொற்களைக்கொண்டே அந்தக் கருத்தை உணர்த்திவிடுகிறோம். தமிழ் மொழியில் இந்த வழக்கு வேரூன்றிவிட்டதைக் கண்ட தொல்காப்பியனார்,

'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.'
(தொல்காப்பியம், சொல். 248)

என்று அதற்கு விதி வகுத்திட நேர்ந்தது. காது தோண்டும் கருவி கிடைத்திடாத வேளையில் நெருப்புக் குச்சியை எடுத்துப் பயன்படுத்தும் மனிதனுடைய இயல்பை இங்குக் காண்கிறோம்.

கோழி என்பது ஒரு பறவை.
கொக்கரக்கோ என்பது கோழி.

இந்த இரண்டு வாக்கியங்களில், முதல் வாக்கியம் பிழையுடையது; இரண்டாம் வாக்கியம் பிழையற்றது. எவ்வாறு எனின், என்பது என்ற சொல்லின் பொருளை ஆராய வேண்டும். என்பது என்றால் 'என்று சொல்வது', 'என்று ஒலிப்பது' என்ற பொருள் உடையது. கோழி 'கொக்கரக்கோ' என்று ஒலிக்கின்றது. ஆதலின், இரண்டாம் வாக்கியம் பொருந்துகின்றது. ஆனால், எந்த ஒரு பறவையும் வாய் திறந்து, 'கோழி' என்று ஒலிப்பதில்லை;

சொல்வதில்லை. ஆகவே, ஒரு பறவை 'கோழி' என்று சொல்வதாகக் கூறுவது பிழையாகும். ஆனால், இந்த வாக்கியம் இன்று வழக்கத்தில் உள்ளது. 'என்பது' என்ற சொல் தன் பொருளைக் குறிக்காமல், வேறொரு பொருளுக்கும் பயன்படுகிறது.

கோழி எனப்படுவது ஒரு பறவை.

என்று சொல்லும் கருத்தோடுதான் அவ்வாறு பேசுவதைக் கேட்கிறோம். பேசக் கற்ற மனிதர் ஒரு பறவையைக் 'கோழி' என்று சொல்கின்றனர்; 'கோழி' என்று அவர்களால் சொல்லப்படுகின்றது. ஆகவே, 'கோழி எனப்படுவது' என்னும் தொடரே பொருத்தமாகும்.

பொது மக்கள் மட்டுமே இவ்வாறு பேசுவதாகக் கொள்ளலாகாது. பொது மக்களின் பேச்சு வழக்கு, இலக்கிய இலக்கணத்தில் தேர்ந்த புலவர் பெருமக்களின் நடையிலும் புகுந்துவிடும். திருவள்ளுவர்,

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.'

என்று பாடியுள்ளார். யார் துணை? 'இல்வாழ்வான்' என்று வாயால் சொல்லை ஒலிக்கின்றவனா? இல்வாழ்வான் என்று மற்றவர்களால் சொல்லப்படுகின்றவனா? சிறிதும் தயக்கமின்றிப் பின்னவனே என்று கூறலாம். ஆகவே, 'இல்வாழ்வான் எனப்படுவான்' என்று எழுதுவதே பிழையற்றது என்று தெளிவாக உணரலாம். இதை உணர்ந்த உரையாசிரியர் பரிமேலழகர், அத்தொடருக்கு, "இல்லறத்தோடு கூடி வாழ்வான் என்று சொல்லப்படுவான்" என்று உரையெழுதி, "என்பான் எனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது," என இலக்கணக் குறிப்பும் எழுதியிருத்தல் காணலாம்.

'எழுத்து என்பது அகர முதல் னகரம் முடிய முப்பது' என்று எழுதலாம். ஆனால், மேற்கூறிய உண்மை உணர்ந்த தொல்காப்பியனார்,

' எழுத்துஎனப் படுப
அகர முதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப' (தொல்காப்பியம், எழுத். 1)

என்று 'எழுத்து என்று புலவரால் கூறப்படுபவை' என்னும் கருத்தைத் தெளிவாக அமைத்து நூற்பா இயற்றியுள்ளார்.

ஆக, கருத்தை உணர்த்தும் போது அதற்கு உரிய சொல்லைத் தேடாமல், அது போன்ற வேறொரு சொல்லை வழங்கும் வழக்கத்தைக் காணலாம்.

'எனப்படுப' என்று தொல்காப்பியனார் கூறியது தான் முற்றிலும் பொருந்துமா என்று காண்போம். 'எனப்படுப' என்பது எதிர்காலம். அவ்வாறாயின், 'எழுத்து என்று இனிமேல் சொல்லப்படுபவை' என்று பொருள் ஆகின்றது. தொல்காப்பியனார் அந்தக் கருத்தைக் கொள்ளவில்லை. புலவர்கள் எழுத்து என்று கூறியவை, கூறுகின்றவை என இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையுமே கருதிக் கூறியுள்ளார். முன்னோரின் வழக்கையும் செய்யுளையும் நாடி இலக்கணம் எழுதினர் ஆதலின், இறந்த காலத்தையே சிறப்பாகக் கருதிக் கூறினர் எனலாம். அவ்வாறாயின், 'எழுத்தெனப்பட்டன' என்று அவர் எழுதியிருக்க வேண்டும்.

ஒரு வகை அமைதி கூறலாம். இது ஒரு காலத்திற்கு மட்டும் உரியது அல்லாமல், முக்காலத்திற்கும் பொதுவான ஒன்றுதலால், இவ்வாறு பொருந்தும் எனலாம். இதைப் பற்றியும் தொல்காப்பியனார் விதி வகுத்துள்ளார். முக்

காலத்திற்கும் ஒத்து நடக்கும் ஒன்றை நிகழ்காலத்துச் சொல்லால் குறிக்கலாம் என்று கூறியுள்ளனர்.

'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்.'
(தொல். சொல். 242.)

இவ்வாறு முக்காலப் பொதுவானவற்றை நிகழ்காலச் சொல்லால் குறிக்கவேண்டும் என்றாரே தவிர, எதிர்காலச் சொல்லால் வழங்கலாம் என்று கூறவில்லை. 'எனப்படுப' என்ற சொல்லோ, பகரமெய்யை இடைநிலையாகப் பெற்று எதிர்காலச் சொல்லாய் உள்ளது.

தொல்காப்பியனுர் இங்கு எதிர்காலத்தைக் கருதாமல் முக்காலத்தையுமே பொதுவாகக் கருதினர் என்பதை மறுப்பார் இல்லை. ஆனல், சொல் முக்காலத்திற்கும் உரிய பொதுச்சொல் அன்று என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

கபிலர் என்பவர் பழந்தமிழ் நாட்டுப் புலவர் என்னும் வாக்கியத்தில் உள்ள என்பவர் என்பது எதிர்காலச்சொல். ஆனல், இந்த வாக்கியத்தைச் சொல்லும் போது, "இனி மேல் எதிர்காலத்தில் கபிலர் என்று சொல்லப்படப் போகின்றவர்" என்று எதிர்காலக் கருத்துத் தோன்றுவ தில்லை. இங்கு 'என்பவர்' என்ற சொல்லில் பகரமெய் தெளிவான எதிர்கால இடைநிலையாய் இருந்தும், அந்தக் காலத்தை உணர்த்தவில்லை.

காந்தி போன்றவர் இனித் தோன்றுதல் அரிது என்ற வாக்கியத்தில், எதிர்காலக் கருத்தே உள்ளது. ஆகவே, காந்தி போல்பவர் என்றே இருத்தல் வேண்டும். 'போன்றவர்' என்பது இறந்த காலச் சொல். றகர மெய் இறந்த

கால இடைநிலையாய் உள்ளது. இருப்பினும், இறந்த காலம் இந்த வாக்கியத்தில் உணர்த்தப்படவில்லை. 'போல இருந்தவர்' என்று பொருள் கொண்டால் 'இனித்தோன்ற மாட்டார்' என்ற கருத்தோடு இயையவில்லை.

கடல் ஆழமானது

என்று சொல்லும்போது, இறந்த காலக் கருத்தே இல்லை. ஆனது என்பதில் உள்ள ன் (இன்) இறந்த கால இடைநிலையாய் இருந்தும், அந்தக் கருத்தை உணர்த்தவில்லை. கடல் ஆழமுடையது, ஆழமுடைத்து என்பன போல, முக்காலப் பொதுத்தன்மையே இங்குஉணர்த்தப்படுகிறது.

அதை நீ செய்ய வேண்டியதில்லை.

உனக்கு இனி வேண்டியது யாது?

அடுத்த ஆண்டிற்கு வேண்டியதைத் தேடுகிறுன்.

என்னும் வாக்கியங்களில் 'வேண்டியது' என்ற சொல் இறந்த காலத்தை உணர்த்தவில்லை. ஆயினும், இறந்தகால இடைநிலை இ (இன்) இச்சொல்லில் இருத்தல் காணலாம்.

அதை நீ செய்ய வேண்டுவதில்லை.

உனக்கு இனி வேண்டுவது யாது?

அடுத்த ஆண்டிற்கு வேண்டுவதைத் தேடுகிறுன்?

என்று அமைய வேண்டுபவை இந்த வாக்கியங்கள். உரிய சொல்லின் இடத்தில் வேறு சொல் பயன்படுத்தப்பட்டதை மேற்காட்டியவற்றில் காணலாம்.

தனக்குப் பொருந்திய உறவைத் தேடுகிறுன்.

தனக்குத் தக்க நட்பை நாடுகிறுன்.

என்ற வாக்கியங்களிலும் பொருந்திய, தக்க என்ற சொற்கள் இறந்தகாலச் சொற்களாயிருப்பினும், இறந்த காலத்தை உணர்த்தவில்லை. இறந்த காலம் உணர்த்தின், வாக்கியங்கள் பொருளற்றுப் போகின்றன. எவ்வாறு

எனின், பொருந்திவிட்ட, தகுதியாய் அமைந்துவிட்ட என்ற இறந்தகாலப் பொருளாக இருந்தால், 'உறவும் நட்பும் முன்னமே பொருந்திவிட்டன,' என்ற கருத்தே தோன்றுகிறது: முன்னமே பொருந்திவிட்டனவற்றைத் தேட வேண்டுவதும் இல்லை, நாட வேண்டுவதும் இல்லை. இனிமேல் பொருந்துமா, தகுமா என்றே உறவும் நட்பும் தேடுதலும் நாடுதலும் உள்ளன.

தனக்குப் பொருத்தமான உறவைத் தேடுகிறான்.

தனக்குத் தகுதியான நட்பை நாடுகிறான்.

என்று சொற்களை மாற்றினாலும் அந்த இறந்த காலம் வேறு வடிவில் வந்து அமைகிறது. 'ஆன' என்பதில் ன் (இன்) இறந்த கால இடைநிலையாய் உள்ளது.

தனக்குப் பொருந்தும் உறவைத் தேடுகிறான்.

தனக்குத் தகுநட்பை நாடுகிறான்.

என்று அமைந்தால் குற்றம் கூற இடமில்லை. இவ்வாறு உரிய சொற்களைத் தேடிப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துகிறோம். இதற்கும் அந்தப் பழைய மனித இயல்பே காரணம்.

அவர் எதிர்காலத்தில் உயர்நிலை பெறுவார்.

அவர் எதிர்காலத்தில் உயர்வான நிலை பெறுவார்.

அவர் எதிர்காலத்தில் உயர்ந்த நிலை பெறுவார்.

முதல் வாக்கியம் வழாநிலை. மற்ற இரண்டும் வழுவமைதி எனலாம். உயர்ந்த என்ற சொல்லே இக்காலத்தில் பெருவழக்காக உள்ளது. ஆயினும், அதில் உள்ள த் என்னும் இறந்த கால இடைநிலை அந்தக் காலத்தை உணர்த்தவில்லை.

இந்தப் போக்குத் தவறு என்று கடிவது பொருந்தாது. மொழி இவ்வாறு உள்ளது என்று உணர்தலே அறிவுடைமை. மொழியின் வாழ்வும் வளர்ச்சியும் ஒரு

சிலரிடத்தில் இல்லை; குடியாட்சி போல அது பெரிய சமுதாயத்தின் பொறுப்பில் உள்ளது எனலாம். ஆயினும், மொழியின் காவலர் புலவர். மொழியின் வளர்ச்சியில் இன்ன போக்கு உள்ளது என்று உணர்தல் அவர்தம் கடமையாகும்.

உயர்ந்த முதலான இறந்தகாலச் சொற்களைக் காலம் உணர்த்தாத வகையில் பயன்படுத்தும் முறை (குறை ?) இன்று நேற்றுத் தோன்றியது அன்று.

'மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர் ;
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.

என்று பாடிய பழம்புலவர் பிசிராந்தையாரின் காலத்திலும் இந்த முறை (அல்லது, குறை) இருந்து வந்தது. மாண்புறு மனைவி, அடங்கு கொள்கை என்று காலப் பொதுவான சொற்களால் கூறாமல், மாண்ட மனைவி, அடங்கிய கொள்கை என்று இறந்தகால இடைநிலை பெற்ற சொற்களால் பாடினது காணலாம். புலவர் பிசிராந்தையார் பாடிய அந்நாளுக்கு முன்னர் மட்டும் அல்லாமல் அந்நாளிலும் அதன் பிறகும் மாண்பு உடையவராய் விளங்கினர் அவருடைய மனைவியார். அவர் குறித்த சான்றோரின் கொள்கையும் அவ்வாறே அதற்குமுன்னும் அப்போதும் அதன் பிறகும் அடக்கம் உடையதாய் இருந்தது. ஆகவே, மாண்ட, அடங்கிய என்ற இறந்தகாலச் சொற்களுக்கு அந்தக் கால உணர்ச்சி இல்லாத வழக்குப் பழங்காலத்திலேயே சில இடங்களில் இருந்தது எனக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு காலத்தை உணர்த்தற்குரிய இடைநிலைகள் தம் தொழிலைச் செய்யாமல் வெறுஞ்சொல்லமைப்புக்கு

மட்டும் பயன்படுவது, இலக்கண நோக்கோடு ஆராய்வோர்க்கு வழுவாகப் புலப்படும். பிறகு நாளடைவில் அவை செல்வாக்குப் பெறுவதைக் கண்டு, அவர்களே அவற்றை வழுவமைதி என்பர். மொழியின் வரலாற்றை உணர்ந்தோர் இவற்றை இயல்பானவை எனக் கொண்டு தெளிவு பெறுவர் என்கிறார், அறிஞர் ஆட்டோ எஸ்பர்ஸன்.

(The study of linguistic history is of the utmost importance to the grammarian. It broadens his mind and tends to eliminate that tendency to reprobation which is the besetting sin of the non-historic grammarian, for the history of languages shows that changes have constantly taken place in the past, and that what was bad grammar in one period may become good grammar in the next......The traditional grammarian of the old type states the rules and looks upon deviations as blunders which he thinks himself justified in branding as illogical. The linguistic philologist finds out the reasons why the rules are broken in this or that case.—The Philosophy of Grammar: page 345).

ஹென்றி ஸ்வீட் என்னும் மொழியியலறிஞர் இத்தகைய சொல்லுறுப்புக்களை ஆராய்ந்துள்ளார். தாம் உணர்த்த வேண்டியவற்றை உணர்த்தாமல் வெறுஞ் சொல்லமைப்புக்கு மட்டும் பயன்படும் இத்தகைய உறுப்புக்களை (இடைநிலை முதலியவற்றை) அவர் ஓர் உவமை கூறி விளக்குகிறார். கோட்டு என்னும் சட்டையின் பின்புறம் அழகுக்காகப் பொருத்தப்படும் பொத்தான்களைப் போன்றவை என்கிறார். ஒரு காலத்தில் அந்தப் பொத்தான்கள் குதிரைச் சவாரியின் போது சட்டையின் கீழ்ப் பகுதியை மடக்கிப் பொருத்துவதற்குப் பயன்பட்டன.

இக்காலத்தில் அந்தத் தேவை இல்லாவிடினும் அந்தப் பொத்தான்கள் நீக்கப்படவில்லை; அந்தச் சட்டையின் அழகான அமைப்புக்குப் பயன்படக் கூடியவைகளாய் நிற்கின்றன. அவை போன்றன இத்தகைய சொல்லுறுப் புக்கள் என்கிறார்.

(We might as well argue that the buttons that are still put at the back of men's dress coats are useful because our dress coats were originally coats with long tails which were buttoned up in riding.—The Practical Study of Language, page 70.)

8. 'நெஞ்சக் கனகல்'

திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள்

[சென்னை]

'நெஞ்சக் கனகல்' என்னும் பொருள் செறிந்த சொற்றொடர் கந்தரநுபூதியிற் காப்புச் செய்யுளில் உளது. நம்முடைய நெஞ்சம் பத்தி என்பதே இல்லாது கல்லைப் போலச் சற்றும் இளகுதலின்றிக் கருங்கல்லாய் இருப் பதை அனுபவத்திற் காண்கின்றோம். "இங்ஙனம் கரடு முரடாய் நெகிழ்ச்சி என்பதையே அறியாது கிடக்கின் றதே என் நெஞ்சம்! இத்தகைய முரடான இடத்தில் இறைவன் எப்படி அமர்வான்!" என்னும் ஏக்கம் திரிசிர புரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர் களுக்கு உண்டாயிற்று; எப்படியாவது, எந்த நீதி முறை யைக்கொண்டேனும், இறைவனை அந்த முரட்டிடத்தில் அமரும்படி செய்ய வேண்டும் என்னும் ஆசை அவருக்கு எழுந்தது: அதற்கு ஓர் உபாய வழியை அவர் கண்டனர்; கண்டு, இறைவனை நோக்கி, "நீ ஒரு குறையும் இல்லாத வன் எனப் பெரியோர் கூறுவர்; ஆனால், ஒரு குறை உன்

னிடத்தில் உளது : அக்குறையை நீக்கிக்கொள்ளும் வழி யை யான் கூறுவேன் ; ‘குறை யாதோ ?’ எனில், உனது உடலின் முன்புறத்தில் (மார்பில்) ஒரு தழும்பு உளது : உனது பின்புறத்தில் (முதுகில்) ஒரு தழும்பு உளது ; ஆனால், உன் கீழ்ப்புறத்தில் தழும்பு ஒன்றும் இல்லை; அது தான் உன்பால் நான் கண்ட குறை. அக்குறையை நீக்க வும் வழி உளது. மார்பில் தழும்பு—காஞ்சியிற் பூசித்த தேவி உன்னைத் தழுவினதால் அவளுடைய முலைச் சுவடு (தழும்பு) உன் (முன்புறத்தில்) மார்பிற்பதிந்து கிடக் கின்றது. அதனால், ‘ஒருத்திதன் இளமுலைச் சுவடு தோமுறக் கொண்டாய்’ என யோகியர் ஏசுவர் ; பிட் டுக்கு நீ மண் சுமந்த போது பாண்டியன் அடித்த பிரம் படியால் உன் (பின்புறத்தில்) முதுகிற் காயத்தால் தழும்பு ஏற்பட்டது. ‘அக்கோலால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனி’ என மணிவாசகர் கூறுகின்றார். தவஞ் செய்திருந்த அருச்சுனனுடன் போர் புரிந்தபோது அவன் தனது வில்லால் உன் தலையில் அடிக்க, உன் மேற்புறத்தே ஒரு காயச் சுவடு ஏற்பட்டது. [வரிவிற் கழுந்துகொடு மாமுடியின் மோதுமுன்—வில்லி பாரதம்]. ஆனால், உனது கீழ்ப்புறத்தில் ஒரு சுவடும் (தழும்பும்) இல்லையே! இந்தக் குறை—நீங்கும், வாட்போக்கி ஈசா, நீ எனது கரடுமுர டான மனம் (நெஞ்சு) என்னும் கல்லில் வந்து அமரு வாயாகில்,’’ என நயம்பட ஒரு பாடல் பாடுகின்றார் :

“ தழுவுமையால் முன்னும், தமிழிறையாற் பின்னும்
தொழுமிறையால் மேலும் சுவடு—கெழுமுவ;கீழ்
இன்றால் எனுங்குறைபோம், என்மனஞ்சேர் வாட்போக்கி
அன்றால் அமர்ந்தாய் அடி.’’ (வாட்போக்கிக் கலம்பகம்)

என்னே இக்கருத்தின் அழகு ! என்னே இக்கவிஞரின் திறம் !

பின்னும் ' கல் ' என்பதற்கு ' மலை ' எனப் பொருள் இருப்பதால் கருணைப்பிரகாச சுவாமிகள், " ஆஹா ! முருகன் என் மனத்தில் நீக்கமின்றி எப்போதும் வீற்றிருக்கும் காரணத்தைக் கண்டுகொண்டேன்; அது யாதெனில், தான் விரும்பி வாழும் கற்களில் (மலைகளில்) இதுவும் ஒரு கல் (மலை) என்று மயங்கி நினைத்து என் நெஞ்சக் கனகல்லில் வீற்றிருக்கிறான் போலும் !" என அருமையாகப் பாடியுள்ளார்.

" வளர்செழுங் குருதிச் சூட்டு வாரணம் வலனு யர்த்த
ஒளிகெழு பரிதி வைவேல் ஒருபெருங் கருணை மூர்த்தி
களிகெழு சிறந்து தான்வாழ் கற்களில் ஒருகல் என்றே
அளியஎன் மனத்தி னுள்ளும் அகன்றிலன் இருக்கும்
மன்னோ!"

(சீகாளத்திப் புராணம்)

இங்ஙனம், நெஞ்சின் இளகாத் தன்மையைக் கண்டு தான் தாயுமானவர்,

" கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்;என்
கல்நெஞ்சம் உருகவிலையே !"

என வருந்துகின்றார்.

இறைவன் திருவருள் கிடைத்தாலொழிய நெஞ்சம் நெகிழ்ந்து உருகாது. இறைவன் திருவருளைப் பெற்று நெஞ்சம் உருகப்பெற்ற பெரியாருள்—மணிவாசகரும் அருணகிரியாரும் தமது நன்றியைத் தமது துதிப்பாக்களில் எடுத்து உரைத்துள்ளார்கள் :

" கல்நார் உரித்ததென்ன என்னையும்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் "

—தெள்ளேணம், 9.

" கல்நார் உரித்தென்னை ஆண்டுகொண்டான் "

—பூவல்லி, 9.

"கல்நார் உரித்தஎன் மன்னு! எனக்குநல்
கர்ணுமிர் தப்பதம் தந்தகோவே!"
—திருப்புகழ் (வயலூர்)

ஆதலால், நமது நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருக வேண்டில், நாமும் அப்பர் பெருமான் கூறியவாறு, 'துடைக்கினும் போகேன்,' என இறைவன் திருவடியைச் சிக்கெனப் பிடித்து, அவன் திருநாமங்களைக் கூறி, அவனை விடாது அழைத்தால், 'இவன் எனைப் பன்னுள் அழைப்பொழியான்,' என்று இறைவன் எதிர்ப்பட்டு அருளுவன். இது திண்ணம்! முக்காலும் திண்ணம்!

9. இருவினையொப்பு

அல்லது

இலக்கியப் பயன்

திரு. K. சோமசுந்தரம் செட்டியாரவர்கள், B.A.

[Retd. Assistant Secretary to the Govt. of Madras.]

"பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னுமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோல நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே."

என்பது மணிவாசகப் பெருமான் திருவாக்கு. இத்திருவாக்கினில் 'என் வினையொத்தபின்' என்னும் தொடரினை உற்று நோக்குக; அதனுள்ளும் 'பின்' என்பதனைக் கூர்ந்து காண்க. ஆண்டவனைப் பிடிக்க எண்ணிப் புறம்

புறம் திரிந்தார் மணிவாசகப் பெருமானுர். ‘அழுதால் உன்னைப் பெறலாமே,’ என்று அழுது அழுது கற்ருவின்

மனம் போலக் கசிந்து உருகி வேண்டினுர்; அவ்வாறு செய்யவும் செய்தார்; ‘வருக என்று அருள் புரிவாயே!’ என்று கதறினுர். ஆனுல், ஆண்டவனே, சிக்கெனச் சிக்கினுன் போலக் காட்டிக் கழன்ருன். மணிவாசகர் கை நெகிழ விட்டார். பல திருக்கோலங்கள் வந்தான் ஆண்டவன். எய்த்தார் மணிவாசகப் பெருமான். இறுதியில் ஆண்டவன் மணிவாசகருக்குக் கிட்டினுன்; அகப்பட்டான். எங்கே? திருக்கழுக்குன்றத்தில். எப்போது? மணிவாசகரது வினையொத்தபின். ஆக, இருவினையொப்பு நேர்ந்த பின்னர்த்தான் ஆண்டவன் மணிவாசகருக்குத் திருக்கோலங் காட்டினுன். எனவே, ஆண்டவனை அடைய வேண்டுமானுல், நாம் முன்னதாக இருவினையொப்பு அடைய வேண்டும். இல்லையானுல் இல்லை.

இருவினையொப்பு என்பது நமது உள்ளக் கிடக்கையில் நல்வினையும் தீவினையும் ஒத்த ஆதல். பத்துத் தீவினைகளுக்குப் பத்து நல்வினைகள் சரியாய்ப் போயின என்கிற அந்த ஒப்பு அன்று. நல்வினைப்பயன் எந்த அளவில் ஈட்டிய பயனுகும்? அன்னவாறே தீவினைப்பயனும் கூட்டல் கழித்தல் என்கிற கணக்கில் அடங்காது. நல்வினை செய்தால் நல்ல பயன் அடையலாம். தீவினை செய்தால் அதற்கேற்பத் திய பயனை அடைய நேரும். காரண காரியமாக அவ்வவற்றின் பயனை அடைந்தே தீர வேண்டும். கையை நெருப்பிடை வைத்துச் சுட்டுக்கொண்டதற்குத் தண்ணீரிடை வைத்தல் சுட்டதை நீக்கியது ஆகுமா? சுட்டது

சுட்டதே. அதன் பயனையும் அநுபவிக்க வேண்டும். தண்ணீரிடை வைத்ததால் வெந்தது போகாது.

> 'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
> ஞாலத்தின் மாணப் பெரிது.'

> 'பயன்தூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
> நன்மை கடலிற் பெரிது.'

என்னும் குறட்பாக்களை ஓர்க. ஒரு வகை நன்றி ஞாலத்திலும் மிகப்பெரியது. இன்னொரு வகை நன்மை (உதவி) கடலினும் பெரியது. இவற்றுள் எது பெரியது, எவ்வளவு பெரியது என்று சுட்டிச் சொல்ல முடியாது. எனவே, நல்வினைப் பயனையோ தீவினைப்பயனையோ ஒரு வரையறையிட்டுக் கூற முடியாது. ஒன்றினின்று ஒன்றனைக் கழிக்கவும் முடியாது. சொற்ற இவற்றால் ஒவ்வொரு வினையின் பயனையும் தனித்தனியாக அடைந்தே தீரவேண்டும். நல்வினையும் தீவினையுமாய இருவினையும் பிறவியைத்தரும். ஆனதால், பிறவியற்றுப் போவதற்கு இருவினையும் நம்மிடமிருந்து அகல வேண்டும். தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்று இறைவனைக் குறித்துக் கூறினர். இருவினையும் இருள் சேர்ந்தனவே; பிறவியைத் தருவனவே. ஆனதால், 'உணக்கிலாததோர் வித்து' என்று பிறவியைச் சுட்டினர் மணிவாசகரும். பிறவியறவேண்டும். நல்வினையும் தீவினையும் ஒக்க அறவேண்டும்; சூனியமாக வேண்டும். இந்தச் சூனியமாகும் நிலைதான் இருவினையொப்பு என்பது. இதுவேதான் வேண்டுதல் வேண்டாமையாகிய நிலை; விருப்பு வெறுப்பு அற்ற நிலை. இது ஒரு தூய நிலை; அசட்டுத்தனமன்று; அருள் சேர்ந்த நிலை; இன்பதுன்பங்களை ஒன்றாக நோக்கும் நிலை; இன்பத்திடை நனிமகிழ்தலும்

துன்பத்திடைப் பெரிதும் அழுங்கலும் கூடா. அறிவு கொண்டு அருளுடன் ஒன்முக அவற்றைக் காண்பதுதான் இருவினையொப்பு. பாண்டவரைவருள் தருமனும், அடியார்களும், ஆழ்வாராதிகளும் அடைந்த நிலை அது. இதோ காண்க :

தருமபுத்திரன் ஒரு நாள் அயர்ந்து உட்கார்ந்திருந்தானுக, வியாச பகவான் அவன் அவ்வாறிருந்ததேன் என்று வினவ, அவன் தங்களைப்போல எவரேனும் சூதாட்டத்தால் நாடு நகரம் அரசு செல்வம் அனைத்தையும் இழந்தவர்களுண்டோ எனக்கேட்டான். அதற்கு அவ்வியாசர் உண்டு என்று சொல்லி நளன் கதையை உரைத்தார். இந்த நிகழ்ச்சியைக் கூறுங்காலத்து நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவர்,

"மெய்த்திருவந் துற்ருலும் வெந்துயர்வந் துற்ருலும்
ஒத்திருக்கும் உள்ளத்து உரவோனே!"

என்று வியாசர் தருமனை விளித்துச் சொன்னதாகக் குறித்துள்ளார். இவ்வாக்கியத்தில் தருமன் மகிழ்ச்சிக்குரிய காலத்தும் துயருறும் காலத்தும் ஒத்திருக்கும் உள்ளத்தை உடையவனுகக் கூறப்படுகின்ருன். இவ்வாறு சமநிலை உடையவன் தருமன். இந்த நிலைதான் இருவினையொப்பு அல்லது அதற்குக் கால்.

இனி, சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில் அடியார் கூட்டத்தைக் குறிப்பிடும்போது

'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் ;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் ;
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.'

என்று அடியார் சிறப்பினைக் கூறுகின்ருர்.

அடியார்களுக்கு ஓடும் செம்பொனும் ஒன்றுதான். பொதுவாக இந்த இலக்கணம் எல்லா அடியாரிடத்தும் காணலாம். ஆனால், சிறப்பாகச் சைவசமயகுரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசரிடத்து இவ்விலக்கணம் தெளிவுறச் சொல்லியிருக்கக் காணலாம். "திருப்புகலூரில் இருந்த காலத்து,

'செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகஎறிந்தார்.'"

என்று சேக்கிழார் பெருமான் வெகு அழகாகக் கூறுகின்றார். இந்த நிலைதான் இருவினையொப்பு நிலை. இந்நிலையில் எல்லாம் ஒன்றே.

இன்னவாறே ஆங்கில மகாகவியாகிய உலகம் போற்றும் ஷேக்ஸ்பியரும் தமது தலை சிறந்த துன்பியல் நாடகமாகிய ஹாம்லெட்டு என்னும் நாடகத்தில் காட்டுகின்றார். அஃதாவது, ஹாம்லெட்டு என்னும் இளவரசனுக்கு ஒத்த நண்பனாய் ஹொரேஷியோ என்பவன் ஒருவன் இருந்தான். இருவரும் பல்கலைக்கழக மாணவராய் இருந்தனர். அவர்களிருவரும் மன்னன் மாளிகையில் சந்திக்கும் போது ஹாம்லெட்டு ஹொரேஷியோவைப் பார்த்து, 'நீ நீதிநெறியான சமநிலையையுடையவன்,' என்று பாராட்டிய போது அவன் வியப்புற்றான். அதற்கு இளவரசன் தான் உண்மையைத்தான் பேசுகின்றான் என்று சொல்லி, 'நான் உனக்கு முகமன் கூறுகின்றேன் என்று நினைக்க வேண்டா. நீ திருவின் ஏற்றத்தாழ்வுகளை ஒக்க ஏற்றுக்கொள்ளுபவன். உன்னைப் போன்ற ஆசாபாசங்களுக்கு அடிமையாயிராத யாரையேனும் காட்டுவையேல் நான் அவரை என் உள்ளார்ந்த இதயகமலத்தில் அணிந்து

கோள்வேன்' என்று மேலும் கூறினன். அந்த நாடகத்தில் அங்கம் III களம் IIல் வரிகள் 52 முதல் 72 வரை பார்க்க. அதன் சுருக்கம் பின் வருமாறு :—

" ...... for thou hast been
As one, in suffering all, that suffers nothing
A man that fortune's buffets and rewards
Hast ta'en with equal ranke.
....
Give me that man
That is not passion's slave, and I will wear him
In my heart's core ay, in my heart of heart,
As I do thee.—",

—Lines 63-66 & 69-72.

ஹொரேஷியோ என்பவன் இன்பதுன்பங்களை ஒரே படியவாக ஏற்றுக்கொள்வதாலேதான் அவனை ஹாம்லெட்டு வியந்து பாராட்டுகிருன். மேற்காட்டிய இவைகளெல்லாம் இருவினையொப்புக்குரிய இன்பதுன்பங்களிடைக்காணும் சமநிலையை உணர்த்துகின்றன.

இதே நிலையை இராமபிரான் மாட்டுக் கம்பர் தமது இராமாயணத்தில் தமக்கேயுரிய தனிப்பான்மையில் காட்டுகின்ருர். சீதாபிராட்டி அசோகவனத்திலிருந்த போது இராமபிரானையே சிந்தித்த வண்ணமாயிருந்தாள். அப்போது எந்நிலையிலும் மலர்ந்திருக்கும் அவனது முகத்தை உன்னுவாளாயிருந்தாள் என்பதைக் கம்பர் பின் வரும் செய்யுளால் உணர்த்துகின்ருர் :—

" மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினுஞ்

சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்குமு கத்தினை யுன்னுவாள்.''

இதன் கருத்து, இராமன் நாடு நகரம் ஆட்சியெல்லாம் தனதே எனச் சொல்லக் கேட்ட போதும் இத்திருவெல்லாம் துறந்து தான் காட்டுக்குப்போக வேண்டுமென்று சொல்லக் கேட்டபோதும் அவனது முகம் ஒரே நிலையினிலிருந்தது என்பது.

சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை போன்றிருந்தது அவன் முகம் என்னுமிடத்துப் பெரியதோர் உண்மையும் நயமும் காண வேண்டும். செந்தாமரை எப்போதும் மலர்ந்திராது. பகலில் மலர்ந்தும் இரவில் குவிந்தும் இருக்கும். ஆக, இராமன் முகத்தை வெறுஞ்செந்தாமரைக்கு ஒப்பாகச் சொன்னால் ஒரு வேளை மலர்ச்சியும் இன்னொரு வேளை முகிழ்ப்பும் குறிக்கும். இயற்கையிலுள்ள தாமரையின் போக்கு இது. ஆனால், சித்திரத்தில் எழுதிய தாமரையாயிருந்தால், எப்போதும் அலர்ந்தே இருக்கும். இதனாலேதான் கம்பர் 'சித்திரத்தினலர்ந்த செந்தாமரை' என்றார். கம்பர் பாடலே பாடல்! இன்னும் இராமனது நடையின் சிறப்பினை அநுமன் வாயிலாகக் காட்டும்போது

'புல்ல லேற்ற திருமகளும் பூவும் பொருந்தப் புவியேழும்
எல்லை யேற்ற நெடுஞ்செல்வ மெதிர்ந்த ஞான்று மஃதின்றி
அல்ல லேற்ற கானகத்து மழியா நடையை யிழிவான
மல்ல லேற்றி னுளதென்றன் மத்த யானை வருந்தாதோ ?'

என்று குறிக்கின்றார் கம்பர் பிரான். நெடுஞ்செல்வம் தனக்கு வர இருந்த காலத்தும் தான் கானகம் ஏக வேண்டியகாலத்தும் ஒரே வகையான கம்பீர நடையை உடையவனுயிருந்தான் இராமன். அவனது மனநிலை இரு காலத்தும் ஒரே படித்தாயிருந்தது. எனவே, அவன் நடை மாறு நடையாயிருந்தது.

இவ்வாறு இன்பதுன்பங்களை ஒக்க நோக்கும் இயல்பினை நாம் அடைதல் வேண்டும். இவ்வியல்பினை அடைவது சாமானியமானதன்று; மிக அரியது. ஆனால், நல்ல இலக்கியச் சுவையைக் கொண்டுவிட்டால், இலக்கியங்களின் மூலமாக நன்னர் இவ்வியல்பினை அடையலாம் என்பது ஒருதலை. நல்ல இலக்கியங்களை ஓதும் பழக்கம் வாய்ந்த மனம் நல்லதையே எண்ணும்; அழகினையே காணும்; ஏற்றத்தாழ்வுகளால் அலைப்புறுது; எல்லாவற்றையும் இன்பமாகவே காணும்; சலனமடையாது; அசைவு கொள்ளாது. எனவே, இலக்கியப் பழக்கம் இந்நல்லியல்பிற்கு நம்மை ஈர்த்துச் செல்லும். அதனால், மனம் கலங்கா நிலையை அடையும். அதுதான் இருவினையொப்புக்கு வழியாகும்.

இருவினையொப்பு அடைந்த மனம், மலபரிபாகம் இலேசில் கொள்ளும். கொண்டால், மும்மலப் பேய்கள் ஓடும். நாம் அவற்றினின்றும் நிவர்த்தி பெறுவோம். நம்மிடமிருந்து 'நான் எனது' என்னும் அகந்தையும் மமதையும் அகன்றுவிடும். அவை அகன்றுவிட்டால் ஆண்டவனருள் சித்தி நன்கு நம்மிடத்துப் பதியும். இதுதான் (அருள்) சத்தி நிபாதம் எனப்படும். நாம் ஆண்டவனுள் பதிந்து பிறகு சாலோக, சாமீப, சாரூப சாயுச்சியத்தைப் படிப்படியாக எளிதில் அடையலாம். ஆக ஆண்டவனோடு இரண்டறக் கலக்கும் நிலைக்கு அடிப்படையானது இருவினையொப்பு. இதுதான் மணிவாசகப் பெருமான் தமது பாட்டில் குறிப்பது. இந்த இருவினையொப்புக்கு வழி கோலுவன நல்ல இலக்கியங்களே. எனவே, அன்பர்களே, இலக்கியங்களை நாளும் நலமுற ஓதி இறுதியில் பிறவியற்றுப் பேரா இன்ப நிலையை எய்துவீர்களாக. இருவினையொப்பும் இலக்கியத்தின் பயனே!

10. தமிழும் சமணபௌத்த மதங்களும்

[திரு. மயிலை, சீனி. வேங்கடசாமியவர்கள்]

கௌதம புத்தரால் உண்டாக்கப்பட்ட பௌத்த மதம் கி. மு. மூன்றும் நூற்றுண்டில், அசோக சக்கரவர்த்தி காலத்தில், தமிழ் நாட்டில் பரவியது. பௌத்த மதத்தைத் தமிழ் நாட்டில் பரப்பியவன் மகேந்திரன் என்பவன். மகேந்திரனை மகிந்தன் என்று பாலிமொழி நூல்கள் கூறுகின்றன. தமிழ் நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இலங்கைத் தீவிலும் பௌத்த மதத்தைப் பரப்பியவன் இவனே. இப்போது இலங்கைத் தீவில் மட்டும் பௌத்த மதம் நிலைத்து நிற்கிறது; தமிழ் நாட்டிலும் தென்னிந்தியாவிலும் முழுவதும் மறைந்துவிட்டது; ஆனால், கி. மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து கி. பி. பன்னிரண்டு அல்லது பதின்மூன்றும் நூற்றுண்டுவரையில் தமிழ்நாட்டிலே வேரூன்றி நிலைபெற்றிருந்தது.

சமண சமயத்துக்கு ஜைனமதம் என்றும் பெயர் உண்டு. சமண சமயம், கி.மு. மூன்றும் நூற்றுண்டிலே அசோகருடைய பாட்டஞர் சந்திர குப்த மௌரியன் காலத்தில், தென்னிந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் பரவிற்று என்று சரித்திர ஆசிரியர் கூறுவர். சமணசமயத்தை உண்டாக்கினவர் வர்த்தமான மகாவீரர் என்று சில சரித்திர ஆசிரியர்கள் கருதுகிருர்கள். இது தவறு. சமண சமயம் மிகப் பழமையானது. வர்த்தமான மகாவீரர் காலத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னே சமண சமயம் தோன்றியிருந்தது. துவாரகையை அரசாண்ட கண்ணபிரான் காலத்தில், அவருடைய தமயனுர் முறையினரான நேமிநாத தீர்த்தங்கரர் காலத்தில், சமண சமயம்

தமிழ் நாட்டிற்கு வந்தது என்பதற்குச் சான்று உண்டு. எனவே, பௌத்த மதம் தமிழ் நாட்டிற்கு வந்த கி. மு. மூன்றும் நூற்றுண்டுக்கு முன்பு பல நூற்றுண்டுக்கு முன்னர், சமண சமயம் தமிழ் நாட்டில் இருந்தது.

சமண சமயத்தின் கடைசித் தீர்த்தங்கரரான வர்த்தமான மகா வீரரும், பௌத்த மதத்தை உண்டாக்கிய கௌதம புத்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்தவர்கள்.

சமண பௌத்த மதங்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்பு தமிழர் சிவபெருமானையும் திருமாலையும் வழிபட்டனர். ஆனால், அக்காலத்தில், சைவசமயமும் வைணவ மதமும் வைதிக சமயக்கொள்கைகள் கலக்கப் பெருத தூய திராவிடமதங்களாய் இருந்தன.

சமணசமயமும் பௌத்த மதமும் தமிழ் நாட்டிற்கு வந்த பிறகு தமிழருள் பெரும்பான்மையோர் சமணராகவும் பௌத்தராகவும் மாறினர்கள். பழைய சைவ வைணவ சமயங்கள் ஒதுக்கிப் புறக்கணிக்கப்படும் அளவுக்குச் சமணபௌத்த மதங்கள் தமிழ்நாட்டிலே வளர்ந்து வளம் பெற்றன. இந்த மதங்கள் வளம் பெற்றுச் சிறந்திருந்த காலம், கி. மு. 2-ஆம் நூற்றுண்டு முதல் கி. பி. 8-ஆம் நூற்றுண்டு வரையில் ஆகும். அதாவது, ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் இந்த மதங்கள் தமிழ் நாட்டிலே சிறப்பும் செல்வாக்கும் முதன்மையும் பெற்று விளங்கின. பின்னர், கி. பி. 8-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு, சைவ வைணவ சமயங்கள் தலையோங்கிய காலத்தில், சமண பௌத்த மதங்கள் செல்வாக்கிழந்து மெல்ல மெல்லக் குன்றிக் கி. பி. 12 அல்லது 13-ஆம் நூற்றுண்டிலே மறைந்துவிட்டன. இப்போது பௌத்த மதம் அடியோடு மறைந்துவிட்டது ; ஆனால், சமண சமயம் ஆங்காங்கே சிறிதளவு நிலை பெற்றிருக்கிறது.

பௌத்தமதமும் சமண சமயமும் தமிழ் நாட்டிலே ஏறக்குறைய ஆயிரம் ஆண்டு வளம்பெற்றிருந்தன என்று கூறினோம். ஆனால், இந்த இரண்டு மதங்களும் எந்தக் காலத்திலும் ஒற்றுமையாய் இருந்ததில்லை; ஆதி காலம் முதல் ஒன்றையொன்று தாக்கிப் போர் செய்துகொண்டிருந்தன. போர் என்றால் மறப்போர் அன்று; வாதப் போர். இந்தப் போர் காரணமாகச் சில தமிழ் நூல்கள் தோன்றின. அவற்றைப் பின்னர்க் கூறுவோம்.

ஆயிரம் ஆண்டுகளாக ஒரு நாட்டிலே சிறப்படைந்து நிலைபெற்றிருந்த மதங்கள், அந்த நாட்டு மொழியில் ஏதேனும் புதிய இலக்கியத்தை உண்டாக்காமலிருக்குமா? உண்டாக்கித்தானிருக்க வேண்டும். தமிழகத்தில் ஆயிரம் ஆண்டு நிலைபெற்றிருந்த சமண பௌத்த மதங்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் என்ன ஆக்கந்தந்தன? இதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த இரண்டு மதங்களும் தமிழ் மொழிக்கு ஆக்கமளித்தன. சிறந்த இலக்கிய இலக்கணங்களையும் காவியங்களையும் நிகண்டுகளையும் அளித்து உதவின. ஏன்? புது வகையான செய்யுள்களையும் புது முறை இலக்கியங்களையும் ஆக்கித்தந்தன. இந்த மதங்களினாலே தமிழ் மொழிக்கு உண்டான வளமிக்க இலக்கியச் செல்வங்கள் மிகப்பல. இந்தச் சமயங்களினாலே தமிழ் மொழி உரம் பெற்று வளமடைத்தது என்பதில் தினைத்துணையும் ஐயமின்று.

ஆனால், பௌத்த சமண சமயங்களால் தமிழ்மொழி பெற்ற இலக்கியச் செல்வங்களில் பெரும்பாலன மறைந்துவிட்டன. எஞ்சி நிற்கும் இலக்கியச் செல்வங்கள் மிகச் சிலவே. இதற்குக்காரணம், இலக்கியச் செல்வங்களை வழங்கிய இந்த மதங்கள் பிற்காலத்தில் குன்றி மறைந்து

விட்டதுதான். ஆகவே, அவை பெரும்பாலும் போற்றப் படாமல் அழிந்துவிட்டன. இந்த மதங்களை அழித்த சைவவைணவமதங்களும் அந்நூல்களைக் காப்பாற்ற வில்லை. தலை சிறந்த வெகு சில நூல்கள் மட்டும் சமயக் காய்ச்சல் என்னும் தீயில் எரிந்து போகாமல் எஞ்சி நின்றன.

வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்குபாக்களை மட்டுங்கொண்டிருந்த தமிழ்மொழியிலே, ஒவ்வொருபாவிற்கும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனங்களை உண்டாக்கிச் செய்யுள் வகையை வளர்த்தவர் கள் பௌத்த சமண சமயத் தமிழர்களே. காவிய நூல் களைத் தமிழ்மொழியில் முதன்முதல் ஆக்கிக்கொடுத்தவர் களும் பௌத்தமதச்சமணமதத் தமிழர்களே. நீதிநூல்களை யும் அறநூல்களையும் அமைத்துக்கொடுத்தவர்களும் அவர் களே. இலக்கண நூல்களையும் நிகண்டுகளையும் இயற்றித் தமிழ் மொழியை வளப்படுத்தியவர்களும் அவர்களே. அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த அருந்தொண்டுகள் தமிழ்மொழி வரலாற்றில் பொன் எழுத்தில் பொறிக்கப் பட்டிருக்கும்.

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் சிறந்த தொண்டு செய்த அவர்கள் தமிழுக்கு வேண்டாத ஒன்றை யும் செய்து வைத்தார்கள். அது என்னவென்றால் மணிப் பிரவாளநடை. பௌத்தர்களுக்குப் பாலி என்னும் பாகத மொழியும் சமணர்களுக்குச் சூரசேனி என்னும் பாகதமொழியும் முக்கியமானவை. இந்தப் பாகத (பிரா கிருத) மொழிகளிலேதான் அவர்களுடைய மத நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பிராகிருத மொழிகளிலே ககர, சகர, டகர, தகர, பகரங்களுக்கு நான்கு வர்க்க எழுத்துக்களும்; ஜ, ஷ, ஹ முதலிய எழுத்துக்களும்

உள்ளன. இந்த எழுத்துக்கள் தமிழ் மொழியில் இல்லை. தமிழில் இவ்வெழுத்துக்கள் இல்லாதபடியினாலே பிராகிருத மொழியில் உள்ள சொற்களைத் தமிழில் எழுத அவர்களால் இயலவில்லை. அதற்காக அவர்கள் கிரந்த எழுத்துக்கள் என்னும் புதிய எழுத்தையும் மணிப்பிரவாளம் என்னும் புதிய வசனநடையையும் உண்டாக்கினார்கள். கிரந்த எழுத்துக்கள் என்பன, வடமொழி எழுத்துக்களின் ஒலியைத் தழுவி, பிராமி எழுத்திலிருந்து உண்டாக்கப்பட்ட எழுத்துக்கள். பௌத்த சமணர்களால் உண்டாக்கப்பட்ட இந்தப் புதிய கிரந்த எழுத்துக்கள் தென்னிந்தியாவிலே பல நூற்றாண்டுகளாக வழங்கி வந்தன. இந்த எழுத்துக்களில் வடமொழி நூல்களும் பிராகிருதமொழி நூல்களும் எழுதப்பட்டன. இந்தக் கிரந்த எழுத்திலிருந்து உண்டானதுதான் இப்போது வழங்கி வருகிற தமிழ் எழுத்து. தமிழ் நாடு எங்கும் தொன்றுதொட்டு வழங்கி வந்த பழைய வட்டெழுத்தை மாற்றி, அதற்குப் பதிலாக இந்தக் கிரந்தத் தமிழ் எழுத்தை வழங்கச் செய்தவர்கள் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்த சோழ அரசர்கள். இது நிற்க.

புதிய கிரந்த எழுத்தை உண்டாக்கி அதில் மணிப்பிரவாளம் என்னும் புதிய வசனநடையில் பௌத்தரும் சமணரும் தங்கள் மத நூல்களை எழுதினார்கள். ஆனால், இவர்கள் நல்ல தமிழ் நடையில் செய்த நூல்களை மக்கள் விரும்பி ஏற்றுக்கொண்டது போல, இந்த மணிப்பிரவாள நூல்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், இவை, தமிழ்ப் பண்புக்கொவ்வாத வடமொழிச் சொற்களும், வடமொழிப் பண்புக்கொவ்வாத தமிழ்ச் சொற்களும் கலந்து இரண்டுங்கெட்ட ஆபாச நடையினவாய் இருந்தன. இந்த மணிப்பிரவாள வசன நடையைப் பிற்காலத்

தில் வைணவர்கள் ஏற்றுக்கொண்டு, நாலாயிரப் பிரபந் தத்திற்கு இந்த மணிப் பிரவாள நடையில் வியாக்கியானங் களை எழுதி வைத்தார்கள். அவர்களும் இதில் தோல்வி யையே கண்டார்கள். ஏனென்றால், முன் கூறப்பட்டது போல, இந்த வசனம் வடமொழி கற்றவருக்கும் விளங்கா மல், தமிழ் மொழி கற்றவருக்கும் விளங்காமல், ஒரு புது மொழியாய் இருக்கிறது. ஆகவே, இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தார் நாலாயிரப் பிரபந்த மணிப்பிரவாள உரைக்கு விளக்கம் எழுத முற்பட்டிருக்கிறார்கள். இந்த மணிப்பிரவாள நடை, பௌத்தர்களும் சமணர்களும் தமிழில் புகுத்திய வேண்டியதல்லாத ஒரு செயலாகும்.

மணிப்பிரவாள நடை ஒன்று தவிர, பௌத்த சமணர் கள் செய்த மற்றவையாவும் தமிழ் மொழிக்கு ஆக்கத்தை யும் வளப்பத்தையும் உயர்வையும் நன்மையையும் அளித் தன. ஆனால், அவர்கள் வழங்கிய இலக்கியச் செல்வங் களில் பெரும்பாலனவற்றை இழந்துவிட்டோமே என்று சிந்திக்கும்போது தமிழன் மனம் புண்படுகிறது.

இனி, பௌத்தர்களும் சமணர்களும் தமிழில் இயற் றிய நூல்களைப் பற்றி ஆராய்வோம் : முதலில் பௌத்தர் கள் இயற்றிய நூல்களைப் பார்ப்போம். பௌத்தர்கள் தமிழிலே பல நூல்களை இயற்றியிருக்க வேண்டும். பௌத்தமதக் கருத்துக்களையும் பௌத்தமதக் கதைகளை யும் அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பல நூல்களை இயற்றியிருக்க வேண்டும். பாலி மொழியில் உள்ள பௌத்தமத நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்திருக்க வேண்டும். வினய பிடகத்திலே கூறப்படுகிற பன்னிரு சார்புகளைச் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை 30-ஆம் காதையில் அப்படியே மொழி பெயர்த்துக் கூறியிருப்பதை நோக்கும் போது, பண்டைக் காலத்தில் திரிபிடகத்தி

லிருந்து பல நூல்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. நீலகேசி உரையிலே காட்டப்படுகிற சில மேற்கோள் செய்யுள்களை நோக்குகிற போது புத்த ஜாதகக் கதைகள் தமிழிலே செய்யுளாக இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

பௌத்தர்களின் வேதமாகிய திரிபிடகத்துக்குப் பாலி மொழியில் சிறந்த உரை எழுதிய ஆசாரிய புருஷர்களுள் இரண்டு பேர் தமிழர். சூத்திர பிடகத்தின் குட்டகநிகாயம் என்னும் பிரிவின் குட்டகபாதம், தம்மபதம், உதானம், இதிவுத்தகம், விமானவத்து, பேதவத்து, தேரகாதா, தேரிகாதா, சரியாபிடகம் என்னும் பகுதிகளுக்கு உரை எழுதிய தமிழர் ஆசாரிய தர்மபால மகாதேரர் என்பவர். சூத்திர பிடகத்தின் புத்த வமிசம் என்னும் பிரிவுக்குப் பாலி மொழியில் உரை எழுதிய மற்றொரு தமிழர் ஆசாரிய புத்த தத்த மகாதேரர் என்பவர். இவர் சோழ நாட்டிலிருந்த தமிழர். இந்தத் தமிழர்களான பௌத்த ஆசாரியர்கள் பாலி மொழியையும் தமிழ் மொழியையும் நன்கு கற்ற பெரும்புலவர்கள். இவர்கள் பாலி மொழியில் இயற்றிய நூல்கள் இன்றும் உள்ளன. ஆனால், தமிழில் இயற்றிய நூல்கள் அழிந்துவிட்டன. இவர்களைப் போன்று பல பௌத்த ஆசிரியர்கள் தமிழில் இயற்றிய நூல்கள் இப்போது மறைந்துவிட்டன. மறைந்துவிட்டது மட்டுமன்றி, அவற்றின் பெயர்கூடத் தெரியவில்லை.

பௌத்த நூல்கள் முழுவதும் அழிந்துவிட்டதற்குக் காரணம், தமிழ் நாட்டிலே பௌத்த மதம் அடியோடு மறைந்துவிட்டதுதான். பௌத்த மதத்தைச் சமண சமயமும் சைவ வைணவ சமயங்களும் கடுமையாகத் தாக்கியபடியினாலே அவற்றை எதிர்த்து நிற்கமுடியாமல்

பௌத்த மதம் வீழ்ச்சியடைந்தது; பிறகு வெகு விரைவில் மறைந்துவிட்டது. பௌத்தமதம் மறைந்து பௌத்தர்கள் இல்லாமற்போகவே, அந்த மத நூல்கள் பாதுகாப்போர் இல்லாமல் மறைந்துவிட்டன. சமயப்பகைமை கொண்ட சமணரும் சைவ வைணவரும் பௌத்தத் தமிழ் நூல்களைப் போற்றிப் பாதுகாக்காமல் விட்டனர். ஆகவே, பௌத்தமத நூல்கள் எல்லாம் மறைந்து விட்டன. இப்போது உயிர் பெற்றுள்ள பௌத்த நூல்கள் மணிமேகலையும் வீரசோழியமுமே. மணிமேகலை காவிய நூல்; வீரசோழியம் இலக்கண நூல்.

வீரசோழியம் தமிழ் நாட்டிலே பெரிதும் பயிலப்படவில்லை. ஆனால், இலங்கைத் தீவிலே சிங்களவர்களால் இது பயிலப்பட்டதாகத் தெரிகிறது. வீரசோழியம் பௌத்தரால் இயற்றப்பட்டபடியால், பௌத்தராகிய சிங்களவர் இந்நூலைப் போற்றினர்கள் போலும்! சிதத சங்கக (சித்தாந்த சங்கிரகம்?) என்னும் பெயருள்ள சிங்கள இலக்கண நூலில், வீரசோழிய இலக்கண விதியிலிருந்து சிலவற்றை எடுத்து எழுதியதாக அந்நூலாசிரியர் கூறுகிறார். இந்தச் சிங்கள இலக்கணநூல் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

மறைந்து போன பௌத்த நூல்களில் குண்டலகேசியும் ஒன்று. இது குண்டலகேசி காப்பியம் என்றும் கூறப்படும். இதனை இயற்றியவர் நாதகுத்தனர் என்பவர். இந்தக் காவியம் இப்போது இறந்துவிட்டது. இதிலிருந்து சில செய்யுள்கள் தொல்காப்பிய உரையிலும், வீரசோழிய உரையிலும், யாப்பருங்கல விருத்தியுரையிலும் மேற்கோள் காட்டப்படுகின்றன. புறத்திரட்டு என்னும் நூலில் இதிலிருந்து சில செய்யுள்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மறைந்துபோன மற்றெரு பௌத்தநூல் சித்தாத்தத் தொகை என்பது. இந்தப் பெயருள்ள ஒரு நூல் இருந்தது என்பது நீலகேசியுரையினுலும், சிவஞானசித்தியார் உரையினுலும் அறியப்படுகிறது.

திருப்பதிகம் என்பது மறைந்து போன மற்றெரு நூல். இப்பெயருள்ள நூல் ஒன்று இருந்ததென்பதை நீலகேசியுரையினுலும் சிவஞானசித்தியார் உரையினுலும் அறிந்துகொள்ளலாம்.

விம்பசார கதை: மணிமேகலையைப் போன்று இதுவும் ஒரு காவிய நூல். இந்தக் காவியம் ஒன்று இருந்தது என்பதை நீலகேசி சிவஞானசித்தியார் என்னும் நூல்களின் உரையினுல் தெரிந்துகொள்ளலாம். "இது விம்பசார கதை என்னும் காவியம்: பௌத்தருடைய நூல். அதனுட் கண்டுகொள்க," என்று ஷ உரையாசிரியர்கள் இந்நூலைப்பற்றி எழுதுகிருர்கள். ஆகவே, இஃது ஒரு காவியநூல் என்பது தெரிகிறது. இஃது ஆசிரியப்பாவினுல் அமைந்த நூல்.

இனி, சமண சமயத்தவர் இயற்றிய நூல்களைப்பற்றி ஆராய்வோம்: பிற்காலத்திலே நடைபெற்ற சமயப்பூசலினுல் சமண சமயம், முன்பு தான் இருந்த உயர்ந்த நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்தபோதிலும், பௌத்த மதத்தைப் போல முழுவதும் மறைந்துவிடாமல், இன்றும் ஓரளவு உயிர் பெற்றிருக்கிறது. ஆகையினுல், சமணர் இயற்றிய சில நூல்கள் இன்றும் உயிர் பெற்றிருக்கின்றன. ஆயினும், இப்போது சில சமண சமயநூல்கள் இறந்து மறைந்துவிட்டன.

நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய இலக்கண நூல்களும்; சேந்தன் திவாகரம், சூடாமணி நிகண்டு முதலிய நிகண்டு நூல்களும்;

சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை முதலிய காவிய நூல்களும்; மேருமந்தர புராணம், திருக் கலம்பகம், திருநூற்றந்தாதி, பழமொழி நானூறு, நாலடி யார், நான்மணிக்கடிகை முதலிய இலக்கிய நூல்களும் இப்போது நமக்குக் கிடைத்துள்ள சமண சமயநூல்க ளாகும்.

பௌத்தருக்கும் சமணருக்கும் ஏற்பட்ட சமயவாதத் தினால் உண்டான இலக்கியங்கள் கேசி நூல்கள் ஆகும். சமண சமயத்தைக் கண்டித்து, பௌத்தர் குண்டல கேசி என்னும் நூலை இயற்றினர். குண்டலகேசிக்கு மாறாக, பௌத்த மதத்தைக் கண்டித்து நீலகேசிஎன்னும் நூலைச் சமணர் இயற்றினர். குண்டலகேசி மறைந்து விட்டது. ஆனால், நீலகேசி நிலைபெற்றிருக்கிறது.

பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி என்னும் வேறு மூன்று கேசி நூல்களை யாப்பருங்கலவிருத்தியுரை காரர் தமது உரையில் கூறுகிறார். இவை, குண்டலகேசி, நீலகேசியைப்போலவே சமண சமய பௌத்த சமயங் களைப்பற்றின சமயவாத நூல்கள். இவை இப்போது கிடைக்கவில்லை. இவற்றில் எது பௌத்த மதத்தைச் சார்ந்தது, எது சமண சமயத்தைச் சார்ந்தது என்பதும் தெரியவில்லை.

இனி, மறைந்து போன வேறு சமண சமய நூல்களை ஆராய்வோம்: எலி விருத்தம், கிளி விருத்தம் என்னும் நூல்கள் இருந்தன என்றும், அவை சமண சமய நூல்கள் என்றும் அப்பர் சுவாமிகள் சம்பந்த சுவாமிகள் தேவாரத் திலிருந்தும், வீர சோழிய உரையிலிருந்தும் அறிகிறோம்.

சாந்தி புராணம்: இது சாந்திநாதர் என்னும் சமண சமயத் தீர்த்தங்கரரின் வரலாற்றினைக் கூறும் நூல் என்

பது தெரிகிறது. இந்நூலிலிருந்து ஒன்பது செய்யுள்கள் புறத்திரட்டு என்னும் நூலில் தொகுக்கப்பட்டிருக் கின்றன ; மற்றச் செய்யுள்கள் மறைந்துவிட்டன.

நாரத சரிதை: இதுவும் சமண சமய நூல். இந்நூலி லிருந்து ஆறு செய்யுட்கள் புறத்திரட்டு என்னும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இதைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

வளையாபதி : இந்தச் சமண சமய நூல், தமிழ் ஐம் பெருங்காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகார உரையிலும், யாப்பருங்கல உரையிலும் இந்நூற்செய்யுள்கள் சில மேற்கோள் காட்டப்படுகின்றன. புறத்திரட்டு என்னும் நூலில், இந்தக் காவியத்திலிருந்து 66 செய்யுள்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மல்லி நாதர் புராணம் : 19-ஆம் தீர்த்தங்கரராகிய மல்லிநாதரைப் பற்றிய ஒரு நூல் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இந்த நூலிலிருந்து இரண்டு செய் யுட்பகுதிகளை ஸ்ரீ புராணம் மேற்கோள் காட்டுகிறது. இதனால், இது ஆசிரியப்பாவினால் இயற்றப்பட்ட நூல் என்பது தெரிகிறது.

இராமாயணம் : ஜைன சமய சம்பந்தமான ஓர் இராமாயண நூல் தமிழில் இருந்தது. இந்த இராமா யணத்திலிருந்து சில செய்யுள்கள், ஸ்ரீபுராணத்தில் மேற் கோள் காட்டப்பட்டிருக்கின்றன. இது அகவற்பாக் களும் விருத்தப் பாக்களும் விரவிய நூல் என்பது தெரி கிறது.

நீலகேசி என்னும் நூலின் உரையில், சமண சமய நூல்களிலிருந்து சில செய்யுள்கள் மேற்கோள் காட்டப் படுகின்றன. அவை எந்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்

டன என்பதை உரையாசிரியர் கூறவில்லை. ஆகவே, அந்த நூல்களின் பெயர்கள் தெரியவில்லை.

பௌத்த சமண சமயங்களின் ஆதி நூல்கள் பாகத (பிராகிருத) மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. பௌத்தர்களின் சமய நூல்கள் மாகதி எனப்படும் பாலி மொழியில் எழுதப்பட்டுள்ளன. சமணர்களின் சமய நூல்கள் அர்த்தமாகதி எனப்படும் சூரசேனி மொழியில் எழுதப்பட்டுள்ளன. பௌத்த சமணர்களினால் இந்தப் பிராகிருத மொழிச் சொற்கள் சில தமிழ் மொழியில் கலந்துவிட்டன. இவற்றைத் திசைச்சொற்கள் என்று கூறவேண்டும். பிராகிருத மொழிகளுக்கும் வடமொழிக்கும் (சம்ஸ்கிருதம்) உள்ள வேறுபாடு சிறிதளவே. எனவே, இப்பிராகிருத மொழிச்சொற்கள் தமிழில் கலந்திருப்பதை அறியாத சிலர், இச்சொற்கள் வடமொழிச் சொற்கள் என்று எழுதிவிட்டனர். வடமொழிச் சொற்களும் தமிழில் கலந்துள்ளன. பிராகிருத மொழிச் சொற்கள் பெரும்பாலும் பௌத்த சமண சமயத்தாரால் தமிழில் சேர்க்கப்பட்டன.

இறந்து போன, வழக்கொழிந்த மொழிகளில் வேறு மொழிச் சொற்கள் சேர்வதற்கு இடமில்லை. உயிருள்ள, உலக வழக்கிலுள்ள மொழிகளில் அயல் மொழிச் சொற்கள் சேர்வது இயற்கை. தமிழ் மொழி உயிருள்ள வழக்கு மொழி; நெடுங்காலமாக வழங்கி வருகிற பழையமொழி. இதில் அந்தந்தக் காலத்தில் வெவ்வேறு மொழிச் சொற்கள் கலந்து வழங்கின. காலக்கிரமத்தில் அச்சொற்கள் மறைந்து போய்விட்டன. பாகத மொழி, வடமொழி, போர்ச்சுகீசு மொழி, அரபி மொழி, பாரசீக மொழி, ஆங்கில மொழி முதலிய மொழிகளிலிருந்து அந்தந்தக் காலத்தில் பல சொற்கள் தமிழில் கலந்து வழங்கின.

அவற்றில் சில நிலைபெற்றுவிட்டன ; பல வழக்கொழிந்து மறைந்துவிட்டன.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

என்னும் நன்னூல் சூத்திரத்துக்கேற்பப் புதிய சொற்கள் புகுவதும், பழைய சொற்கள் கழிந்து போவதும் தமிழ் மொழிக்கு மட்டுமன்றி, உயிரோடு வழங்கி வருகிற எல்லா மொழிகளுக்கும் இயற்கையே. ஆனால், இலக்கண விளக்க ஆசிரியர்,

"பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்
வழுவல கால வகையி னானே."

என்று கூறியது போல, புதிய புதிய சொற்களை வலிந்து இழுத்துக்கொண்டு வந்து புகுத்துவதும் வழக்கத்தில் உள்ள சொற்களை நெட்டித் தள்ளி வெளியேற்றுவதும் கூடா. இஃது இயற்கையன்று. வளரும் மொழிகள், இயற்கையாகவே கொள்ள வேண்டுவதைக் கொண்டு தள்ள வேண்டுவதைத் தள்ளிவிடுகிற இயல்புடையன. அது போலவே, தமிழ் மொழியும், இதுகாறும் வளர்ந்து வந்தது போலவே, இனியும் வளர்ந்து வளமடையும். தமிழை வளர்த்த பௌத்த சமண சமயங்களுக்கு நமது நன்றி உரியது.

11. தமிழும் வைணவமும்

வித்துவான் பு. ரா. புருஷோத்தம நாயுடவர்கள்,
[தமிழ் விரிவுரையாளர், பல்கலைக் கழகம், சென்னை]

பெருமைகள் பலவும் வாய்ந்த இந்தப் பரத கண்டத்திலே தொன்றுதொட்டு நிலைபெற்று வருகிற மதங்கள் பலவற்றுள் திருமால் சமயமாகிய வைணவம் ஒன்று என்

பதற்கு வேத வேதாந்தங்களும் புராண இதிகாசங்களும் தக்க சான்றுகளாய் உள்ளன. ஆதலால், அது பற்றி நாம் இங்கு ஆராய வேண்டுவது இன்று. அதனுல், 'வடவேங் கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகத்தில்' வைணவ சமயத்தின் முன்னைய நிலை எத்தகையது என் பதே இங்கு ஆராய்தற்கு உரியது. இவ்வாராய்ச்சிக்கு இப்பொழுது துணை புரிவன தொல்காப்பியமும், அதன் பின் தோன்றியவைகளான எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்களுமே யாம். இவற்றை முறையே நோக்குவோம்:

ஆசிரியர் தொல்காப்பியனுர், நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காகப் பிரித்து, முல்லைக்கு மாயவனும், குறிஞ்சிக்கு முருகனும், மருதத் துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வங்கள் என்று கூறுகின்ருர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

என்பது தொல்காப்பியம். இதனுல், இத்தெய்வ வழி பாடுகள் தொல்காப்பியர் காலத்திற்கு மிகவும் முற்பட்ட காலத்திலே தமிழ் மக்களால் கைக்கொள்ளப்பட்டவை என்பது விளக்கமாகும்.

"நல்உலகத்து,
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்,
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"

என்பது, அந்நூலுக்குப் பனம்பாரனுர் பாடிய பாயிரம்.

இத்தெய்வங்களுள்ளே இந்திரனுக்கும், வருணனுக்கும் நில உரிமை பற்றி அமைந்த தனிக்கோயில்களேனும், அத்தெய்வங்களை வழிபட்டு வந்த கொள்கைகளேனும் இருந்தனவாகத் தெரியவில்லை. ஆனால், இந்திரனுடைய ஆயுதமாகிய வச்சிராயுதத்திற்குக் கோயிலும், பரதவர் சுறவுக் கோடு நட்டு வருணனை வழிபட்டு வந்தமையும் நூல்களால் அறியக்கிடக்கின்றன.

ஆசிரியர் தொல்காப்பியர் நான்கு நிலங்கட்கும் உரிய தெய்வங்களைக் கூறியுள்ள முறை வைப்பினை உற்று நோக்கின், உயர்வு தாழ்வு கருதியே கூறி உள்ளார் என்பது புலப்படும். இன்றேல், அகத்திணைக்குக் களவொழுக்கம் சிறப்புடையதாதலின், அவ்வொழுக்கத்திற்குரிய குறிஞ்சி நிலத்தின் கடவுளாகிய முருகனை முற்கூறுதல் வேண்டும். அங்ஙனம் கூறிற்றிலர். 'சிறப்புடைப் பொருளை முற்படக்கிளத்தல்' என்னும் முறைபற்றியே, "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று மாயோனை முன்னர்க் கூறினர் என்றே தெளிதல் தகும். அச்சிறப்பாவது, அவர் காலத்தில் திருமால் வழிபாடு நால்வகை நிலத்தினும் மிகுதியாய்ப் பரவி இருத்தல் வேண்டும்; இன்றேல், முனிவர்களுக்குக் குலதெய்வமாகிய திருமால்,[1] முனிவராகிய தமக்கும் வழிபடு தெய்வமாதலின், அச்சிறப்புப்பற்றி முன்னர்க் கூறினர் ஆதல் வேண்டும்.

"சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே,"[2]

---

1. "முனிகுலம் தொழும் தெய்வம்யார்?—மொய் துழாய் முகுந்தன்," என்பது வில்லி பாரதம். "மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற் பால இறையவன் இராமன் என்னும் நல்லற மூர்த்தி," என்றார் கம்பநாடரும்.

2. தொல்காப்பியமும், அகத்திணை முறையில் அமைக்கப்பட்ட சங்க நூல்களுள் ஐந்திணையைம்பதும் ஒழிய,

என்றதனுல், இம்முறை அன்றிப் பிறவகையாலும் சொல்லவும் படும் என்பது பெறப்படுகின்றதாதலின், தாம் உகந்த முறை இதுவே என்பது தெளியப்படும். "உம்மை எதிர்மறை ஆதலின், இம்முறை அன்றிச் சொல்லவும் படும் என்பது பொருளாயிற்று. அது, தொகைகளினும் கீழ்க் கணக்குக்களினும் இம்முறை மயங்கிக் கோத்தவாறு காண்க," என்பது நச்சினுர்க்கினியர் உரை.

தொல்காப்பியனுர்,

"மாயோன் மேய காடுறை உலகமும்"

என்று திருமாலுக்குரிய கிருஷ்ணுவதாரத்தைக் கூறியவதனுல், திருமாலுக்குரிய பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்னும் ஐவகை நிலையுள் விபவத்தைக் கூறியவர் ஆவர். விபவமாவது, அவதாரம்; அவதாரங்களுக்குக் காரணம், கேவலம் தனது இச்சையேயாம்; அவ்வவதாரங்கள் எண்ணிறந்தனவாகும். சிறப்புப்பற்றிப் பத்து என்று கூறுவது மரபு. அவ்வவதாரத்தைப்பற்றியும், அவ்வவதாரங்களிற் செய்த செயல்களைப் பற்றியும் பல பல வகையாகப் புகழ்ந்து பேசப்படுகின்றன.

"இருவர் தாதை! இலங்குபூண் மாஅல்!
தெருள நின்வர வறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே."
[பரி. 1 : 28-30.]

('அவதாரத்தின் தன்மையைத் தெளிவாக உணர்ந்து கோடல், ஐயம் திரிபு அற்ற மெய்ஞ்ஞானத்தையுடைய பெரியோர்கட்கும் அரிதாகும்,' என்பது இதன் கருத்து.

ஒழிந்த நூல்கள் எல்லாம் முல்லை அல்லாத ஒன்றை முதலாகக் கொண்டு பாடப்பட்டவையும் தொகுக்கப்பட்டவையும் ஆம்.

இருவர்—பிரமன், சிவன். தாதை—தந்தை.) என்றும்,

" முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலின்
பிறவாப் பிறப்பிலை ; பிறப்பித்தோ ரிலையே."

[பரி. 3 : 71, 72.]

('படைத்தல் அளித்தல் அழித்தல் காரணமாக நீ பிறவாத பிறப்பு இல்லை; ஆனால், உன்னைப் பிறப்பித்தோர் யாவரும் இலர்,' என்பது கருத்து. 'பிறப்பித்தோர் இலையே' என்றதனால், அவதாரத்திற்குக் காரணம் அவனது இச்சையே என்பதும், அவனுக்கு மேற்பட்டதோர் கடவுள் இலர் என்பதும் பெறப்படும்.) என்றும்,

" எவ்வயின் உலகத்தும் தோன்றி அவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்." [1]

[பரி. 15, 51-52.]

('எல்லா உலகங்களிலும் அவதரித்து அங்கங்கே உள்ள உயிர்களின் பிறப்பு இறப்புத் துன்பங்களை நீக்குவோன்,' என்பது கருத்து) என்றும் வருவனவற்றால் அவதாரத்தின் தன்மையை உணரலாகும்.

---

1. " பிறப்பில் பல்பிறவிப் பெருமானை
மறப்பொன்றின்றி என்றும் மகிழ்வனே."

[திருவாய். 2 : 29 : 5.]

என்பது தமிழ் மறை.

" அஜாய மானோ பஹுதா விஜாயதே தஸ்யதிரா :
பரிஜாநந்தி யோநிம் "

என்பது வடமொழி மறை. 'பிறப்பில்லாத இறைவன் பல பிறவிகளை மேற்கொள்கிறான் ; அதன் காரணத்தைப் பெரியோர்கள் நன்கு அறிகிறார்கள்' என்பது இதன் கருத்து.

" அஜோபிஸந் நவ்யயாத்மா பூதாநாம் ஈஸ்வரோபிஸந்
ப்ரகிருதிம் ஸ்வாம் அதிஷ்டாயஸம்பவாம் யாத்மமாயயா"

என்பது ஸ்ரீ கீதை. 4: 6.

அவதாரத்தின் செயல்கள் :

வராக அவதாரம் :—

"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்

* * *

கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா
ஆழி முதல்வ!" (பரி. 2; 13; 16-19.)

'நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும் கமலமும் வெள்ளமும் என எண் குறித்திட்ட பெயர்களது அளவிற்றாகிய கால ஈட்டம் கழிந்த பின் உயிர்கள் உளவாதற்பொருட்டு அந்நிலத்தினை எடுத்திட்ட கேழற் கோலத்தால் திகழ்வரப் பெற்ற இவ்வராக கற்பம்[1] நின் செயல்களுள் ஒரு செயலின் பெயராமதனை உணர்த்துதலின், அச்செயல்கள் பலவற்றையும் செய்கின்ற நின் முதுமைக்குள்ள கற்பங்கள் யாவரானும் அறியப்படாத' என்பது இதன் பொருள்.

"செய்யோள் சேர்ந்தநின் மாசில் அகலம்
வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்
வைவாள் மருப்பின் களிறு மணன்அயர்பு
புள்ளி நிலனும் புரைபடல் அரிதென
உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று."[2]
(பரி. 2 : 31-35)

'நான் பிறப்பற்றவனும் அழிவில்லாதவனும் உயிர்கள் அனைத்திற்கும் ஈசனுமாய் இருந்தும், என் இயற்கையைக் கொண்டு என் மாயா சத்தியால் அவதரிக்கிறேன்' என்பது இதன் பொருள்.

1. இந்தக் கற்பத்துக்கு வராக கற்பம் என்பது பெயர்.
2. "உயிரளிப்பான், எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா!"

என்பது, தமிழ் மறை.

'பிரளய வெள்ளத்தில் மூழ்கிய பூமியைத் திருமால் வராக உருவம் கொண்டு தன் கொம்பினுல் மேலே எடுத்து வந்த போது[1] புள்ளி அளவாகிய நிலனும் அப்பிரளய வெள்ளத்தால் வருந்தவில்லை என வேதப்பொருளை உணர்ந்தோர் கூறுகின்றனர். ஆயின், திருமகள் எப் போதும் நீங்காது உறைகின்ற மார்பினையுடைய திருமால், வராக உருவம் கொண்டு பூமி தேவியையும் தம் கொம்பி னுல் தாங்கி மகிழ்ந்தனர் என்பது பொருத்தமாகக் காணப் படவில்லை,' என்பது இதன் பொருள்.[2] ஒருத்தி மார்பில் இருக்கும்போது மற்றொருத்தி அகத்தில் சேர்தல் கூடாமை யின் 'சிறந்தன்று' என்கிறார்.

" தீசெங் கனலியும் கூற்றமும் ஞமனும்
மாசிலா யிரம்கதிர் ஞாயிறும் தொகூஉம்
ஊழி ஆழிக்கண் இருநிலம் உருகெழு
கேழலாய் மருப்பின் உழுதோய்!" (பரி. 3: 21-24.)

'எல்லாப் பொருளும் அழிதற்குக் காரணமான நெருப் பும், யமனும், அவனுக்கு ஏவல் செய்யும் கூற்றமும், சூரியனும் ஆகிய இவை எல்லாம் ஒன்று கூடும் ஊழியி னது முடிவில் பிரளய வெள்ளத்தில் அழுந்திய நிலமகளை வராக உருவம் கொண்டு மருப்பினுல் பெயர்த்து எடுத் தோய்!' என்றவாறு.

---

1. 'பன்றியாய்ப் படிஎடுத்த பாழியாய் என்பர் ; அது வென்றியார் உனது எயிற்றின்மென் துகள் போன் றிருந்ததால்.' (அரங்கக் கலம்பகம்.)
2. 'அரவாகிச் சுமத்தியால் அயில்எயிற்றின்ஏந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியால் ஓரடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை; இஃதுஅறிந்தால் சீருளோ
மருவாரும் துழாயலங்கல் மணிமார்பின் வைகுவாள்!'

என்பது கம்பராமாயணம்.

"புருவத்துக் கருவல் கந்தத்தால்
தாங்கிஇவ் வுலகந் தந்துஅடிப் படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர்புகழ் குன்றினெடு ஒக்கும்" (பரி. 4: 22-24.)

'முன் பிரளய வெள்ளத் தழுந்தின காலத்தில் திருமால் வராக உருவம் கொண்டு கருமையும் வலிமையும் பொருந்திய தன் கழுத்தால் தாங்கி, இந்த உலகத்தை அந்த வெள்ளத்தினின்றும் எடுத்துத் திருத்திய செயல் மேரு மலையின் செயலோடு ஒக்கும்,' என்றவாறு.

இங்ஙனம் வராக அவதாரத்தின் செயலைப் போற்றிப் பாடி உள்ளமை காணல் தகும்.[1] வராக அவதாரத்தின் உண்மைச் செயல் இங்ஙனம் இருக்க, அவதாரத்தின் உண்மையை உணராமல், "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை"[2] என்று இன்னோரன்ன கூறுதல், நல்லிசைப் புலவர்களாகிய பண்டைத் தமிழ்ச் சான்றோர்களுடைய கருத்துக்கு முரண்பட்டதாகலின் பிற்காலத்து எழுந்த கற்பனைக் கதையேயாம் என்று அதனை உணர்தல் தகும்.

"இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவிக்கமை மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை

---

1. 'ஏனச் சொல்லாயினுமாக எறிதிரைவைய முற்றும் ஏனத்து ருவாய் இடந்தபிரான் இருங்கற்பகம் சேர் வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் ஞானப் பிரானை அல்லால் இல்லை நான்கண்ட நல்லதுவே,' என்பது ஆழ்வார் ஸ்ரீசூக்தி.

2. திருவாசகம்.

வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலம்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே." (புறம். 378)

என்றும்,

"வென்வேல் கவுரியர் தொல்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கு முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே." (அகம். 70)

என்றும் இராமயணசரிதப்பகுதிகள் உவமையாகக் கூறப் படுகின்றன. உவமை உயர்ந்த பொருளாய் இருக்க வேண்டும் என்பது விதி.[1] மற்றும்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீஅறிந் திலையோ ? நெடுமொழி அன்றோ ?"

என்ற சிலப்பதிகார அடிகளால் ஸ்ரீராம சரிதை தண்டமிழ் நாட்டில் மிகு பழங்காலம் தொட்டே மிகப்பிரசித்தமாக வழங்கி வருகின்ற இதிகாசம் என்பதும் உணர்தல் தகும். மற்றும்,

"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோஅரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர்[2] கேளாத செவி என்ன செவியே
திருமால்சீர் கேளாத செவிஎன்ன செவியே ?"

(சிலப். ஆய்ச்.)

---

1. "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை."
(தொல். பொருள். 278.)

2. "கற்பார் இராம பிரானை அல்லால் மற்றும் கற்பரோ ?" என்பது ஆழ்வாருடைய ஸ்ரீசூக்தி.

என்பதனுல் இளங்கோவடிகள், ஸ்ரீராம பிரானுடைய பொருள் சேர் புகழ்களைக் கேளாத செவிகள் செவிகள் அல்ல என்கிருர். செவியைக் கூறியது ஏனைய உறுப்புக் களுக்கும் உபலக்ஷணம். இங்குக் "கோளில் பொறியில் குணம் இலவே எண்குணத்தான், தாளை வணங்காத் தலை" என்ற திருக்குறளையும் அதன் பொருளையும் சிந்தித்தல் தகும். இதனுல், அவனையே நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்தலே மக்கட்பிறவிக்குப் பயன் என் பதும் கூறினுராவர்.

இஃது இங்ஙனமிருக்க, இவ்வுண்மையை அறியா மலோ, வேறு எக்காரணத்தினுலோ அறியேன்—ஒருசிலர் ஸ்ரீராமபிரான் திருமால் அவதாரம் அல்லன் என்றும், ஸ்ரீராம சரிதை தமிழ் நாட்டிற்கு இடைக்காலத்தில் வந் தது என்றும், இன்னோரன்ன பற்பல கூறுவர்; அவர் கூற்றுத் தாய் மலடி என்ருற்போலும் என விடுத்தலே தக்கதாம். ஏனை அவதாரங்களும் அவதாரங்களிற்செய்த செயல்களும் சங்க இலக்கியங்களில் மலிந்து கிடக்கின் றன; விரிவஞ்சிக் கூறிற்றிலன்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனுர், "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று அவதாரத்தைக் கூறியவத னுல், அவதாரங்களுக்கெல்லாம் நாற்றங்காலான வியூகத் தையும்[1] கூறினுராவர். வியூகமாவது படைத்தல் காத்தல் அழித்தல் காரணமாகவும், சம்சாரிகளைக் காப்பாற்றுவதற் காகவும், தன்னை வணங்கி வழிபடுமவர்களுக்குத் திரு அருள் புரிதல் நிமித்தமாகவும் வாசுதேவ, சங்கர்ஷண,

---

1. "வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்தினை" என் பது, திருப்பாவை 6. 'வித்தினை - திருவவதாரத்துக்கு நாற் றங்காலை. பிறந்த பிறவிகள் போராமே திரியப் பிறக்கைக்கு அடியிட்டபடி' என்பது அதன் வியாக்கியானம்.

பிரத்யும்ந, அநிருத்த வடிவங்களோடு திருப்பாற்கடலில் இருக்கும் நிலையாகும்.

" செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை பைங்கண் மாஅல் " (3 : 81-82)

என்பது பரிபாடல்.

' செங்கட்காரி - வாசுதேவன், கருங்கண் வெள்ளை - சங்கருடணன், பொன்கட்பச்சை - சிவந்த உடம்பை யுடைய காமன். பச்சை என்பது பிரத்யும்நன் என்னும் வடமொழித் திரிபு. பைங்கண்மால் - பசிய உடம்பினை யுடைய அநிருத்தன். நால்வகை வியூகமும் கூறியவாறு' என்பது பரிமேலழகர் உரை.

" தன்உரு உறழும் பாற்கடல் நாப்பண்
மின்அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த
கவைநா அருந்தலைக் காண்பின் சேக்கைத்
துளவம் சூடிய அறிதுயி லோனும் " (13 : 26-29)

என்பது பரிபாடல்.

' தன் நீல நிறத்தோடு மாறுபடும் வெண்மை நிறத்தை யுடைய பாற்கடல் நடுவே மின்னை ஒத்து அவிர்கின்ற சுடர்மணியோடு விரித்த தலை ஆயிரத்தினையுடைய சேக் கைக்கண் துயிலும் துளவம் சூடிய அறிதுயிலோன். யோக உறக்கமாதலின் அறிதுயில் எனப்பட்டது' என்பது பரிமேலழகருரை.

" பாடிமிழ் பரப்பகத் தரவணை அசைஇய
ஆடுகொள் நேமியான் பரவுதும் "

என்பது கலித்தொகை, முல்லைக்கலி 5. ' முறிதலையுடைத் தாகிய முழங்குகிற கடலிடத்துப் பாம்பணையிலே பள்ளி கொண்ட வெற்றி கொண்ட சக்கரத்தினையுடையோனை வாழ்த்துவோம் !' என்றபடி. இவற்றால் வியூகத்தைப் பற் றிய குறிப்புக்கள் அறியலாகும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனுர்,

" மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் "

என்றதனுல் பூவைநிலை என்னும் துறையும், அத்துறைக்கு இலக்கணமும் கூறுகிருர். இதற்கு 'மாயோனைப் பொருந் திய நிலைபெற்ற பெருஞ்சிறப்பினையுடைய கெடாத விழு மிய புகழைப் பொருந்திய பூவை நிலையைக் கூறுதலும்' என்று உரையும், 'மாயோன் - காத்தற்கடவுள்; பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்தது எனப் புகழ்தல். 'காயாம்பூ வண்ணன்' என நிறம் சுட்டி வழங்கலும் கொள்க. பூவை - காயா. நாட்டு எல்லை காடு ஆதலின், அக்காட்டிடைச் செல்வோர் அப்பூவையைக் கண்டு கூறுதல். 'உன்னம்' கண்டு கூறினுற்போல இதுவும் ஓர் வழக்கு,' என விசேட உரையும் இளம்பூரண அடிகள் கூறுவர். இதனுல், திவ்விய தேச யாத்திரை செல்லும் மெய்யடியார்கள், செல் லும் வழியில் அவன் திருமேனிக்குப் போலியான பூவை மலரைக் கண்டதும் அவனைப் போன்றே காட்சி அளித்த லால், அவ்வழகில் ஈடுபட்டு அதனைப் பாடிப் பரவும் முகத்தாலும் திருமாலைப் பரவும் வழக்காறு பண்டைக் காலத்தில் உண்டு என்பது புலனுகும். இதனை,

" அருந்தலை ஏற்றெடு காதலர்ப் பேணி
சுரும்பிமிர் கானம்நாம் பாடினம் பரவுதும் " (முல்லை 6.)

என்ற கலித்தொகைப் பகுதியாலும் அறியலாகும். 'ஏற்றையும் நம் காதலரையும் பாதுகாத்துச் சுரும்பினம் ஒலிக்கின்ற கானத்தை நாம் பாடினமாய்த் திருமாலைப் பரவுவேம்,' என்பது அதற்கு நச்சினுர்க்கினியர் எழுதிய உரையாகும்.

இவ்வழக்காறு முல்லை நிலத்து மட்டும் அன்று, ஏனை நிலங்களிலும், அவ்வந்நிலத்து உறையும் மக்கள்,

மாயோன் நிறத்திற்குப் போலியான பொருள்களைக் கண்டு ஈடுபட்டுப் பரவிப் பாடிய வழக்காறு சங்க இலக்கியங் களில் காணலாகும் :

"மாயவனும் தம்முனும் போல மறிகடலும்
கானலும்சேர் வெண்மணலும் காணுயோ ?"[1]

என்றும்,

"மாயோன் மார்பில் ஆரம் போல,
மணிவரை இழிதரும் அணிகிளர் அருவி"[2]

என்றும் வருதல் காண்க.

"மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட
மெய்யானை, மெய்ய மலையானை, சங்கேந்தும்
கையானை, கைதொழாக் கைஅல்ல கண்டாமே."[3]

என்பதும்,

"குவலையஞ் சூழ்கடல் காயா
மரகதம் கொண்டல்நெய்தல்
குவளையுங் கண்டன்பர் நைவர்என்
றூல்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாய்!அரங்
கா!கொடும் பல்பிறப்பா
குவலையங் கற்றுனைக் காணில்என்
ஞங்கொல் குறிப்பவர்க்கே."[4]

என்பதும் இக்கருத்தே வந்தன.

"மய்யோமர கதமோமறி கடலோமழை முகிலோ
அய்யோஇவன் வடிவென்பதொர் அழியாஅழ குடையான்"

என்றூர் கம்பநாட்டாழ்வாரும். இதனல், திருமால் வழி பாடு நானிலத்தும் பரவி இருந்தமை தெளியலாகும்.

1. திணைமாலை நூற்றைம்பது. 58.
2. தொல். செய். சூத். 35. உரை
3. பெரிய திருமொழி, 11 : 7 : 5
4. திருவரங்கத்தந்தாதி, 90.

ஆசிரியர் பூவை மலரைக் கூறியது, அவன் நிறத்திற்குப் போலியான ஏனைய பொருள்களுக்கும் உபலக்ஷணம். இது நிற்க.

'இங்குப் பூவை நிலை என்னும் துறைக்கு இலக்கணம், 'மாயோன் மேய பூவை நிலை' என்றே கூறவேண்டுவது; 'மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்' என்பது ஈண்டைக்கு வேண்டுவது இன்று: ஆயின், கூறியது எற்றிற்கு?' எனின், கூறுவன்: மாயோனுடைய பரத்துவத்தைக் கூறுவதற்காகவும், 'பிறர் கூறுமாறு போன்று இறைவன் 'நிர்க்குணன்' அல்லன்: சமஸ்த கல்யாண குணத்மகன்; நற்குணக் கடல்' என்பதனைத் தெரிவிப்பதற்காகவும், அவனைப் போன்றே அக்குணங்களும் நிலைபேறுடையவை என்பதனைத் தெளிவிப்பதற்காகவும் கூறினர் என்று, உணர்க. இது, 'வேண்டாது கூறி வேண்டியது முடித்தல்' என்னும் உத்தியின்பாற்படும். இவ்வடிகளை 'மன் பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ் மாயோன் மேய பூவை நிலை' என்று கொண்டு கூட்டுக. 'நிலைபெற்ற பெருமையையுடைய அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டில் எழுந்தருளியிருக்கின்றவனும், கெடாத சீரிய கல்யாண குணங்களையுடையவனுமான மாயோனைப் பற்றிய பூவைப்பூ; அதனைப்பற்றிக் கூறுகின்ற நிலையும்' என்பது இதன் பொருள். இங்ஙனம் அச்சொற்களுக்குப் பொருள் கூறுக்கால் அச்சொற்கள் பயன் இன்றியே நின்று வற்றும் என்க. சூத்திர இலக்கணமும் இன்றியே ஒழியும் என்க. 'மன்பெருஞ் சிறப்பின் மாயோன்' என்றதனால், திருமாலினுடைய பரத்துவ நிலை கூறப்பட்டது. பரத்துவமாவது, காலம் நடையாடாததான நலம் அந்தம் இல்லதோர் நாட்டிலே நித்தியர்க்கும் முத்தர்க்கும் அநுபவிப்பதற்குரியனாய் ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் நிலையாகும்.

அந்தம்இல் இன்பத்து அழிவில் வீடாகிய பரமபதம் அவனுக்கே உரியது ; அவன் தரப் பெறுதற்குரியது.

" திருவரை அகலம் தொழுவோர்க்கு
உரிதமர் துறக்கமும் உரிமைநன் குடைத்து "
(13: 12,13)

என்றும்,

" நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம் ?" (15: 15,16)

என்றும் வருகின்ற பரிபாடற்பகுதிகளும்,

" தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணன் உலகு !"

என்ற திருக்குறளும் இக்கருத்தையே நுவல எழுந்தன.

ஆசிரியர் தொல்காப்பியனார், மாயோன் தாவா விழுப்புகழையுடையவன்[1] என்று கூறியதற்கு ஏற்பவே, பின் வந்த நல்லிசைப் புலவர் பலரும் " இறைவன் பொருள் சேர்புகழ் "[2] என்றும், " தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும் "[3] என்றும், " வல்லாராயினும் வல்லுநராயினும், புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன, உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற "[4] என்றும், " புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை "[5] என்றும், " நெடியோன் அன்ன நல்லிசை "[6] என்றும், திருமால் ஒருவனே புகழ்

1. " உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன் "
" புட்பாகன் பெரிய தனிமாப் புகழே "

என்பன ஆழ்வாருடைய ஸ்ரீசூக்திகள்.

2. திருக்குறள்.
3. கலித்தொகை, முல்லைக்கலி, 3.
4. புறநானூறு, 57.
5. புறநானூறு.
6. பதிற்றுப்பத்து.

உடையான் என்றும் அவன் புகழே பொருள்சேர் புகழ் என்றும் கூறுவாராயினர். இது நிற்க.

இனி, ஆசிரியர் நச்சினூர்க்கினியர், இவ்வடிகட்கு வேறு ஒரு பொருள் கூறி, 'மாயோன் நிறம் போலும் பூவைப்பூ நிறம் என்று பொருவுதல் பூவை நிலை என்றால், ஏனையோர் நிறத்தொடு பொருந்தும் பூக்களையும் பொருவுதல் கூறல் வேண்டும்; ஆசிரியர் அவை கூருமையின், அது புலன் நெறி வழக்கு அன்மை உணர்க' என்று உரையாசிரியர் கருத்தினை மறுப்பர். இதனைப் பார்ப்போம். இப்பொருளை, பிறர் கூறும் பொருளாக, இளம்பூரண அடிகள் தமது உரையில் குறிக்கின்றமையால், அவர்க்கு இவ்வுரை உடன்பாடு அன்ருதல் புலனகும். பூவை நிலை என்னும் துறை தோன்றியதற்கு இளம்பூரண அடிகள் கூறிய காரணத்தை மேலே கூறியுள்ளேன். அங்ஙனம் கூறுதல் முற்காலத்தும் இடைக்காலத்தும் பிற்காலத்தும் வழக்காற்றில் இருந்தமையையும் மேலே கூறியுள்ளேன். மற்றும், அரசர்கள் திருமாலின் கூறு என்பது சாஸ்திர சம்மதமாதலின், அது பற்றி அரசர்களைத் திருமாலாகவும் திருமாலைப்போன்றவர்களாகவும் கூறுதலும் வழக்காறு. ஏனைத்தெய்வங்களின் நிறத்தொடு பொருந்தும் பூக்களைப் புகழ்ந்து கூறும் வழக்காறு அக்காலத்து இன்மையின், ஆசிரியர் கூறிற்றிலர். புறநானூறு முதலிய இலக்கியங்களில் வரும் சில பாடல்களுக்குத் துறை கூறுதற்கு இடர்ப்பாடு வருதலின், அவ்விடர் வாராமைக்காக, மேற்கூறிய தொல்காப்பியச் சூத்திர அடிகளைப் பலவகையாகப் பிரித்துப் பொருள் கூறுதல் பொருந்துவது அன்று; ஆசிரியர் கருத்தும் அன்ருகும். பூவை நிலை என்னும் துறையின்பொருளுக்கும்ஏனைத்தெய்வங்கட்கும் ஒருவிதத் தொடர்பும் இன்று ஆதலால், ஏனைத்தெய்வங்களோடு

அரசர்களை ஒப்புமை கூறுதற்குப் பூவை நிலை என்று பெயர் வைத்துத் துறை கூறுதலும் தக்கது அன்று. மற்றும், "கறவை காவலன் நிறனெடு பொரீஇப், புறவலர் பூவைப் பூப்புகழ்ந்தன்று," என்று பூவை நிலை என்னும் துறைக்கு இலக்கணமும், "பூவை விரியும் புதுமலரில் பூங்கழலோய், யாவை விழுமிய யாம்உணரேம்—மேவார், மறத்தொடு மல்லர் மறம்கடந்த காளை, நிறத்தொடு நேர் தருத லான்," என்று இலக்கியமும் வெண்பாமாலை கூறுதலையும் சிந்தித்தல் தகும்.

ஆதலால், திருமால் நிறத்தை ஒத்திருப்பது கருதிப் பூவை மலரைப் புகழ்ந்து பரவிக் கூறிய வழக்கமே முன்னர்த் தோன்றி இருத்தல் வேண்டும். பின்னர், அப்பெருமானை அரசர்கட்கு உவமையாகக் கூறுவதும் பூவை நிலை என்ற பெயரால் வழங்கி வந்து, பின்னர், அப்பெருமானின் கூறுய மற்றைத் தெய்வங்களை அரசர்கட்கு உவமையாகக் கூறுதலையும் உபசார வழக்கால் அப்பெயராலேயே வழங்கினர் எனவே கோடல் தகும். எல்லாத் தெய்வங்களுமாக நிற்பவன் மாயோனாகிய நாராயணன் ஒருவனே என்பதனைக் கீழ் வரும் பரிபாடற்பகுதிகளால் உணர்ந்துகொள்க.

"மாஅ யோயே ! மாஅ யோயே !
மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடி
மணிதிகழ் உருபின் மாஅ யோயே !
தீவளி விசும்பும் நிலன்நீர் ஐந்தும்
ஞாயிறும் திங்களும் அறனும் ஐவரும்
திதியின் சிறுரும் விதியின் மக்களும்
மாசில் எண்மரும் பதினொரு கபிலரும்
தாமா இருவரும் தருமனும் மடங்கலும்
மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும்

மாயோய் நின்வயிற் பரந்தவை உரைத்தேம்
மாயா வாய்மொழி உரைதர வலந்து"[1]
(பரி. 3 : 1—11)

" ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக்கு அறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய் !
எவ்வயி னோயும் நீயே ". (பரி. 4 : 67—70)

" மூவரு வாகிய தலைபிரி ஒருவனை " (பரி. 13 : 37)

என வருதல் காண்க.

" மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே."

என்பது தொல்காப்பியம்.

'நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களை அல்லாத தேவரது படிமைகட்கு நடைபெறுதற்குரிய பூசனை முதலாயின முறையினின்றும் தப்பிய வழித் தப்பாது அவை நடைபெறும்பொருட்டுத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுதல். படிமை என்பது பிரதிமா என்னும் வடமொழித் திரிபு. அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கட்செய்தமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன: பூசையும் விழாவும்' என்பது இளம்பூரண அடிகள் எழுதிய உரை. 'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய' என்றதனால் ஆசிரி

1. 'வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல வாக்கி அவைஅவைதோறு
அணங்கும் பலபல வாக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின் னோரைஇல் லாய்நின்கண் வேட்கை எழு [விப்பனே.'
என்பது ஆழ்வாருடைய ஸ்ரீசூக்தி.

யர் இறைவனுடைய அர்ச்சாவதாரத்தைக் குறிப்பிடுதல் தெளிவாகும்.

அர்ச்சாவதாரமாவது, "தமர்உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே"[1] என்கிறபடியே,சேதநர்க்கு விருப்ப மான பொன், வெள்ளி, சிலை முதலான பொருள்களாலே, விபவங்களைப்போல அல்லாமல் தேசகால அதிகாரி நியமம் இல்லாதபடி சேதநர் செய்யும் குற்றங்களைக் காணுக் கண் ணிட்டு, அர்ச்சகர்களுக்குப் பரதந்திரமான எல்லாச் செயல்களையுமுடையனுய்க் கொண்டு கோயில்களிலும் இல்லங்களிலும் எழுந்தருளி நிற்கும் நிலை.

சங்க நூல்களால் திருவரங்கம், திருவேங்கடம், காஞ்சீபுரம், திருமாலிருஞ்சோலைமலை, மதுரை, காவிரிப் பூம்பட்டினம், திருவனந்தபுரம் ஆகிய இவ்விடங்களில் கோயில்கள் உண்மை அறியப்படுகின்றது. இவ்விடங் களில் திருமால் கோயில்கள் உண்மை கண்கூடு. சந்தர்ப் பத்திற்கு ஏற்ப எடுத்துக் கூறப்பட்ட கோயில்கள் இவை. எனவே, இவையே அன்றி, மற்றும் பல கோயில்கள் இருந்திருத்தல் கூடும். மேலே காட்டப்பட்ட திருமால் திருக்கோயில்கள் நான்கு நிலங்களிலும் அமைந்து இருத்த லால் நானிலமாகப் பிரிக்கப்பட்ட தமிழ் நாடு முழுதும் திருமால் வணக்கம் பரவிப் பெருகியிருந்தமை ஈண்டுத் தெளிதல் தகும்.

'இவற்றுள் திருமாலிருஞ்சோலை மலையை முருக னுடைய ஆறு படை வீடுகளுள் ஒன்று என்று ஒரு சாரார் கூறினராலோ?' எனின், முருகனுக்கு ஆறு படை வீடு உண்டு என்னும் கொள்கை சங்க இலக்கியங்களில் காணுமையானும், திருமுருகாற்றுப்படையுள் 'பழமுதிர் சோலை மலைகிழவோனே' என்பதற்குப் 'பழங்கள் முதிர்ந்த

1. முதல் திருவந்தாதி. 44.

சோலையையுடைய மலைக்கு உரியவனே' என்று பொது வாகவே நச்சினார்க்கினியர் உரை கூறினராகலானும், குன்றுதோறாடல் என்பது ஒரு படை வீடு ஆகாமை யானும், பரிபாடலும் சிலப்பதிகாரமும் அதனைத் 'திரு மால் குன்று' என்றே கூறுதலானும், பின்னுள்ளோர் கூறின் அது பிரமாணம் ஆகாமையானும், பழந்தமிழ் நூல்களோடு முரணுதலானும் அது பொருந்துவது அன்று. திருவேங்கடமலையைப்பற்றிப் பிறர் வேறு கூறுவதும் பொருந்துவது அன்று.

உலகத்துள்ள சராசரங்கள் அனைத்தும் இறைவனுக் குச் சரீரம் என்பதும், இறைவன் உயிர் என்பதும், உயிர் உடலை இயக்குவிப்பது போன்று, உயிராகிய இறைவன் தனக்குச் சரீரமாகிய உலகத்துச் சராசரப்பொருள்கள் அனைத்தையும் இயக்குவிக்கிறான் என்பதும் உபநிடதம் கூறும் உண்மை. நாராயணபதத்திற்குப் பெரியோர்கள் கூறும் பொருளும் இதுவேயாம். இதனால் சித்திப்பது இறைவனுடைய அந்தர்யாமித்துவமாகும். இவ்வுண்மை யை உள்ளுறையாகக் கொண்டு எழுந்ததுதான் "மெய் யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்ற தொல்காப் பியச் சூத்திரம். 'யாங்ஙனம்?' எனின், கூறுவன் : மெய் யின் இயக்கம்-இறைவனுக்குச் சரீரமான இந்த உலகமும் உலகத்துள்ள உயிர்களுமாகிய இவற்றின் இயக்கமானது, அகரமொடு சிவணும் - அகாரவாச்சியனைதிருமாலோடு பொருந்தும். என்றது, அகாரவாச்சியனை திருமாலோடு சேர்ந்தே இவ்வுலகமும் உயிர்களும் இயங்குகின்றன என்றபடி. 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது,' என்னும் பழமொழியும் இது பற்றியே எழுந்தது. அவன், அகரத்தின் பொருளாக உள்ள திருமால். அகரம் திரு மாலின் திருப்பெயர் என்பது அறிஞர் பலர்க்கும் ஒப்ப

முடிந்தது; அறிஞர் பலரும் அறுதி இட்டது.

'இங்ஙனம் மெய்க்கண் அகரம் கலந்து நிற்குமாறு கூறினாற்போலப் பதினோர் உயிர்க்கண்ணும் அகரம் கலந்து நிற்கும் என்பது ஆசிரியர் கூறாராயினர்: அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானும் என்றுணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கு எல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான் அகரமாகிய முதலையுடையன எழுத்துக்கள் எல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன், 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே,' எனக் கூறியவாற்றானும், பிற நூல்களானும் உணர்க. இதனான் உண்மைத் தன்மையும் சிறிது கூறினாராயிற்று' என்பது நச்சினார்க்கினியர் உரை. இவ்வுரை விரிப்பிற்பெருகும். இவ்வுரையிலுள்ள திட்ப நுட்பங்களை அறிஞர் நுண்ணிதின் உணர்தல் தகும்.

இச்சூத்திரத்தால் இறைவனது அந்தர்யாமித்துவத்தைக் கூறியவாறும். அந்தர்யாமித்துவமாவது, கருதரிய உயிர்க்கு உயிராய்க் கரந்து எங்கும் பரந்து அவற்றினுடைய எல்லாச் செயல்களுக்கும் தான் ஏவுமவனாய் ஒரு காலும் அவற்றை விட்டுப் பிரியாதவனாய் நிற்கிற நிலை.

"வடுவில் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த
கெடுவில் கேள்வியுள் நடுவா குதலும்
இந்நிலைத் தெரிபொருள் தேரின் நின்நிலை" (2 : 24-26)

என்ற பரிபாடற்பகுதி இங்கு அறிதல் தகும். 'தவறு இல்லாத விரதங்களையுடைய ஞானிகள் ஆராய்ந்த வேதத்தால் தெரிந்துணரின் உயிர்தொறும் உயிர்தொறும் அந்தரியாமியாய் நிற்றலுமாகிய இந்நிலைமைகளும் நின்கண் தோன்றும் நின் தொன்னிலைமை போல நினக்கே உள்ள விசேடம்,' என்பது இதன் பொருள்.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய."

என்பது தொல்காப்பியம். 'நூலும் கரகமும் முக்கோலும் மணையும் ஆராயுங்காலத்து அந்தணர்க்கு உரிய,' என்பது இளம்பூரண அடிகள் உரை.

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்!"

என்ற கலித்தொகைப் பகுதி, மேற்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தின் பொருளை விரித்துக் கூறுவது போன்று அமைந்துளது. இவற்றுள்,

"வேறுஓரா நெஞ்சத்துக்
குறிப்புஏவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்!"[1]

என்ற பகுதி சிந்திக்கற்பாலது.

மற்றும் நெய்தற்கலியில்,

"செக்கர்கொள் பொழுதினன் ஒலிநீவி இனநாரை
முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்
எக்கர்மேல் இறைகொள்ளும் இலங்குநீர்த் தண்சேர்ப்ப"

என்ற பகுதியில், 'முக்கோல் அந்தணர் திருவட்டாக்ஷரமாகிய பெரிய திருமந்திரத்தை நினைத்திருத்தல் கூறப்படுகின்றது. அந்தணர் - காஷாயம் போர்த்த குழாங்கள். முதுமொழி - பிரணவம்' என்றார் நச்சினார்க்கினியர்.

---

1. பாலைக்கலி

பத்துப்பாட்டில் ஒன்ருகிய முல்லைப்பாட்டில், பாசறையிலே வீரர்கள் வில்லை நட்டு அதிலே தூணிகளைத் தொங்கவிட்டுள்ளதற்கு,

"கல்தோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்,
முக்கோல் அசைநிலை கடுப்ப"

என்று உவமை கூறப்படுகிறது. படிவப்பார்ப்பான் - அந்தணன்.

இவற்ருல் தொல்காப்பியர் கூறிய அந்தணர்கள் துறவிகள் என்பதும், ஐம்பொறிகளையும் அடக்கியவர்கள் என்பதும், இறைவன் திருவடிகளில் அன்றி ஏனை ஒன்றிலும் பற்று இல்லாதவர் என்பதும், இறைவனைப் பற்றிக் கூறுகின்ற பெரிய திருமந்திரத்தை எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருப்பவர்கள் என்பதும், சிஷ்யர்களோடு திவ்விய தேச யாத்திரை செய்துகொண்டே ஆங்காங்குக் காணப்படும் மக்களுக்கு ஞானேபதேசம் செய்பவர்கள் என்பதும் தெளிதல் தகும். இம்முக்கோல் அந்தணர்,[1] தொன்றுதொட்டு இன்றளவும் வைணவ சந்நியாசிகளாகவே இருத்தலை யாவரும் அறிவர். சித்து அசித்து

---

1. "சிற்றெயிற்று முற்றல்மூங்கில் மூன்றுதண்டர் ஒன்றினர்
"அற்றபற்றர் சுற்றிவாழும் அந்தணீர் அரங்கமே."

என்பது திருச்சந்த விருத்தம், 52.

"முனைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தனைஅரி தவத்தவர் வடிவம் தாங்கினன்"

என்ருர் கம்ப நாடரும்.—சடாயு உயிர் நீத்த படலம், 20

"முக்கோலும் கமண்டலமும் செங்கல்தூசும்
முந்நூலும்சிகையுமாய் முதிர்ந்து தோன்றும்
அக்கோலம்"

என்பது, வில்லி பாரதம், அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம், 55.

ஈசுவரன்[1] என்னும் தத்துவங்கள் மூன்று என்பதனை உலகத்தார்க்கு அறிவுறுத்தும்பொருட்டே முக்கோலை இவ்வந்தணர் தரிப்பாராயினர்.

"வேண்டிய கல்வி யாண்டும் மூன்றிறவாது" என்ற தொல்காப்பியச் சூத்திரம், 'விரும்பப்படுகின்ற கல்வி எவ்விடத்திலும் சித்து அசித்து ஈசுவரன் என்னும் தத்துவங்கள் மூன்றனைக் கடவாது,' என்ற பொருளையும் பயந்து, மேற்கூறியதனை வலியுறுத்தி நிற்றல் காண்க. இதற்கு, அது என்றும் நீ என்றும் ஆறுய் என்றும் கூறும் மூன்று பதங்களைக் கடவாது' என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். ஆனால், முக்கோல் அந்தணரைக் கூறிய ஆசிரியர்க்கு மேற்கூறிய பொருளே ஏற்புடைத்தாதல் தெளிவாம்.

இவர்கள் அறவாழி அந்தணனாகிய அந்தம் இல் ஆதி அம் பகவனுக்கு அடிமைப்பட்ட துறவிகள் ஆதலின், 'முக்கோற்பகவர்'[2] என்ற பெயரால் அகப்பொருட் கோவைகளில் வழங்கப்படுகின்றனர். தஞ்சைவாணன் கோவை முதலான கோவை நூல்களில் 'முக்கோற்பகவரை வினாதல்' என்ற துறை வருதல் காண்க. ஆனால், மாணிக்கவாசகர் தாம் பாடிய திருக்கோவையாரில், இத் துறைப் பெயரை விடுத்து 'விரதியரை வினாதல்' என்றது ஒரு துறையைச் சேர்த்திருக்கின்றார். 'முக்கோற்பகவர்' வைணவ சந்நியாசிகள் ஆதலின், அவர்களைக் கூறத் தாம் விரும்பவில்லை போலும்! வேறு சிறந்த காரணம் இருப்பினும், கோடல் தகும்.

---

1. "சித்தசித்தொ டீசன் என்று செப்பு கின்ற மூவகைத்
தத்து வத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோகிதன்"
என்பது, வில்லி பாரதம்.

2. "அடியாரும் பகவரும் மிக்க துலகே" என்பது தமிழ் மறை.

இனி, வேத வேதாந்தங்களில் கூறப்படுகின்ற வைணவ சமயக் கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் மலிந்து கிடக்கின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் காட்டுகிறேன் :

“ பணிவில்சீர்ச்
செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழிக்
கல்லுயர் சென்னி இமயவில் நாணுகித்
தொல்புகழ் தந்தாரும் தாம்.”

“ மூவுரு வாகிய தலைபிரி ஒருவனே ”
என்னும் பரிபாடற்பகுதிகளும்,

“ குழல்நிற வண்ண ! நின்கூறு கொண்ட
தழல்நிற வண்ணன் நண்ணுர் நகரம்
விழநனி மலைசிலை வளைவு செய்துஅங்கு
அழல்நிற அம்பது வானவனே !
என்ற பெரிய திருமொழிப் பாசுரமும்,

“ புரம்ஒரு மூன்றுஎரித்து அமரர்க்கு அறிவியந்து
அரன்அயன் எனஉல கழித்தமைத் துளனே.”
என்ற திருவாய்மொழிப் பாசுரமும் ஒத்த கருத்துடையன. திருவாய்மொழிப் பாசுரத்தை, ‘ திருமால், அரன் எனப் புரம் ஒரு மூன்று எரித்து உலகு அழித்துளன் ; அயன் என அமரர்க்கு அறிவியந்து உலகு அமைத்துளன்’ எனக் கூட்டிப் பொருள் காண்க.

“ பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண்நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகால் இரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம்நின்னை யார்நினைக்க வல்லரே.”
என்பது திருச்சந்த விருத்தம்.

“ ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே ;
இரண்டின் உணரும் வளியும் நீயே ;

மூன்றின் உணரும் தீயும் நீயே ;
நான்கின் உணரும் நீரும் நீயே ;
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே ;
அதனால், நின்மருங் கின்று மூவேழ் உலகமும்.''

என்பது பரிபாடல். (13 : 18-23)

நாராயணன் என்னும் பெயர்க்கு, அழிவில்லாப் பொருள்களின் கூட்டத்திற்கு இடமாயிருப்பவன் என்றும், அழிவில்லாப் பொருள்களை இடமாயுடையவன் என்றும் இரு வகையாகப் பொருள் கூறி உள்ளனர் பெரியோர். அழிவில்லாப் பொருள்களின் கூட்டத்திற்கு இடமாய் இருப்பவன் என்பது, இறைவன் எல்லாப் பொருள்களையும் தனக்குள் அடக்கி எங்கும் வியாபித்துள்ள நிலையை உணர்த்தும். அழிவில்லாப் பொருள்களை இடமாய் உடையவன் என்பது, எல்லாப் பொருள்கட்கும் அந்தரியாமியாய் உள்ள நிலையை உணர்த்தும்.

'' அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்.''

என்ற திருவாய்மொழிப் பாசுரம் மேற்கூறிய இரு பொருள்களையும் தெளிவாக்குதல் காண்க. 'தன்னுள் அனைத்து உலகும் நிற்க' என்றது, வியாபித்துள்ள நிலையைக் காட்டுவதாம். 'நெறிமையினால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்' என்பது அந்தரியாமித்துவத்தைக் காட்டுவதாம்.

'' மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்றுஅகத் தடக்கிய

வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.''

என்ற நற்றிணைக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் மேலே கூறிய கருத்துக்களை அழகாக விளக்குதல் காண்க. இதன்கண், 'இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய வேத முதல்வன்' என்பதுவே ஈண்டைக்கு வேண்டுவது. 'இயன்ற—உலகத்தில் தோன்றி உள்ள, எல்லாம்—சராசரங்கள் ஆகிய எல்லாப் பொருள்களும், பயின்று—அந்தரியாமியாய் நின்று, அகத்து அடக்கிய—அவ் எல்லாப் பொருள்களையும் தனக்குள்ளே அடக்கி உள்ள (வியாபகமாய் உள்ள), வேத முதல்வன் என்ப—வேதங்களால் உணர்த்தப்படும் முதற்பொருள் என்று மெய் உணர்ந்தோர் கூறுவர் ' என்பது அப்பகுதியின் பொருளாகும்.

மேலும், இப்பாசுரத்தின் முதல் நான்கு அடிகளோடு,

" பவ்வநீர் உடையாடை யாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாப் பவனம் மெய்யாச்
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்ல கிற்பீர் ''

என்ற பெரிய திருமொழிப் பாசுரப் பகுதியை ஒப்பு நோக்கல் தகும்.

சித்து அசித்து ஈசுவரன் எனத் தத்துவங்கள் மூன்று என்பது மேலே கூறப்பட்டது. இவற்றுள், சித்து என்பது உயிர். இதுவும் ஒரு தனித் தத்துவம். அசித்து என்பது, உலகத்திற்கும் உலகத்துப் பொருள்கள் அனைத்திற்கும் காரணமான மூலப்பகுதி. இதுவும் ஒரு தனித் தத்துவம். இது, 24 தத்துவங்களாக விரிகின்றது. இந்த 24 தத்துவங்களோடு மேலே கூறிய சித்து என்னும் தத்துவத்தைக் கூட்ட, 25 தத்துவங்களாகும். உலகம் என்பது

இந்த 25 தத்துவங்களாலாய சேர்க்கையேயாகும். இதனே, "சுவை ஒளி ஊறு ஓசை" என்ற திருக்குறளின் விசேட உரையாலும், தத்துவத்திரயம் என்னும் நூலாலும் அறியலாகும்.

"ஆமினி மூப்பும் ; அகன்றது இளமையும் ;
தாமினி நோயும் தலைவரும் ;—யாமினி
மெய்ஐந்தும் மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்தும் ஆய்வ தறிவு."

என்ற வெண்பா மாலையும் இக்கருத்தையே நுவல்வதாகும். ஈசுவரன் என்பது இறைவன். இதுவும் ஒருதனித் தத்துவம். இறைவன் 26-ஆம் தத்துவம். இம்மூன்று பொருள்களும் நித்தியமானவை ; ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பவை. அதாவது, சித்து அசித்து என்னும் இரண்டையும் தனக்குச் சரீரமாகக் கொண்டு, இறைவனுகிய தான் சரீரியாய் நித்தியனுய் விளங்குகிருன் என்பதாம்.

"மங்க ஒட்டுஉன் மாமாயை திருமா லிருஞ்சோ லைமேய
நங்கள் கோனே ! யானேநீ யாகி என்னை அளித்தானே !
பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந் திரியம்
ஐம்பூதம்
இங்கிவ் வுயிர்ஏய் பிரகிருதி மானுங் கார மனங்களே."

என்பது திருவாய்மொழி. (10 : 7 : 10)

"பாழெனக் காலெனப் பாகென ஒன்றென
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென
ஆறென ஏழென எட்டெனத் தொண்டென
நால்வகை யூழிஎண் நவிற்றும் சிறப்பினை"

என்பது பரிபாடல். (3 : 77-80)

'என்றது, பூதங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், புலன்கள் ஐந்தும், மன

முதலிய அந்தக்கரணங்கள் மூன்றும், மூலப்பகுதியும், புருடனும் எனப்பட்ட தத்துவம் இருபத்தைந்தனுலும் எக்காலத்தும் ஆராயப்படும் பெருமையையுடையை என்றவாறு' என்பது பரிமேலழகருரை. 'இருபத்தைந்தனுலும் ஆராயப்படும் பெருமையையுடையை' என்றதனல், 'ஆராயப்படும் பெருமையையுடையவன் இந்த இருபத்தைந்தற்கும் அப்பாற்பட்டவன்—இருபத்தாருவது தத்துவமாக இருப்பவன்' என்பது போதரும். இதனுல், 'இருபத்தைந்தாவது தத்துவம் பரவாசுதேவன் என்று வைணவர் கூறுவர்,' என்று சிவஞான முனிவர் தமது பாடியத்தில் கூறியதும், அதற்குமேல் அவர் கூறிய மறுப்பும் பொருத்தமுடையன அல்ல என்பது விளங்கும். இறைவனை இருபத்தாருவது தத்துவமாகவே வைணவப்பெரியார் கூறுவர். மற்றும், இங்குக் கூறிய தத்துவ முறைகட்கு மாருகக் கூறப்படும் தத்துவமுறைகள் எல்லாம் இடைக்காலத்தில் எழுந்தவை எனவே தெளிதல் தகும்.

இனி, 'நால்வகை நிலங்கட்கும் தெய்வங்களைக் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனர் சிவபிரானைக் கூறிற்றிலரே?' எனின், அங்ஙன் அன்று; கூறினர் என்றே கோடல் தகும். சிவபிரானுக்கு இருப்பிடம் வெள்ளியங்கிரியாகிய கைலைமலை என்பதும், அவர் மலையரசன் புத்திரியாகிய பார்வதியைத் திருமணம் புரிந்துகொண்டமையும் புராணப் பிரசித்தம். "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன், உமைஅமர்ந்து உயர்மலை இருந்தன ஞக" என்பது கலித்தொகை, குறிஞ்சிக்கலி. "தன்னை யார்க்கும் அறிவரி யான்என் றும், மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை" என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. 'என்றும் மன்னி வாழ்கயிலைத் திருமாமலை' என்று சேக்கிழார் பெருமான் கூறுவதால், அம்மலையில் அவர் நித்தியவாசம்

செய்தல் பெறப்படும். இதனால், சிவபிரானுக்கும் குறிஞ்சி நிலத்திற்கும் உள்ள தொடர்பு விளங்குவதாகும். மற்றும், காளத்தி முதலிய பல்வேறு மலைகளில் அவர் தங்கி இருத்தலாலும் இத்தொடர்பு வலியுறுவதாகும். "நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல், பேரிசை நவிரம் மேஎ உறையும், காரி உண்டிக் கடவுள தியற்கையும்" (மலைபடுகடாம் 81-83) என்பது போன்று வருவன காண்க. (நவிரம்-ஒரு மலை. காரி உண்டிக் கடவுள்-சிவபிரான்.)

இங்ஙனம் இருந்தும் "சேயோன்மேயமைவரை உலகமும்" என்று ஆசிரியர் கூறுவதற்குக் காரணம், சிவபிரானுக்கும் உமை அம்மைக்கும் மகனாக, இமயமலையில் சரவணம் என்னும் சுனையில் தாமரைப் பூவாகிய பாயலில் முருகப்பெருமான் தோன்றியதேயாகும். முருகப்பெருமான் பிறப்பின் வரலாற்றினைப் "பாயிரும் பனிக்கடல்" என்னும் பரிபாடற்பாட்டான் உணர்தல் தகும். அவர்களுக்கு மகனாக முருகப்பெருமான் தோன்றியபின் அவர் அங்குச் செய்த செயற்கருஞ்செயல் பலவும் அந்நிலத்து மக்களின் மனங்களைக் கவர்ந்தன. தந்தையைக்காட்டிலும் மகனாகிய முருகப்பிரானை உயர்வாகக் கருதினர். 'சாமி நாதன்', 'குருபரன்' என்ற பெயர்களை இங்கு நினைவு கூர்தல் தகும். அதனால், சிவபிரான் வழிபாடு அருக, முருகப்பெருமானுடைய வழிபாடு அந்நிலம் எங்கும் பரவலாயிற்று. அந்நிலத்துத் தோன்றிய வள்ளியம்மையை முருகப்பெருமான் திருமணம் புரிந்துகொண்ட செயல், அவ்வழிபாட்டினை மேலும் அதிகரிக்கச் செய்தது. முருகப்பெருமான் அந்நிலத்துத் தோன்றினமையானும், அவர் வழிபாடே அந்நிலம் எங்கும் பரவி இருந்தமையானும் அவரையே அந்நிலத்துக்குத் தெய்வமாகக் கூறினர் ஆசிரியர். இங்ஙனம் கூறியவதனால், அவர்க்குத்

தந்தையாய் அந்நிலத்தில் உறையும் சிவபிரானைக் கூறிற்றிலர் என்றல் யாங்ஙனம் பொருந்தும்? அந்நிலத்துத் தோன்றிய மகனைக் கூறியதனானே, அந்நிலத்துறையும் தந்தையாகிய சிவபிரானையும் கூறினாரேயாவர்.

மேலும், "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற கபிலர், தாம் பாடிய குறிஞ்சிக் கலியில் இரண்டாம் பாட்டில் "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்" என்று கூறித் தொடங்குவதும், சிவபிரானை அந்நிலத்துத் தெய்வமாகக் கருதினமையாலேயாம் என்று கோடல் தகும். "நனந்தலை யுலகம் வளைஇய நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை, நீர்செல நிமிர்ந்த மாஅல் போல" (முல்லைப் பாட்டு) என்றவிடத்து, 'இதனானே முல்லைக்குரிய தெய்வம் கூறினார்' என்றார் நச்சினார்க்கினியர்.

முல்லை நிலத்துக்கு உரிய தெய்வமாக "மாயோன்மேய காடுறை உலகம்" என்று கண்ணபிரானைக் கூறியதும், அவன் அந்நிலத்து ஆயர்பாடியில் அவதரித்தமைபற்றியேயாகும். மாயோன்—கண்ணபிரான். திருமாலின் ஐவகை வடிவங்களுள் அவதாரமும் ஒன்றாதலின், திருமாலினையும் கண்ணபிரானையும் அபேதமாகக் கொண்டு, பின்னர் வந்த நல்லிசைப் புலவர்கள் திருமாலையே முல்லை நிலத்துக்குரிய தெய்வமாகக் கூறலானார்கள்.[1] அங்ஙனம் அபேதமாகக் கொண்டு அவர்கள் கூறியதை அறியாது, திருமாலையே முல்லை நிலத்துக்குரிய தெய்வம் என்று ஆசிரியர் கூறியதாக உட்கொண்டு, ஆசிரியர் கருத்துக்கு மாறாக இக்காலத்தவர் வேறு பல கூறுகின்றார்கள். இது நிற்க. அவன்

1. தந்தையாகிய சிவபிரானையும், மகனாகிய முருகப்பெருமானையும் அபேதமாகக் கூறும் மரபு இன்று.

அவதரித்த காரணம் கொண்டு, கண்ணபிரானை முல்லை நிலத்துக்கு உரிய தெய்வமாகக் கூறியதனால், கருதரிய உயிர்க்கு உயிராய்க் கரந்து எங்கும் பரந்து உறையும் அவனுடைய ஒரு தனி நாயகத்துக்குக் குறைவு வரும் என்று அஞ்சி, அது வாராமைக்காக "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின், தாவா விழுப்புகழ்ப் பூவைநிலை" என்னுமிடத்தில் அவன் பரத்துவத்தைக் கூறலாயினர். இவ்வடிகட்குப் பொருள் மேலே கூறப்பட்டது.

இனி, முழுமுதற்பொருளாகிய பரம்பொருளை மாத்திரம் கடவுள் என்ற பெயரால் கூறுதலும், முருகன் முதலியோர் அப்பொருளுக்குத் தாழ்ந்தவர்கள் ஆதலின் தெய்வம் என்பது போன்ற சொற்களால் கூறுதலும் ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்து என்றும், "குறிஞ்சி நிலத்து முருகன் முதலாய தெய்வவகை எல்லாவற்றிற்கும் தோற்றம் நிலை வேறுபாடு கூறப்படுவது போலக் கடவுளாகிய முதற்பொருளுக்குத் தோற்றமும் ஈறும் கூறப்படுவதில்லை. இப்பொருளைக் குறிக்கும் போதெல்லாம் சங்க இலக்கியங்கள் பிறை முடியும், முக்கண்ணும், கறை மிடறும் உடையனைக் குறிக்கின்றன. இதனால் இன்று சிவம் என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் இவ்வடையாளங்களைத் தன்பால் கொண்டிருப்பது கொண்டு, சிவபரம்பொருளே பழந்தமிழர் சமயத் துறையில் நிலவிய கடவுள் என்பது தெளிவாகத்தோன்றுகிறது. தெய்வங்கட்குத் தோற்றமும் கடவுட்கு அது கூறப்படாமையும் நோக்கின், பிறவா வாழ்க்கைப் பெருமையுடையது கடவுள் என்றும், பிறந்து நிலை வேறு கொண்டு இயலுவன தெய்வங்கள் என்றும் பழந்தமிழர் கருதிய கொள்கைகள் ஆகின்றன"[1] என்று கூறுவாரும் உளர். முழு

1. மதுரைத் தமிழ்ச் சங்கம் பொன்விழா மலர், 'பழந்தமிழர் சமயம்' பார்க்கவும்.

முதற்பொருளாகிய பரம்பொருளை மாத்திரம் கடவுள் என்ற பெயரால் வழங்கிய வழக்கு ஆதிகாலத்தில் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே அவ்வழக்கு வீழ்ந்தது. பரம்பொருளையும், பரம்பொருளின் கூருய மற்றைத் தெய்வங்களையும் கடவுள் என்ற பெயரால் வழங்கும் வழக்குத் தொல்காப்பியனுர் காலத்துக்கு முன்னரே தோன்றிவிட்டது. பின்னர் முனிவர்களும் அப்பெயரால் வழங்கப்பட்டனர். ஆதலால், அங்கியமம் தொல்காப்பியனுர் காலத்திலேயே இன்று. அங்கியமம் இல்லாமையைப் பின் வருவனவற்ருல் உணர்தல் தகும்.

"நாமக் காலத்துண்டெனத் தோழி, ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்" (தொல். பொருள். கற். 5.) என்றவிடத்துக் கடவுள் என்ற சொல் சிவபிரானைக் குறிக்கவில்லை; முருகனைக் குறிக்கின்றது. "காமப்பகுதி கடவுளும் வரையார்" (தொல். பொருள். புறத். 28) என்றவிடத்துக் கடவுள் என்ற சொல் எல்லாத் தெய்வங்களையும் குறிக்கின்றது. "வரையார்" என்ற பலர்பால் வினைமுற்றினை நோக்குக. "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே." (தொல். பொருள். புறத். 31) என்றவிடத்து உரையாசிரியர் அனைவரும் பொதுவாகவே பொருள் கூறினர். இவற்ருல் கடவுள் என்ற சொல்லால் தொல்காப்பியனுர் சிவனை மாத்திரம் குறிக்கவில்லை என்று தெளிதல்தகும். மற்றும், பன்னிரு படலத்தை முதனூலாகக் கொண்டு வெண்பா மாலை என்னும் வழிநூலை இயற்றிய ஐயனுரிதனுரும் கடவுள் வாழ்த்திற்கு, "காவல் கண்ணிய கழலோன் கைதொழும், மூவரில் ஒருவனை எடுத்துரைத்தன்று," என்று இலக்கணம் கூறி, "வைய மகனை அடிப்படுத்தாய் வையகத்தார், உய்ய உருவம் வெளிப்படுத்தாய்" என்று திருமால் பரமாக உதாரண

மும் கூறினர். இனித் தெய்வம் என்ற சொல்லைப் பார்ப்போம்: "தெய்வம் வாழ்த்தலும்" (தொல். பொருள். களவு. 24) "தெய்வக் கடத்திலும்" (ஷை கற். 9.) என்ற இடங்களில் தெய்வம் என்ற சொல்லிற்கு வேறு பொருள் கூறலாமாயினும், "தெய்வம் அஞ்சல்" (ஷை : மெய்ப். 24), "வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப" (ஷை : செய். 110) என்ற இடங்களில் தெய்வம் என்ற சொல் சிவபிரானைக் குறிக்கவில்லை என்று கூற ஒண்ணுதாதலானும், "தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும், இவ் வென அறியும் அந்தம்தமக்கு இல" (தொல் : சொல். 4) என்ற இடத்துத் 'தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவி' என்றதனுல் சிவபிரானுடைய பெயர்களையும் உளப்படுத்தியே கூறினராதலானும், தெய்வம் என்ற சொல்லால் முருகன் முதலான தெய்வங்களையே கூறுவர் என்று கூறுவதும் பொருந்துவதன்று. மற்றும், "ஏனை ஒன்றே, தேவர்ப் பராய முன்னிலைக் கண்ணே" (தொல். பொருள். செய். 138.) என்ற இடத்துத் தேவர் என்ற சொல்லால் சிவன் முதலிய எல்லாத் தெய்வங்களையும் கூறியிருத்தலையும் காண்க.

இனி, சங்க இலக்கியங்களைப் பார்ப்போம்: எட்டுத் தொகையுள் அகநானூறு, புறநானூறு, கலித்தொகை என்ற மூன்று நூல்களிலும் சிவபிரானைப் பற்றிய கடவுள் வாழ்த்துக் காணப்படுகின்றது. குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல் இவற்றில் உள்ள கடவுள் வாழ்த்துச் சிவபிரானைப் பற்றியதாய் இல்லை. குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து முருகனைப் பற்றியது. நற்றிணையிலும் பரிபாடலிலும் கடவுள் வாழ்த்துத் திருமாலைப் பற்றியது. ஐங்குறுநூற்றில், கடவுள் வாழ்த்தில் பாட பேதம் உள்ளது. "நீலமேனி வாலிழை ஆகத்தொருவன்"

என்றும், "நீலமேனி வாலிழை பாகத்தொருவன்" என்றும் பாடங்கள் காணப்படுகின்றன. 'நீலமேனி வாலிழை ஆகத்தொருவன்' என்ற பாடம் திருமாலைக் குறிக்கும். 'நீலநிறம் பொருந்திய திருமேனியையும், வாலிழை பொருந்திய ஆகத்தையுமுடைய ஒருவன் - திருமால்' என்பது பொருள். வாலிழை - திருமகள். மற்றொரு பாடம் சிவபிரானைக் குறிப்பதாகும். பதிற்றுப் பத்தில், கடவுள் வாழ்த்துச் செய்யுள் அகப்படவில்லை. இங்ஙனம் இருக்க, "இப்பொருளைக் (கடவுளை) குறிக்கும்போதெல்லாம் சங்க இலக்கியங்கள் பிறை முடியும், முக்கண்ணும், கறைமிடறும் உடையனைக் குறிக்கின்றன," என்று கூறுதல் சிறிதும் தகுவதன்று. மற்றும், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலும் கடவுள் வாழ்த்து இங்ஙனமே எல்லாத் தெய்வங்களையும் பற்றியவாகவே காணப்படுகின்றன. மற்றும் பல கூறி என்? போரிலே பொருது இறந்து பட்ட வீரனுக்கு நட்டகல்லையும் கடவுள் என்ற சொல்லால் குறிக்கின்றனர் பண்டைய நல்லிசைப் புலவர்கள்: "நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல், பேரிசை நவிரம் மேஎ உறையும், காரி உண்டிக் கடவுள்"[1] என்று கறைமிடற்றண்ணலைக் கடவுள் என்ற பெயரால் கூறிய இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் தாமே, "செல்லும் தேஎத்துப் பெயர்மருங் கறிமார், கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த, கடவுள் ஓங்கிய காடேசு கவலை"[2] என்று நட்ட கல்லையும் கடவுள் என்ற சொல்லால் கூறுதல் காண்க. ஆதலால், அவர் கூறும் அந்நியமம், ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும், அவர் பின் வந்த பண்டைய நல்லிசைப்புலவர் பெருமக்கட்கும் இன்று என்று தெளிதல் தகும்.

1-2. மலைபடுகடாம். 81, 395.

இதுகாறும் கூறியவாற்றால் தமிழும் வைணவமும் என்பது பற்றி ஒருவாறு அறியலாகும்.

பூமகள்கோன் தென்னரங்கன் பூங்கழற்குப் பாதுகமாம்
தாமகிழும் செல்வச் சடகோபர்—தேமலர்த்தாட்கு
ஏய்ந்தினிது பாதுகமாம் எந்தைஇரா மானுசனை
வாய்ந்தினிது நெஞ்சமே வாழ்!

மாறன் மலரடி வாழ்க!

12. வாழ்த்தும் கலை

திரு. ந. சஞ்சீவி அவர்கள், M.A.

[தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பர் கல்லூரி, காஞ்சி]

பூவிற்கும் புல்லிதழ் உண்டன்றோ? அவ்வகையில் மகாவித்துவான் மே. வீ. வே. அவர்கள் மணிவிழா மலரை 'அணி செய்ய' எழுந்ததே இக்கட்டுரை. பத்துப்பாட்டு பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய மூன்று பெருஞ்சங்கத் தொகை நூல்களுள் வாழ்த்து ஒரு கலையாய் விளங்கும் திறத்தினை ஒருவாறு ஆராய்ந்து இன்புறுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

வாழ்த்துவார் வாழ்த்தின், அவ்வாழ்த்தினைப் பெற்று வரம்பிலா இன்பங் கொள்ளத் தயங்குவார் யார்? முத்தமிழால் வைதாரையும் வாழ்விக்கும் மாமுருகனை 'வாழ்த்துவப்பான்'[1] என்றன்றோ சங்கத் தமிழ் நூலாகிய பரிபாடல் போற்றுகின்றது? 'புகழ்ச்சி விருப்பனாய்' எம்பெருமானே விளங்குகின்றான் எனின், பொன்னும் போகமும் புகழும் வேட்டு வாழும் மனிதர் மனநிலை பற்றிக் கூறவும் வேண்டுமோ? 'புகழ் எனின் உயிரும் கொடுப்பது' அன்றோ அவர்தம் பண்பு!

1. பரிபாடல், 19 : 66.

சங்க காலத்தில் வாழ்ந்த வேந்தர்களும் வள்ளல்களும் புலவர் பாடும் புகழுடையராய்—சான்றோர் வாழ்த்தும் வாழ்த்துடையராய்—வாழவே விரும்பினர்கள். தமிழ் வேந்தன் வஞ்சினம் கூறும் போதும்

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை !'[1]

என்றன்றோ முழங்கினன் ? பசிப்பிணி மருத்துவராய், பண்பாட்டின் காவலராய் வாழ்ந்த புரவலர் பெருமக்களை வாழ்த்த நாளும் விழைந்தனர் பழந்தமிழ்ப் புலவரும். அவ்வாறு அவர்கள் தம் வரிசையறிந்து வழங்கும் வள்ளியோரைப் போற்றாமல் ஆற்றநாள் போக்கிவிட்டமை உணர்ந்த பொழுது அவர்கள் உள்ளம் கடலெனக் குமுறியது !

'முன்உள்ளு வோனைப் பின்உள்ளி னேனே !
ஆழ்கென் உள்ளம் ! போழ்கென் நாவே !
பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே !'[2]

என்ற உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரின் புறப்பாட்டடிகளை மறத்தலும் ஒல்லுமோ !

இத்தகைய சூழ்நிலையில் வாழ்வாங்கு வாழ்ந்த சங்க காலப் புரவலர்களை அவர்கள் கைவண்மையின் திறங் கண்ட கவிஞர் பெருங்கூட்டம் வாழ்த்தியிருக்கும் வாழ்த்திலேதான் எத்தனை எத்தனை வகை ! சுவை ! பயன் !

தம்மைப் போற்றிப் புரந்த பெருந்தகையோரைச் சில வாகிய சொற்களாலேயே எளிய முறையிலேயே வாழ்த்து

1. புறநானூறு, 72 : 13-16.
2. புறநானூறு, 132 : 1—3.

வதைச் சங்கப்புலவர் சிலரிடம் காணலாம். அப்படி வாழ்த்தும் பொழுது 'பல காலம் நீ வாழ்வாயாக!' என்று புலவர் தம் மனத்தில் ஊறி எழுந்த கருத்தைச் சுருங்கச் சொல்லிச் சுவை தோன்ற விளங்க வைப்பர்.

'வாழிய நெடிது!'[1]
'வாழ்கநின் ஊழி!'[2]
'நீடு வாழிய பெரும!'[3]
'ஆயிர வெள்ள ஊழி
வாழி யாத வாழிய பலவே!'[4]
'எந்தை வாழி யாத னுங்கன்!'[5]

என வரும் சங்க இலக்கிய அடிகள் அவர்பாலிருந்த இத்தனிச் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவ்வாறு வாழ்த்த விரும்பும் புலவர் தம் தலைவரின் திருப் பெயரையும், தலை மாலையையும், தாளினையும், செல்வ வளனையும், சீர்மைசால் புகழினையும், போர் வல்ல படையினையும், பொன்றுதலில்லா வெற்றியினையும் வாழ்த்து தலும் இயல்பாகும்.

'வாழிய பெருமநின் வரம்பில் படைப்பே!'[6]
'வாழ்கவவன் றாளே!'[7]
'வாழ்க அவன் கண்ணி!'[8]
'பல்பொறி மார்பநின் பெயர்வா ழியரோ!'[9]
'படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயரநின்

1. பெரும்பாண், 461.
2—4. பதிற்றுப்பத்து; 71 : 24; 88 : 22; 63 : 20-21;
5. புறம். 175.
6. புறம். 22.
7, 8. புறம். 70; 77.
9. பதிற்றுப்பத்து, 48 : 12.

சீர்கெழு விழுப்புகழ் ஏத்துகம் பலவே!'[1]
'வாளம ருழந்தநின் தானையும்
சீர்மிகு செல்வமும் ஏத்துகம் பலவே!'[2]
'நின்வலன் வாழியவே!'[3]
'அவன்தாள் வாழியவே!'[4]
'வாழ்கநின் வளனே!'[5]
'வாழ்கநின் கண்ணி!'[6]

என வரும் சங்க இலக்கிய அடிகள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

சங்கத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையின் அடியார்களாய் வாழ்ந்த உண்மை உலகறிந்தது. வானவீதியில் வலம் வரும் இருபெருஞ்சுடர்களாய் விளங்கும் ஞாயிறும் திங்களும் அவர்தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பேரொளி விளக்கங்களாகும். எனவே, தாம் வாழ்த்த விரும்பிய தகவுடையோரை 'வெங்கதிரோனும் தண்மதியமும் போல நீடு வாழ்க!' என வாழ்த்த முனைந்தது அவர்தம் தமிழ் நெஞ்சம்.

'தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே!'[7]
'அங்கண் விசும்பின் ஆரிருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும், குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇயர் உலகமோ டுடனே!'[8]

1—4. புறம்: 160; 161; 161; 171
5—6. பதிற்றுப்பத்து: 24: 30; 36: 14; 37: 1; 54: 2; 56: 3.
7—8. புறம்: 6, 56.

'முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீ னடுவட் டிங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி '[1]

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கிழாரும், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனரும் பாடியுள்ள புறப்பாடல்களின் பகுதிகளாகும் இவை இரண்டும்.

பகலவனிடத்தும் பால்மதியத்தின்பாலும் ஈடுபாடு கொண்டிருந்தது போலவே, நீலவானத்தில் அள்ளியெறிந்த நித்திலங்களென ஒளி உமிழும் விண்மீன்களுக்கும், மன்பதை உய்யப் பொய்யாது பெய்யும் மாமழைக்கும் பழந்தமிழ்ப்புலவர் தம் நெஞ்சைக் காணிக்கையாக்கியிருந்தனர்; அதனல், தம் நெஞ்சில் நீங்காதுறைந்த நற்றமிழ்ச் செல்வரை நலமுறப் போற்றும் போதும் 'எண்ணற்ற விண்மீன்கள் போலவும், தண்ணிய மாமழை போலவும் பன்னெடுங்காலம் வாழ்வீராக!' என வாழ்த்தினர்.

'வானத்து
வயங்கித் தோன்று மீனினும் இம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுந் நாளே!'[2]

'ஆனப் பெருவளஞ் செய்தோன் வானத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென்!'[3]

'இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பலை றுளியினும் வாழிய பலவே!'[4]

---

1. மதுரைக் காஞ்சி, 768-70.
2-4. புறநானூறு, 367 : 15-18; 371 : 24-25; 34 : 21-23.

இம்மூன்று பாடற்பகுதிகளும் முறையே முத்தமிழ் நாட்டு மூவேந்தராகிய சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் வேள்வி அந்தணர் வளர்த்த முத்தீப் போல ஒத்த உள்ளத்தினராய் ஒருங்கிருக்கும் ஒப்பற்ற ஒற்றுமைக் காட்சியைக் கண்ட ஔவை மூதாட்டியும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனாரும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழாரும் வாழ்த்திய வாழ்த்துக்களாகும்.

நீலவானத்தில் மேற்குத் திசையில் பிறைசூடிய பெம்மானை நினைவுபடுத்தித் தோன்றும் இளம்பிறை, கடவுளுணர்வுடைய கவிஞரும் மக்களும் கண்ணாரக் கண்டு களிகொண்டு பயனெய்த வழி வகுக்கும் இன்பப் பொருளன்றோ? அப்பிறையின்பால் ஈடுபட்ட அருந்தமிழ்ப் புலவர் மாங்குடி மருதனார்,

> 'குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
> வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்!'[1]

என மதுரைக்காஞ்சியில் பாண்டியன் நெடுஞ்செழியனை அழகுறப் பாடியுள்ளார்.

வானகத்துச் செல்வங்களில் தணியாக் காதல் கொண்டிருந்த தண்டமிழ்ப் புலவர் மண்ணகத்தின் புகழ் விளக்குவனவாய் அமைந்த ஆறு மலை ஆகியவற்றிடத்தும் பேரன்பு பூண்டிருந்தனர். அவர்கள் கொண்டிருந்த அந்த அன்பு வெள்ளம் தக்கோரை வாழ்த்துங்கால் பெருக்கெடுத்து ஓடலாயிற்று.

---

1. மதுரைக்காஞ்சி, 193-4

'பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே'[1]

'அயிரை நெடுவரை போலத்
தொலையா தாகநீ வாழு நாளே!'[2]

'கடவு ளயிரையி னிலைஇக்
கேடில வாக பெருமநின் புகழே!'[3]

என்பன புறநானூற்று உலகிலும், பதிற்றுப்பத்து உலகிலும் நாம் கேட்கும் வாழ்த்தொலிகளாகும்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாத் தமிழ்நாட்டு ஆறுகளும், அவை வெள்ளப் பெருக்கெடுத்து விரையும் போது ஏற்படும் எக்கர் மணலும் புலவர்கள் வாழ்த்துரையில் இடம் பெறுகின்றன.

'சிறக்கநின் னாயுள்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே!'[4]

'தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை
நுண்பல மணலினு மேத்தி
உண்குவம் பெருமநீ நல்கிய வளனே!'[5]

'தீம்புன லாய மாடும்
காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே![6]

புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் வரும் இவ்வடிகளில் புலவர்தம் அன்பு வெள்ளமும் சேர – சோழ நாடுகளின் புகழ் சான்ற ஆறுகளின் பெருவெள்ளமும் பின்னிப் பிணைந்து செல்லும் காட்சி நம் மனக் கண்கட்குப் புலனாகிறதன்றோ?

---

1. புறம். 2
2—3. பதிற்றுப்பத்து, 70 : 26, 27; 79 : 18, 19
4—5. புறம் : 43, 136.
6. பதிற்றுப்பத்து, 48 : 13–18.

தலைவர்களை வாழ்த்தும் போது அவர்தம் மனைக்கு விளக்காகிய வாழ்க்கைத் துணைவியர்க்கு முதலிடம் தந்து வாழ்த்துதலும் பழந்தமிழ் மரபேயாம்.

‘வேயுறழ் பணைத்தோள் இவளோடு
ஆயிர வெள்ளம் வாழிய பலவே !’[1]
‘வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ !
நின்னாள், திங்கள் அனைய வாக ! திங்கள்
யாண்டோ ரனைய வாக ! யாண்டே
ஊழி யனைய வாக ! ஊழி
வெள்ள வரம்பின வாக !’[2]

எனவரும் சங்கத் தமிழ், சேரர் வளர்த்த தீந்தமிழ்.

அரும்பெறல் தலைவரை வாழ்த்தும்போது அவரை ஈன்ற பெருமக்களைச் சேர்த்து வாழ்த்தலும் செந்தமிழ் நாட்டுப் பண்பாடு.

‘சிறுவெள் ளருவிப் பெருங்கல் நாடனை !
நீவா ழியர்!நின் தந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே !’[3]

ஒரு சிறைப்பெரியனார் திருவாயால் நாஞ்சில் வள்ளுவன் பெற்ற நல்வாழ்த்து இது.

வாழ்த்துப் பெறும் தலைவன் தொடர்ந்து அவ்வாழ்த்திற்கு உரியனாய் விளங்கும் வண்ணம் அறநெறி காட்டி அறிவுரை கூறலும் ‘அஞ்சொல் நுண்டேர்ச்சிப் புலவர்’ நெறி !

‘ஈவோ ரரியரிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் றாள்வா ழியவே !’[4]

என்பது போன்ற பாடல்கள் பல, சங்க இலக்கியங்களில் காணலாம்.

1-2. பதிற்றுப்பத்து, 21 : 37, 38 ; 90 : 50-54.
3-4. புறம். 137, 171.

வாழ்த்தையும் வசையாக்கும் திட்பமும் நுட்பமும் சொல்லேர் உழவர்க்குண்டு. சான்ருக, புறம் 166, 168 முதலிய பாடல்களைக் குறிப்பிடலாம்.

பல்வகையான வாழ்த்து வகைகளுள்ளும் தலைசிறந்த ஒன்றை ஒளவைப்பெருமாட்டியின் திருவாக்கில் காண் கின்ருேம். தான் வாழ்வதினும் தண்டமிழ்ப் புலவர் நீடு வாழ்வது மேலெனக்கருதிய அதிகமான், 'ஆதல் தன்ன கத்து அடக்கி, பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட சிறியிலை நெல்லித் தீங்கனியைத் தனக்குக் குறி யாது கொடுத்த' கருணைத் திறத்தை நினைந்து நினைந்து உருகி ஞர் அமிழ்தினுமினிய தமிழ் பாடும் மூதாட்டியாராகிய ஒளவையார். அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்த நன்றி உணர்ச்சி அதிகமானைப் பார்த்து,

'நீல மணிமிடற் ருெருவன் போல
மன்னுக பெரும நீயே !'[1]

என்று வாயார மனமார வாழ்த்தச் செய்தது. 'கண்ணுதற் பெருங்கடவுளைப் போல வாழ்க!' என வாழ்த்துப்பெற்ற அதிகமான், மன்பதையில் பிறந்தோருளெல்லாம் தலை சிறந்த பேறு பெற்றவன் அல்லனே !

இதுகாறும் நாம் கண்டாங்கு வாழ்த்தும் கலையெனக் கருதி வாழ்த்தும் கலையைப் பயனுற வளர்த்த தண்டமிழ்ப் புலவர் திறத்தைத் தமிழ் இலக்கிய உணர்வோடு உள்ளு வார் நெஞ்சம் உவகைக் கடலாதல் உறுதி.

கல் தோன்றி மண் தோன்ருக் காலத்திலிருந்து காசினியிற் பிறந்து வளர்ந்து மூத்து விளிந்தோர் கோடானு கோடி பேர். அவர்களுள் சான்ருேர் வாழ்த்துரைகளைப் பெற்று அழியாப் புகழ் கொண்ட பெருமை சால் பெரி யோர் ஒரு சிலரே ஆவர். அத்தகையோருள் ஒருவரே இம்மணிவிழா மலருக்குரிய தண்டமிழ் அறிஞர். அவர்தம் தொண்டும் புகழும் வாழ்க ! வெல்க !

1. புறம். 91.

வாழ்த்துரையும் கட்டுரையும் வழங்கிய அறிஞர் பெயரகராதி

அண்ணல் தங்கோ, கு.மு.109
அமிர்தகணேச முதலியார், சொ. 129
அரங்கசாமி மே. பெ. 56
அரசியலார் பெண்கள் உயர் நிலைப்பள்ளி, காஞ்சி, 135
அருணகிரி நாதர், எஸ். எஸ். 147
அருணைவடிவேல் முதலியார், சி. (ஆ. க.) 71
அன்பழகனுர், க. 107
அனந்த சயனனுர், ச. சீ. 115
ஆத்துமாநந்தா, சுவாமி, 64
ஆலாலசுந்தரம் செட்டியார், பு. 80
இரத்தினவேல் முதலியார், அ. கி, 117
இராசசேகரனுர், J. P. 92
இராசப்பா, K. N. 125
இராசமாணிக்கனுர், மா. டாக்டர், (ஆ. க.) 36
இராமசந்திர ஐயர், P. N. 127
இராமசந்திரப் பிள்ளை, தி. சு. 125
இராமசந்திரன், H. 113
இராமசந்திரனுர், தி. வீ. 81
இராமசாமி, A. G. 120
இராமசாமி முதலியார், G. 99
இராமசுவாமி ஐயர், வி.ஜி.148
இராமநாதர், ப. 166
இராமநாதன் செட்டியார். வே. வயிநாகரம், 88
இராமலிங்க முதலியார்,கி.122
ஈ. வே. ரா. பெரியார், 68
ஏகாம்பரபுரம் உயர்தர ஆரம்பப் பள்ளி, 142
கச்சித்தமிழ்க் கழகம், 140
கண்ணப்ப முதலியார், து. பா லூர், 104
கண்ணப்பர், மே. பெ. 47
கண்ணப்பிள்ளை, வி. 114
கண்ணபிரான், வே. 83
கண்ணபிரான் பிள்ளை, தி. சு. 124
கண்ணுசாமிப் பிள்ளை, C. V. 151
கணேசனுர், ச. 106
கதிர்வேல் முதலியார், க. 145
கல்விக்கழகம், புதுவை, 95
கார்மேகக்கோனுர், A, 73
காளப்ப முதலியார், சி, 133, 149
கிருட்டிணவேணியம்மையார், ப. 126
கிருஷ்ணவேணியம்மையார், S. 75
கைலேகுரு, A. S. 97
கோதண்டபாணி, மே. பெ. 118

கோதண்டபாணி பிள்ளை, கு. 77
சகந்நாத பிள்ளை, ப. சி. 93
சச்சிதானந்தம் பிள்ளை, ச. 84
சச்சிதானந்த முதலியார், ஆ. த. 139
சஞ்சீவி, ந. (ஆ. க.) 157
சண்முகசுந்தர முதலியார், M. 65.
சண்முகம், M.K. பேராசியர், 67
சத்தியசாட்சி, பொன்னு, ஆ. 137
சம்பந்த முதலியார், க. 100
சாமுவேல், ஜார்ஜ், 137
சித்பவானந்த அடிகளார், 162
சிதம்பரநாதன் செட்டியார், அ. டாக்டர், 161
சிவகுமாரனுர், S. 109
சீனிவாச முதலியார், அ. 121
சீனிவாசாசாரியார், K.S. 111
சுந்தரம், ஹெபர்ட்டு, ப. 70
சுந்தர வடிவேலு, நெ. து.69
சுப்பராயனுர், ஒ. க. 147
சுப்பிரமணியன், N. K. 94
செங்கல்வராயப் பிள்ளை, வ. சு. (ஆ. க.) 99
சேதுப்பிள்ளை, ரா. பி. 162
சொக்கலிங்கம், S. N.
சோமசுந்தர கன்னியா வித்தியாலயம், காஞ்சி, 149
சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், 63
சோமசுந்தரம் செட்டியார், K. 39, (ஆ. க.) 102
ஞானசம்பந்தனுர், அ. ச. (ஆ. க.) 50
தியாகராசன், கருமுத்து, 69
திருஞானசம்பந்த முதலியார், வீ. 133
திருமாலடியார் மன்றம், காஞ்சி, 131
திருவேங்கடம் பிள்ளை, C.V. 151
துரைசாமி ஐயர், V. V. 132
துரைசாமிப் பிள்ளை, M. S. 128
துரையரங்கசாமி, மொ. அ. டாக்டர், (ஆ. க.) 15
தூரன், பெ. 80
தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், 163
தொப்பையப்ப முதலியார், T. 103
தொல்காப்பியர் நிலையத்தார், 85
நடராசனுர், பா. டாக்டர்,68
நடேச நாயகர், ரா. 89
நமச்சிவாய முதலியார், ஆ. பூசை, 91
நமசிவாயம், S. M. டாக்டர், 110
நாகலிங்கம் கம்பெனியார், A.T.N. 112
பரமசிவானந்தம், அ. மு. (ஆ. க.) 61
பலராம நாயகர், சு. 139
பாண்டுரங்கம், K. 108
பாலசுப்பிரமணியம், வல்லை, 164
பாலசுப்பிரமணிய முதலியார் க. ஆ. 98

பாலசுப்பிரமணிய முதலியார் ம.
புருஷோத்தம நாயுடு, பு. ரா. (ஆ. க.) 122
மகாதேவன், T. M. P. டாக்டர், 162
மதுரை முதலியார், கு. 89
மயிலை. சிவ. முத்து, 144
மரகதவேலர், க. 148
மாசிலாமணி முதலியார், வா. தி. 167
மாணிக்கம், M. D. 101
மீனாட்சி சுந்தரனார், தெ. பொ. (ஆ. க.) 3
முத்தப்ப செட்டியார், ராம. மு. சோம, 114
முனியம்மாள், ந. 133
மெய்கண்டார் கழகம், காஞ்சி, 132
யாதவசத்திர பரிபாலன சபை, காஞ்சி, 151
வச்சிரவேலு முதலியார், க. 91
வரதராசனார், மு. டாக்டர். (ஆ. க.) 89
வாசுதேவப் பிள்ளை, சு. கே. 130
வேங்கடசாமி, மயிலை, சீனி, (ஆ. க.) 110
வேங்கடராஜுலு ரெட்டியார், வே. 72
வைத்தியநாதப் பிள்ளை, 167
வைத்தியலிங்கம் பிள்ளை, வல்லம், 74,
ஸ்ரீயதுகுல மஹாசங்கம், சென்னை, 151
ஸ்ரீவைஷ்ணவ மஹாசங்கம், 86
ஜகந்நாதன், கி. வா. 80
ஜெகசெல்வன் கம்பெனி, 166
ஹிந்துஸ்தானி சங்கம், காஞ்சி, 127
Ganapathy Aiyar, N. 158
Mahadevan, A. 159
Ranganatha Mudaliar, V.R. Rao Bahadur, 155
Smaraharanandaji, Swami, 154
Sukhanandaji, Swami, 153
Venkataswami Naidu, K. 157
Visvanatha Aiyar, K.R. 157